T·852

மயூரகிரிக்கோவை.

உ
கணபதி துணை.

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்
சர்க்கரைப்புலவர்
குமாரர்
சாந்துப்புலவரியற்றிய
குன்றக்குடியென வழங்கும்

மயூரகிரிக்கோவை.

இஃது
பல கனவான்களுடைய விருப்பத்தின்படி
இந்நூலாசிரியர் மரபிலுதித்தவராகிய
கோடகுடிச் சேதுப்புலவர் குமாரரும்,

ஆலங்காடு
ஸ்ரீமத். ராம. சிதம்பர செட்டியாரவர்கள்
மாணாக்கருளொருவரும்

மன்னார்குடிப் பின்ட்லே காலேஜ்
தலைமைத் தமிழ்ப் பண்டிதருமாகிய
சர்க்கரை இராமசாமிப் புலவரால்
அரும்பதவுரை யியற்றித்

திருவாவடுதுறை யாதீன வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்
பரிசோதகருமாகிய
ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களாற்
பார்வையிடப்பெற்றது.

GOVERNMENT ORIENTAL MANUSC[RIPTS LIBRARY]
MAR 1919
MADRAS

தஞ்சாவூர்
கல்யாணசுந்தர முத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை ரூ 1.

1908.
(Copy Right.)

PREFACE.

Few of the educated classes are unaware that a valuable mine of Tamil literature lies buried in manuscripts which by their age are fast approaching dissolution. The value of printing and publishing such manuscripts cannot be overestimated. As a pioneer in this direction followed only by straggling instances here and there comes Mahamahopadyaya V. Saminatha Aiyar Avergal the talented Tamil Scholar of the day. One should admit that it is high time that more people should follow his noble example if any lasting good is to be done to the Tamil country. It is gratifying to note that Mr. Sarkarai Ramasawmy Pulavar, the senior Tamil Pandit of the Findlay College, Mannargudi, Tanjore District, has come forward to publish the present work with an invaluable annotation. No one can deny that the Pulavar's work in this respect is worthy of emulation by others.

2. The author of this work—Mayuragiri Kovai is Santhu Pulavar, a well known Poetical genius, who lived in the latter part of the 18th century. He was the illustrious son of Sarkarai Pulavar, the famous court Poet of the Raja of Ramnad and appears to have enjoyed rare privileges under the renowned Ruler, Marutha Pandyan, at Sivaganga of the Madura District, at whose request this beautiful poem was composed in honor of Sree Subramaniaswami at Mayuragiri, otherwise known as Kundrakudi. The work is a good specimen of the poet's versatile genius and is next to none of its kind in diction and style except to Tirukkovaiar of Manickavasagar.

It consists of 535 stanzas replete with figurative language and the readers will be struck with admiration at the masterly way in which the author has conformed the work to the niceties of the Rules of Agapporul Ilakkanam. To those who have a turn to the study of Tamil literature the work will afford ample food for thought.

3. The right to publish this interesting work with useful annotation has been and is rightly reserved to this gifted young Pandit who is a lineal descendant of the author. The Pandit has combined in his poetical talent, musical taste, polished manners, sweet temper and true piety, and does credit to the family of poets to which he belongs. The publication of the work is a momentous task for which the Pandit deserves much praise. The readers will doubtless be able to realize the amount of thought and enthusiastic labour which the Pandit has bestowed upon the work. The annotations have been approved and appreciated by eminent Scholars of the Tamil Sangam.

E. SINGARAVELU MUDALIAR,
Stationary Sub-Magistrate,
Mannargudi.

கணபதிதுணை.

முகவுரை.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
8 MAR 1919
MADRAS

குருவணக்கம்.

வெண்பா.

ஐங்கரனை யாறுதலை யானவனை யாறிரண்டு
செங்கரனை யன்பிற் றியானித்தா—ருங்கருணை
காட்டியெமை யாளாலங் காட்டுச் சிதம்பரமால்
தாட்டுணையைச் சென்னிமுடித் தாம்.

கோவையென்பது தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றாறு வகைப்பிரபந்தங்களுள் ஒன்று. காட்சி முதலிய துறைகளை நிரல்படக்கோக்கப் பெற்றதென்பதிம் மொழியின் பொருள். இது ஐந்து இலக்கணங்களுள் பொருட் பகுதியாகிய அகப்பொருளிலக்கணத்திற் கிலக்கியமாக வமைந்துள்ளது. குறிஞ்சி முதலிய வைந்திணைக்குமுரியவாகப்பண்டைப்பெரியோர்கள்விதித்தமுதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள், முகமாகத்தலைவன் றலைவிகளுடைய வொழுக்கங்களை யுலகவழக்கஞ் செய்யுள் வழக்கமென்னுமிரண்டுக்குமியைய நன்றாகத் தெரிவிப்பது. இதிலுள்ள வகப்பொருளமைதிகள் தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், இலக்கணவிளக்க முதலிய நூல்களிற் பரக்கக் காணலாகும்.

மயூரகிரிக்கோவை யென்பது மயூரகிரியிற் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆறுமுகக் கடவுள் மீது எனது முன்னோர்களுள் ஒருவரும், இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் சர்க்கரைப் புலவர் குமாரருமாகிய சிறுகம்பையூர்ச் சாந்துப்புலவரியற்றியது.

மயூரகிரி யென்பது பாண்டிவள நாட்டிலே தேவாரம் பெற்ற தலங்களுள் திருப்புத்தூருக்குச் சமீபத்திலேயுள்ள ஸ்ரீ சுப்பிர

மணியக்கடவுளுக்குரிய வொரு முக்கிய தலமாகும். இது குன்றக்குடியென்று வழங்கும். அரசவனம், மயூரபுரம், கண்ணபுரம் என்னும் பெயர்களுமிதற்குண்டு. இதற்கு வடமொழி தென்மொழியிரண்டிலும் புராணங்களிருக்கின்றன.

தீர்த்தம்—சரவணப்பொய்கை. இதன் வடகீழ்த்திசையில் மயிலாலும், குமாரக் கடவுளாலும் பூசிக்கப்பெற்ற சிவாலயமொன்றுண்டு.

தடாகம்—மருதாபுரி, வையாபுரி முதலியனவாம்.

நதி—தேனாறு. இது அகத்தியமுனிவர் அபிடேகஞ்செய்த பெருக்கோடியதாலிப்பெயர் பெற்றதெனப் புராணங் கூறும்.

வழிபாடுசெய்து பேறுபெற்றவர்கள்—மயில், கிருஷ்ணன், அகத்தியர், விஸ்வாமித்திரர், வசிட்டர், பிரமதேவன், கருடன், இந்திரன், சூரியன், மன்மதன், பாண்டவர், நாரதர், முதலியோர்.

இந்நூலில் ருகூ செய்யுட்களுள்ளன. மற்றைக்கோவைகளில் ஏகதேசத்திற் காணப்பெறும் சொன்னயம், பொருணயம், ஓசையினிமை, சிலேடை, உள்ளுறையுவமை, முரண், யமகம், திரிபு, மடக்குமுதலியனவும், தொனியும், பலவகையான சித்திரகவிகளும், அரிய பெரிய பழய விலக்கிய விலக்கண நூற்பிரயோகங்களும், அரியதுறைகளும் நிரம்பக்காணலாகும்.

அன்றியும் பாட்டுடைத் தலைவராகிய குமாரக்கடவுள் தம்மைப் பூசித்த அகத்தியராதிய மெய்த்தவர்கட்கருளிய பெருங்கருணைத் திறங்களையும், புராணேதிகாசங்களிலுள்ள வினிய சரிதங்களையும், உண்மை நாயன்மார் வரலாறுகளையும், வேதாந்த சித்தாந்த சாத்திரக்கருத்துக்களையும், பல நீதிகளையும், அக்காலத்துச் சிவகங்கையில் அரசராக விருந்த மருது பாண்டியன் முதலிய மெய்யன்பர்களுடைய திருத்தொண்டினருமை பெருமைகளையும் அங்கங்கேயெடுத்துக்கூறுந்தகைமை மிகவும் பாராட்டற்குரியதேயாம்.

இந்நூல் எங்களூருக்குப் புராதனமான சிறுகம்பையூர் ஓரியூர் முதலானவூர்களுக்குச் சில வருடங்களுக்கு முன்யான் ஏடுதேடிப்போயிருந்தபோது ஓரியூரிலிப்போது இருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ சர்க்கரை முத்தையாப் புலவரவர்கள் வீட்டிலிருந்து ஏட்டுப்பிரதியொன்று கிடைத்தது. அதை வைத்துப் படித்து வருங்காலத்தில் ஒவ்வொரு செய்யுளும் நிரம்பக்கடினமாய், ஆழ்ந்தபொருளும், அரிய கற்பனையும், பிற்பகுதியிற் சில செய்யுள்களுக்குமாத்திரம் அரும்பதக் குறிப்பும் அமையப்பெற்றிருந்தது. வேறுபிரதிகள் கிடைத்தாற் பரிசோதித்து அச்சிடுவதற்கு அநுகூலமாயிருக்குமென்று பலவிடங்களிலும் தேடியும் வேறு பிரதியொன்றேனும் கிடைக்கவில்லை.

அப்பால் இம்மட்டிற் கிடைத்ததும் சண்முகக் கடவுள் திருவருட் செயலேயென்று தேறி இந்நூலினருமையையும் எனதறிவின்சிறுமையையுங்கருதி,யுள்ளதைக்கொண்டே நீடித்த அனுபவமும் நிறைந்த கல்வியுமுடையவர்களால் அரும்பதவுரையெழுதுவித்து அச்சிடவேண்டிப்பண்டைத்தமிழ்ப்புலவர்கள் வீட்டுமச்சுவாய்க்கிடந்த சங்கத் தமிழ் நூல்களையெல்லாம் அச்சுவாய்ப்புகுத்தவந்தவதரித்த மஹானுபாவரும், பழயதமிழ்நூலாராய்ச்சியில்லாத நாளுண்டேலதைத்தாம் பிறவாத நாளாகக் கருதுஞ்சற்குணக்குன்றும், சென்னைப் பிரஸிடென்ஸிக் காலேஜ் தமிழாசிரியருமாகிய பிர்ம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்கள் சமுகத்திற் சேர்ப்பித்தேன். அவர்கள் பிரதி செய்து நூல்முற்றிலும்படித்துப்பார்த்து இதைப்போற்றமிழில் ஒருகோவையில்லையென்றும், நிரம்ப வருமையாயிருக்கிறதென்றும், அச்சிடவேண்டுவது அவசியமென்றும்,ஆனாற்றமக்குஅவகாசமின்மையாற் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தலைமை தமிழ்ப்பண்டிதராகிய பின்னத்தூர் ஸ்ரீமத் அ. நாராயணசாமிஅய்யரவர்களுடனிருந்து அரும்பதவுரை யெழுதி அச்சிற் பதிப்பித்து விடுகவென்றுங் கட்டளையிட்டார்கள். நாங்களிருவருமொருங்கிருந்து அரும்பதவுரை யெழுதக்கூடாமையால் நாராயணசாமி ஐயரவர்கள் தாமே யங்ஙனஞ்செய்வதாயேட்டுப் பிரதி முதலியனவைகளையெடுத்துக்கொண்டுபோய் மூலபாடத்தை மாத்திரம் அச்சிற்

பதிப்பித்து விட்டுச் சாவகாசமின்மையால் அரும்பதவுரை யெழுதக்கூடவில்லை யென்று மீட்டும் பிரதிகளை யென்னிடத்தே தந்துவிட்டார்கள்.

பின்பு இந்நூலை அரும்பதவுரையின்றி அச்சிடுவது பெரிதும் பயன்படாதென்று பல நண்பர்கள், சொன்னமையானும் தவமும், பொறையும், தயையும், வாய்மையும், சிவபெருமானிரு திருவடித் தொண்டும், கல்வியும், செல்வமும், கவின்குடிப்பிறப்பும், பல்விதமான நல்லறச்செயல்களும், கொடையு நடையு நற்குணங்களும் பிறவும் உடைய சிவபூஜாதுரந்தரரும், தமக்கென வாழாப்பிறர்க்குரியாளரும், இன்னாவென்றெனை யறியாதிருந்து மினியவைகூறியிருக்கவிடும், அன்னாதி பலபொருளுமருந் தமிழ் விற்பனமுமளித்த வள்ளலுமாகிய, ஆலங்காடு ஸ்ரீமத். ராம. சிதம்பரசெட்டியாரவர்கள் இன்னுங்காலதாமதஞ்செய்யாது நீயே அரும்பதவுரையெழுதி அச்சிடுவாயாகவென்று பணித்தமையானும், "வேண்டுவார் வேண்டுவதேயீவான் கண்டாய்" என்னும் அருமைத்திருவாக்கின்படி மெய்யன்பர்களாகிய செட்டியாரவர்கள் விரும்பியாங்குச் சண்முகக்கடவுள் திருவருள் புரிவாரெனத் துணிந்து இடையிடையே நேர்ந்த ஐயங்களை எனக்குக்கிடைத்த விடுமுறை நாட்களில் மனமொத்த நண்பர்களாகிய வித்துவான்கள் பாற்சென்று தெளிந்து ஒவ்வொரு செய்யுளினுடைய நுட்பங்களையும், பிறவிசேடங்களையும் எழுதப்புகின் மிகவும் விரியுமென்றஞ்சிப் பெரும்பாலும் அரும்பதவுரையும், சில கடினமான பாடல்களுக்குக் கருத்துரையும், இன்றியமையாத விடங்களில் மாத்திரம் விசேடவுரையுமாக எழுதலாயினேன். அங்ஙனமெழுதும்போது இந்நூலின் பிற்பகுதியிற்கண்ட பழைய குறிப்புரைகள் பேருதவியாயிருந்தன.

அப்பாற் பின்னுஞ் சில பாடல்கள் தீராத சந்தேகமாகவேயிருந்தமையால் அச்சந்தேகங்களைத் தவிர்ப்பதுடன் எழுதிய அரும்பதவுரை முற்றிலும் சங்கத்துச்சான்றோர்களைப் பார்வையிடச்செய்த பின்னர் அச்சிற் பதிப்பிப்பதே நலமெனக் கருதிக் கடந்த டிசம்பர் மாதத்து விடுமுறைநாளில் மதுரைமாநகரை

யடைந்து, அங்கு நம் செந்தமிழுலகம் செய்தவ வடிவமாய் வந்தவதரித்த வள்ளலென்றுலகம் சந்ததமு முரைதருதருவணைய மாட்சிமை தங்கிய தருமப்பிரபுவும், பாலவனத்தம் ஜமீந்தாரும் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியுமாகிய ஸ்ரீமாந். போ. பாண்டித்துரைத்தேவரவர்கள் சமுகஞ் சார்ந்து அவர்களுடைய வித்துவ சபையிற் சில பாடல்களுக்கு யானெழுதிய வுரையைப் படித்துக்காட்டினேன். கேட்ட பிரபு அவர்கள் பேரன்புடன் அங்கீகாரஞ் செய்து யான் சந்தேகமுற்ற பாடல்களிற் சில பாடல்களுக்குப் பொருத்தமாகப் பொருளுரைத்ததன்றித்திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து வித்துவானும் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும், எனது அருமைத்தமிழாசிரியருமாகிய சேற்றூர் ஸ்ரீமத். ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களை யரும்பதவுரை முற்றிலும் பார்வையிட்டுக் கொடுக்கும்படி செய்து இந்தக்கோவையின் சொற்சுவை பொருட்சுவைகளைப் பாராட்டிச் செய்யுள் மாத்திரம் முன்னுதாகப்பதிப்பிக்கப்பட்டு விட்டமையால் ஒவ்வொரு செய்யுளுக்குங் கீழ்வ் வுரையைப் பதிப்பிக்கக் கூடாமைக்கிரங்கி யிக்கோவையின் இரண்டாவது பதிப்பைத் தமிழ்ச்சங்கத்து முத்திராசாலையிலே பதிப்பித்துத் தருவாமென்னும் அமுதவாக்குமளித்தார்கள். கவிராயரவர்களும் பேரன்போடு செய்யுளுடனே அரும்பதவுரை முற்றிலும் பார்வையிட்டுப் பதிப்பிக்கும்படி எனக்கு அனுமதியளித்தபின் பதிப்பிக்கலாயிற்று. இப்பெருந்தகையாளர்கள், 'செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும் வானகமுமாற்றலரிது.'

இவ்வரிய நூற்பதிப்பை, முற்கூறிய ஆலங்காடு ஸ்ரீமாந். ராம. சிதம்பரசெட்டியாரவர்கள் எனக்குச் செய்யாமற் செய்ததும், காலத்தினாற் செய்ததுமாகிய பெரிய நன்றி யெழுமையு மறக்கற்பாலதன்றாதலாலந் நன்றி யறிவிற் கறிகுறியாகவவர்கட்குரியதாக்குகின்றேன்.

இந்நூற்பதிப்பின் பொருட்டுப் பொருட்கொடையினானும் மனம்வாக்குக்காயங்களினானு முதவிபுரிந்துவந்த செந்தமிழ் அபிமானிகளாகிய பலகனவான்களும் பெருவாழ்வடையும்பொருட்

டுத்திருவருள் சுரக்கும்படி மயூரகிரியிற் கோயில்கொண்டெழுந் தருளியிருக்கும் குமாரக்கடவுளுடைய திருவடிகளைச்சிந்திப்பதுடன் அவர்கள்பால் மிகவும் நன்றியறிவுள்ளவனாகவிருக்கிறேன்.

இந்நூற்பதிப்பில் ஆங்காங்குக் காணப்படும் பிழைகளையும், அவற்றின் திருத்தங்களையும் தயைபுரிந்து கற்றுணர்ந்த விவேகிகள் அறிவிப்பார்களாயின் அவைகளை இரண்டாவது பதிப்பில் அவர்கள் பெயருடன் பிரசுரஞ்செய்வதுடன் அவ்வுதவியை ஒருபோதுமறவேன்.

இந்நூல் அரும்பதவுரை யெழுதுங் காலத்தும் பதிப்பிக்கும் காலத்தும் என் கூடவேயிருந்து உதவிசெய்துவந்த இளவலூர் பா. வேதநாயகம் பிள்ளையினுடைய நன்றி மிகவும் சிறந்தது.

இந்நூலை யிதுகாறும் பாதுகாத்துவைத்திருந்து தந்த சர்க்கரை முத்தையாப்புலவரவர்களிடத்தும், எனது முன்னோராலியற்றப்பெற்ற இந்நூலைப் பதிப்பிக்கும்படி செய்த நல்வினையின்பாலு மிகுந்த நன்றியறிவுடையேன்.

*வானவர்க ளுதநம வானள வுயர்ந்திடு மயூரகிரி வாழ் [ருளுந்
ஞானநிறை வேநமமெய் ஞ்ஞானபலன் மெய்யடியர் நண்ணவ
தேனிமிர்க டம்பநம தேனிமிரும் வாயநம சீர்பெ றுசரக்
கானபவ னேநமகு காநம மலர்ந்துதிகழ் கண்ணநமவே.

இங்ஙனம்,

கீலக ஹு
ஆனிமீ ௧௰௨
மன்னார்குடி.

கோட்டுகுடி .சே. சர்க்கரை இராமசாமிப்புலவன்.

---

* இது மயூரகிரி புராணத்துள்ளது.

T. 8

உ

கணபதிதுணை.

சாற்றுக்கவிகள்.

பழைய சிறப்புப்பாயிரம்.

செந்திரு மார்பன் மருதுந ராதிபன் செப்புகென்ன
மைந்தர்செல் வத்தொடு மாஞானம் வேண்டி மயூரகிரிப்
பைந்தமிழ்க் கோவையைப் பாடினன் சர்க்கரை பாலனெங்க
ளிந்திரன் சாந்து மகிபாலன் வாலக வீச்சுரனே.

சென்னை பிரஸிடென்ஸிக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
மஹாமஹோபாத்தியாயர்
ப்ருமஸ்ரீ உ. வெ. சாமிநாதையரவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தூமேவு சருக்கரைப் பேர்க் கவியளித்த சாந்துகவி சொற்ற நாய
தேமேவு நீரமைமயூரகிரிக் கோவைதனைத் தேர யாரும் [விப்
ஏமேவு குறிப்புரையோ டினிதச்சிற் பதிப்பித்தா னிலங்கு கேள்
பூமேவு நயசுகுண விராமசா மிப்பெயர்கொள் புலவன் றானே.

பாலவனத்தம் ஜமீந்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து
அக்கிராசனாதிபதியுமாகிய இராமநாதபுரம் மாகூஷிமைதங்கிய
ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வரிக்கோவை வடமுலையார் மயல்கொண்மரு
தேந்திரனுண் மகிழப் பாவா
ணரிக்கோவை யகத்தமிழ்தா மெனச்சாந்துப்
புலவன் முன நவின்மயூர
கிரிக்கோவை யரியபதப் பொருடுலக்கி
யச்சினுறக் கெழுமு வித்தான்
கரிக்கோவை யருளுமன்னூர் குடிராம
சாமியெனுங் கவிவல் லானே.

இராமநாதபுரம் சேதுசமஸ்தான வித்துவான்

ப்ரும்மஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

திருவு மறிவும் பெருகப் படைத்துப்
புகழு மறனுந் திகழ வளர்த்த
வொடியாக் கொற்றத்து முடியார் வேந்துரு
வாமிழ்தினும் வீறு தமிழுடை யாரென
வான்றோய் நல்லிசைச் சான்றோர் பராஅய
பழுதில் கொள்கை வழுதிய ரவைக்கண்
வடுவறு புலமைக் கடுவனி ளெயின
னாதி யாகிய கோதில் பெரிய
ரன்பிற் புகன்ற வின்பப்பரிபாட்
டொன்றுகடை யிட்ட துன்று மூப்பஃது
தன்பே ரணியா முன்பே யணிந்து
நிலன்வழுத் துற்ற புலனழுக் கற்ற
தோலா வாய்மை மேலாங் கீரன்
றேவரும் பருக மேவர யாத்த
வாற்றுப் படைப்பாட் டாற்றப் புனைந்துந்
தீந்தமிழ்த் தொடைய லேந்தும் வேட்கை
தீரா வுள்ளமொடு பேரா நின்று
காடுறை வாழ்க்கை வேடுவ னாகிச்
செய்யா கூறுப் பொய்யா மொழிவரு
வருந்து நடந்து புகுந்தெதிர் பெய்து
மட்டி றன்பெயர் முட்டை யென்று
கோழியொடு பார்ப்பை வாழிய பாடலே
னென்றவன் வாய்மை யொன்றிய வாயா
னகப்பொருட் பகுதியின் மிகப்பொருள் பயக்கும்
பொன்போனு மென்னும் பொன்போ லொள்ளிய
வின்றமிழ்ப் பனுவ லொன்றுகொண் டுவந்து
குன்றுதோ றாடலு நின்றதன் பண்பின்
வெயின்புக மறியாக் குயின்மிகு பூம்பொழின்
மயின்மலை யமர்ந்த வயில்வேன் முருகற்

நகத்திணை யன்பி னகத்திணைத் துறையெலா
முற்றப் பிறக்கிய குற்றமில் கலித்துறை
யைந்நீ றா றடுத்த வைந்துடை முப்பஃ
தின்புறு பாட்டு நன்பொருட் கோவை
காந்தளிற் கடப்பந் தேந்தார்ப் பிணையலிற்
பொலிவுறச் சாத்தி மலிபுகழ் சூடினன்
றென்புலம் புரிந்த மன்பெருந் தவத்தாற்
செந்தமிழ் வாணருக் கைந்தரு வாகித்
தீதெலாங் கழுவுஞ் சேதுநா டாண்ட
பண்டைக் காவலர் தண்டமிழ்ப் பேரவைப்
பாற்கட லளாஅய நாற்கடற் சருக்கரைப்
புலவர் மரபி னிலைவுறு கல்விச்
சுவையொடு மணனுங் குவைஇய வியல்பிற்
புவிவரு சாந்தக் கவிஞர்கோ மகனே
யாங்கவ னியற்றிய பாங்குறு கோவையை
மற்றவன் கவித்திறந் தெற்றெனத் தெளிய
நெறிப்பட வினியதோர் குறிப்புரை யோடு
மாண்வரு யாவருங் காண்வர முன்னி
யெழுதா வெழுத்தின் வழுவாது வைத்தன
னத்தகு சருக்கரை மெத்திய தொல்குடி
விளங்க வெய்திய களங்கமில் குரிசி
லுயர்குடிக் கொத்த மயர்வறு கல்வியு
மதியு மொழுக்கமு நிதியென வுடையோன்
செருக்கரைக் கணமுஞ் சேராச்
சருக்கரை யிராம சாமிநா வலனே.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர்

பிர்ம்மஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களியற்றியது.

நேரிசை வெண்பா.

மயூரகிரிக் கோவை வழுத்தபவச் சிட்டான்
மயூரகிரிக் கோவை வழுத்தப்—பயோதம்
புரை ராம சாமிகவி போற்கலைதேர் சொற்சர்க்
கரைராம சாமி கவி.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை
தமிழாசிரியர்

பிர்ம்மஸ்ரீ சுந்தரேசுவரையரவர்கள் இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

பாவைத் தெளிசர்க் கரைநல்கு சாந்துவிற் பன்னன்சொன்ன
மாவைத் தொளிர்தண் மலர்த்தடஞ் சூழு மயூரகிரிக்
கோவைத் தமிழையா ராய்ந்தச் சியற்றிக் கொடுத்தனன்செந்
நாவைப் பெறுசர்க் கரைராம சாமி நயகுணனே

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ் பத்திராசிரியர்

பிர்ம்மஸ்ரீ மு. இராகவையங்காரவர்களியற்றியது.

கட்டளைக் கலித்துறை.

படிக்கோரு நூலிது வேயெனச் சாந்து பகர்ந்தகுன்றக்
குடிக்கோவை யின்பொரு ளாய்ந்தச் சியற்றிக் கொடுத்தனனல்
மடிக்கோதி லான்சர்க் கரைகுல தீபன் மகேசனிணை
யடிக்கோ கனகம் பணிராம சாமி யருங்கவியே.

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவானும், மதுரைத் தமிழ்ச்சங்கம்
நூற்பரிசோதகருமாகிய

மகா-ள-ள-ஸ்ரீ மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்
இயற்றியது.

நன்பரையா முமையம்மை தனையகன்று
 நாவலூர் நம்பிக் காக
முன்பரையா மப்பொழுதிற் பரவையின்பாற்
 சென்றுசந்து மொழிந்த மூர்த்தி
யென்பரையா னனத்தொடதோ முகத்தினினு
 முற்றவிழி யினில்வந் தென்று
மன்பரையாண் டருளுமெந்தை மயூரகிரிக்
 கோவையா ராய்ச்சி செய்து.
எழுதுவோ ரானேர்ந்த வழுக்களையெல் லாங்களைந்தச்
 சியற்றி யீந்தான்
முழுதமுண ரிந்நூலா சிரியன்வழித் தோன்றலாய்
 மூன்று நாலும்

பழுதுறுமை யந்திரிபோ டறியாமை யறக்கற்றுப்
பரமன் பாதந்
தொழுதுபயன் பெற்றசருக் கரைராம சாமிகவிச்
சுருணை மாலே.

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவானும் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்
புலவரும் விவேகபானுப் பத்திராசிரியருமாகிய
மகா-ள-ள-ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள்
இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

மன்னுமயூர கிரிக்கோவை நுண்பொருண் மாட்சிமைதேர்ந்
துன்னும் புலவ ருவப்புற வச்சிட் டுதவினனு
லின்னுஞ்சொல் சொல்லெனக் கேட்டோர்ப் பிணிக்கு மினியகவி
பன்னுஞ் சருக்கரை மால்ராம சாமிநற் பாவலனே.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர்
பிர்ம்மஸ்ரீ கா. கோபாலாசாரியாரவர்களியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தேமணக்கு மயூரகிரிக் கோவையெனுந் திகழ்பணியைச்
செவ்வே யோளிற்
பாமணக்குந் தமிழினணிந் தனன்சாந்துப் புலவனதன்
பண்பை யாய்ந்து
நாமணக்குங் கலைஞர்நயந் தின்புறவே விளக்கியச்சி
னலகி னனம்
பூமணக்கும் புகழ்கொள்சருக் கரைராம சாமியெனும்
புலமை யோனே.

சிங்கவனம் வித்துவானும், திருவாரூர் போர்டு ஹைஸ்கூல்
உபாத்தியாயருமாகிய
பிர்ம்மஸ்ரீ சுந்தரேச பாரதியாரவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மருக்கமையில் லாதுகம முயர்கடுக்கை யுடன்முழ்ந்த
மணமொன் றில்லா

வெருக்கரையு முடனணியு மெம்பிரான் கங்கைகுலத்
　　தெழில்வே ளாண்மை
யருக்கரையன் சேதுபதி சமத்தானப் புலவன்பல்
　　கலையு மாய்ந்த
சருக்கரையென் றமிழ்ப்புலவன் புரிந்ததவப் பயனினவ
　　தாரஞ் செய்தோன். (க)

ஆன்றசாந் துப்புலவன் மயிற்கிரிவாழ் முருகவேட்
　　கன்பு கூரத்
தோன் றுமிறை யகப்பொருளுக் கிலக்கியமாய்ப் புனைந்தணி
　　துகளர் கோவை [ந்த
ஈன்றவன்னோர் குலமோங்க வவர்வழியி னுதயஞ்செ
　　யிராம சாமி
ஏன்றகூறிப் புரையுடனச் சிடுவித்தா னிவன்பெருமை
　　யியம்ப லாமோ. (உ)

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

பிர்ம்மஸ்ரீ பின்னத்தூர்

அ. நாராயணசாமி ஐயரவர்கள் இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

மாவைப் பிளந்தவை வேலுடை யான்றன் மயூரகிரிக்
கோவைப் பனுவலச் சிட்டளித் தான்குறிப் போடதுசொல்
காவைப் பொருகின்ற சாந்து கவீசன் மரபிற்கலைப்
பாவைக்கு நாத்தந்த மால்ராம சாமிப் பருணிதனே.

காரைக்குடி மகா-ா-ா-ஸ்ரீ

ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள்

இயற்றியது.

மாமேவு மணிமார்பன் மலர்மேவு மயன்முதற்சீ
　　வரைவாழ் விப்பான்
பூமேவு மலைகளெலாம் புகழ்மேவு மயின்மலைவாழ்
　　புனித னெங்கோன்

ஓமேவு பொருளிதென வுமைமேவு மொருபாகற்
குபதேசித்தோன்
சேமேவு கடப்பந்தார்த் திரண்மேவு புயாசலவேள்
செம்பொற்றாளில்
கவிநயமுஞ் சொன்னயமுங் கருதுபல பொருணயமுங்
காசிலாத
கவிநயமு முத்திகளுங் காட்டுமத முவமனணி
களுமேற் கோண்முற்
கவிநயமுங் கோத்தலினக் காரணத்துங் கோவையெனக்
கலைமுற் றோர்ந்த
கவிநயஞ்சால் கமகர்முதற் கவிஞரெலாங் கொண்டாடு
கனமுதற் றோங்க.

வேறு.

குணமெலா நிறைந்து திகழ்மயூ ரகிரிக் கோவையென்
றொருமணி மாலை,
மணமுறப் புனைந்தான் பெயரினு மதுரம் வயக்குநற்
புலவர்கோன் மைந்தன்
அணிபுகழ்ச் சாந்துப் புலவனீண் டதனை யரும்பத
வுரைவிரித் தளித்தான்
தணிவிலம் மருமான் சருக்கரை ராம சாமியாம்
புலவர்கே சரியே,

உ

சிவமயம்.

கணபதிதுணை.

* நூலாசிரியர் வரலாறு.

செந்திரு மார்பன் மருதுந ராதிபன் செப்புகென்ன
மைந்தர்செல் வத்தொடு மாஞானம் வேண்டி மயூரகிரிப்
பைந்தமிழ்க் கோவையைப் பாடினன் சர்க்கரைப் பாலனெங்க
ளிந்திரன் சாந்து மகிபால வாலக வீச்சுரனே.

என்னுமிந்நூலின் பழைய சிறப்புப்பாயிரச்செய்யுளால் மருதுபாண்டியன் வேண்டுகோளின்படி சர்க்கரைப்புலவர் குமாரர் சாந்துப்புலவரென்னுங் குழந்தைக் கவிராசரிந் நூலியற்றியதாகத் தெரிகிறது.

இவர், பாண்டிவளநாட்டில் தேவாரம் பெற்ற தலங்களுள் திருப்புனவாயிலுக்கு மேற்கில் மூன்று கடிகை தூரத்திலுள்ள சிறுகம்பையூரிலிருந்த வேளாளகுலதிலகரும், இராமநாதபுரஞ் சமஸ்தான வித்துவசிகாமணியாய் விளங்கியவருமாகிய சர்க்கரைப்புலவருடைய குமாரராவார். இவர் தம்பிமார் சீனிச்சர்க்கரைப்புலவர், சீனிப்புலவர், முத்துமுருகப்புலவர் முதலானவர் என்ப.

இவர் பிறந்த வருடம் இன்னதென்று தெரியவில்லை. ஆனாலும், இந்தக்கோவையினேட்டுப் பிரதியினீற்றில் [கி. பி. 1778=] காலயுக்தி௵ தை௳ ௨௭௳ சுக்கிரவாரநாளில் மயூரகிரிக்கோவை பாடி யரங்கேற்றிய

---

* இது 1908௵ மே௴ 25௳ மதுரைத்தமிழ்ச் சங்கத்து எழாம் வருஷோற்சவத்திற் கூடிய வித்துவசபையில் ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள் விருப்பத்தின்படி யிக்கோவைச் செய்யுள் சிலவற்றுடன் படிக்கப்பட்டது. அப்போது அச்சங்கத்தினங்கத்தவரிலொருவராகிய சோழவந்தான் மஹாவித்வான் ஸ்ரீமத். அ. சண்முகம்பிள்ளையவர்கள் கூறிய வெண்பா.

கந்தனென்று லென்னெஞ்சக் கல்லுருகு மன்னேன்வாழ்
சந்த மயூரகிரி தானென்றன்—முந்தின்பக்
கோவை யுளம்பிணிக்குங் கூறவற்றோ வம்மலையின்
கோவை யுளாங் கொள்ளிற் குணம்.

தென்றெழுதியிருப்பதால், இற்றைக்கு ககo வருடங்கட்குமுன் இந்நூ லியற்றியதாக விளங்குகிறது.

இவர் சிறுபிராயமுதல் தமது பிதாவினிடத்தில் இலக்கண விலக்கியங்களை ஐயந்திரிபறக்கற்றுவருங் காலத்தில், கி. பி. 1780ஆம் முதல் 1801ஆம் வரையில் சிவகங்கையை ஆண்டுவந்த பெருங்கொடையாளரும், இம்மைப்பயன் கருதாது மறுமைப்பயனையே கருதியவள்ளலும், தம்மை யொழியத்தமவெனச்சார்ந்தவைகளையெல்லாம் அக்காலத்துத்தமிழகத்தி லுள்ள புலவர் பலர்க்குமுதவி யன்னோரை யொருங்குகூட்டி யன்னோருடன் போதுபோக்குதலையே பெரும்பயனாகக்கொண்ட அருங்கலைவிநோதரும், அநேக தேவாலய பிர்மாலய அன்னசத்திரங்கட்குப் பலகிராமங்களை முற்றூட்டாகவளித்த தர்மப்பிரபுவும், ஐதராலியின் உதவியைக் கொண்டு நவாப்பின் படைகளை முறியடித்து வெற்றிமாலைகொண்ட, ரணசூரருமாகிய **மருதுபாண்டியனென்பவர்** சேதுமார்க்கத்திலுள்ள கலியநகரியில் அன்னசத்திரங் கட்டுவித்தற்கு வந்திருந்ததைக்கேள்வியுற்ற சர்க்கரைப்புலவர், அந்த மருது பூபதியைப்பார்த்து வரவிரும்பி அட்டநாகபந்தமென்னுஞ் சித்திரகவி யொன்றெழுதிவைத்துவிட்டுத் தாம்சிவபூசை செய்யச் செல்வாராயினர். அச்சமயத்தில் ஆண்டினிளையராயினும் அறிவின் முதியவராகிய சாந்துப்புலவர் தமது தகப்பனார் எழுதிவைத்திருந்த அட்டநாகபந்தத்தைப் பார்த்துத் தாமும் அதனுள் அட்டநாகங்களைச் சிறியவடிவாய் வரைந்து ஒரு செய்யுளையுமெழுதி முன்னிருந்த இடத்தில் வைத்துப் போய்விட்டனர்.

பூசைமுடித்துப் போஜனஞ்செய்துவந்த புலவர் தமது பரிசனங்களுடன் சிவிகையூர்ந்து கலியநகரிக்குச்செல்லக் கவிராசர் வரவு கேட்ட புவிராசராகிய மருதுபூபதி அகங்களிகூர எதிர்சென்றழைத்துஉபசரிக்கப் புலவர் தன் ஞாபகத்திலிருந்த அட்டநாகபந்தச் செய்யுளைச் சொல்லிப் பொருள்கூறிப் பின் அக்கவிவரைந்த ஏட்டை அரசரிடங் கொடுக்க, ஏற்ற அரசர் படித்துப்பார்த்துப் பெருமகிழ்வுற்றுக் "கவிராசரே தாங்கள் எழுதிய அட்டநாகங்களுங்குட்டிபோட்டுளவே என்னை?"யென மதியூகத்தாலறிந்த புலவர் குழந்தையைக்கேட்கவேண்டுமென்று மறுமொழி கூறக்கேட்ட அரசர், "அக்குழந்தை எங்குளது? யாருடையது?" என வினவியறிந்து அக்குழந்தையைப்பார்க்கவேண்டுமென்று உடனேகொண்டுவரும்படி சிவிகையைச் சிறுகம்பையூருக்கு அனுப்பிவிட்டனர். இராசதிருட்டியாகுமேயென்று பயந்த புலவர் தாம் ஊருக்குப்போய்க் குழந்தையை யனுப்புவதாய்ப் பன்முறைகூறியும் பார்க்கவேண்டுமென்னும் அவாமேலிடலாற் புலவர் சொல்லை மறுத்துவிட்டனர் பாண்டியன்.

பின்னுஞ் சிறிது போதுக்குள் ஐந்து கடிகை தூரத்திலுள்ள சிறு கம்பையூரிலிருந்த குழந்தை பல்லக்கில் வந்து சேர்ந்தது. வரவறிந்த பூபதி குழந்தையைத் தழுவி: "இதிற்குட்டி நாகம்வரைந்து பாட்டெழுதினவர் யாவர்?" என்றுகேட்க, "எழுதினவன் யானே" யென்று துடுக்காய்ச்சொல்லவே, பாண்டியன் அடங்காப் பெருமகிழ்வுற்று: "முன்னே முளைத்த காதிலும்பின்னே முளைத்தகொம்பு வலியுடைத்து" என்னும் பழமொழிக்கிலக்காவாரிவரே யென்றுளமகிழ்வுற்றுக், "கவிராசரே, இன்று முதற்குழந்தை என்னருகில் இருக்கவேண்டு" மென்றுசொல்லிவிட்டனர். புலவர்திகைத்து வருந்திச் சிறிது தேறி: "அரசே குழந்தை இலக்கிய இலக்கணங்கள் படித்துவருகின்றமையால் ஒருவாறு முற்றியபின் நானே கொண்டுவந்து சமுகவித்துவானாக விருக்கச்செய்து வருகிறேன்" என வேண்டினர். "குழந்தை இப்பொழுதே பெரும் புலவர் தான்; இன்னும் புலவராக்க விரும்பினால் தாங்களும் கூட வந்திருக்கலாகும்; அன்றேல், என்னருகிலுள்ள வித்துவான்களைக் கொண்டு படிப்பித்தலுமாகும்". என்று சொல்லிய பின்னரு மறுத்தற்கஞ்சிய புலவர் விசுவாமித்திர முனிவர் கையில் ஸ்ரீராமபிரானைப்பிடித்துக்கொடுத்த தசரதனைப்போற் கலக்கமுற்றுத் தம்மூர் போய்ச்சேர்ந்தனர். அப்போது சாந்துப்புலவருக்கு வயது பதினாறு.

அன்று முதற் சாந்துப் புலவரை யாவரும் அரண்மனைக் குழந்தையென்றழைப்பாராயினர். குழந்தை மருதுபாண்டியனுடைய புகழென்னுந் தொட்டிலிலாடி, அவரது சங்கப் புலவர்களென்னுஞ் செவிலியானுங் கல்வியமுதூட்டப் பெற்றுக்கவிச் சிரோரத்தினமென்று பெரும்புலவர்களெல்லாங் கொண்டாடும்படி, பல சித்திரங்களு மமைய சீமிஷகவிபாடுவதிலும், பிரசங்கஞ்செய்வதிலும், நாவன்மையுடையவராய் நடுநாயகமாய்ச் சிறந்து விளங்கியதன்றி, மருது பாண்டியனுக்குக் கண்ணுங் கவசமுமனையராய்ப் பிரதிநிதியாயுமிருந்து இராஜாங்க காரியங்களை நிருவகித்து வந்தனரென்றுங் கூறுப. இது சிறப்புப்பாயிரச் செய்யுளில், "எங்களிந்திரன் சாந்துமகிபால வாலகவீச் சுரனே" என்பதனாலும் வலியுறுகின்றது.

இவரிங்ஙன மிருந்த காலத்திற் பல தமிழ்ப்புலவர்கள் மருதுபாண்டியன் அவையையலங்கரித்திருந்தனரென்பதும், அவர்களுள் இவர் கவிச்சிரோரத்தினமாய் விளங்கினரென்பதும், அப்புலவர் பலர்க்கும் பலகிராமங்களை முற்றூட்டாகவளித்து மருதுபூபதி பாதுகாத்து வந்தன ரென்பதும், அக்காலத்துத் தம்பி பட்டியிலிருந்த வரும் வாலசரஸ்வதி எனப்பட்டப்பெயர் பெற்ற வருமாகிய முத்து வேலுக்கவிராசரி யற்றிய கவிகளாலுமுணரலாகும்.

பின்வரும் கவிகளுள் முன்னையது அக்காலத்துச் சென்னபட்டணத்திருந்த அசாது நவாப்பினுடைய மந்திரியாகிய இராமசாமிபிள்ளைக்கு எழுதிய சீட்டுக்கவியும்; பின்னையது முற்கவிக்கு நவாப்பிடஞ்சிவிகை முதலான விருதுகளுடன் பரிசு பெற்று மீண்டு ஊர்வந்தபின்பு நாலுவருடகாலந்தமது சபைக்குக்கவிராயர் வரவில்லை என்று சர்வமானியமாக அளித்திருந்த பூலாங்குண்டு என்னுங்கிராமத்தைத்தீர்வைக்கிராமமாக்கி விட்ட மருது பூபதியை மீட்டுங் கிராமமும் சிவிகை தாங்குபவர்கட்கு மானியமும் கொடுக்கவேண்டுமென்று பாடியதுமாகும். அவற்றுள்.

சீட்டுக்கவி.

புனிதமிகுநாற்கவிவிலாசன்மெய்த்தவஞானபூரணன்சைவாகமப்
பொக்கிஷமதான * சங்கரலிங்க முனிவனிருபொற்பதந்தன்னை நிதமும்
போற்றுசெய || முத்துவேலாயுதக் கவிராசபூபன்வர விட்டசனது
பூமண்டலாதிபதியசாதுநபாபகம்பூரணமீதாகமெச்சும்
புரவலகுபேரபாக்கியராமசாமிநற்புண்ணியனெதிர்ந்துகாண்க
புகழானநமதுசுபகரமெலாங்கேளுமற் புதமான தென்குழந்தா
புரியிலகுதுரைமுத்துவடுகநாதேந்த்ரன்மகிழ்புவனமுழுதும்புரக்கும்
பூபாலன்விசுவைவளர்மருதுபாண்டியராசபோசனுயர்சமுகமதனிற்
கனதைபெறுபஞ்சலக்ஷணவிதக்ஷணநலங்கமழும்வேதாந்தவாரி
கரைகண்டமுகில் ‡ சுப்ர மணியவிற்பனவசீகரனென்றும்லகியவிலக்
கணவிலக்கியகற்பனைச்சொக்கநாதக்கவிச்சக்கரவர்த்தியென்றுங்
கருங்குளஞ் சங்கர நராயணவதானி மருகன்சொக்கு பூபனென்றுங்
கல்விப்ரசங்கி சர்க்கரையுதவசாந்துக்கவிச் சிரோரத்னமென்றும்
கலைமுற்றுவித்வசனர்துதிமுத் தமிழ்க்குமதிகாரியுப காரிசகல
கலைநிபுணநாகலிங்கேந்த்ரனென்றும்மதுரகவியனந்தகவியென்றுங்
கலைமதங்கொண்டிடுசவாதுக்கவிச்சரபகாம்பீர்ய துங்கனென்றும்

---

* இந்தச் சங்கரலிங்க முனிவரையே இந்தக் கோவையிலும், எ,சஎக-ம் பாடல்களிற் குறித்துரைக்கின்றனர்.

|| இந்த வேதாந்த சுப்பிரமணியபிள்ளையவர்களே மயூரகிரித் தலபுராணம் பாடியவர்கள்.

‡ இந்த முத்து வேலுக்கவிராயர் என்பவர் இற்றைக்கு 200 வருஷங்களுக்கு முன்னிருந்த சவ்வாதுப்புலவர் முதலியோரையுமிப்பாட்டிற் குறித்திருப்பதால் தமது காலத்துக்கு முற்பட்டவர்களுட் சிலரையுங் கூறுவதாகத் தெரிகிறது.

மனமதுசபைக்குண்மலையாமற்சபாசெனவழுத்தும்வெண்பாப்புலிக்கா
வலனென்றுநீடுபொன்னங்காலிஞரென்றும்வளரிலக்கணவிளக்க
மாசிலாமணியெனும்பண்டாரமென்றுநல்வாக்கியாவிடைநாதீரா
வலனென்றுமிதிலைநல்லூரினொடுசெவ்வூரில்வருகவிஞரென்றும்வாணி
மருவுகொன் றைக்குளத் தண்ணுவியாரென்றும்வளமிகக் கண்டுகொண்ட
மாணிக்கநாட்டினில்விளங்கியதமிழ்ச்சிகாமணியெனும்பெரியமுத்து
மாரியப்பக்கவிஞனென்றுநதிகுலசைவமணிதிருப்புத்தூர்வளர்
வாலசரஸ்வதியெனதுபாட்டனெனவுயர்முத்துமாரியப்பேந்த்ரகவிஞ
ரெனவுமேபெயர்பெற்றுமுத்தமிழகத்தியற்கெண்மடங் கதிமானே
ரிப்படிக்கவிவலவர்பதினாயிரம்பேர்களிவர்கடனிலொருசிறியன்யா
னேதவிடம்விட்டுவெகுதூரதொலைதனில்வந்ததென்னினிவ்வுலகமதனில்
எமதுதுரையேராசராசர்கள்சிரோன்மணியெனத்துதித்தவர்கள் சமூகத்
திலகுபிரபந்தகவிவாலசரஸ்வதியுநாமெனவுநற் பெயர்செலுத்தி
யாவரும்புகழவேசெயவிருதுபெற்றிடவுமியல்பாகவந்தேனலா
லில்லாமையால்வந்ததன்றுநீதமிழறிந்திரவலர்க்குதவுதாரா
னென்னலானுனைநாடிவந்தனன்கீர்த்திநிதமிலகநிதியருள்புரிவையே

மருதுபாண்டியன் மீது பாடிய கவி.

ஞாலமதிலுயர்கின்றசிவகங்கையரசுநிலைநாட்டியகிரீடியான
ராஜேந்திராஜெயம்ஜெயம்விசயமேவுரகுராமாஜெயஞ்ஜெயங்கன் [மோ
னுமருதுபாண்டியதுரையேஜெயஞ்ஜெயமெனதுநலமகிழ்ந்தினிதுகேண்
நாலுவருடஞ்சென்னபட்டணத்தசாதுநவாபுசாய்பவர்கள்சதிரில்
நதிகுலாதிபன்ராமசாமிபூபதிதயவினாற்சிவிகைவெகுமதிகளும்
நலமுறப்பெற்றுமவிடத்துப்பிரபுகணேயநயமுற்றுமிவ்விடம்வர
நாடிமூட்டைக்காரர்சத்ரம்வந்தோமன்றிராத்திரிப்பெட்டியுடனே
நகைவகைவராகனுளதைப்பிராமணரிருவர்நலியாதுகைகொண்டுமெப்
பாலவர்களும்போயினார்யான்விழித்ததைப்பார்த்தவுடன்மனதுகவலை
பாய்ந்தவர்களைத்தேடியுங்காண்கிலாமலிதுபகவசங்கற்பமென்று
பாதைகூடிப்புதுச்சேரிதனில்வந்துயான்பரிதபித்திடும்வேளையிற்
பசியுறுகுழந்தைகட்கனையெனவும்வாடியபயிர்க்குமழைமாரியெனவும்
பாவாணருக்குதவுகற்பதருபுதுவையம்பதியாதிபதிதன்செயம்
பதியமாசிம்மமகாராஜசமூகஞ்சேதுபதிமற்றுமுளவர்சாதம்
பரிவுற்றுமேவதிகவிருதுபெறுகங்கைகுலபாக்கியசிலாக்யதமிழ்விற்
பன்னன்முன்முளைவாரியன்னவன்மேழிப்பதாகையன்பூமிபாலன்
வாலமதரூபசுபனானந்தனைசெயமாலென்னையுனதுசமூக
வாசற்ப்ரபந்தகவிவாலசரஸ்வதியென்றமாத்ரமேவரவழைத்து

மாதயவுசெய்ததாலவன்மீதியானுமொருமயிலிசைத்தா துசொல்ல
மனமிகமகிழ்ந்ததிகவெகுமதிகள்செய்திந்தவையமதிலுமதுதுரைபேர்
வளரவேபுகழுமேன்மேலுமேதுதியுமெனவண்மைமொழிகூறவேயவ்
வரிசைபெற்றவனைமிகவாழ்த்தியேதில்லைநகர்வந்துபொன்னம்பலத்தில்
மருவுநடராசனைத்தெரிசனஞ்செய்துநல்வழிமார்க்கமெய்திவிரைவாய்
வளமிகுந்திரிசிரபுரத்தில்முத்துக்கிருஷ்ணமா லுதவிகொண்டுமிப்பாற்
கோலமிகுதென்திருப்புத்தூரில்வந்துநங்குலதெய்வமாகியருளே
குடிகொண்ட காசிவயிரவமூர்த்தியிருபதங்கும்பிட்டிறைஞ்சியெனது
குருவானஞானசங்கரலிங்கமாமுனிக்குரிசிலைமனத்துள்வைத்துக்
கோகனகமலரலரும்வாவிதனிலேபசியகொட்டியுமலர்ந்ததெனயான்
குணமுற்றதமிழ்வித்வசனருற்றவுயர்முக்யகொலுவுனதுசமுகம்வந்து
குழவிதாய்முகநாடுமதுவெனக்கருணைபொழிகுளிர்முகமதனைநாடினேன்
குலவுசிவிகைக்கதிகவிருதுமும்பளமுங்கொடுத்துமுன்னிலைமைபூலாங்
குண்டுவயலுந்தந்துமென்றுநின்றயவுளங்கொண்டெனைக்காத்தருள்வை
[யே.*

இத்தகைய மாட்சிமைபெற்றிருந்த மருதுதுரையருகில் இவர், மேற்கூறியவாறு அமரும் நாளிற் பூபதிக்கு இராஜபிளவை புறப்பட்டுப் பல மணி மந்திரமாதிய வைத்தியங்களாலநுகூலமாகாமல் மிகவும் வருந்துவாராயினர். அப்போது ஒரு முதியவர் பூபதியை நோக்கி, அரசே, கலியுகவரதராகிய சுப்பிரமணியக்கடவுளுடைய பக்தர்களால் விபூதி போடப் பெறின் அநுகூலமாமென்று, சொல்லக்கேட்ட பாண்டியன், அங்ஙனமாயின் அத்தகையார் யாவரென்று வினவ, நாட்டுக்கோட்டைச்செட்டிப் பிள்ளைகளுக்குக் குமாரக்கடவுள் பிரசன்னமுள்ள குலதெய்வமாகலால் அவர்களுள் எவரேனும் விபூதிபோடுவது நலமென் றுரைக்கவே, அத்தகைய செட்டியாரொருவரைக்கொண்டுவருகவென்றுஉத்தரவளித்தனர்.

உத்தரவுப்படி சென்ற ஏவலாளர் எருத்துமாட்டிலேற்றிய உப்பு வியாபாரியாய் எதிர்ப்பட்ட நாடன்செட்டியாரென்பவரை யழைத்து வந்து பாண்டியன் முன்புவிட, விடப்பட்ட செட்டியார் யாதாமோவென்று அச்சமுற்றயருங்குறிப்பறிந்த பாண்டியன் முகமன்கூறி, உமது குலதெய்வமாகிய சுப்பிரமணியக்கடவுளுக்குப் பிரார்த்தனை பண்ணி யானிப்பிளவை

---

*இக்கவிகளை எனக்குதவியவர் சிவநேசச்செல்வர்களும் எனதன்பிற்கருங்கலமாகவுள்ளவர்களுமாகிய காரைக்குடி. ஸ்ரீமத். ராம. கு. ராமசொக்கலிங்கச் செட்டியாரவர்களிடத்திற் கல்விபயின்றவரும்இந்தமுத்துவேலுக்கவிராசர் பௌத்திரராகிய சொர்ணச்சாமிக் கவிராயர் குமாரரும் இப்போது தேவகோட்டையில் வசிப்பவருமாகியவேலுச்சாமிக்கவிராயர்.

யால் வருந்தாது பிழைக்கும் வண்ணம் விபூதி யளிப்பீராகவெனவேண்டச் செட்டியார் சிறிது மனந்தெளிந்து; இந்த மருதுபாண்டியனுக்கு அநுக்கிரகம்பண்ணி என்னை இவ்விடத்தினின்றும் விடுவிக்கவேண்டுஞ் சண்முகநாதாவெனச் சிந்தித்து விபூதி யுதவியபின்பு, பாண்டியன் அருகிருந்தவரை நோக்கிச் செட்டியாருக்கு உண்டிமுதலியன வளித்து உபசரித்து வைத்திருங்களென்று கட்டளையிட்டவாறு உபசரிக்கப்பெற்றும் செட்டியார் அச்சமுடையாராய்ச் சண்முகக் கடவுள்திருவடிகளை த்தியானித்திருந்தனர்.

அப்பால் வெகு நாளாய் நித்திரையில்லாமல் வருந்திய பூபதி அன்றிரவு அயர்ந்து தூங்கும்போது பாலசந்நியாசி ஒருவர் மயிற்றோகையுடன் வந்து தம்பிளவையைப் பிதுக்கி ஆணி யெடுத்து வாழையிலையில் வைத்துவிட்டுப் பிளவைவாயில் விபூதியை வைத்ததாகக் கனவு கண்டு வெருண்டு எழுந்து பார்க்கும்போது அச்செயல் யாவும் நனவாகவே யிருக்கக்கண்டு மகிழ்ந்து வியந்து காடன்செட்டியாரைத் தமது அருகு வரவழைத்து "எனக்கு அப்பனீ, அம்மைநீ, ஐயனும் நீயே" என்று புகழ்ந்து அன்றுமுதல் அண்ணன் என்று முறைபாராட்டிப் பேரன்புடன் தமதருகிற் சில நாளேனும் இருக்கும்படி வேண்டிக்கொண்டனர்.

அங்ஙனஞ் செட்டியாரிருக்கச் சில தினத்துள் தேகசௌக்கிய முற்ற பாண்டியன் செட்டியாரை நோக்கி, "அண்ணா நமது குலதெய்வமாகிய குமாரக்கடவுள் இருக்குந் தலம்யாதென்று" வினாவி. க்குன்றக்குடி என வழங்கும் மயூரகிரி யென்றறிந்த வேந்தர் செட்டியாருடன் தம்மைச் சார்ந்த பரிவாரங்கள் புடைசூழக் குன்றக்குடிக்குச் சென்று மலையடிவாரங்களில் அடர்ந்துள்ள காடுகளை வெட்டிச்சீர்செய்து மலைமேலேறிச் சண்முகக் கடவுளைத் தரிசனஞ் செய்து "இத்தகைய கருணாநிதியாகிய முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் இத்தலம் இவ்வாறு பொலிவிழந்திருப்பதேன்?" எனப்பல சோதிடர்களை வரித்து வினாவிச் சண்முகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் பீடத்தின் கீழிட்டிருக்கும் தகடு குப்புறக்கிடக்கிறதென்றறிந்து, பரிசோதனை செய்து, அங்ஙனந் தகடு கிடப்பக்கண்டெடுத்துச்செவ்வைசெய்து பிரதிட்டை பண்ணுவித்து மண்டபம், மதில், கோபுரமுதலான திருப்பணிகளும் பிறவும் புதுக்கிக் கும்பாபிடேகமுஞ் செய்வித்து, செம்பொன்மாரிமுதலிய கிராமங்களை அளித்தும் மருதாபுரி என்னும் தடாகமுண்டாக்கியும், தென்னந்தோப்புக்கள் வைத்தும் வெள்ளிமயில் வாகனம், பொற்கவசம், திருத்தேர் முதலியன செய்வித்தும், தைப்பூசத் திருவிழாவாதிய சிறப்புக்களைப் பெருமைபெறச் செய்தும், சண்முகக்கடவுள் திருவடிக்கண் இடையறாத பேரன்புடன் அத்

தலத்தில் * அரண்மனையுங்கட்டுவித்து அங்கு அமருநாளில் அவர்வேண்டு கோளால் இக்கோவையைப்பாடினரென்ப.

இப்புலவர் மருதுபாண்டியன் சண்முகக்கடவுளுக்குச்செய்த முற் கூறிய திருப்பணி முதலான தருமங்களையும், புலவர் கட்குப் பெருநிதி வழங்கிய பெருமையையும், பலவண்ணமாகப் பாராட்டிக் கூறியிருக்கும் அருமை மிகவும் வியக்கற்பாலவாம். அவைகளைத் தனித்தனியே யெழு தப்புகின் விரியுமென்றஞ்சி எழுதிற்றிலேன். ஆனாலும், க, கஉ, கூக, அக, கசஅ, கருரு, கருஅ, ககூகூ, ககூஅ, உ00, உஎரு, ருOரு, சOஎ, ருஉச, ருருரு என்னும் இலக்கச் செய்யுள்களைப் படித்தால் நன்குணரலாகும்.

அன்றியும் அக்காலத்து மருதுபூபதியாற் றருமகர்த்தாவாக்கப்பெற் றுத் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சார்ந்தவராயிருந்த சங்கரலிங்க முனி வருடைய ஈகை, அன்பு, முதலிய பெருமைகளை (எ; சஎக.)ஆம் பாடல் களிலும் மருதுபூபதிக்குச் சகோதரபாந்தமுள்ளவராகிய ‡ காடன்செட்டி யாருடைய மண்டபப்படிச் சிறப்பை சO௲-ம் பாடலிலும் பாராட்டிக்கூறி யிருக்கின்றனர். இவர் இக்கோவையில் ஏனைய நூல்களிற்காணப்பெறாத அரியதுறைகளையெல்லாம் அமைத்து, அதிவிசித்திரகரமான சொற் சுவை பொருட்சுவை நிரம்பிய யமகம், திரிபு, சிலேடை, அடிமடக்கு முத லிய கவிகளையும், கூட சதுக்கமுதலிய சித்திரகவிகளையும் அமைத்துப் பாடியிருப்பதுபோல் வேறெவரும் செய்திலரென்பது ஒருதலை.

இப்புலவருடைய பழய இலக்கிய விலக்கணமுதலான பலநூற் புலமையும், சொல்வன்மையும், கவித்திறனும், இந்நூலுள் எங்கேனுஞ் சில செய்யுட்களைப் படித்தறியும் விவேகிகளுக்கு நன்கு புலப்படும். அன்றி யும் புராணங்களுள் ஆழ்ந்த பொருளும், அரியகற்பனைகளும் நிரம்பிய தணிகைப்புராணம்போலும் கோவைகளுள் இந்த மயூரகிரிக்கோவை யென்பது பல பிரபலவித்துவான்களுடைய கொள்கை.

இத்தகைய விந்தக்கோவையை யரங்கேற்றியபோது பல ஆடையா பரணவாகனாதி விருதுகளுடன் காளையார் கோவிலுக்கு அருகில் இப் போது புலவர்மருதன்குடி என வழங்குங் கிராமத்தையுஞ் சம்மானஞ் செய்யப்பெற்றனர் என்ப. இது அச்சமயத்திற்சொல்லியதாயறியப்படுகிற

---

* இந்த அரண்மனை இப்போது கீழவீதியிற் சிதைவுற்றிருக்கிறது.

‡ இந்தக்காடன் செட்டியார் மரபிலுதித்தவர்கள் இப்போது அரண் மனைப்பட்டியென்னும் ஆத்தன்குடியிலிருக்கும் செ. கா. வகையினராவர். இவர்களது அன்னசத்திரமும், மண்டபப்படியும் இன்றைக்கும் குறை வின்றி நடைபெற்று வருகின்றன. இவர்கள் சத்திரத்திற்கு மருது பாண்டியனால் விடப்பட்ட கிராமங்களெந்தும்ப்பொழுது மதற்கேயுரித் தாகவுள்ளன.

“பொருதன்பி லார்மரு மன்னிய வாகை புயத்தணிந்த
விருத னுயர்முத் தமிழ்மாலை யுங்கொள்ள வேண்டுமென்றே
ஒருதன் குடியென் றுரையாமற் றானு முயர்வுபெற
மருதன் குடிதனைத் தந்தான் மருது மகிபதியே” என்னுங்
கட்டளைக்கலித்துறையானுந் தெரிகின்றது.

அன்றியுஞ் சிவகங்கைச் சமஸ்தானத்தில் சர்க்கரைப்புலவர் மகமையென்றொன்றுமுளது. அது சேது சமஸ்தானத்தினின்றுஞ் சிவகங்கை பிரிவதற்குமுன் ஆதிநெட்டிமாலைச் சர்க்கரைப்புலவருக்குச் சேதுபதிகளாற் கொடுக்கப்பட்டதோ, அல்லது இவரது தகப்பனாராகிய சர்க்கரைப் புலவருக்கு மருது பூபதியாற் கொடுக்கப்பட்டதோ நன்கு புலப்படவில்லை.

இங்ஙனஞ் சம்மானிக்கப்பெற்ற சாந்துப்புலவர் தன்னையாதரித்த மருதுபூபதிக்குப் பகைவரிடையூறுண்டானபோது அவரைப் பிரியாதவராய், நேர்ந்த யுத்தங்களில் தாமும் ஒருதலைவராய் நின்று போர்புரிந்து, கி. பி. 1801௵ அக்டோபர்மீ 3உ மருதுதுரையானவர் பகைவர் கையிலகப்பட்டுப் போனவுடன் பிரிவாற்றாது துயரக்கடலின் மூழ்கினவராய்த் தனது ஊராகிய சிறுகம்பையூருக்குச் சென்று, பின்னொரு வாரத்துள் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தனர். பின்னர் இவருடைய குமாரராகிய சர்க்கரைப் புலவரை இவர் பிதாவாகிய சர்க்கரைப்புலவர் சில காலம்படிப்பித்துப் பாதுகாத்தனர் என்று கூறுப.

இதனால் இப்புலவருடைய செய்ந்நன்றி மறவாமையென்னு முத்தமகுணமும், தன்னையாதரித்த பிரபுவினிடத்தில் வைத்திருந்தபேரன்பும்.

§ “காணுத லொழிக நல்லார்க் காணினுங் கவர்பா னட்புப்
பேணுத லொழிக பேணிற் பிரிவுற லொழிக வுற்றால்
மாணுயி ருடம்பில் வாழும் வாழ்க்கைபோ யொழிக வென்று
ஊணிடு மொருதாய் நீத்த பார்ப்பென வுளங்கு லைந்தார்.”

என்ற ஆன்றோர் வாக்குக் கிணங்க வுத்தமநண்பரைப் பிரிந்துயிர்வாழாமையென்னு நட்புத்திறனு நன்குணரலாகும்.

இவராலும், இவர் முன்னோராலும், பின்னோராலும் இயற்றப்பட்ட நூல்கள் பலவாகும். அவைகளுள் சிற்சிலவே இப்போது கிடைத்துள்ளன. அவற்றுள் இவரியற்றியதாக வேறொரு நூலும் காணக்கிடைக்கவில்லை. கிடைத்துள்ளவை. ஆதிநெட்டிமாலைச் சர்க்கரைப் புலவரியற்றிய திருச்செந்தூர்க்கோவை, வேதாந்த சூடாமணிக்கு இயற்றிய சித்தாந்த

§ பிரபுலிங்கலீலை கோரக்கர்கதி ௯.

சார்பானவுமை; பிந்திய சர்க்கரைப்புலவரியற்றிய மிழலைச்சதகம், மண்டலகோட்டை வண்டுவனப் பெருமாளூசல்; திருவாடானைச்சித்திர கவி மஞ்சரி; சீனிச்சர்க்கரைப்புலவரியற்றிய திருச்செந்தூர்ப்பரணி; சீனிப்புலவரியற்றிய துறைசைக்கலம்பகம்; சர்க்கரை அருணாசலப்புலவரியற்றிய பொன்பேத்திச் செல்லியம்மை ஊசல் முதலியன; சர்க்கரை முத்துமுருகப்புலவரியற்றிய செங்காலபிள்ளை மடத்தில் நிலைபெற்றிருக்கும் *வைராவக்கடவுள் பதிக முதலியன; சர்க்கரை இராமசாமிப்புலவரியற்றிய மஞ்சக்குடி சொர்ணவல்லியம்மன் பதிகம் முதலியனவாம்.

இவையன்றிச் சீட்டுக்கவிகளாலும் பிறவாற்றாலும் பெயர் மாத்திரம் அறியப்படும் நூல்களாவன: சர்க்கரைப் புலவரியற்றிய திருப்புனவாயிற் புராணம், திருப்புனவாயிற் பள்ளு, புதுக்கோட்டை அரண்மனையிலுள்ள தக்ஷிணாமூர்த்தி மும்மணிக்கோவை, சிங்கவனம் ஜமீந்தார் மெய்க்கன் கோபாலர் பேரிலியற்றிய நக்ஷத்திரமாலை, மங்கலக்குடிக் குறவஞ்சி, சர்க்கரை இராமசாமிப்புலவர், மஞ்சக்குடிப் பெருமாள்பிள்ளை பேரிலியற்றிய குறவஞ்சி முதலியனவாம். அன்றியுமிவர்கள் செய்த தனிச்செய்யுட்களுள்ளுஞ் சீட்டுக்கவிகளுள்ளும் எண்ணிறந்தன இறந்தொழிந்தன என்ப.

முற்காலத்துப் பிரபல வித்துவான்களாகச் சர்க்கரைப் புலவர் இருவரிருந்தன ரென்பது

இந்த மயூரகிரிக்கோவையினேட்டுப்பிரதியில் 510-ம் பாடலின் கீழ் 'இறையோன் மகிழ்ச்சியைக்கண்டோர் கூற்றாகவுரைத்தது காண்க. பிரிவுடன் படுதலைப் படர்க்கையாகவும் இறையோன் முன்னிலையாகவுங் கூறினருமுளர்; அவர் திருச்செந்தூர்க்கோவை பாடிய மூன்றாம் பாட்டனாராகிய சர்க்கரைப் புலவரென்க, எனக்காணப்படுங் குறிப்புரையாலும், இந்நூலிற் காணப்படுங் குறிப்புக்கள் ஆசிரியர் காலத்திலேயே எழுதியதாக அறியப்படுவதாலும் இந்நூலாசிரியராகிய சாந்துப் புலவருக்குத் தகப்பனாராகிய சர்க்கரைப்புலவரேயன்றி இவர் மூன்றாம் பாட்டனா

---

* இப்பதிகம் பொன்பேத்திச்செங்காலவீரப்பெருமாள் பிள்ளைக்குப் புத்திரப்பேறளிக்க வேண்டிப்பாடியங்ஙனம் புரிவித்ததாகும்.

இது,வேதமென்பதுவேயந்தவேதத்தின் விளங்குஞானக்கருத்துணின்றாடிய
நாதனென்பது நான்கவியென்பது நானிலத்திலிவைசேர் சமாயினாற் [வாய்
கோதில்வீரப்பெருமாள் செங்காலனுக்குரியமைந்தர் கொடுத்தருள்செய்கு
மாதவத்துச் செங்காலவேள் சத்ரத்தில் வளருமெங்கள் வயிரவமூர்த்தி
யே, என்பதாலுமறிக.

கிய சர்க்கரைப்புலவரும் பெரும் புலவராக விருந்ததாகத் தோற்றுகிறது. இது பின்வருஞ் சிறப்புப்பாயிரச் செய்யுட்களாலும் பட்டயங்களாலும் வலியுறுகின்றது. அவை வருமாறு

"உரைதருவேதாந்தசூளாமணியுட்பொருளை யுலகிலுள்ளோ
ருணரவுரைசெய்கவெனக்கடல்சூழ்
தரையரசன்சேதுபதியமாத்தியனுந் தாமோதரன்கங்காகுல
திலகன்றகுதிபெறச்சாற்ற
வரையறுத்துச் சித்தாந்தப்பொருட்டிறனுந் தோன்றவுருத்
தனனற்றுறைசைநமச்சிவாய தேசிகன்ருள்
பரவுசிவக்கொழுந்துநிதியருள்கல்விக்கடலைப்பருகுமு
கில் சர்க்கரை நற்பாவலவர் கோனே".

இவ்வுரைப்பாயிரம் இராமநாதபுரத்திலிருக்கின்ற நெல்லையப்பபிள்ளையவர்கள் குமாரர் எம்மோடு கற்றோராகிய சாமிநாதபிள்ளையவர்கள் பாடியதுஎன்று சர்க்கரைப்புலவரியற்றிய வேதாந்த சூடாமணியுரை யேட்டிற் காணப்படுவதாற் சர்க்கரைப் புலவர் திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்திற் சிவக்கொழுந்து தேசிகரிடத்தில் படித்தவரென்பதும், சேதுபதிகளுடைய மந்திரியாயிருந்த **தாமோதரம்பிள்ளையவர்கள்** விரும்பியபடி வேதாந்த சூளாமணிக்குச் சித்தாந்தப்பொருட்டிறங்களுந்தோன்ற உரை இயற்றினரென்பதுந் தெளிவாய் விளங்குகின்றது.

இந்தச் **சிவக்கொழுந்துதேசிகர்** திருவாவடுதுறையாதீனத்தில் எட்டாவது குருமூர்த்தியாகிய மாசிலாமணி தேசிகர் பெரிய பட்டத்திலும், இலக்கணக்கொத்து நூலாசிரியராகிய சாமிநாததேசிகர் சங்காபிடேகஞ் செய்யப்பெற்றுத் திருநெல்வேலி ஈசானிய மடத்தில் மூன்ருவது சின்னப்பட்டத்திலுமிருந்தபொழுது, இரண்டாவது சின்னப்பட்டத்திலிருந்தவர் என்றுவிளங்குவதோடு, இப்பொழுது திருவாவடுதுறை யாதீனத்தில் எழுந்தருளியிருக்கும் மஹாசந்நிதானமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண **தேசிகரவர்கள்** பதினேழாவது பட்டமாதலாற் பட்டம் ஒன்றுக்குக் குறைந்தபக்ஷம் இருபத்தைந்து வருடங்களாகக் கொண்டாலும், கி. பி. 1658-ல் இருந்தவராகவுந் தோற்றுகிறது. அன்றியும் சாமிநாததேசிகர் தாமியற்றிய இலக்கணக்கொத்தில் "என் கண் காணத்திருவாரூரிற்றிருக்கூட்டத்திற் றமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதன் இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினன்" என்பதனாற் சாமிநாததேசிகர் காலத்தில் இருந்தவரென்றறியப் படுகிற திருவாரூர் வைத்தியநாததேசிகர் காலம் இருநூற்றைம்பது வருடங்களென்பது, இற்றைக்கு இருபது வருடங்கட்கு முன் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் இலக்கணவிளக்கப் பதிப்புரை

யில் எழுதியிருப்பதை நோக்கும்பொழுது, இப்போது இருநூற்றெழுபது வருடங்களாகக் கருதப்படினும் திருவாவடுதுறையில் பதின்மூன்றாவது பட்டமாக வெழுந்தருளியிருந்த அம்பலவாணதேசிகரிடத்துச் சைவசந்நியாசமும் சிவதீக்ஷையும் ஞானோபதேசமும் பெற்றவரும், திராவிட மஹாபாஷ்ய கர்த்தராகிய சிவஞானமுனிவர் மாணாக்கரிலொருவருமாகிய தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர் காலம் இற்றைக்கு நூற்றிருபது வருடங்களாகுமென்று சென்னைப் பிரஸிடென்ஸிக் காலேஜ் தமிழாசிரியராகிய ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தணிகைக்கோவை முகவுரையிற் குறித்திருப்பதைக் கணக்கிடும்பொழுது பட்டம் ஒன்றுக்கு இருபத்துநாலு வருடங்களாவதாற் சாமிநாததேசிகருடனிருந்த சிவக்கொழுந்து தேசிகர் காலம் இருநூற்றைம்பது வருடங்கட்கு முற்பட்டதென்பது பெரும்பாலும் சரியாகவேயிருக்கலாகும். இவை நிற்க. சர்க்கரைப்புலவர் எழுதிய சீட்டுக்கவிகளில் "கதிரவகுலாதிபதி சேதுபதி சித்தமகிழ் கனதைப்பிரபந்தவாக்கி" என்றும் "சேதுபதி சித்தமகிழ் சர்க்கரைக்கவிராச சிங்க" மென்றும் "சேதுபதிவாசற் பிரபந்தவாக்கி" என்றும் பேர் குறிக்காமற் பொதுவாகக்காணப்படுவதன்றிச் சேதுபதிகளையே பாடிய தனிப்பாடல்கள் அகப்படாவிடினும், ஓர் சமயத்திற் சேதுபதிகள் சர்க்கரைப்புலவர் சொல்லிய கவியை மதித்துப் புகழ்ந்து பாராட்டியதைக்கண்டு பொறாமைகொண்ட சவ்வாதுப்புலவர்" "சர்க்கரை தொண்டைமட்டுஞ் சவ்வாது கண்டமட்டும், எனக்கேட்ட சர்க்கரைப்புலவர், "அதுவும் அந்தமட்டுத்தானே" என்றனர். எனவழங்குஞ் சாதுரிய வசனத்தால் (அந்த மட்டுந்தானே என்றது கண்டமுந் தொண்டையும் ஒன்று என்றபடி.) சர்க்கரைப் புலவருஞ் சவ்வாதுப்புலவரும் ஒரு காலத்திலிருந்தவரென்பதும், சவ்வாதுப்புலவர் கிளையாளன் சேதுபதி ரகுநாயகன் எனப்பாடிய தனிப்பாடலான் இவர்களை யாதரித்த சேதுபதிகள் கி. பி. 1645-முதல் 1670-வரையில் அரசு புரிந்தவரென்று செந்தமிழ்ப்பத்திரிகைத்தொகுதி 2-பகுதி 2-ஆல் அறியப்படுகிற இரகுநாத சேதுபதியாகிய திருமலைச் சேதுபதிகளென்பதும், இவர்கள் காலத்தில் இருந்த புலவர்கள், மிதிலைப்பட்டி அழகிய திருச்சிற்றம்பலக் கவிராயர், அமிர்த கவிராயர், படிக்காசுப் புலவர், என்பது தனிப்பாடல்களாலும், ஒருதுறைக்கோவை, தளசிங்கமாலை முதலியவற்றாலுந் தெளிவாய் விளங்குவதன்றி, எங்கள் குடும்பத்தவர்களுள் ஆதியிலிருந்தவர் செட்டிமாலைச் சர்க்கரைப் புலவர் என்று இற்றைக்கும் வழங்கிவரும் வழக்கத்தாலு மற்றொரு சர்க்கரைப் புலவரும் பிரபலமுள்ளவராக பிற்காலத்தில் இருந்திருக்கலாகுமென்றே தோற்றுகிறது.

நெட்டிமாலைபெற்ற வரலாறு.

ஒரு நாள் கம்பராமாயணத்தில் கடல்தாவுபடலத்தைப் பிரசங்கித்து வரும்போது அநுமார் கடலைத் தாண்டினுரென்ற சமயத்தில் எப்படித் தாண்டினுரென்று இரகுநாதசேதுபதிகள் வினவ, இப்படித்தான் தாண்டினுரென்று இருந்தப்படியே மேலெழுந்து சேதுபதிகள் இருந்த ஆசனத்தில் உட்கார்ந்தனரென்றும், கண்டு வியப்புற்ற அரசர் மேலெழுந்தபோது சபாமண்டபத்தில் விதானமாக அலங்கரித்திருந்த நெட்டிமாலைகள் அறுபட்டுக் கழுத்தில் விழுந்தமையால் அன்றுமுதல் அம்மாலையையே விருதாக வளித்து 'இராமாயணப் பிரசங்கம் நெட்டிமாலைச் சர்க்கரைப்புலவர்' எனப்பட்டஞ்சூட்டி உழக்குடிக்கிராமத்தை சர்வமானியமாக அளித்தனரென்றுங் கூறுப. இது "வந்தஜெயபாரத விராமாயணத்திலே வாடாத நெட்டிமாலை மருவிட்டதிருவிட்டு வழுவாது நழுவாது வாசாம கோசரமதாய்ச் சிந்தைமிகவே சற்றுமலையாது சபையிலே செய்யும் பிரசங்கநிபுணன், சேதுபதி சித்தமகிழ் சர்க்கரைக்கவிராச சிங்கம் யாமெழுதும் நிருபம்" என்னும் சீட்டுக்கவியானுந்தெளிவாய் விளங்குகிறது.

இஃதன்றியும் சிறுகம்பையூர், ஓரியூர், பாகனூர் முதலாகிய கிராமங்களில் மானியங்களுஞ் சமஸ்தானத்தில் மகமையும் பெற்றிருப்பினும் அவை இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன சேதுபதிகளால் இன்ன இன்ன புலவருக்கு கொடுபட்டனவென்று புலப்படவில்லை. ஆனுலும் இரகுநாதசேதுபதிகள் காலத்திலேயே சிறுகம்பையூரில் மானியம் விடப்பட்டதென்பதும், ஆதிநெட்டிமாலைச்சர்க்கரைப்புலவரே அவ்வூரைத்தமக்கு உறைவிடமாகக் கொண்டனரென்பதும், சிறுகம்பையூர் மானியமாகிய கோணச்செய் அவ்வூரிலுள்ள நிலங்களைப்பார்க்கிலும் அதிகமாய் விளைகின்றதென்று சிலர்சொல்லியதைக் கேள்வியுற்ற சர்க்கரைப் புலவர், "கரும்பாலையாடுவதேன் ? கம்பையூர்க் கோணச்செய்விளைவதேன் ? சர்க்கரைக்குச் சர்க்கரைக்கு" எனக்கூறினரென்பதானும் விளங்குகிறது. இரகுநாத சேதுபதிகளேயன்றியவர்கள் வழிவந்தசேதுபதிகளும் சர்க்கரைப் புலவர் வழிவந்த புலவர்களுக்கு மானியமும் மகமையுங்கொடுத்து ஆதரித்துவந்தார்களென்பது கி. பி. 1795-ல் இருந்த முத்துமுருகப் புலவர்பேருக்கு கோட்டைப்பட்டணம் தாலூகா கிராமங்களில் மானிய சுதந்தரம் ஏற்பட்டிருப்பதாலேயே யறியலாகும்.

இரகுநாதசேதுபதிகளாற் பெற்ற மானியமகமைகளுக்கும் அவர்கள் வழிவந்த சேதுபதிகளாற் கொடுக்கப்பட்ட மானிய மகமைகட்கும்

யாதொரு பட்டயமும் கிடையாவிடினும், இரகுநாதசேதுபதிகள் சகோதரரான முத்துவைரவநாததேவரவர்கள் கொடுத்த கோடகுடி கொந்தவான் வயல் என்னுங்கிராமங்களின் சர்வமானியப் பட்டயத்தால் ஆதி செட்டிமாலைச் சர்க்கரைப்புலவர் கடைசியாயிருந்தாலும் இன்னதென்று துணியப்படுகின்றது. அப்பட்டயமாவது:—

ஸ்வஸ்திஸ்ரீமான் மஹாமண்டலேசுரர் ... இதன் மேற் செல்லா நின்ற கரநாமஸம்வர்ச்சரத்தில் வருஷ ருதுவில் கார்த்திகை மாசத்தில் சோமவாரமும் புனர்பூசநட்சத்திரமும் ஸித்தநாமயோகமும் பாலவாகரணமும் கூடிய சுபதினத்தில் தேவை நகராதிபன், ராமநாதசுவாமி, காரியதுரந்தரன், சிவபூஜாதுரந்தரன், பரராஜசேகரன் பரராசகேசரிசிங்கம், இரவிகுலசேகரன், சொரிமுத்துவன்னியன், அரியராயிர் தளவிபாடன், வாக்குத்தப்புவராக்கண்டன், பட்டமானங்காத்தான், துட்டராயர்கண்டன், புவனேகவீரன், வீரகஞ்சுகன், வீரவளநாடன், வீரமார்த்தாண்டன், பரதவித்தியாதரன இயல்வித்தியாதரன பரதளவிபாடன், அரிகொலரசுதன், அத்தமபாகண்டன், சாடிக்காரன்கண்டன், சாமித்துரோகிகள் மிண்டன், பஞ்சவன்ன ராகுத்தன் பனுக்கு வராக்கண்டன், கொட்டமடக்கிவையாளி, நாராயணன் இவுளி பாவடி மிரித்தேறுவார்கண்டன், இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம், பகைமன்னர் சிங்கம், துரைராயன், ஆற்றிற் பாச்சி, கடலிற்பாச்சி ... மதப்புலி, வண்ணிகாப்புலி, வன், * ... னியராட்டம ... தவிழ்த்தான், மேவலர்கள் சோளரி, மேவலர்கள் வணங்குமிருதாளினன், வீரகெம்பீரன், தொண்டித்துறை காவலன், துரகரெவெந்தன், அநுமகேதனன், கொடைக்குக் கர்னன், பரிக்கு நகுலன், குன்றனையமேருவிற் குன்றுவளை குணில் பொறித்தவன், திலகநுதன் மடமாதர் மடலெழுதவருசுமுகன், விசயலக்ஷுமிகாந்தன், சகலகலை விற்பன்னன் காமினி கந்தர்ப்பன், அட்டதிக்கு மனோபயங்கர துட்ட நிக்கிரகசிட்ட பரிபாலன், வீரதண்டை சேமத்தலை விளங்குமிருதாளினன், சேதுகாவலன், வாமாதிபனுன துகவூர்க் கூற்றத்துக்காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர்க்கீழ்பால் விரையாதகண்டன், ஹிரணியகர்ப்பயாஜி ரெகுநாததேவர் மருமகன் செம்பிநாட்டில் திருவுத்தரகோசமங்கையிலிருக்கும் சடம்புதேவர் புத்திரன் விஜய ரகுநாத சேதுபதி சகோதரரான முத்துவயிரவநாததேவரவர்கள் கிடாரத்திலிருக்கும் சாந்தாபிள்ளை புத்திரன் ராமாயணப்பிரசங்கர் சர்க்கரைப் புலவருக்கு ராமசுவாமி சந்நிதியில் வேதபாரகரும் இயலிசை நாடகத்தமிழ் வித்தியாதரருங்கூடிய சபையில் ராமாயணப் பிர

* இது சேதுபதியவர்கள் கையெழுத்து.

சன்னத்துக்குப் பரிசாய் இராமசாமி பட்டாபிஷேகத்தில் கட்டளையிட்ட கிராமமாவது, வெள்ளாம்பத்தில் சாத்தனி வயலுக்கும் எம்பற் குளத்துக் காலுக்குந் தெற்கு; மஞ்சக்குடிப்புரவாகிய வலையன் வயலுக்கும், கிழக் காவனூருக்குங் கிழக்கு; விதத்தூருக்கு மேற்படியூர்ப் புரவாகிய பொத் தையன் வயலுக்கும் வடக்கு; ஆசான் வயலுக்கும் எம்பற் குளத்துக்கும் மேற்கு; ஆக இந்த நான்கெல்லைக்குட்பட்ட கோடகுடி கொந்தாலம் வயல் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத்திடல் மேல்நோக்கிய மரம், கீழ்நோக்கிய கிணறும் நீரும் பாசி முதலாகிய குடி, படை, பள்ளுப் பறை, இறைவரி, ஊழியம், உலுப்பை சகல சமுதாய வாளப்பிரயோசன நிதி நிக்ஷேபசெலதருபாஷாண அக்ஷய பிர்மவு-கூவ்வஷமென்று சொல் லப்பட்ட அஷ்டபோக தேசஹாசியங்களுக்கும் தானவிக்கிரயங்களுக்கு யோக்கியமாக சந்திரார்க்க சந்ததிப் பிரவேச புத்திர பௌத்திர பாரம் பரையாகச் சருவமானியமாக வாண்டனுபவித்துக்கொள்ளவும். இந்தக் கிராமத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினபேர்கள் காசியிலே யும், மற்றைப் புண்ணியஸ்தலங்களிலேயும், பெரியோர்கள் சந்நிதானங் களிலேயும், ராமசுவாமி சரித்திரங்களாகிய இராமாயணத்தைக்கேள்வி யானவர்கள் எந்தப் பலத்தையடைவார்களோ அந்தப்பலத்தையடைவா ராகவும். இந்தக் கிராமத்துக்கு அஹிதம் பண்ணினவர்கள் ராமசுவாமி சரித்திரத்தை யசத்தியமாக நினைத்தவர்கள் போகின்ற தோஷத்திலேயும் கங்கைக்கரையிலேயும், தனுக்கோடிக்கரையிலேயும் ஈமைமடத்துமைடம், சிவ பத்தரையும்; இம்மிசை பண்ணின தோஷத்திலேயும் அடைவாராகவும்.

> இறுவரம் பிலிராம வென்றே ரும்பர்
> சிறுவ ரென்பது நிச்சய மாதலான்
> மறுவின் மாக்கதை கேட்டவர் வைகுந்தம்
> பெறுவ ரென்பது பேசவும் வேண்டுமோ. என்பதாம்.

இது கி. பி. 1711 ல் கொடுக்கப்பட்டிருப்பதால் சர்க்கரைப்புலவர் ரகுநாதசேதுபதிகளுக்குப் பின்னும் சக வருடம் வரையிலும் இருந்த தாகத்தெரிகிறது.

இவரது ஆசிரியராகிய சிவக்கொழுந்து தேசிகர் கி. பி. 1658-ல் இருந்ததாகக் கருதப்படுவதால், அவரிடம் கல்விகற்று முற்றியபின் இரகுநாதசேதுபதிகளின் ஆட்சியின் பிற்பகுதியிலே தான் இவர் சமஸ் தான வித்துவானாக வந்திருக்கவேண்டும். அங்ஙனஞ் சமஸ்தான வித்து வான் ஆனகாலத்தில் இவருக்கு வயது இருபத்தைந்து வைத்துக்கொண் டாலும், இந்தப்பட்டயம் பெறும்பொழுது எழுபத்தைந்து வயதுக்கு குறையாதிருந்திருக்க வேண்டுமென்றே தோற்றுகிறது. இவ்வளவு முதிர்ந்த வயதில் இராமாயணப் பிரசங்கஞ்செய்து இத்தனைய நன்

கொடை பெற்றாரென்பது இக்காலத்தவர்க்குப் புதுமையாகக் காணப் படினும், தற்போதிருக்கும் முற்காலத்திய முதியவருடைய தேகபலத்தை நோக்கும்பொழுது அக்காலத்துத் தொண்ணூறு வயது வரையிலும் இருந்ததாக அறியப்படுகிற இவர் திடசரீரியாக இருந்திருக்கக்கூடு மென்றே தோன்றுகிறது. அன்றியும் நெட்டிமாலைச் சர்க்கரைப்புலவர் தொண்ணூறு வயது வரையிலு மிருந்தாரென்பது * தமிழருமையறிந்த வளும் நூறு வயது வரையிலுமிருந்தவளுமாகிய அவர் மனைவியாலறியப் பட்ட கர்னபரம்பரைச்சேதியாகும்.

இஃது இங்ஙனமாக; நூற்றுநாற்பத்தேழு வருடங்கட்குமுன் கி. பி. ௫௧-ல் சர்க்கரைப் புலவர் மிழலைச்சதகம்பாடி அரங்கேற்றியதற்கு மிழலைக்கூற்றத்து வேளாளன்குலத்தவர்களால் அவர் குமாரராகிய முத்து முருகப்புலவருக்கு மகமைப்பட்டயமொன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பட்டயமாவது:—

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் ௲௬௱௭௰௩ கலியாப்தம் ௪௲௮௱௫௰௨ இதின்மேற்செல்லாநின்ற விக்கிரமஹ மாசிமீ ௰௬உ. திருமிழலை நாட்டுப் பிள்ளைமார்சர்க்கரைப்புலவர் குமாரர் முத்துமுருகப்புலவருக்கு மகமைப் பட்டயம் பண்ணிக்கொடுத்தபடி மிழலை நாட்டுச்சதகம்பாடி நாட்டுப்பின்

---

* இவ்வரலாறு வருமாறு:—இது சேதுபதிகள் சர்வமானியமாக வளித்த உழக்குடிக் கிராமத்தின் குளக்கால் சம்பந்தமாக ஏற்பட்ட மனத் தாங்கலால் அதற்கு அயற்கிராமத்தார்கள் புலவர் வீட்டைக் கொள்ளைய டிக்கக் கருதியிருந்ததை யறிந்த ஆதி நெட்டிமாலைச் சர்க்கரைப் புலவரு டைய பௌத்திரர்கள் வீட்டிலுள்ள பண்டங்களையெல்லாம்வீட்டுப்புறத்தி லுள்ள கொல்லையிற் புதைத்துவிட்டுத் தமது பாட்டியாகிய கிழவியைவீட் டிலிருத்தி அயலூருக்குப் போய்விட்டார்களென்றும், அச்சமயத்தில் கொள்ளையடிக்கக் கருதியவர் வந்து வீட்டில் யாதொன்றுங் காணப் பெறாமையால் கவற்சிகொண்ட பேர்களுள் ஒருவன் வெறுங்கையை வீசிக்கொண்டு போகிறதா, இதோ அடுக்கியிருக்கும் ஏடுகளிலாவது ஆளுக்கொன்றை எடுங்கள் என்று சொன்னதைக்கேட்டிருந்த கிழவி, எந்தப்பொருள் போனாலும் நம்பிள்ளைகள் தேடிக்கொள்வார்கள் அந்தப் பொருளைத் தேடிக்கொள்வதற்கு ஏதுவாயிருக்கும் இந்த ஏடுகள்போய் விட்டால் யாது செய்வார்கள்? நம்வீட்டிற் பலபேர்கள் வந்து ஏடுகள் எழுதிக்கொண்டகாலம்போக, நம்பிள்ளைகள் அயலார் வீட்டுத்திண்ணை யிற்போயிருந்து எழுதிக்கொள்ள விரும்பினும் கிடைக்கக்கூடியதில்லையே யென்றெண்ணி ஏடுகளை யெடுக்க முயன்றவர்களைக் கூப்பிட்டு வீட்டி லிருந்த பண்டங்களைப் புதைத்து வைத்திருக்குமிடத்தைச் சொல்லி விட் டாளென்றும். அப்போது ஒருவன் கையில் ஒரு ஏட்டையெடுத்துக் கொண்டுபோக விரும்பியதைக்கண்டு அவ்வேட்டைத்திருகிப் பறித்துக் கொண்டாளென்றும். அந்த ஏடுதான் இப்போது எங்கள் வீட்டிலிருக் குங் கம்பராமாயணமென்றும், இப்போது எங்கள் வீட்டிலிருக்குமுதிய வர்களால் விளங்குகிறது.

ளைமார்பேரில் அரங்கேற்றினதற்குச் செங்காலபிள்ளை நாட்டுப்பிள்ளைமார் உள்ளிட்டாரும். ஆத்மசந்தோஷமாக மாத்தால் குருணி வீதம் மகமைப் பட்டயம் பண்ணிக்கொடுத்தோம்.

வெள்ளாம் பத்தில்...... ...., ...பண்டாரவாடைக்கிராமம். சருவமானியக்கிராமம், அர்த்தமானியக்கிராமம், சுரோத்திரியக்கிராமம். கோவிற்கிராமம். இந்த கிராமத்துக்கெல்லாம் மாத்தால் குருணி வீதம் மகமை என்றென்றைக்கும் கொடுத்து நடப்பிவிப்போமாகவும். இந்தப்படிக்குப் பொன்பேத்திச் செங்கால சீரங்கபிள்ளை, வீரப்பெருமாள் பிள்ளை. தீராவிளை தீர்த்தபிள்ளை. திருவப்பிள்ளை. தியத்தூர்ப்பெருமாள் பிள்ளை. குளத்தூர்ச் சீரங்கப்பிள்ளை, களபம் வீரப்பெருமாள்பிள்ளை, ஆவணம் வெழுவுப்பிள்ளை. பெரியணுபிள்ளை. அமரடக்கி வீரப்பெருமாள் பிள்ளை. சேக்ரமேலக்கிராம் சின்னுப்பிள்ளை, வேங்கப்பிள்ளை, நாளனூர் கொண்டாபிள்ளை, அடைக்கலங்காத்தபிள்ளை. பாக்கம் மணவாளபிள்ளை. மீன்புசல் செய்யானம் குஞ்சுப்பிள்ளை, மணவாளபிள்ளை. வீரப்பெருமாள்பிள்ளை. ஒட்டையளம் மணிகட்டியா வீரப்பெருமாள் பிள்ளை, கிளத்தூர் உலகபிள்ளை. கார்க்கமலம் மணவாளபிள்ளை, பாண்டியா பிள்ளை, ஆவணுபிள்ளை, ...ருமபிள்ளை. நெய்வேலி வீரப்பெருமாள்பிள்ளை. வெள்ளுநர் அழகபிள்ளை. மீட்டாபிள்ளை. சிறுவரை மாக்கபிள்ளை. பூவலூர் வீரப்பெருமாள்பிள்ளை. சாத்தகுடிக் கொண்டா பிள்ளை. வேட்டனூர் .. .. பிள்ளை. கொடிக்குளம் மலையப்பபிள்ளை. வேங்கடம்பிள்ளை. பெரியணுபிள்ளை, வீரப்பெருமாள் பிள்ளை. ஆளுடையார்கோவில் அம்பலத்தாடு தம்பிரான் அவர்கள். சாமியப்பநம்பியார், சிலம்பாத்தான் சேருவைகாரர். ஒக்கூர் சின்னம்பலகாரன், கட்டயனம்பலகாரன், பொதுவக்கூர்ச் சேருவைகாரன், ஆலத்தூர் .... பொய்யனூர் அழகபிள்ளை ; இவர்கள் சொற்படிக்கு வெள்ளூர் மாகாணம் நாட்டுக்கணக்கு. குப்பையன் கைநெட்டெழுத்து இந்தப்படிக்குச் சந்திராதித்திய பிரவேச புத்திர பௌத்திரபாரம்பரியமாகப்பெற்றுக்கொண்டு சுகமேயிருக்கக்கட வராகவும் இந்தப்படிக்குச் * **செங்காலபிள்ளை.**

---

* இவர், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளலைப் போலவே பிற்காலத்திருந்த கண்டியராசனுக்குச் சம்பாநெல் லனுப்பிய பெருஞ் செல்வர்.

இது. "கொந்தாருங்கண்டியர் கோனுக்குச்செந்நெற் கொடுத்தனுப்புஞ்
செந்தாமரைக்கண்ண னன்பாலோர்பிள்ளை செங்காலனென்றே
ழுந்தருவெண்ணெய்ப் புவியிலுற்றுன்மற் றவன்குலத்தில்
வந்தார்க ளாவரிவர்காண் மிழலையில்வாழ் பவரே." என்னு மிழலைச் சதகத்தான் விளங்குகிறது.

'இந்த மிழலைச்சதகம் சர்க்கரைப்புலவரே பாடினதென்பது.

"தருதஞ்சை வாழும்ப்ர தாபசிங் கேந்த்ர தருமன்மெச்சும்
வருமணி மாழுத் திரைவேங்க டாசல மால்சம்ப்ரதி
நரதுங்க பாலக மாணிக்க வேள்சுபை நாளையிலே
உரைசெய் மிழலைச் சதகத்தைச் சர்க்கரை யோதினனே''

என்பதானுந் தெரிகிறது. தஞ்சை பிரதாபசிங்கு மஹாராஜா கி. பி. 1735 முதல் 1763 வரையில் இருந்ததாகத் தெரிவதால் மேற்கண்ட மக மைப்பட்டயத்திற் குறித்தகாலத்திற்கு மொத்ததாகும். அன்றியும் கி. பி. 1711-ல் சர்வமானியப்பட்டயம் பெற்ற சர்க்கரைப்புலவருக்கு அக்காலத் திலேயே 75 வயது இருக்குமென்று கருதப்பட்டமையாலும், அவரே பின்னும் 50 வருடங்கழித்து மிழலைச் சதகம் பாடியரங்கேற்றினரென் பது கூடாமையாலு மிழலைச்சதகம் பாடியவர் பின்னிருந்த சர்க்கரைப் புலவரென்றும், இவரே சாந்துப்புலவருக்குத் தந்தையென்றும் விளங்கு கின்றது.

இது 1801-ல் மருதுபாண்டியன் பகைவராற் பிடிக்கப்பட்டதைய றிந்துதுக்கசாகரத்தில் மூழ்கினவராய்ச் சிறுகம்பையூருக்குப்போனவுடன் சிவபதமடைந்த சாந்துப்புலவருக்குப் பின்னும் அவர் தகப்பனர் சர்க்க ரைப்புலவர் இருந்தார் என்று அறியப்படுவதற்கும் ஒத்ததாகவிருக்கிறது. இந்தப்பட்டயம் முத்துமுருகப்புலவர்பேராலிருப்பதைக் கருதும்போது, சர்க்கரைப்புலவர் தாமே தம் பிள்ளைகட்குப் பாகம் ஒதுக்கிக் கொடுத்து விட்டு இளைய மனைவி குமாரராகிய முத்துமுருகப் புலவரிடத்தில் கோட்டைகுடியில் இருந்தகாலத்தில் மிழலைச் சதகம் பாடிப் பட்டயத்தைத் தன் இளைய மனைவிபிள்ளை பேருக்குச் செய்வித்திருக்கலாகுமென்று விளங்குகிறதுடன், சாந்துப்புலவர் சகோதரர்களாகிய சீனிச்சர்க்கரைப் புலவர், சீனிப்புலவர், முத்துமுருகப்புலவர் முதலியோரேயன்றி இவர் கட்கு முன்னும் சீனிச்சர்க்கரைப் புலவர், சீனிப்புலவர் என்பவர் இருந்ததாக அறியப்படுவதால், அவர்களே ஆதிநெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர் குமாரர்களென்றும் அவர்களுள் சீனிச்சர்க்கரைப்புலவர் குமா ரரே மிழலைச்சதகம் பாடிய சர்க்கரைப்புலவரென்றும், அந்தச் சீனிப்புல வரே திருவாவடுதுறையில், பன்னிரண்டாவது பட்டத்திலெழுந்தருளி யிருந்த திருச்சிற்றம்பலதேசிகரிடத்து ஞானோபதேசம் பெற்றுத் துறை சைக்கலம்பகம் பாடியவரென்றுங் கருதப்படுகிறது. இது மயூரகிரிக் கோவை 510-ஆம் பாடலின் கீழ்க்கண்ட குறிப்புரைக்கும் ஒத்ததாகும்.

இத்துணையுங்கூறிய வாற்றால் இந்நூலாசிரியராகிய சாந்துப்புலவ ருக்குத் தகப்பனராகிய சர்க்கரைப்புலவரேயன்றி மூன்றாம் பாட்டனரா

கிய சர்க்கரைப்புலவரும் ஒருவரிருந்தாரென்பதும், இரகுநாத சேதுபதிகள் முதல் அவர்கள் வழிவந்த சேதுபதிகளும், ஆதி நெட்டிமாலைச் சர்க்கரைப்புலவர் முதலாக அவர் வழிவந்த புலவர்களை ஆதரித்து வந்தார்கள் என்பதும், இப்புலவர் மரபில் முன்னும் பின்னும் பல பெரும்புலவர்கள் தோன்றியிருந்தார்களென்பதும், சேதுபதிகளுக்குக் குருபீடமாய் விளங்குந் திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனமே அச்சேது சமஸ்தான வித்துவானாகிய ஆதிசர்க்கரைப் புலவர் காலமுதல் அவர் வழித்தோன்றிய பெரும்புலவர்களாயிருந்த சீனிப்புலவர், சீனிச்சர்க்கரைப் புலவர் முதலானவர்கட்கும் அன்னமும் ஆடையும் அருந்தமிழ்க் கல்வியுஞ் சொன்னமும் அளித்து அருள்புரிந்து வந்ததென்பதும் நன்குணரலாகும்.

இந்த நெட்டிமாலைச் சர்க்கரைப்புலவர், ஆதியில் சிறுகம்பையூரில் இருந்தாராயினும் இவர் மரபிலுள்ள புலவர்களிப்பொழுது சிறுகம்பையூரிலும், ஒரியூரிலும், கோடகுடியிலும், பண்டைக்காலத்துச் சேதுபதிகளாற்கொடுக்கப்பெற்ற மானியமகமைகளையே சீவனுதாரமாகத் துய்த்துச் சுகித்திருக்கின்றனர்.

சேர சோழ பாண்டியரென்னு மூவேந்தர்களுக்குப்பின் செந்தமிழ்ப் பாவேந்தர்களை யாதரித்துவரும் இத்தகையவள்ளன்மையுடைய சேதுபதிகள் திருமரபு நீடூழிவாழ்க.

இந்நூலாசிரியராகிய சாந்துப்புலவருக்குப் பிதாவாகிய சர்க்கரைப் புலவரேயன்றி இவருக்கு மூன்றும்பாட்டனாராகிய சர்க்கரைப் புலவரும் ஒருவருண்டென்பதை யறிவிக்கு நிமித்தமாக இவர் முன்னோர் வரலாறுஞ் சுருக்கக்கூறவேண்டுவ தின்றியமையா திருந்தமையானும், ஆதி சர்க்கரைப்புலவரைத்தவிர அவர்வழிவந்த மற்றப்புலவர்களுடைய பெயர்களையும் தமிழுலகம் அறியாமலிருந்தமையானும், அவற்றைத் தொகுத்து இவ்வரலாற்றுடன் ஒருவாறு எழுதினேன்.

இதிற்குறித்துள்ள காலவளவு முதலியவற்றில் ஏதேனுந் தவறுகளிருக்கவுங் கூடுமாதலாற் கல்வியறிவுள்ள பெரியோர் அவற்றையெனக்குத் தெரிவிப்பார்களாயின், இரண்டாம் பதிப்பில் அவர்கள் திருத்தியவாறு அவர்கள் பெயருடன் பதிப்பித்தலன்றி, அவர்கள்பால் எப்பொழுதும் நன்றிபாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்,

கோடகுடி, சே. சர்க்கரை இராமசாமிப்புலவன்.

உ

கணபதி துணை.

வேலுமயிலுந் துணை.

மயூரகிரிக்கோவை.

காப்பு.

வெண்பா.

பூமான் மருவும் புயன்மருகன் விண்ணவர்கள்
கோமான் மயூரகிரிக் கோவைசொலத்—தாமுதவும்
பிந்தா வளமுகவன் பில்லார்க்குச் செய்யுமொரு
தந்தா வளமுகவன் றாள்.

முதலாவது—கைக்கிளை.

காட்சி.

கட்டளைக்கலித்துறை.

பூமேவு பொற்பிடி சிங்கங் களிறம் புலிபசும்பூங்
காமேவு மான்கொண் டொருதோகை யன்னத்தின் கண்ணுற்ற
றேமேவு முல்லை மருதேந்த்ரன் போற்றுஞ்செவ் வேள்கமல [தாற்
மாமே வியகுஞ்ச ராசனச் சோலை மயில்வரைக்கே. (க)

ஐயம்.

பாய்தந்த கோட்டுத் தகரான் மயூரப் பருப்பதத்தான்
றாய்தந்தை யோதந்தை கண்ணன சந்த்ரோ தயப்பகையோ
வேய்தந்த தோகை மயிர்ப்பகை யோசெங்கை வேலெடுத்துக்
காய்தந்த காலத்தி லூர்கொண்ட தோவிடங் காதலிக்கே. (உ)

துணிவு

திரைமேலுள் ளாரெனிற் கைபல ரிங்கில்லைச் செம்மலைநாண்
டரைமேலுள் ளாரெனிற் கான்மல ரங்கில்லைத் தானடித்த
வரைமேலுள் ளார்பணி வேலான் மயூர வரையினிற்பத்
தரைமேலுள் ளாரிவர் வெண்பிறை மேன்முத் தரும்பியதே. (ங)

குறிப்பறிதல்.

ஈரரு மறையவ ரும்வருந் தாமற் சுரும்பைநஞ்சந்
தரரு நிலாவு மடாமன் மயில்வரைச் சாமிக்கன்பா
முரருமல் லாரும் பெறும்பேற்றின் மான்விழிக் கூடுற்றவாற்
பாரும் பரையுந் தொடுநஞ்சும் வான்சுதைப் பாலதுமே. (ச)

கைக்கிளை முற்றிற்று.

புகழ்தல்.

கள்ளங் கொடுத்தகண் மீனுடை வைந்து கரணத்திலனூர்
புள்ளங் கொடுக்க முடன்கூவ வாரிக்குப் போற்றலரூர்ப்
பள்ளங் கொடுத்த முருகன் மயில்வரைப் பாரிலின்ப
வெள்ளங் கொடுத்தனை யுன்போலு ளாரில்லை மேதினிக்கே. (சச)

உடன்புணராயத் துய்த்தல்.

பிறப்பொன் றினும்பிரி யேனென்றவன்புறைப் பேச்சையெண்ணி
மறப்பொன்றி டாமற் கனிக்குப் புவிசுற்றி வந்ததெய்வச்
சிறப்பொன்று தோகை மலைவேலன் சீறச் சிதைந்தவர்போ
லிறப்பொன் றினும்பிரி யேனினைந் தாயத்தை யெய்துகவே. (சரு)

இடந்தலைப்பாடு முற்றிற்று.

எட்டாவது—பாங்கற்கூட்டம்.

தலைவன், பாங்கனைச் சார்தல்.

தக்கினு மெச்சினுந் தும்புரு நாரதர் சாற்றமன்றிற்
றிக்கிட தோவென நின்றாடி மைந்தன் சிகண்டிவெற்பின்
மக்களி லாறெனும் வாயிலைச் சாரின்மற் றுங்கவனாற்
புக்கிட மேலிட மாயினு மேவுவன் பூவையையே. (சசா)

பாங்கன், தலைவனை யுற்றது வினாதல்.

மூன்று மிசைத்தரு மாலிகை யான்மயின் முத்திவரை
யான்று பதர்க்கருள் செய்தது வோவய னூர்மகற்குத்
தான்றாழ்வி லாதவன் சொல்லிய தோபதஞ் சார்ந்ததுடியோ
வான்றாழ் குடுமிவெற் பாவென்னை யெண்ணிய வந்ததுவே. (சஎ)

தலைவன், உற்றதுரைத்தல்.

வேட்டம் புரிந்தன முன்னாட் கொடுந்தொழில் வெங்கைவில்லிற்
பூட்டம்பி யெய்த்தது போன்மான்மயூரப்பொருப்பில்விண்ணோர்
கூட்டம் பணிகுகன் மாமியி னல்லெழில் கொண்டுநின்றா
ணாட்டமு நெஞ்சும் பெயர்ந்துள்ள பேரில்லை நானிலத்தே. (சஅ)

கற்றறி பாங்கன், கழறல்.

மலைதாங்கு நாலு மரவினந் தம்பகை மாற்றுமங்கைச்
சிலைதாங்கு நேமி மதயானை நோக்கிற்குச் சீயமஞ்சுங்
கலைதாங்கும் வெம்புலிப் போர்வேலன் றோகைக் கனங்கிரிமே
னிலைதாங் கிலாது விடர்போல வாகினை நீயென்னிலே. (சகூ)

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

குன்றக் குடிக்கும ரேசனைப் பொன்வளை கூறச்செய்த
தன்றவன் றந்தையை யோர்கூறு கொண்டதம் மான்மனத்தி
லொன்ற வுரத்தி லுதித்த தவன்மக னேதியநாச்
சென்றது பெண்மையென் றுல்வன்மை யாரினிச் செப்புவரோ. ()

கிழவோற் பழித்தல்.

வாண்மையும் வின்மையு மோதுஞ் சமரின் மனத்திறமு
மாண்மையுந் தேவரு ளூரல் செய் யார்கொ லடுத்திலர்க்குச்
சேண்மையு மண்மை பிறருக்கு மாகியென் சிந்தைநடுக்
காண்மையுள் ளோன்மயில் வெற்பானைக் கண்டு கலங்கிடினே. ()

கிழவோன் வேட்கை, தாங்கற் கருமை சாற்றல்.

கும்பிட மோதுங் கிரீடந் துகளெழுக் கூடிவந்து
நம்பிடத் தேவரைக் காத்தோன் மயில்வரை நாரிவிழி
யம்பிட மோநகைப் பாலோ ததும்பி யசைந்த கொங்கை
வம்பிட மோகுழன் மேலோ மனஞ்சென்ற மார்க்கங்களே. (௫௨)

பாங்கன், தன்மனத் தழுங்கல்.

விண்ட விளக்கிற் கொளிதனை நல்குதன் மின்மினியோ
கொண்ட வமுதிற் குருசி விடமுங் கொடுப்பதுண்டே
வண்டமர் பூங்குழன் மானுக்கு வேங்கை வடிவுகொண்டோன்
றண்டமிழ்த் தோகை மலைமன்னர்க் கிபான்சொலத் தக்கதின்றே.

தலைவனோ டழுங்கல்.

அல்லவை நீக்கியு முத்தானஞ் செய்து மறப்புறத்தின்
வல்லபங் காட்டியும் வேலன் மயூர வரையின் மன்னு
நல்லவர் சுற்ற மனஞ்சிங்க மேலுற நண்ணிலையோர்
வில்லணி போனுதன் மான்மே லுறவும் விரும்பினையே. (௫௪)

எவ்விடத் தென்றல்.

காகங் கவிழ்த்தநன் னீர்பாய்வ தோதின்ற கைக்குழந்தை
யாகங் கரையிற் கராத்தந்த தோசெங்கை யள்ளியநீர்
மோகந் தரும்விண்டு மீனுன தோசொன் முருகன்மயி
னாக பகிழிறை வாதேய மேதந்த நாரியர்க்கே. (௫௫)

அவனவ் விவ்விடத்தென்றல்.

மாமன் பணியுமஞ் சேறு மயில்வரை கனமுருக
நாமன் கடற்கயி லேவிச் செயம்பெற்ற நாட்டில்வஞ்சி
காமன் கணையைந்திற் கண்ணையி லேவிக் கலக்கும்மிட
னாமன்பு பெற்ற பசுந்தோகை வெற்பி னகர்ப்புறமே. (௫௬)

எவ்வியற் றேன்றல்.

தந்தை பணிமணிச் சாரன் மயூரத் தனிவரையா
னெந்தைகை யாயுதங் கண்காட்டு மோபச் செனும்பரியை
முந்தைய வீட்டையொப் பாமோ வியலு முலையும்வற்றுச்
சிந்தை குறைத்த திருவன்ன மானுக்குச் செப்புகவே. (௫௭)

அவனஃ திவ்வியற் றேன்றல்.

நாலெனுஞ் சாதியிற் சண்பக மேனியெண் ணுசிபச்சை
மாலெனச் சக்கரஞ் சங்கேந்துங் கையில் வனக்கொடிக்குப்
பாலெனப் பேசி யிரந்தோன் மயில்வரைப் பாவைமைக்கண்
கோலென வாகு மறிகுழை மேன்மணிக் கொப்பொன் றுமே. (௫௮)

பாங்கன் இறைவனைத் தேற்றல்.

சங்கார காலனை வான்வழித் துன்றிய தானவருக்
குங்கார வேலனை மாயூர வெற்பனை யுன்னுதலாற்
சிங்காரச் சொற்க முடையாரைக் காணற்கென் சேணெறிக்க
ணிங்காரஞ் சூழ்சிலம் பாவரு வேனிற்றி யிவ்வயினே. (௫௯)

தலைவன் கூறுதல்.

எல்லார் கிரணம் விரும்பாத தாமரை யில்லைமதி
மல்லார் மலர்விரும் பாத குமுதமும் வண்டுமுண்டே
யுல்லாச வேலன் குமரன் குகன்மயி லோங்கலொப்பாய்
நல்லா டவரை விரும்பாத பேரில்லை நாரியரே. (௬0)

குறிவழிச் சேறல்.

இந்திர ஞாலவை யம்போன சேனையை யெஃகின்வரத்
தந்திரஞ் செய்த முருகேசன் பொன்மயிற் சாரலிஃ
தந்திற் சரவண மீது மருதுந ராதிபதி
சிந்தையிற் செய்த திருக்குள மீதிவண் சேர்விடமே. (௬௧)

இறைவியைக் காண்டல்.

தாருக வெற்பு மலையு மயில்கொண்டு சாய்த்துமற்றைச்
சூருக வென்ற குகன்மயில் வெற்பிலித் தோகையரே
யோருக மோர்கண மெம்மிறைக் காக்கி யுதவிதழும்
போருக வாசங் கமழச் சுகந்தரப் போந்தவரே. (௬௨)

இகழ்ந்ததற் கிரங்கல்.

காலஞ்சு மேசெலக் கண்ணஞ்சி னுந்புலி காத்தன்முதற்
பாலஞ்சு மான குகன்மருகை வெற்பிற் பருத்ததன
சாலஞ் சுமந்தகை யென்படு மோவெற்பர் தையன்முத்த
நாலஞ்சு மொன்று நகையென்று பார்ப்பர் நறுமுல்லையே. (௬௩)

தலைவனை வியத்தல்.

கருவேலை விட்டுக் கரையேற்றி யூழ்தருங் காலனெதிர்
வருவேலை முன்வரு வோன்மயில் வெற்பன் வயப்பெறுநா
ளொருவேலை யஞ்சினன் சூர னுருவடு வுற்றதுமா
னிருவேலை யுற்றுங் குழைதந்த தானம் மிறையுருவே. (கசு)

தலைவியை வியத்தல்.

கோடணை வில்லி முசுகுந்தன் சீர்தாக் குஞ்சரிமா
னொடு மணஞ்செய் பரங்குன்றி னன்மயி னைகமின்னார்
கூடலி லாணைக்கொம் பால்வந்த காயமுங் கூர்மைபெற்ற
வாடருங் காயமு மாற்றுவ தார்வாய் மருந்தன்றியே. (கரு)

தலைவன்றனக்குத் தலைவிநிலைகூறல்.

தொட்டிற் சிறையுற் றயனைக் குரவர்தஞ் சொல்வினவிக்
குட்டிற் சிறைவைத்த வேலன் பசுமயிற் குன்றமின்னார்
சிட்டிற் புணர்ப்பினை நோக்கும் வருவழிச் செல்லுங்கொங்கை
வட்டிற் குறிமகி மூங்குளிர் விக்குமெய் வாழையினே. (கசு)

இதுவுமது.

மருவிப் பிரிந்த கலைமானை யுன்னி மறத்தியெனு
முருவிக்கு வேட வடிவெடுத் தோன்மயி லோங்கலின்வா
யருவித் தினையிலொர் பொன்மறி மான்விளை யாடல்கண்டேன்
றருவிப் புனத்தை யகல்பா ருரிஞ்சுஞ் சுடர்வெற்பனே. (கஎ)

தலைவன் சேறல்.

பாலும் பழமுங் கமலத்தி லேகொண்டு பாக்கிலையு
மேலமும் வைத்திள நீர்தாகந் தீர விரண்டகனு
நாலுஞ் சுமந்தெதிர் தோன்றுங்கொ லோதெய்வ நாந்தொழுங்கூர்
வேலு மயிலு முடையபி ரான்மயில் வெற்பகத்தே. (கஅ)

தலைவியைக் காண்டல்.

மலைமே லருவி யெழுந்தென்ன மைக்கு வளைத்தரள
முலைமே லருவி விழவள்ளி மாது முகிழ்நகைக்காக்
கொலைமே லருவித் தினைசுற்றும் வேண்மயிற் குன்றின்மன
நிலைமே லருவியை மாதவி வாய்க்கண்டு நோந்தனமே. (ககூ)

கலவியின் மகிழ்தல்.

முயலுங் கலவி முயலும் பிணையு முதிர்கனித்தேன்
வயலுங் குளமு நிறையு முருகன் மயில்வரைக்கென்
செயலும் விரும்புஞ் சமயோக மென்றுந் தெவிட்டுவதன்
றியலுங் கலவை மயிலன்ன கூந்த லிளம்பிடியே. (எய)

புகழ்தல்.

ஆயமுள் ளார்க்குச் செயுமாயக் கட்டு மருண்முடிப்பும்
ஞாயமென் றேகொண்ட செவ்வேள் குகன்மயி ஞகமின்னே
நேயமு ருமற் பயவுத ரம்பெற்று நின்குழற்சீ
ரேய மருந்துள்ளி யாகாயம் புக்க வெழிலிகளே. (௭௧)

தலைவியைப், பாங்கியோடு வருகெனப்பகர்தல்.

ஒருமைமயி னீவர னீகா னகல்புணை யோதுஞ்செவ்வே
ளருண்மயில் வெற்பிற் கணக்கறு செல்வ மவர்க்கையொப்பா
மருவுஞ்ச காயத் துணையற்ற நின்னை மருவல்பொல்லா
விருணெறி விட்டனர் நேர்மலர்க் கூந்த லிளம்பிடியே. (௭௨)

பாங்கிற், கூட்டல்.

விழிக்காவி போலு முருகன் மயில்வரை மேற்கொடிக்கால்
வழிச்சாரி நோக்கியு மாண்கூடும் பேட்டை மகிழ்ந்துகண்டுங்
கழிச்சார் துறைவழி மீன்வரத் தள்ளியுங் கானடையிற்
பழிக்காசு தீர்ந்தநும் மாயத்தை மேவு பசுந்தொடியே. (௭௩)

பாங்கற்கூட்ட முற்றிற்று.

ஒன்பதாவது—பாங்கி மதியுடம்பாடு.

நாற்றத்தா லையமுற்றோர்தல்.

கனத்தால் விளங்கிய வோதிக்குண் டாங்கொல் கடிபெரிய
தனத்தார்க்கு வம்புண் டுயரெவ் வனத்தினுஞ் சாருமயன்
மனத்தார் வெறியே யெனினு முருகன் மயில்வரைக்கெ
ளினத்தார் கிளிக்குப் பெருவாச மேவிய தென்னைநெஞ்சே. (௭௪)

தான்புனையா எழில்கண்டு ஐயமுற்றோர்தல்.

விழலுக்கு நீரிறைத் தாங்குப் பிறவன்பு மேயினர்தந்
நிழலுக்கு நீங்கு முருகன் மயில்வரை நேரலர்போற்
குழலுக்கு நன்று குறிஞ்சியென் றேகொண்டு கூர்விழிசேர்
தழலுக் கணைய தளிர்மேனி கொண்டதென் னயிழையே. (௭௫)

இறைவிதனைத்தான் புனையா வெழில்கண்டையமுற்றோர்தல்.

வினைக்குறையென்னினும் பார்க்கலையோவகம் வேண்டினர்பொற்
பனைக்குறை கொள்கை வளைவில்வ ரோபுனம் பாடியமா
தினைக்குறை சொல்லிப் புகழ்ந்தோன் மயில்வரைத் தேட்பொழிபூ
மனைக்குறை மான்விழி நன்மைகொள் ளாத மயக்கமென்னே. ()

பிறைதொழுகென்றல்.

கொற்றவர் வில்வில்வில் லம்பின் மதகரிக் கோட்டினல்லார்
சொற்ற புணையின் மயில்வரை நாதன் றொடர்ந்தபன்றிக்
கிற்ற மருப்பிற் கீர மலரினா னேர்நுதலிற்
பொற்ற நகையிற் பிறைவந்த தாற்றொழு பூந்திருவே. (௭௭)

தலைவி மறுத்தல்.

இறைமகன் மாதுலன் சாபமுங் கோபமு மேற்றுடலங்
குறைத னிறைத லுளதுப தேசி கொடுமொழிகொண்
டுறைவது வேண்மயில் வெற்பி லரன்றிட்டி யுற்றொருநான்
மறையுங் குடில மதிக்கேது நான்சம் மதிவணக்கே. (௭௮)

ஊசல் முதலன மறுத்தலால் ஐயமுற்றோர்தல்.

காதன வூசலுங் கொங்கையிற் பந்துங் கழங்குநகைப்
போதன மூரலுந் தேவருக் கெய்திய புன்கணறச்
சேதனஞ் செய்சண் முகவேண் மயில்வெற்பிற் றேசுடையு
மாதனம் பூவையுந் தேடாத தென்ன மதிமயக்கே. (௭௯)

செய்வினை மறைப்பால் ஐயமுற்றோர்தல்.

அல்லிளங் கூந்தன் மடமாது தன்செய லல்லசெய்கை
நல்லிள நீர்கச் சுறுவதுண் டோகதிர் நாதனுஞ்சேர்
மெல்லிளந் தோகையும் பூசித்த வேண்மயில் வெற்பினிலாம்
பல்லிளங் காவியலரா திதழ்கொண்ட பங்கயமே. (௮௰)

ஆயநீங்கி அருநெறிப்போதல்கண் டையமுற்றோர்தல்.

கொடைகற்ற மன்னவர் வேட்டஞ்செய் கானிற்றங் கோதிமத்தி
னடைகற்க வோபிறர் காணாது தத்தை நவிலும்வினா
விடைகற்க வோமயில் செல்லு மயில்வரை வேண்மருவார்
படைகற்ற காட்டிச் செலும்புரம் போலும் படர்வனத்தே. (௮௧)

ஒருழைப் பயிற்சிகண் டையமுற்றோர்தல்.

மருது நராதிபன் றாமரைப் பொய்கையின் மற்றவனே
கருதிய வாயிரத் தூண்மண்ட பத்திற் கடம்பணிவேள்
வருதிசெய் தோகை மலையி லரச வனத்தினிதம்
பருதியை நோக்கு மலர்போற் கிளிசென்று பார்ப்பதென்னே. ()

அவ்வகைதன்னா லையந்தீர்தல்.

ஐய மெழுவகை யானா மகன்றன வாதலினான்
மையமர் கண்ணியைப் பேரறிவுற்றது மான்மருகன்
செய்யபொன் மான்மகள் சேர்வேண் மயூரச் சிலம்பின்மணை
நெய்யமர் கூந்தல் வளர்ந்தில தோன்றில நேர்முலையே. (௮௩)

மெய்யினுற் கவர்பொருட் சொல்லி நாடல்.

கோடிக்கு ளான தனத்தாரும் பல்வடுக் கொண்டனர்கொண்
டாடிக்கை மேல்புரி கோக்களும் வின்மை யழிந்ததுண்டே
தேடிக் கதிர்பணி சேந்தன் மயில்வரைச் சேயிழைதன்
னேடிக் குளமறைப் பேது வருந்துய ரோதுனக்கே. (அச)

பொய்யினுற் கவர்பொருட் சொல்லி நாடல்.

என்ன புகல்வ தினியான் மலர்த்தடத் தெய்துமிரு [டோர்
கன்னன் மொழிச்சியர் சேர்வேண் மயிக்வெற்பிற் கத்திகொண்
மன்னர் தலைகொய் திசைந்த திருமுகம் வைத்தனர்கை [டே.
றென்னனின் போல்பவர்க் கேய்ந்த மணமென் றுநேர்ந்துகொண்

மெய்யினும் பொய்யினுங் கவர்பொருட் சொல்லி நாடல்.

வம்பார் புவிகொண்ட சூரன் மகன்றன் மகன் மகனுஞ்
செம்பாற் கரனும் பணிவேண் மயூரச் சிலம்பிலென்னே
கொம்பாருந் தும்பி யொருவன் றனுவைக் குழைத்த தன்னோர்
கம்பாவ தோரைந் துருவின் மதனென்ப ராயிழையே. (அரு)

சுனைவியந்துரைத்தல்.

காராடல் செய்யுங் குறிஞ்சியை வேய்தந்து கங்குசுற்றிப்
பாராடு மாம்பல் வடுச்செய்து வேல்சிவப் பாக்கிவஞ்சச்
சூரா டனீகந் துகளாக்கி வேள்பசுந் தோகை வெற்பிற்
போராடல் போலச் சுனையாட லற்புதம் பொற்கொடியே. (அஎ)

பெட்டவாயில் பெற்றுச் சேறல்.

நாளொன்று போலப்பன் னளு மெளிதன்று நாமகிழ்ந்து
வேளொன் றியமருங் காரை மருவுதல் வேடர்வனத்
தாளொன் று தாறென் றுக் காவார் மயில்வரை யான்கமலத்
தாளொன் றவரிற் சகிக்கோதிப் பேரின்பஞ் சார்குவனே. (அஅ)

இரவு வலியுறுத்தல்.

உடைநகை யொப்பனை பாகன்ன வார்த்தைவெள் ளோதிமத்தி
னடைகுண மொன்று மயில்வரை யான்செக நாதன்கைவேற்
படைவிழி காட்டு முயிருமொன் றென்பதைப் பாங்கிமின்னே
யடைமனத் தைய மிலைநய வாருக்கென் னுருகுவதே. (அகூ)

இருவருமுளவழி யொருமையிற் போதல்.

பூதேவி யுந்திருப் பாற்கடற் பால்வந்து பொற்பிருந்த
சீதே வியுமென வைகின ராலித் தெரிவையரு
மாதேவி பாலென்குன் றக்குடி யானருள் வாய்க்கதுகப்
பாதே விபப்புள்ள நான்மா லெனச்சொற் பகருவனே. (கூO)

ஊர் வினாதல்.

சீரூருங் காரைக் குடிகொண் டிருமதிசேர்ந்துகய
லேறூர் குமிழ்ப்பட்டி காட்டிமுத் தூரெல்லை யெய்தவுற்றாய்
பாரூருக் கிப்படிச் சென்னெறி காட்டிடிற் பச்சைமயி
லாரூர்குன் றக்குடி கைவச மாக்குவ னாரணங்கே. (௬௧)

பெயர் வினாதல்.

புலனைந்தி லொன்றயன் வைத்திலனேமணப் பூங்கொடியென்
றலம்வந் திடாமற் குழைகொப் பிசைத்தகம் மாளன்கொண்ட
பலனென்ன மோகந்தன் றோகையஞ் சாரலிற் பாவைநின்னூர்
நலன்விண்டி டாயென்னி னும்பே ருரைக்கினு நன்மையுண்டே.

இடை வினாதல்.

கண்ணேறு பட்டது வோவயன் செய்தல் கருதிலனோ
வுண்ணோர் சுனையு மதன்மேற் கமலமு மோர்ந்தனம்யாம்
விண்ணோ மலருமுண் டோகந்த வேண்மயில் வெற்பினின்ற
பெண்ணோ கொடிதெரிக் கேமில்லை யென்னினும் பேதைமையே.

மொழியாமை வினாதல்.

முத்தத்தை யாம்ப லளிக்குமென் றோசு முகமதிதா
னித்தத்தை வாய்ப்பகன் மேவுமென் றோமே வினருக்குவா
யத்தத்தைக் காட்டிற் பிழைபோ மயில்வரை யாரருள்போ
லித்தத்தை நீக்க மொழியா விரதமெ னேந்திழையே. (௬௪)

இடை வினாவிற் கெதிர்மொழி கொடுத்தல்.

விடைக்கொடி கட்டி மகன்றேவ குஞ்சரி மென்குறிஞ்சிச்
சடைக்கொடி பாகனெம் மான்றோகை வெற்பிற் றனிச்சுடர்வேற்
படைக்கொடி யீர்திரு மானுமன் றேபுவிப் பார்த்திபர்நீ
ரிடைக்கொடி மேல்வந்த தேட்டமென் னேவுமக் கெய்தியதே.

கண்ணியேந்தி நண்ணி வினாதல்.

பார்க்கினும் போனும்பொற் றோகைநங்கண்ணியிற்பட்டு நென்னற்
சேர்க்கையை யெண்ணிப் படர்ந்தத னாலதைத் தேடினஞ்சூர்ப்
போர்க்கயில் கொண்ட முருகன் மயில்வரைப் பொற்கொடியீ
ரார்க்குந் தவறுண்டு கண்டான் மறைப்ப தறிவின்மையே.

எதிர்மொழி கொடுத்தல்.

தாவின் மயிலுக்கு நீர்வைத்த கண்ணி தலையிற்கண்டேன்
றேவி மலைமகள் பாலன் மயில்வரை தேடியிந்தப்
பூவிற் றினைப்புன மெல்லாந் துருவியிப் போதுமலர்க்
காவினி னீர்கொண்ட கண்ணிகண் டேன்கொடிக் காலிடத்தே.

தழையேந்திநின்று வினுதல்.

தையற் படாத கலையான் மயில்வரைத் தையலிர்நீர்
வையத் தருவன வார்த்தைசொன் னீர்பயிர் வையமெல்லா
முய்ய்ப்பல் கோடி விலங்கடித் தோஞ்செல் லொளிக்குழைநங்
கையிற் செறிந்தன பார்த்தும்பொய் போலக் கருதலென்னே. ()

எதிர்மொழி கொடுத்தல்.

பாருல கிற்செல் லொளிக்குழை கைக்கொண்ட பார்த்திபர்க
ளாருல கோருய்யக் கோடி விலங்கடித் தாரெவர்நுஞ்
சீருள நீதியும் வாழ்வுநன் றாயின சேந்தன் பச்சை
யேருள தோகை மலையில் விளங்கு மிறையவரே. (கசுசு)

சிங்கம் வினுதல்.

தங்கத்தை யன்ன வடிவீர் வயதுக்குத் தக்க சொல்லாய்ப்
பங்கத்தை யெண்ணி யுரைத்தீ ருமைபெற்ற பாலன்பச்சை
யங்கச் சிகண்டி மலைமே லுமதிடை யாமெனுமோர்
சிங்கத்தை நீர்வரக் கண்டா லுரைமின்கள் சென்னெறியே. (ள)

எதிர்மொழி கொடுத்தல்.

வன்னி தொடரும் வனமா யுலக மடுத்தபிறைச்
சென்னி மகன்குகன் மாயூர வெற்பினிற் றேடவெங்கான்
றுன்னிய சிங்க மறிந்திலஞ் சோதிடர் சொற்றதுண்டே
கன்னி தொடர்சிங்க நும்போற் குடிலங் கலந்ததின்றே. (ளக)

புலி வினுதல்.

சூலக் கடிப்பிட் டுடைவா ளுரீஇக்கை துணித்தனங்கார்க்
கோலத்த பூமல ராவேங்கை வந்தது கூறுங்கண்டா
லாலத்தை யன்னகண் ணீர்பரி யாச மடைத்த செப்போ
ஞாலத்தில் வேண்மயில் வெற்பினி னும்வாய் நறுங்கனியே. (ளஉ)

எதிர்மொழி கொடுத்தல்.

உரைத்தது வேங்கை யெனிற்பூ வுதவு முழுவையென்று
விரைத்ததண் ணீரின்று புல்லெனில் வீரமென் றுமிறையோர்
வரைத்த கொடுவரி நாடுவ ரோமெய்க்கை வல்லியமேல்
விரைத்த கடம்பன் மயில்வரை சார்ந்தவர் மேவுவரோ. (ளங)

வேழம் வினுதல்.

பாடாத தும்பி யணியாத மாதங்கம் பட்சியொன்றிற்
கோடாத நாகஞ் சுடாத கரிநொடி யோர்சிறைக்குத்
தேடா விலங்கு குகன்மயில் வெற்பிற் றெறித்தகொம்பு
வாடாத மாவென் பதுகாய மேவி வரிற்சொல்லுமே. (ளச)

எதிர்மொழி கொடுத்தல்.

பாடிய தும்பி யணிகின்ற மாதங்கம் பட்சி யொன்றிற்
கோடிய நாகங்கள் சுட்ட கரிகொடி யோர்சிறைக்குத்
தேடும் விலங்கு குகன்மயில் வெற்பிற் றெறித்தகொம்பு
வாடிய மாவுண்டு காயத்தி லானை வருவதின்றே. (௱௫)

பன்றி வினாதல்.

மருகியைக் கொண்ட மனையாளை முன்ன மருப்பெடுத்துப்
பெருமுத லாதி பதமலர் தேடிப் பிளந்துலகைத்
துருவிய கோலக் குலக்கோலம் வேலவன் றோகைவெற்பி
னுருவிய வேலிது கண்டதுண் டோவந்த தோதுங்களே. (௱௬)

எதிர்மொழி கொடுத்தல்.

அடிப்பார் பலருண்டு காப்பார்க ளிவ்வனத் தாங்கவரை
நொடிப்பாய் வினவு மயில்வரை நாதனை நோக்கியெம்மூர்க்
கடிப்பார் முரசங் கறங்கிய போதெங்கள் கைக்குடிலி
னிடிப்பார் தினையந்த மாக்கோலம் வேல்பட் டிருப்ப துண்டே. ()

கரடி வினாதல்.

பணித்தச்ச னுக்குப் பகைகுதி ரைத்தடம் பார்த்தவற்கு
மணித்தொட்டின் மாதை யளித்த திராகவன் வானரத்தி
னணித்தலை மைக்குளொன் றானது வேண்மயி லார்வரைபோற்
கணித்த வுருவத்த பல்லுகஞ் சென்னெறி காட்டுங்களே. (௱௮)

எதிர்மொழி கொடுத்தல்.

ஆங்கே யறுகொடும் போர்புரிந் தீரஃ தன்றிமறித்
தீங்கே யொருபுற்கு வாளெறிந் தீர்நிக ரேதுபுனப்
பாங்கேமெய்த் தாங்கல்வென் றீர்பல் லுகம்வரப் பார்த்திலம்பாங்
காங்கேயன் றோகை மலையென்பர் பல்லுகங் கண்டதுவே. (௱௯)

மரை வினாதல்.

பைத்தா ரணியவர் தாமரை யென்றுசொல் பட்டங்கட்டி
வைத்தாம் வடமற்று வந்ததுண் டோபொன் மயில்வரைமேற்
சத்தான நாதற் கணியாகுஞ் சாமரை சாற்றிலின்ப
வித்தா யெமக்கமு தாயென்று மெய்துவீர் மேன்மைகளே. (௧௧௦)

எதிர்மொழிகொடுத்தல்.

சாமரை யென்னி னடவா துலகினிற் றாமரையேற்
காமரைப் போலப் பறிப்பீர் மயில்வெற்பிற் கார்மயிலா
மாமரை முன்பட்டங் கட்டிவைத் தோனருள் வாய்த்திடினே
யாமரை நாழிகை யிற்பட்டங் கட்டுவ தாருக்குமே. (௧௧௧)

மான்வினாதல்.

மறிபிணை யென்று திரிசொல்லி ஞமிரு மன்னர்துணைப்
பிறிதலை மேவ வருத்திய தாறு பெரும்படைவீட்
டெறிமுனை யெஃகன் மயில்வரை நாதற்கொ ரேந்திழைநல்
லறிவி னளித்தது மான்வரிற் சொல்லு மரிவையரே. (கக௨)

எதிர்மொழி கொடுத்தல்.

ஏதமில் லாமன் மறியென்கி லோம்பிணை யென்றவரை
மோதம ராகினும் விள்ளுகி லோந்தங்கண் முன்வருமான்
போத லறிகிலந் தோகையஞ் சாரற்புத் தேண்முருகன்
றூதைகைப் பட்டதுண் டோர்மான் முனிவர் தழற்பிறந்தே. ()

முயல்வினாதல்.

சஞ்சீ வகன்மகிழ் கேசரி மார்க்கந் தவறச்செய்து
வஞ்சீ சரித்தது சோமற்கு நாமம் வழங்கியது
பஞ்சீ கரித்த புவிநாதன் றோகைப் பருப்பதமெய்
துஞ்சீ தளச்சுனை யுண்ணு முயல்வந்த தோமெலிந்தே. (ககச)

எதிர்மொழி கொடுத்தல்.

பூருவ பக்கத் துவாமதி யோனைப் பொருக்கெனவே
பாரு மிருக்கு முயல்குகன் றோகைப் பருப்பதத்தா
ராரு மறிவர் சிவன்கான் முயலை யவருடன்போய்
நேரு மெமக்கு முயலேதுண் டாயிடி னீர்சொல்லுமே. (ககரு)

மனம் வினாதல்.

வாளா வினவினம் பற்பல செய்கை வருவதிற்
கேளா தனநும்மிற் கேட்டது வேதிண்ணன் கேடிறுண்டு
நாளாறிற் கொண்டபி ரான்மகன் வேண்மயி ஞகத்தினும்
மாளாகி யிப்புனங் காப்போம்பொன் மானை யளித்திடினே. ()

எதிர்மொழி கொடுத்தல்.

கற்க டகமதி போலாகி னீரெங்கள் காட்டிற்குவீண்
மற்க டகமனந் தீர்த்தோன் முருகன் மயில்வரைமேற்
சொற்க டகாதன சொல்லாது போமுன் றொடர்ந்தபொன்மா
னிற்கட காஞ்செங்கை யேந்துங் குழைக ளிறையவரே. (ககஎ)

வழிவினாதல்

சுரமெது கந்தன் மயூர கிரிக்குத் தொடர்ந்தசரி
சரவணத் திற்கெது வாரி யெது திருச் சன்னிதிக்கே
யரச வனத்திற் கெதுபட்ட மத்தம்வை யாபுரிக்கே
துரையு மருது துரைசெய் தடாகத்துக் கோர்நெறியே. (ககஅ)

எதிர்மொழி கொடுத்தல்.

நீரறி வீர்நெறி யுத்திர மேலத்த நீண்டபட்ட
மூரவர் விட்டன வான்பாரும் வாரி யொலித்திடுமின்
னூரகங் கையிற் சரியுண்டு வெஞ்சுர மாய்மயில்வெற்
பாரடி யாருக்கின் றாருக்குப் பாதை பதமலரே. (௧௧௬)

தலைவன் நயந்துரையாடல்.

நான்வைத்த கண்ணி யொடும்வந்த தோகையை நாடறிய
மான்வைத்த கண்ணி தரினுண்டு புண்ணிய மற்றினிச்செந்
தேன்வைத்த நின்சொன் மறிப்பா ரெவரெங்கள் சேந்தன்மயிற்
கோன்வைத்த கோல மணிமுடித் தோகையங் குன்றிடத்தே. ()

யாரேயிவர்மனத் தெண்ணம்யாதெனத்தேர்தல்.

சொல்லாதன சொல்லி யும்பிரி யான்சொற்க டுச்சமென்ப
தல்லா னிசமுமின் றன்றிக் கவர்பொரு ளாயதுகை
வில்லானு மின்று முருகன் மயில்வரை மேவிநின்றுங்
கல்லா நெறியி னுரையா டினனெண்ணங் கண்டிலனே. (௧௨௧)

எண்ணந்தெளிதல்.

அவ்வகை யானைய முன்றீர்ந் தனமிவட் காளிமுத
லிவ்வகை யானைய மன்னர்க்கு மாறின மேந்திழைக்கா
வைவகை யூர்சுற்றி னேன்மயில் வெற்பினம் மாயிழைக்குக்
கைவ்வகை செய்தவர் வேறா ரிவரன்றிக் காசினிக்கே. (௧௨௨)

பாங்கியை நகுதல்.

புனங்காவ லுக்குவந் தீரோ குகன்மயிற் பூதரத்தார்
மனங்காவ லுக்குவந் தீரோ முலைகண்ட வாரணங்கள்
கனங்காவல் கொண்ட குழலீர் வருமியல் கண்டுமயி
லினங்கா வலம்புங் கருந்தினைப் போர்பெரி தேறிடுமே. (௧௨௩)

தோழி, இறைவனை நகுதல்.

பரதர் குலம்புரி காதையிற் கோட்டிற் பழம்பொருந்தல்
விரதம் பிறவினன் றேயயில் வேண்மயில் வெற்பினினுங்
கரபங்க யத்திற் குழையு மிருகமுங் கண்ணியுஞ்சொற்
சரதமி லாமையுங் காரியம் யாவுந் தருந்தருமே. (௧௨௪)

மதியினவரவர் மனக்கருத்துணர்தல்.

மேலாந் திருக்குவி வேகத்தி னத்து விதந்தெரித்தார்
காலா விராகவன் பொன்மான் றொடர்ந்தது காரிகைக்கே
பாலா மிவர்க்குமற் றென்குகன் றோகைப் பருப்பதத்தின்
மாலா யினண்மெல்ல வெண்பிறை தோன்றி மறைகின்றதே. ()

பாங்கி மதியுடம்பாடு முற்றிற்று.

பத்தாவது—பாங்கியிற் கூட்டம்.

புதுமிறை யிரப்பிற்குச் சகியுரையாடல்.

தேனுக்குச் சாதியும் வேங்கையு மெய்திலென் சேர்பயனோர்
சூனுக்குப் பாற்கட லீந்தோர் மகன்குகன் ரேகைவெற்பி
லூனுக்குச் சிங்கங் கரிவேட்ட மன்றி யுருது மன்னர்
கோனுக்கென் னேதனி யானிற்கு மிவ்வுழிக் கொள்பயனே. ()

தலைவ னுட்கோள் சாற்றல்.

குன்றக் குடிக்கும ரேசன்கை வேல்பொருங் கூர்விழிமான்
மன்றற் கெனைக்கலை மானுகச் செய்தரை வாசிதர
வின்றைக் கிரண்டு தனக்குடங் கொள்ள விசையிலன்றே
தென்றற் குழவி நடையீர் பகர்பணி செய்வதுவே. (கஉஎ)

பாங்கி, குலமுறை கிளத்தல்.

பங்கந் தருங்குலம் பார்க்கினுஞ் சேர்க்கையைப் பண்ணினுந்தாழ்
சங்கம் பழத்தைத் தரவமொவ் வாது சரியெனவே
வங்கந் தனைவெள்ளிக் கோதுவ ரோபொன் மயில்வரைமேற்
றுங்கஞ் செறிமயில் வேள்போ லுமக்குநந் தோகைக்குமே.

தலைவன் தலைவி தன்னை யுயர்த்தல்.

மன்னர்க்கு நாற்குல மாசிலைச் சேரின் மயில்வரைவேண்
முன்னுக் கெனையவர் போலென்ற லானு முதிர்ந்ததவப் [வ்வி
பொன்னுக்கும் வீரர்க்குங் கற்றோர்க்கும் யௌவனம் போந்த செ
மின்னுக்குந் தாழ்வின் றெனலானும் பூத்த வியன்கொடியே. ()

நன்னுதற்பாங்கி, அறியாள் போன்று வினுதல்.

ஆறுமு கேசன்குன் றக்குடி யானருள் போல்விழைந்துஞ்
சேறக லாத வயலூர வான்புடை சேர்ந்துமின்னு
மூறகன் மீனு மறலு நிகரன்றிவ் வூர்மடவார்
கூறு மளவிற் கெவரென் றி யானும்மிற் கூட்டுவதே. (கஙு0)

இறையோ, னிறைவி தன்மை யியம்பல்.

எனைமே லெனச்செய்த சேந்தன் மயில்வரை யேந்திழையாண்
மனைமேல் வலைப்பட்ட மானுநக் காணின் மழைமயிலாந்
தினைமேல் வளர்த்த பசுங்கிளி நின்னுயிர்ச் சேக்கைசெங்கட்
சுனைமேற் பிடிபவ ளக்கொடி சன்னத் துடியிடையே. (கஙுக)

பாங்கி, தலைவி யருமை சாற்றல்.

தேனுந் தினையுங் குறவள்ளி போலத் திரட்டிநெடு
வானஞ்சேர் தோகை மலைவேட் குதவ வருமொருநாட்
கானு நிதியு மமுதமுஞ் சேரினுங் கைப்பெறுமோ
நானுரப்பு காதது நீயுஞ்செல் லாதது நன்மனையே. (கஙுஉ)

தலைவன், இன்றி யமையாமை யியம்பல்.

பூவுண்டு சஞ்சாரி கங்கட் கதிர்சிறைப் போகில்கட்குக்
காவுண்டு கார்க்கு மலையுண்டு விண்ணுக்குங் காசினிக்குங்
கோவுண்டு தோகை மலைவேல னுமைக் கொடியவன்கை
யேவுண்டு வந்த வெமக்கா ருமையன்றி யேந்திழையே. (௧௩௩)

பாங்கி, நின்குறை நீயே சென்றுரை யென்றல்.

கற்றாரைக் கற்றவர் கல்லாரைக் கல்லார் களிப்பர்கண்டு
மற்றா ருரைக்கினுஞ் செஞ்செவிச் செல்கில வாரிசுற்றும்
பற்றாரை வென்ற முருகன் மயில்வரைப் பாரிலின்பம்
விற்றாருங் கொண்ட வருமண்மை கூறின் மிறையில்லையே. (௧௩௪)

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

வட்டின் மதியை வரவழைப் பீர்மதி லோவியத்தைக்
கட்டி முகம னுரையுமென் பீர்களித் தாவலமே
கொட்டி முருகன் மயில்வரைக் கேயெதிர் கூய்த்திரிவீர்
கெட்டி யுமைப்பெண் குறைமுடிப் பீரென்று கேட்கின்றதே. ()

பாங்கி, பேதைமை யூட்டல்.

பொன்னலர் காவிற் றிராமிளம் பூவை புகல்வதுண்டோ
கொன்னலர் வேழங் குழையா லடுஞ்சிந்தை கொண்டுசொற்றாய்
மின்னலர் வேலனை மாயூர வெற்பனை வேதியனை
யுன்னலர் போல்வன்கண் மாதர்க்குண் டோவுன் னுழையுறவே. ()

காதலன் தலைவி, மூதறிவுடைமை மொழிதல்.

வளநீர்ப் பரவையில் வந்தவன் றேர்மிசை நிட்களஞ்ச
களநீர்மை யானவன் றோகையஞ் சாரலிற் காரிகையா
ருளநீ ரறிந்திலி ரோர்நாட் டியர்ந்த தறிந்திரண்டா
மிளநீர் கொடுத்தி தாகந் தவிர்த்ததுண் டென்னெஞ்சிலே. ()

பாங்கி, முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.

மன்னர் கொடுத்த மரியாதந் தோகை மலைக்குமரன்
றன்ன தருளில் வரும்போக மாதவர் சாபநல்லோர்
சொன்ன வசனம் பிசகாமற் றுங்குத் தொடர்பகலா
தன்னன் மொழியவர் தாம்வேண்டு மின்பமுங் காவலர்க்கே. ()

தன்னிலை தலைவன் சாற்றல்.

ஆறு முகன்குகன் றோகை மலைப்பயி லஞ்சுகமே
மாறுசெய் தென்னுடன் போர்செய் கொடிய மதன்கையம்பாற்
பீறிய மெய்யெனும் போர்வைக்குத் தையலைப் பேணினல்லா
லூறக லாது பெரும்பாச முன்னரு ளுன்னருளே. (௧௩௯)கூ

பாங்கி, உலகிய லுரைத்தல்.

வல்லிக் கொடிமணந் தாருச் செயுமெனில் வாய்த்தமலர்
புல்லிக் கொடிமணம் வண்டே யுறுமெனிற் பூங்கமுகிற்
செல்லிக் கொடிதிகழ் சேந்தன் மயில்வரைச் செந்துவர்வா
யல்லிக் கொடிமண நீவிர்செய் யாதினி யார்செய்வரே. (௧௪0)

தலைமகன் மறுத்தல்.

காடும்புக் காடுங் கனியுங் கனியுமங் காயெனக்காய்த்
தேடுங் குகன்மயில் வெற்பினி னீயொன்று செப்பிலென்கை
சூடு மலர்தனை மேற்கொண்டு நன்மொழி சொல்லினுண்டாம்
வாடு மலர்தனைத் தந்தானுண் டோநன் மணமென்பதே. (௧௪௧)

பாங்கி அஞ்சி யச்சுறுத்தல்.

வருமாலை யானனம் வெம்புலிப் போத்துங்கை மாத்திரளுங்
குருமாலைக் காலமு மாறலைப் பார்தங் கொலையுமன்று
வுருமாலை யண்ணிய சேந்தன் மயில்வரைக் குன்னலரென்
றிருமாலை மேற்கொண்ட மின்னார்க ளில்லைத்திருவன்றியே. (௧௪௨)

ஆங்கவன், கையுறை புகழ்தல்.

கதிரோன் கதிர்க்கு விகாசிக்கு மாலை கழுத்தினிற்சேர்
நிதிதாழ் சுருக்கைமின் னார்தருங் கத்திகை நெட்டிலைவேற்
பதிவாழ் மயூர கிரிக்காசைப் புட்படப் பட்டகண்ணி
யதிரா வருமதிக் கீசன்பொன் னார மரிவையர்க்கே. (௧௪௩)

தையல் மறுத்தல்.

ஆரக் கழுத்திய ரெஞ்சாதிக் கில்லை யணிக்கழுத்திற்
சேரச் சுருக்கை யிடுவாருண் டோகத் திகைபுனைவார்
வீரப் புயத்தார் சுவாமி மயில்வரை வேங்கையெண்ணிப்
பாரப் பறையறை போதிலெப் போதும் பரிப்பதுண்டே. (௧௪௪)

ஆற்றாநெஞ்சினோ டவன்புலத்தல்.

என்மாலை யோதியு நீங்கா திரந்து மிரங்கலளாய்
நன்மாது நின்றனள் வேலன் மயில்வரை நண்ணினர்போன்
மின்மா சகலுஞ்செங் கையணி யிதல் விரும்பினந்தோ
பொன்மாலை வேண்டிலர் முத்திரை யாழி பொறுப்பதின்றே. ()

அவள், ஆற்றுவித்தகற்றல்.

மாலையி லேயொரு மாலையைக் காட்டியுன் மாலைவிண்டு
காலையி லேமலர்க் காலையும் வேண்டிக் கருத்துரைப்பேன்
சோலை மயில்வரை யான்கால் பிடித்துத் தொடர்ந்தகொடி
வேலையிற் சூரனைக் காட்டிடுங் காலிவண் மேவனன்றே. (௧௪௬)

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தல்.

பொன்னு ரணிகலன் மாமணி யாதி பொருக்கிலராந்
தன்னால் வருந்துன்பந் தானேயொழித்த றகுதியன்றே
வென்னுதன் வேலன் மயில்வரை போன்முலையேந்தெழில்சேர்
மின்னுரை வேண்டிற் கருக்கேறுஞ் சிந்தையும் வேண்டுநெஞ்சே

பாங்கிக், குலகின் மேல்வைத்துரைத்தல்.

செங்கனல் வந்த தகரேறி னோன்மயிற் சேவகன்வான்
கங்கை மகன்குகன் றோகையஞ் சாரற் கனங்குழையீ
ருங்களைப் போலு முதவியில் லாரை யுறிற்சிறியோர்
சங்கர னுவ ரெருக்கணிந் தாடித் தனித்துநின்றே. (கசஅ)

அதனைத், தன்மேல் வைத்துச்சாற்றல்.

கடம்பெற்ற தாருக னுவியும் வெற்புங் கடந்தவைவே
லிடம்பெற்ற செங்கை தரித்தோன் மயில்வரை பேந்திழையீர்
திடம்பெற்ற காசினி யோர்யானு மங்கையுஞ் சித்திரஞ்சேர்
படம்பெற் றிருக்கிலன் றோதிரு மாலெனப் பாவிப்பரே. (கசகூ)

பாங்கி, தலைமகளவயவத் தருமைசாற்றல்.

எருக்கொடு நீறு புனைந்து மயறலைக் கேறிமனங்
கருக்கினின் மேவ லெளிதையன் றோகனங் காவல்கொண்ட
செருக்கினில் வேலன் மயூர கிரியெனத் தோன்றுமுலை
நெருக்கினிற் சற்று மெழுத லரிது நெகிழ்வினையே. (கருo)

இதுவுமது.

என்றன் விருப்பும் வெறுப்புஞ் செலுந்திசை யெங்குஞ்சென்று
நின்றன்பு தந்த மயில்வரை மேவு நிமலனருட்
டன்றந்தை போலெழு பூவும் விசும்புந் தரினுமுயர்
குன்றங் குழைய வெழுத லரிது குவலயத்தே. (கருக)

தலைமகன் றன்னைத் தானே புகழ்தல்.

பழைய செயலும் புதிய செயலும் பயில்செயலும்
விழையுமன் பர்க்குத் தவிர்த்தோன் குகன்மயில் வெற்பணங்கே
தழைவல்லி சாதகத் திற்றீட்டுங் கொம்புக்குன் சார்பிருந்தாற்
குழையு மழகு மலரு மணமுங் குறிக்குவனே. (கருஉ)

அலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தல்.

விரும்பு கவச மருது மகீபதி வேண்டியிட
வரும்பிய வோகை யயில்வேலன் றோகை யணிவரையீர்
குரும்பை முலைப்பெண் பொருட்டாக வீசனுங் கூட்டுடனே
கரும்பனை மாய்த்தில னீர்மாய்த்த னல்ல கருத்தல்லவே. (கருரு)

கொண்டுநிலை கூறல்.

கடும்பனைக் கைமுகன் பின்னோனில் யாருங் கருதிவிரும்
பிடும்பனை யாளிலெ னிக்கிலென் றேகைப் பெருஞ்சிலப்பா
தடும்பல பெண்ணை யணைதலை யென்னிற் றயைவருமோ
சொடும்பழி யாகுங்கொ லோபின்சொல் வேனிலை கோடலையே. ( )

தலைவி யிளமைத் தன்மை பாங்கி, தலைவற்குணர்த்தல்.

மங்கையு மல்லள் பெதும்பையு மல்லள்பொன் வார்புனையக்
கொங்கையு மல்ல விளநீரு மல்ல குமரன்மயி
லங்கவெற் பாமதக் கூத்துக்குப் பாத்திர மல்லள்விண்மேற்
றங்கிடு மோமுளைக் குஞ்சிற கில்லாத் தனிப்பட்சியே. (கருரு)

தலைவன் தலைவி, வருத்திய வண்ணமுரைத்தல்.

சிங்கத்தின் குட்டி மதமாவிற் பாய்ந்திடுஞ் சித்திரம்போன்
மங்கைக்கு ணுற்ற துண்டே முருகன் மயில்வரையாய்
துங்கச் சலத்திற் சரிப்பது மீனுக்குச் சொல்வதுண்டோ
சங்கிற்குக் கூர்மைசு பாவமல் லாலெவர் தந்தவரே. (கருசு)

பாங்கி, செவ்வி யருமை செப்பல்.

ஒருமல ரிற்பல காய்கொள்ளு வாளுபர் பாண்டிபசு
விருகுழி யிற்பதி ஞன்குவி டாள்குமரேசன்மயில்
வரையினு னிச்சை புகல்வதெங் கேபுனம் வாய்த்தசெல்வத்
துரைமக ளுக்கெனைப் போலொரு கோடியர் தோழியரே. ( )

தலைவன், செவ்வி யெளிமை செப்பல்.

தக்க பகுதி விகுதி யிடைநிலை சாரியையுந்
துக்கமில் லாதுறுஞ் சந்திவி காரமுந் தோன்றுப்பெண்ணே
கொக்கின் மயிலுங் குருகுங்கண் டோன்மயிற் குன்றுறைவோன்
மிக்குற வந்தன னென்னும் பதநீ விளம்பிடினே. (கருஅ)

பாங்கி, என்னைமறைத்தபி னெளிதென நகுதல்.

பாவை நிமித்த முடன்கூடி னுமப் பாவையினைக்
கோவை செயுந்துணை விட்டாடு மோமயிற் குன்றையுள்ளார்
சேவையில் வேண்டல் பெறலா மெனினுமென் சேயிழையை
நீவையம் போற்றப் பெறுவதுண் டோவென்னை நீத்தென்றுமே.

அந்நகை பொறாஅ தவன் புலம்பல்.

நாவின் முதனகை நான்பெறற் பாற்றன்று நாரியுமை
பாலன்கங் காநதி பாலன் மயில்வரைப் பைந்தொடியாய்
கோல நகையமு தாலம தாகினுங் கூர்விழியா
மால மமுதென வாக்கிய தென்விதி யார்துணையே. (கசுO)

அவள் தேற்றல்.

தாராச் சபதந் தருஞ்சண் பகவல்லி தன்னையும்பொய்
சேராத் தமிழ்சொரி சிந்தா மணியையுஞ் சேர்ந்தனரே
வாராப் பொருளுமுண் டோமுயன் முலெங்கண் மாதுமன
நேராக் குவன்முகன் றேகையஞ் சாரலி னின்னுடனே. (௧௬௩)

கையுறையேற்றல்.

வெப்புங் குளிருஞ் சமமாக்கி யாண்டருள் வேலன்மழை
யப்பு மயூர கிரிக்கிறை வாவுன் னருளடைந்தா
டப்பு நடையறி யாள்கொளத் தக்கது தானிதென்முற்
கொப்புங் குழையு மறுப்பதுன் டோகைக் கொடுத்தருளே. ()

கிழவோன் ஆற்றல்.

மானுக்குப் புத்திரி யாகிய மானுக்கும் வானிற்றெய்வ
யானைக்கும் பாகன் மயூர கிரியனை யாண்மலர்க்கை
மேனிற்கு மென்கை முறிகொண்டபோதே விலைப்பொருளாய்
நானிற்கின் றேனெழுத் துச்சோர்வு மில்லை கடுவில்லையே. (௧௬௫)

இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி,

இறைவிக் கவன்குறை யுணர்த்தல்.

பூமேலுண் டேயிரு தாமரை யென்பர் புயலணவுங்
காமேலுண் டேயொரு பொற்பிடி யென்பர் கடியமயின்
மாமேல் வருமுரு கன்றேகை வெற்பில் வருமணங்கே
நாமே துரைப்பது பித்தரிற் சொல்கின்ற நல்லவர்க்கே. (௧௬௪)

இறைவி, அறியாள்போன்று குறியாள் கூறல்.

காவில் விளங்கு மயூர கிரிக்கந்தன் கால்பணியும்
பாவை மயிலைக் குயிலாட் டியதும்பன் னுகத்தின்வாய்ப்
பூவை மயங்கலும் வேண்டுஞ் சுகம்வெளிப் போதனுநீ
ராவியின் மஞ்சோ டியதும் பிறவு மறிந்திலையே. (௧௬௫)

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல்.

கனக வரைநிகர் மாயூர வெற்பன் கருணைபெற்ற
வனகனுன் மேனியைத் தாங்கி வதனும் புயத்தினுக்கே
தினகர னுகி யொருவன்கண் டேன்பொய்யிற் சேர்ந்தபொன்மான்
வனமயி ற்றேடிப் புனமயி லுன்னிடம் வந்ததுவே. (௧௬௬)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

அன்னங்க டாமரை சேருங் குவளை யடைந்திலசூர்
மன்னனை வென்ற வடிவேலன் றேகை வரையவர்க்கே
சின்னம் புகன்றனை நீயுயர் வானிற் செடியுமுண்டோ
வின்ன மினத்தொ டினஞ்சேரு மென்குத லெண்ணலையே. (௧௬௭)

பாங்கி, என்னைமறைப்ப தென்னெனத் தழால்.

காலிருந் தானு முருகன் மயில்வரைக் காரிகைகண்
வேலிருந் தாலுங் கதிர்தோன் றினுஞ்செல்ல வேண்டுமென
மாலிருந் தாலும் பலரிருந் தானு மறைந்தொருவர்
பாலிருந் தாலுமென் னல்லா முயற்சி பலிப்பதின்றே. (கசுஅ)

இதுவுமது.

பொன்னை மறைப்பதுங் கள்ளுண் மறைப்பதும் போகமது
தன்னை மறைப்பதுஞ் சண்முகன் றோகையஞ் சாரில்வாழ்
மின்னை மறைத்த விடையா யரிதுன்னை விட்டகலா
வென்னை மறைத்த முயற்சியென் னேவுனக் கெய்தியதே. (கசுசு)

கையுறை புகழ்தல்.

என்சொற் கிரங்கிய தோகைச் சிலம்புக் கிறைவருக்கே
முன்சொல் சடைக்கண்ணி யாம்வள்ளிக் காநடு முற்றியசொற்
பின்சொ லவளுக்குத் தாயா நகையாம் பெரிதுமுனக்
கின்சொற்பெண் ணேமன்ன ராரக் குழையென் றியம்பினரே. ()

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

வில்லையெ டாரம்பு பட்டதுண் டேயென்பர் மெய்யில்பல
சொல்லைவி டாரொரு மெய்ம்மொழி நாமென்பர் தோகைவெற்பி
லல்லைம ருர்பக னீங்கார் குகன்பதத் தன்பிலர்போ
லில்லையு ருர்நா லெழுத்தின் குணத்தை யிசைந்தனரே. (களக)

மறுத்தற் கருமை மாட்டல்.

தேவிற் சிறந்த சுவாமி மயில்வரைத் தென்றிசைக்கே
கோவிற் சிறந்த மருது துரையருட் கொண்டுசெய்த
வாவிக் கமலத் தன்மவிளை யாட மயங்குமுன்கட்
காவிக்கு மாரன்கைக் காவிக்கும் வேற்றுமை காணினுண்டே.

தலைவன், குறிப்புவேறாக நெறிப்படக் கூறல்.

அடவியெல் லாங்கொடிப் போதாய் விரிந்தன வாளுமிந்தப்
புடவியெல் லாம்புனற் போதா யிருந்தன பொன்மயில்சே
ரிடமலை யான்குகன் றன்னருள் பெற்ற விறைவர்க்குண்டோ
பட்டொழி யாது பனையேறும் புன்மொழில் பாலிப்பதே. (களங

தலைவியை முனிதல்.

வனத்தில் வருங்கலை மானைக்கண் ணுன வலைப்படுத்தாற்
புனத்தைவிட் டேகத் தரமல்ல வேலின் புரந்தரனை
யினத்திற் பதித்த சுவாமி மயின்மலை யேந்திழையுன்
றனத்தணி மூன்றட் சரவாச நாவுக்குத் தக்கதன்றே. (களச)

தலைவி பாங்கி; தன்னை முனிதல்.

கலைமா னெனுஞ்சொற் கவர்பொரு ளாக்கக் கழறினைகார்
மலைமானை மேவுமெம் மான்வேலன் ஞேகை மலைக்கொடியே
சிலைமா னிரண்டு தொழிலினு முன்சொற் சிறந்ததன்றோ
கொலைமா விளம்பிடி நீங்காத காவிற் குறிப்பதென்னே. (கஎரு)

தன்கைக் கையுறை, யேற்றல்.

தாமரை போலுமுன் கையென்கை யெம்மனஞ் சார்புமொன்றே
காமன் மகண்மண வாளன் மயின்மலைக் காரிகையே
நீமலர்க் கண்ணி கொளவின்பப் புள்ளொன்றை நேர்ந்தனன்யான்
மாமதப் பூசைக்கிப் பத்திர மீந்தவர் வாழியவே. (கஎசு)

இறைவி கையுறை யேற்றமை பாங்கி,இறைவற் குணர்த்தல்.

தூவியந் தோகை மலைக்குமரேசர்க்குத் தொண்டுசெய்த
காவியங் கண்ணிக்கு நீதந்த மஞ்சரி கைக்கொடுத்தேன்
கோவைவின் டாள்பின்பு லாவுமெவ் வண்ணமுங் கூடப்பிள்ளைப்
பாவைவின் டாள்பின் சகிவிடு தூதும் பகர்ந்தனளே. (கஎஎ)

குறியிடங் கூறல்.

கையா யுதமயி லான்கொடி காலா யுதக்கரத்தா
னுப்பா மையிலான் மயிலான் மயில்வெற்பி லொண்டொடிதன்
மெய்யாகு சாயன் மயிலா யவளின்சொன் மென்கிளியாய்ப்
பொய்யா மிடைகொடி யாய்க்குழல் காவாம் புன்மதுவே. (கஎஅ)

குறியிடத் திறைவியைக் கொண்டுசேறல்.

நிதமா டியசுனை யாடா திருப்பது நீதியன்றே
மதமா விளம்பிடி நீங்காத காவென்ற வார்த்தைபொய்யோ
கதியாய் நடந்தனை வேலன் மயில்வரை கண்டனையே
பததா மரைக்கர்ச்சிப் பாரா றுதாமரை பாரவரே. (கஎகூ)

குறியிடத் துய்த்து நீங்கல்.

மலர்தேடி வண்டு வருஞ்செயல் போற்புவி மன்னர்பொய்யுநு
கலைதேடி முன்போல் வரினும் வருவர் கலங்கியஞ்சே [வோன்
லலைதேடுங் கண்ணியில் வேண்மயில் வெற்பினம் மாற்றல்கொள்
சிலைதேடி வாங்கியஞ் சம்பும் பறித்துத் திரும்புவனே. (கஅo)

இறையோன், இடத்தேதிர்ப் படுதல்.

தேனிற் சிறந்த கடம்பன்கை வேலன் சிகண்டிவெற்புள்
ளோனுக் கரைமனை வேலைவி டோவிறு மாந்தமுலை
யானைக் கெதிர்பொரு தோமதி யாலம் புயமலர்த்தோ
கானத்து மீனிருட் பெற்றுநின் றுய்பகற் காரிகையே. (கஅக)

இயைதல்.

ஆகம்பிரம்ம மேயென் றதுவாதல் போனு னவளெனலான்
முகக்கண் ணிதழ்பொன் வளைசெங்கை பஞ்சடி மூரன் மணஞ்
சுகங்கொங்கை பொன்னணி பெற்றவடன் னுருத்தோற்றினன்பல்
லுகங்கண்ட சேந்தன் மயில்வெற்பி லென்னினி யோதுவதே. ()

புகழ்தல்.

மேலா மயில்வரை வேளருட் டந்தை வெகுண்டுகையான்
மாலார் சிலம்பு வளைத்தார் தெறித்திலர் மாங்குயினீ
காலாற் சிலம்பு வளைத்துத் தெறித்திடக் கற்றுவிட்டாய்
தோலாத முப்புரந் தீயிட்டு மூவர் சுகம்பெறவே. (கஅங)

விடுத்தல்.

எழுதிய சித்திர மென்மனைக் கேயுண்டுன் னின்பவுருத்
தழுவிய மெய்யிலுண் டாந்துன் பிலைமயிற் றண்வரைவேண்
முழுதரு ளுண்டுமுன் காயாய்ப் பழமாய் முடிந்து முய்ந்தும்
பழுதுகொள் ளாதநும் மாயத்தை மேவு பசுங்கிளியே. (கஅச)

பாங்கி, மெல்லியற் சார்ந்து கையுறை காட்டல்.

என்றைக்கும் வாழு மருது துரைகும ரேசருக்குக்
குன்றக் குடியில்வைக் குந்தென்னஞ் சோலைக் குளிரிளநீ
ரொன்றுந் தனத்துக் கிணையாகும் பார்கரும் புக்கமுத்த
நன்று நகையென லாங்காவி யாங்க ணிளமின்னே. (கஅரு)

மையுறு கண்ணியைப் பாங்கிற் கூட்டல்.

மேலாறு கால்கொண்ட யானைகண் மேற்பல வேங்கைகண்டாய்
நாலாறு மான குமரன் மயில்வரை நாரியரே
காலாறு முப்பங்கி லொன்று துவண்டொன்று கன்றியதான்
மாலா ரொருபங்கு விசமின் னுர்தொழ வாமனைக்கே. (கஅசு)

நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல்.

காதல் பெறுமன்றில் பேடையை நீங்காக் கடற்றுறைவா
மாதைமுத் தேவருந் தாங்கினர் நீவிடின் மஞ்ஞைவரை
நாத னடையலன் போல்வடுச் சேரு நடுத்துணியு
மோதற் குருகும் பிணிமுக முய்பெற வுற்றிடுமே. (கஅஎ)

விருந்து விலக்கல்.

அருவியும் வெற்பும் புயமுமுத் தாரமு மாகநினைந்
துருகும் பிடிக்கு மதயானை யாயிர வுண்டிருந்து
மருது திரைசெய்த தைப்பூசத் தேர்மிசை மஞ்ஞைவரை
முருகன் வரல்கண்டு நின்னூர்க்குப் போதி முறையுரைத்தே ()

பெருந்தகை விருந்திறை, விரும்பல்.

மூன்றை யிரண்டிற் புரட்டிக் குறக்கொடி முன்கொடுக்கத்
தான்றனித் துண்டதுண் டேயயில் வெற்புறை சாமியெனு மா
னூன்று மெழுத்தொரு நாலி லிரண்டைவிட் டுப்பொரித்துத்
தேன்றலை யோடஞ் செழுத்தைத் தந் தானுண்டு செல்குவமே. ()

பாங்கியிற் கூட்டம் முற்றிற்று.

பதினொன்றாவது—ஒருசார்பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம், பொழுது கண்டிரங்கல்.

முலையஞ் செழுத்தைக்கச் சான்மறைத் தார்சுவை முத்தமுத்து
மெலிய பவளத்தை முத்துக்கு ளோவைக்க விண்டனர்பொற்
சிலைநிகர் பன்னிரு கையான் மயில்வரைச் செல்வர்சிவந்
துலையுமெய்க் கிட்டனர் சாந்தஞ்செம் மாலைக்கொன் றோதிலரே. ()

பாங்கி புலம்பல்.

மருவு மிறைவர் சிறுபொழு தேசொன் மறந்தனரே
திருவை விகாரம் பெருக்கினை யோபொற் சிகண்டிவரை
முருகன் குறிஞ்சி மலர்மாலை யேனுஞ்செய் மோகத்தினு
லுருவஞ் சிவக்கினு நீமுல்லை மாலையென் றோதுவனே. (ககக)

தலைவனீடத் தலைவி வருந்தல்.

தாரா திரார்சுகந் தந்தவ ரென்னோ தடைசகிமார்
வாரா திராரினி வேலன்பைந் தோகை மயில்வரைமே
லாரா ரெனக்குற வையோ விடர்பல ராய்வர்பழி
யூரார்செய் வார்மறந் தார்மதி பானுவென் றோதியதே. (ககஉ)

தலைவியைப் பாங்கி கழறல்.

நீருற்ற புள்ளல்லர் தேனுண்ட வண்டல்லர் நேசித்தநம்
மேருற்ற மன்னர்ச கோரங்கண் டாபெங்க ளேந்திழைநீ
சோருற்ற வன்றிற் பெடைநிகர் வாய்குகன் றோகைவெற்பாய்
தாருற்ற வேநளனைப்பிரிந் தாண்முன் றமயந்தியே. (ககங)

தலைவி, முன்னிலைப்புறமொழி மொழிதல்.

உண்டமர் நாளி லொதுங்கினர் போலென் னுழையிருந்தோர்
விண்டிருந் தானு மிருப்பர் மயில்வரை வேலனருட்
கொண்ட விறைவரு மாயமிக் காரினிக் கூறுவதென்
வண்டனன் றென்பார் பலர்நாளி லொன்றறி வாரில்லையே. (ககச)

இன்னுயிர்ப், பாங்கியோடு பகர்தல்.

பாரினும் வானினுந் தேவரென் றோது பகுப்புடையா
ராரினு மிக்குள்ள சேந்தன் மயின்மலை யாயிழைகேள்
பேரினுஞ் சீரினு மிக்கையுள் ளாரைப் பிரிதலெங்கே
சேரினுஞ் சேரா விடினுங் குவியுங்கைச் செம்மலரே. (௧௯௫)

பாங்கியச் சுறுத்தல்.

நினைத்த மருது மகிபதி நெஞ்சி னிறைந்துதொல்லை
வினைத்திரண் மாற்றிய கந்தன் மயில்வரை மென்கொடியே
தினைப்புனத் தேபெரு மான்சாரி வந்த திறமறிந்தா
லுனைப்பிள்ளை யாக்கி யெனைக்கள்ள னுக்குவ னன்னனையே. ()

நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல்.

தாமரை மேல்விழும் வண்டுஞ்செவ் வல்லியிற் றாமரையு
மாமலை பைச்சற் றசைக்கின்ற கையுஞ்செவ் வாய்நகையு
நாமகன் றேமல்லந் தாமகன் றூர்மயி லுகச்செவ்வேள்
பூமலி நாட்டிற்பைந் தாருவை நீங்கில பூங்கொடியே. (௧௯௭)

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல்.

பூவேந்தன் போற்றுங்குன் றக்குடி வேளருள் போற்றிப்பெற்ற
பாவேந்தர் சொல்லு மருது மகீபன் பவனியைப்போற்
றேவேந்தி ராவெச் சரிக்கைபென் றூர்செழு மாப்பலவார்
மாவேந்தன் சந்தனம் பார்புன்னை நீழலில் வைகுவமே. (௧௯௮)

சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தல்

விழிபோலு மானுங் கலையுங் கலையா விறல்பெறவு
மொழிபோலும் பச்சைக் கிளிவளை யாது முயன்றுறவும்
வழிகூடல் போலுங்குன் றக்குடி யான்முன் மறவர்க்கண்டு
பழிகூற நின்ற புலிநாமங் கானவர் பார்த்தனரோ. (௧௯௯)

முன்னிலைப்புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

வள்ளி மயில்சேர் மயின்மலைக் கேமரு தையன்செய்த
வெள்ளி மயிலை விரும்புங் குகனருள் வேந்தன்மறந்
தெள்ளி மயிலிலென் பொன்மயி லைப்புணர்ந் தேகினும்போற்
புள்ளி மயிலின மேமற வீரன்பு போற்றுதலே. (௨00)

இ து வு ம து.

செவ்வரி யேறுங்கண் மான்றெய்வ யானைதன் சீறடிக்கே
கைவரு செங்கை முருகன் மயில்வரைச் சாரலிலே
மவ்வரி யாதியு மெல்லினத் தாறு மறந்திடினுஞ்
சவ்வரி கவ்வரி மூன்றே மறத்த றருமமன்றே. (௨0௧)

முன்னின் றுணர்த்தல்.

மாரன் பரிப்பேர் மணப்பேர் கணைப்பேர் வனத்தெறிந்தோ
மாரொரு புல்லொளி மாலேதி நாமங்கைக் கையர்கொண்டார்
வீரப் புயன்பணி செவ்வேண் மயில்வரை மேலண்ணலே
பாரக் கிரியின் மலரா தினியிரு பங்கயமே. (௨0௨)

முன்னின் றுணர்த்தி, யோம்படைசாற்றல்.

வண்டினந் தேனுண்டப் பூவிற் றுவளு மருதநிலத்
தண்டலை யூர முருகன் மயில்வரைச் சாரலிலே
கண்டகண் பேரா திருகோங்கின் முத்தத்தைக் காட்டிநிற்கு
மொண்டொடிக் கும்மடி யேற்கும் பழியற வுன்னுகவே. (௨0௩)

மேம்படுகிழவோன், தஞ்சம்பெறுது நெஞ்சோடுகிளத்தல்.

வீடு மலையிம்பர் மெய்ப்பதத் தொன்றில்விட் சேபம்வந்தாற்
கூடுவ தோவில் வரையிக வாத குறிமனமே
நாடு புகழ்ப்பன் னிருகையன் போன்மயி னுசுமின்னார்
தேடி லரிப்புன நாமும் பறவையுந் தேடினமே. (௨0௪)

ஒருசார் பகற்குறி முற்றிற்று.

பன்னிரண்டாவது—பகற்குறியிடையீடு.

இறைவனைப் பாங்கிகுறிவரல் விலக்கல்.

கீரா தமிழ்சொலெ னுச்சிறை மீட்டவர் கேகயத்தார்
பாராவில் வேதனை வைத்தவர் தோகைப் பருப்பதத்தீர்
தாராள மாய்மந்தி வேங்கைமு னேடிச் சரிப்பினன்றோ
நீரா வயின்வர லேனலங் காவலு நீங்கினமே. (௨0௫)

இறைவியைக் குறிவரல் விலக்கல். [டத்தி

உண்ணுளென் னேயென்னுந் தூங்காளென் னேயென்னு மோரி
னண்ணுளென் னேயென்னும் பெண்குற வள்ளி நடுங்கவிரைந்
தண்ணு வருகவென் றூன்மயில் வெற்பினம் மன்னையினிக்
கண்ணை கடத்தினை யேகவ ணேடு கடத்தினையே. (௨0௬)

இறைமகள், ஆடிடம்நோக்கி யழிதல்.

பாரதத் தோர்தரு நீங்கா விரதஞ்செய் பட்சியினை
நீரத னுனிலைத் தாண்மற வாம னெடிதுநின்றீர்
வீர னவர்பணி வேலுடை யான்மயில் வெற்பிறைவர்
சார லிளங்கிள்ளை யேமறந் தார்பொற் றனக்கிள்ளையே. (௨0௭)

பாங்கி, ஆடிடம்விடுத்துக்கொண்டகறல்.

குருகின மேமுரு கோன்மயில் வெற்பற் குருகினமே
மருமலி வண்டின மேவரிற் சொல்லுது வண்டினமே
யொருவரும் பாரல ரேபழி யூருரைப் பாரலரோ
பொருமலே யேசொல்லை யேவந்து போகும் பொருமலையே. ()

பின்னுள், நெடுந்தகை குறிவயினீடுசென்றிரங்கல்.

அயிலணி கையான் மயில்வரை யீதெனி லாடல்கொண்ட
மயிலதெங் கேசந்தி ராங்கமெங் கேபெரு வாசமெங்கே
செயலறக் கொத்து மரவமெங் கேயிடஞ் சேர்ந்தசொன்னக்
குயிலுமெங் கேயில்லை யேயினி யேதொன் றுங் கூறிலமே (௨0௯)

வறுங்களநாடிமறுகல்.

புண்ணியத் தோகை மயில்வரை வேலனைப் போற்றலர்போ
லெண்ணிய காரியங் கூடிலை யேயித ணேதினையே
பெண்ணிலை யோபுனம் வேறோ கனவோ பெறுவதுண்டோ
கண்ணிருந் தார்க்கல்ல வோகாண லாஞ்ச களச்சத்தியே (௨௧0)

குறுந்தொடி, வாழுமூர்நோக்கிமதிமயங்கல்.

ஏறுத மேட்டுக்கு நீரிறைப் பாரின்றெட் டாக்கொம்பிற்றே
னூற முடவற்கு வாராது தோகை வெற் பாரடிப்பே
றாறுதன்பில்ல வருக்குநெஞ் சேயிஃ தொள்ளிழையாள்
சீறாரினிச்செய்ய லாவதின் றேதுன்பஞ் சேர்ந்தனமே. (௨௧௧)

இதுவு மது.

தேமாப் பழுக்கு மயில்வெற்பின் வேலர் திருவருள்போன்
மாமான் மலர்மனைச் சென்றன ளேயவள் வாழுஞ்சிற்றா
ராமீது வானத் தமுதம் விரும்பி யக்குழைந்து
பூமேவு மக்க டவம்புரிந் தாலும் புசிப்பதின்றே: (௨௧௨)

பகற்குறி யிடையீடு முற்றிற்று.

பதின்மூன்றுவது—இரவுக்குறி.

இறையோன் இருட்குறி வேண்டல்.

கூந்த லெனவிருண் டேநீட லாற்கண் ணுக் குச்சரியா
மேந்தற் குவளை மலர்த்தின தாலயி லேந்துங்கையான்
சாந்த மயில்வெற்பி னம்விரும் பார்விழித் தாமரைக்கே
காந்தி குறைப்பத னலிருட்போதல் கருதினமே. (௨௧௩)

டாங்கி, நெறியினதருமை கூறல்.

இடைவிடுத் தான்முலை யாந்தலை போக்கி லெழுந்தலையா
மடையக் குறிக்கிற் கொலைச்செந்து வாம தடிக்கொன் றதாம்
படர்வழியெங்கு மயில்வெற்பர் தாதை பணிசுற்றுமாங்
தொடையுறு பாதையொன் றுண்டறி யாய்வரச் சொல்வதெங்கே.

இறையோன், நெறியினதெளிமை கூறல்.

ஆறு பெரிதில்லைக் காவலை யஞ்சில னாண்மைவன்மீ
னாறுமுண் டோதிரு மாலாழி யுண்டன் புருவசுரர்
நீறு படச்செய்த வேலோன் மயில்வெற்பி னேரிழைகான்
சீறும்வெம் பாம்புக்குப் பெண்ணுங் கருடத் தியானமுண்டே. ()

பாங்கி, அவனாட் டணியியல் வினாதல்.

ஆயிரம் வெள்ளத்தொ டாளி முகனை யசியொன் றினான்
மாயப் புரிந்தவன் போற்றுஞ்சு வாமி மயில்வரையோய்
நீயுன் னகரின் மருவலர் மேன்மை நிகழ்த்திமண
மோய்வில்குழையா ரையுநம் பினவரை யுஞ்சொல்லுமே. (௨௧௬)

கிழவோன், அவள்நாட் டணியியல் வினாதல்.

அறியாரைப் போன்று குறியா துரைக்கின்ற வத்துரைபோ
னெறிசே ரெளிமைக்குப் பின்னிது கூறினை நேசமிதென்
றறியேன் முருகன் மயில்வரை யாய்நும் மணிநகர்ப்பூஞ்
செறிவே தெதுவுங்கள் போன்றும்மைத் தந்த செழுஞ்சுனையே ()

அவற்குத், தன்னாட் டணியியல் பாங்கிசாற்றல்.

ஆயா தவர்மனம் போன்றிருங் குங்கற் றுய்ந்தவர்போ
லோயா மணம்பெறுஞ் சேந்தன் மயில்வெற் புறையண்ணலே
காயாத மாவென்றும் பூவாத மாவைக்கை யாலழித்துப்
பாயாத வேங்கையஞ் சுஞ்சோலை யாங்கள் பயிலிடமே. (௨௧௮)

இறைவிக் கிறைவன் குறையறி வுறுத்தல்.

சங்கையை யெண்ணிய பேரைவை யான்புகழ்ந் தாரைவைப்பான்
புங்கவ ரிற்சண் முகவேலன் றோகைப் பொருப்பணங்கே [ன்றோ
செங்கையில் வேலும் விரைவுங்கொண் டெம்மண்ணால் சேர்தன
கொங்கையை நாடி யிடைதேடு முன்மலர்க் கூந்தலிலே. (௨௧௯)

நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தல்.

கான வரும்படைச் செல்வர்களே தொழக் கந்தனையே
வானவர் மங்கையர் செல்வர்க ளேபொன் மயில்வரைமேற்
கூனறு கானிலெங் குஞ்சர மேயெழுங் குஞ்சரமே
யானில் வருமம் புலியே யினியெழு மம்புலியே. (௨௨௰)

நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

உரவினை செய்பவர் மாயையென் பாரறி வொன்றுநற்கோர்
திருமுகங் கூடப் பெறுஞ்சிவன் றோன்கைச் சிலம்பண்ணலார்
வரவினைக் கூறனு நன்றே யுனது மனமுநன்றே
யிரவினுக் கஞ்சுவ தில்லைகொ லேழைக் கிரங்கவரே. (௨௨௧)

நேர்ந்தமை பாங்கி நேடுந்தகைக் குரைத்தல்.

ஒருவிரல் காட்டிக் குழைகாட்டிக் கைகுவித் தோங்கிச்செங்கை
பொருநெறி வைத்தனள் கூவி கரும்பார் புதல்வர்க்குண்டோ
முருகன் மயில்வரை மேலன்னங் காட்டிக்கை மூக்கில்வைத்தே
யிருவிரல் காட்டி யொருவிழி மூடின ளேந்திழையே. (௨௨௨)

குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல்.

அகத்தான் வருந்திய வன்பருக் கன்ப னமுகுளசண்
முகத்தான்மயில்வெற் பிலற்புதங்கண்டேன் மொழிவன்பெண்ணே
பகற்காக்குஞ் சண்பகஞ் சேராது தும்பியென் பார்கருரை
மிகத்தா னமுத மதுவுண்டு பூமெத்தை மேனுற்றதே. (௨௨௩)

இறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தல்.

தோழியர் தூங்கினர் நற்றாயுந் துஞ்சின டோய்ந்துடையார்
வாழியர் நங்கொல்லைச் சண்பகக் காவின் மலர்மெத்தைமேற்
கோழியர் குன்றக் குடியார்கை வேலன்ன கூர்ங்கண்ணியே
மேழியர் மாலை யெனவே யிருண்டது விண்கங்குலே. (௨௨௪)

அவட்கொண்டு சேறல்.

பால்சர்க் கரைபழங் கர்ப்பூரம் வெற்றிலை பாக்குமுதற்
சாலவங் குண்டு மணிச்சிலம் பென்மடித் தாங்கினன்சண்
சூலி மகன்குகன் றோகைவெற் பார்மெய்ச் சுகம்பெறவா
கோலைப்பெண் ணுங்கித் துகின்மூடிப் பஞ்சணைக் குட்படுத்தே. ()

குறியுய்த் தகறல்.

கர்ப்பூர மோர்பங்கு வைத்தளித் தார்பழுக் காயிலையி
தற்பூ ரவர்மன மாயுத்தர் காண்குக னூர்சிகண்டி
வெற்பூ ரிரவைநஞ் சாதியைச் சாரின் மிறைசொல்வதார்
நிற்பீர் மருவல ரைத்தலை சாய்ப்ப னிமிடத்திலே. (௨௨௬)

வண்டோ தாரோன் வந்தெதிர்ப்படுதல்.

செடிதேடி மத்த கயம்பிடி தேடுஞ் சிறந்தவின்பப்
பிடிதேடு மோவடி வேலன் மயூரப் பிறங்கலிலே
யடிமே லடியிட்டை யோகாடே லாம்விழி யாக்கிநின்றாய்
விடியா விடினல்ல வோமுக மாமதி மென்மைமகளே. (௨௨௭)

பெருமக ளாற்றின தருமைநினைந் திரங்கல்.

சாதிசஞ் சாலிக ஞாயமெம் மூர்வரத் தக்கதன்று
மீதுறை சஞ்சா லிகபுட்ப ஞாயத்தின் மேவினிர்நீ
ரோது மறைபணி சேந்தன் மயில்வரை யுற்றவர்க
டைதையு ருரத ஞெனறி கண்டெனைச் சேர்ந்தனிரே. (உஉஅ)

புரவலன் றேற்றல்.

இடைநினைந் தாற்கன்னி வாகன மென்செய்யு மேய்ந்தவல்குற்
படநினைந் தாலரி பாயலு மென்செயும் பாற்கடல்சேர் [கட்
விடைசுமந் தான்மகன் றோகைவெற் பாய்செற்றம்வேண்டியென்
கடைசிவந் தாலெங்கு நும்மூர் சிவக்குங் கனற்கொழுந்தே. ()

புணர்தல்.

மறையாத மின்மலர் வாடாக் கொடியை வகையுணவிற்
குறையா வமுத மெனுநீ தமயந்தி கொண்ணிடதத்
திறைநா னெனிற்குகன் றோகைவெற் பிற்கற்ற தில்லை கொல்லோ
நிறைதே ருருத்தெரி யாமந்தி ரத்தி னெறிகளையே. (உகo)

புகழ்தல்.

ஆல மெனுமசு ரேசனை வேல்விட் டறுத்தமரர்
தாலி பதித்த முருகன் மயில்வரைத் தையலரே
மேலை யடையலர் முன்னே கலகலை வென்பதனுற்
காலிற் சிலம்புக்கு நேரல்ல வேசிவன் கைச்சிலம்பே. (உகக)

இறைமகளிறைவனைக் குறிவிலக்கல்.

இன்னுமை வேண்டி னிரவி லெழுகவென் றேபெரியோர்
சொன்னர் பொய் யன்று முருகேசன்றாள்பணிதோகைவெற்பா
பன்னுடர் போற்றச் சிவந்தகை கால்கமிளன் பங்கயக்கண்
டன்னுற் கறுத்தன பார்நீயென் னச்சந் தவிர்ந்திடவே. (உகஉ)

அவன், இறைவியையில்வயின் விடுத்தல்.

முத்தாயர் கேள்விக்கு வைத்தீர்கொ றோழியர் மூன்றுகட்டுங்
கைத்தாளிட் டீர்கொல்பொய்த் தாளிட் டனிர்கொல் கருணையெ
வைத்தாண் முருகன்மயில்வெற்பினீர்சென் மனங்கலக்கு[ன்மேல்
வித்தேன் கதிர்தோற் றினுக்கஞ்சங்கொள்ளா விகசிதமே. ()

இறைவியை, எய்திப்பாங்கி கையுறைகாட்டல்.

கான்கொண்ட கூந்த லிளம்பிடி யேகால் கடிதுசென்று
நான்கொண்டு வந்த மலர்கரத் தேந்தி னளினத்திலோர்
வான்கொண்ட நீல மலர்ந்ததென் பார்பச்சை வண்டிதென்பார்
தேன்கொண்ட சோலை முருகன் மயில்வரைச் செல்வர்களே. ()

இற்கொண் டேகல்.

பாலிக்குச் சொல்லினும் வேல்சிவப்பானதைப்பாளிதங்கொ[வாய்
ணிலிக்குச் சொல்லினும்பொல்லாப்பென்றும்முனிகழ்த்தல்செல்
சூலிக்கு மைந்தன் மயில்வெற்பி லெல்லாந் துவண்டனவே
காலிக்குஞ் சொற்றிடு மேகண்டைச் சேலைக் கமகமப்பே. ()

பிற்சென்றிறைவனை, வரவு விலக்கல்.

கன்ன வடுவை யிதழை முல்லைக் கலந்தன் றுநீ
சொன்ன படிமறைத் தாண்மறைத் தாளல்லள் சோர்வைமயில்
வன்னி முருகன் மயில்வரை மேலிறை வாவருத
லின்னம் பொறுப்பவளோபல்லக் கேற்ற வெழுந்தவளே. (௨௩௬)

பெருமகன் மயங்கல்.

கொங்கைக்கு மார்பின னைக்குங் கலைக்குமக் கொங்கைதொட்ட
செங்கைக்குங் குற்ற முரைத்தன ளேயினிச் செய்வதென்னே
துங்க மயில்வரை வேலனு நீயுந் துணையன்றியோர்
வங்க நடந்திடு மேபெரு கோதை மயற்கடற்கே. (௨௩௭)

தோழி தலைமக யோர்கிளந்து விடுத்தல்.

ஆதி மலரை நினைக்கு முடியு மயலவர்சொற்
பாதையிற் கொண்டு மகிழு முறம்விழல் பார்க்குங்கொடி
யோதை குறிக்கு மயில்வரை யான்பத முன்னுமிந்தக்
காதலிக் குத்தப்பு நீக்குவ தென்னூர்க் கனகதப்பே. (௨௩௮)

திருமகட் புணர்ந்தவன் சேறல்.

மாவென்ற கண்ணியென் னூர்க்கேகற் கென்றடை வையமெலாங்
கூவென்ற சூரைவென் றோன்மயில் வெற்பிற் குறுகுமிருட்
காவென்று மாவென் றுஞ் சொன்னதெல் லாநிற்க காமமுற்றை
யோவென்ற போதண்ட கோளமுந் தீப்பட் டொளிவிடுமே.

இரவுக்குறி முற்றிற்று.

பதினென் காவது—இரவுக்குறி யிடையீடு.

இறைவிக்கிறை யிறைவர வுணர்த்துதல்.

விண்ணி லுதித்த பதினொரு கோடி விபுதருக்காக்
கண்ணி லுதித்த முருகன் மயில்வரைக் காதலியே
யெண்ணி லுதித்தவுன் காலுஞ் சிலம்பு மிருகையும்பொன்
மண்ணி லுதித்தன வோபட்சி சால மலர்வனத்தே. (௨௪0)

தான்குறி மருண்டமை தலைவியவட்குரைத்தல்.

வேறு புகலற்ற வேகாக்ர சித்த வியப்பிலிடை
யூறு வராதென் றிருந்தேன்பெண் ணேமர மொன்றையொன்றுச்
சூறை படுத்த விழுமொலி யாற்பசுந் தோகைவெற்பா
ராறு பொறிகொண்ட காற்று மருட்டிற்றெ னைம்பொறியே. ()

பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பல்.

காட்டவைத் தார்கல்லைச் சொல்லவைத் தார்பொய்யைக் கால்வயி
ற்றுக், கூட்டவைத் தார்கையைத் தன்மெய்யைக் கங்கையுள் ளங்
கைத்தொட்டி, லாட்டவைத் தார்மயில் வெற்பார்செய் நன்றி
யென் னன்றியுங்கை, நீட்டவைத் தார்புன்னை மேற்பாம்பை யெ
ன்ன நினைப்பினியே. (உசஉ)

புலந்தவன் போதல்.

சரம்போ னிலையர்பொன் போலிலங் கும்மனஞ் சஞ்சலத்தாற்
குரங்கா மெனச்சொன் னதுநிச மாயின கூந்தல்வனம்
பரந்தோடித் தென்னையில் வாழையின் மாவிற் பருங்கமுகி
னிரந்தோ டியுமில்லை வேலன் மயில்வெற்பி னேரிழையே. (உசங)

புலர்ந்தபின் வறுங்களந்,தலைவிகண்டிரங்கல்.

பந்தினைக் காய்த்தது புன்னைபொன் மாலையும் பங்கயமுஞ்
சந்தனம் பூத்தது பேசாக் கிளிமுல்லை தந்ததுண்டே
செந்தின் முருகன் மயில்வரை மேலண்ணல் சென்றனரோ
பிந்தின ரோநிற்கின் றாரோகண் ணேயுன்னைப் பெற்றென்னையே.()

தன்றுணைக் குரைத்தல்.

அனலுக்கு ளாகிச் சரவணத் தெய்தி யறுவர்கொங்கை
வனசத்தின் பாலுண்ட வன்றோகை வெற்பினர் வாரலரே
லுனைபொற்றை யன்றிலென் பார்நக ரோர்மல ரோன்குருவி
தனிமெய்ப் பொருளமு தாகவுண் டன்னைவிண் டானெய்துமே.()

தலைமகளவலம் பாங்கிதணித்தல்.

ஆறுரு வாய்ச்சுனைத் தொட்டி லுளாடியெ னம்மைகைக்கோர்
பேறுரு வானசு வாமிபைந் தோகைப் பிறங்கலுள்ளாய்
கூறுவ ரோபொய்ம்மை கண்டேன் பலமின் குறிவிடிந்து
தேறுவையோ கொம்புபார்நேர்ந்தும் வீண்படச்சென் றனரே. ()

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.

விடையி லிருவ ருடனேறி முன்வெள்ளி வெற்பகத்தே
நடைபுரி வேலன் மயூர்வெற் பாவிங்கு நண்ணினையே
லடைகுவன் யானு கினுந்துணை யாய்வரற் காய்ந்ததென்னை
மடறரு மோகமு கங்காயுள் ளன்பு மறந்தனையே. (உசஎ)

இறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றல்.

தொட்டி லூற் ருடி யுமைக்குப தேசஞ் சொ லும்பொருளின்
மட்டறி வேலன் மயூர கிரிமட மான்பிணையே
பட்டினி யில்லைப் பகலெண்ண மில்லைப் பகருமக்குக்
கட்டி லு மெத்தையு மில்லை யெளியேன் கருத்திடத்தே. (உ௪அ)

அவள்குறிமருண்டமை யவளவற் கியம்பல்.

விமுக்கு முலக வடுக்கினை மாற்றி விலங்கலெல்லா
மமுக்கி யெழுப்பு முருகன் மயில்வெற்பி னரண்ணலே
குமுக்கென்ற கேணியும் விண்ணென்ற வோசையுங் கூவத்திலே
தொமுக்கென் றதுமுன் குறியென்றல் லெல்லாஞ் சுழன்றனளே.

அவன்மொழிக் கொடுமைசேன் றவளவட்கியம்பல்.

கின்னரி வீணையி னுவதின் றேசிங்கங் கெர்ச்சிக்கின்மேன்
மன்னுறு மிந்திரன்வெட்போரை வென்றான் மயில்வெற்பின்வாய்ப்
புன்னை யரும்புமுற் றத்தசைத் தேனென் புகன்றினியு
னன்னம் பறந்தது வோவென் றனரிறை யாயிழையே. (உ௫௦)

என்பிழைப் பன்றேன் றிறைவிநோதல்.

தூங்கின னோதூங் கிலனோ தெரிந்திலன் சொல்லறிந்தா
னீங்கின ரோநீங் கிலரோ தலைவரென் னெஞ்சிருந்தா
ரேங்கிய தேவர்கள் வாழ வருளு மிறைவன்மயி
லோங்கல ரென்றோர் மிடாவையுற் றஞ்சிப்பி னூர்ற துண்டே. ()

தாய், துஞ்சாமை.

இலக்கத்தொன்பானெனும்வீரர்துணைக்கொண் டெழுந்துதகாக்
கலக்கந் தவிர்த்தசு வாமி மயில்வரைக் காரிகையே
துலக்குபொற் பாபத்தை முல்லையி லேவைத்துந் துஞ்சவனோ
பலிக்க வுழக்கின்ற வாபத்தைப் போக்கிப் பயந்தனனே. (உ௫உ)

நாய், துஞ்சாமை.

பேசு பிரமனை மாற்றிச் சிருட்டி பெருக்கிமனைக்
கீசன் வரச்செய்த வேலன் மயில்வரை யேந்திழையே
யோசனை பாரித்த வூர்மலர்ப் பொய்கையுண் ணூம்புனல்யாம்
பாசியை நீக்கியிந் நீர்குடிப் பாரெவர் பார்மன்னரே. (உ௫௩)

ஊர்துஞ்சாமை.

முட்டற்ற வீரா யிரம்வெள்ளம் பூதமு மோதிய நூற்
றெட்டுத் தலைவரும் பெற்றோன் மயில்வெற்பி லேந்திழையே
கொட்டிய மேளமுங் கூத்தையும் பாருயிர் கொண்டவரிச்
சட்டத்தி லாறு மிடையி லிரண்டுந் தவிப்பில்லையே. (உ௫௪)

காவலர் கடுகுதல்.

மனவேகத் தேரு மருத்தெனும் பாகும் வரிச்சிலையுஞ்
சினவாழி யுஞ்சத்தி வேலும்பெற் றோன்மயிற் றிண்சிலம்பார்
புனமேல் வருவர் தடையில்லை யின்று புகிற்கொடிதாந்
தனியான சோலைப் பெயரோடு பூப்பெயர் சார்ந்திடினே. (உருரு)

நிலவு வெளிப் படுதல்.

முத்தக் குடைநிழற் றேவர்கள் சூழ முதற்சமரி
லத்தி முகனைக்கொன் றோன்மயில் வெற்பினி லாயிழையே
பத்துப் பெயரோ டொருவர்வந் தாலும் பவுஞ்சிதென்பார்
சுத்தக்கு பேரன்வந் தாலெவர் தூங்குவர் சொல்லுகவே. (உருசு)

கூகை குழறுதல்.

அசர மெனப்பல் லுயிர்தோறு மந்தரி யாமியுமாய்ச்
சுகநிலை யான முருகன் மயில்வரைத் தோகையரே
ககரத் திரண்டினி லாறென்ப தேறிக் கதறுமென்றாற்
பகர்பதி னொன்று தடையென்று நீங்கும் பதியைவிட்டே. (உருஎ)

கோழி குரற்காட்டுதல்.

ஒருசாதி யிற்பிறந் தேயஞ்சு சாதி யுடன்கலந்து
வருநாளி லூண்முதன் மாறிய மூட மனக்குருகார்
பரிவா யெனக்குரு கார்வே லன்றோகைப் பருப்பதத்தா
ரருகா மனையிற் பறையடித் தால்வர லாவதெங்கே. (உருஅ)

இரவுக்குறியிடையீடு முற்றிற்று.

பதினைந்தாவது—வரைதல்வேட்கை.

(பாங்கி) பருவரல்வினவல்.

மாதாவுந் தந்தையும் பிள்ளையுஞ் சுற்றமு மற்றுமெல்லா
நீதா னெனநின் றவன்மயில் வெற்பினி னின்றமதி
மீதே பிறைமேற் பிறையுங்கொவ் வைக்கனி மேலிலையு
மாதே தரித்திலை யென்னோ பருவரல் வந்ததுவே. (உருகூ)

பாங்கிக்கிறைவி, அருமறை செவிலி யறிந்தமை கூறல்.

கோவைப் பழத்தினிற் காயும் வடுவுங் கொடுத்தவரார்
பாவைக்கென் றன்னை யுன்னைக் கிளியைப் பகர்ந்தொழித்தேன்
பூவிற் கணத்தை மறைத்த க்ரவுஞ்சப் பொருப்பையங்கைத்
தேவிக் களித்த மயிலோன் மயில்வரைச் சேயிழையே. (உசுய)

தலைமகன் வருந்தோழிற் கருமைசாற்றல்.

ஒருநாளும் பாதி யதுநாலு கூறதி லொன்றுதள்ளி
வருமூன்று கூறுக்கொ ரேழிடை யூறு வருங்கொடி தாய்த்
திருவே ரகத்தி லிருந்தோன் மயில்வெற்பர் சேயிழையே
யிருணாள்வருவதெங் கேகுற்றம் பார்க்கின்றவில்லைத்திலே. (உசுக)

தலைமக னூர்க்குச் சேலவோருப் படுதல்.

படையோ டெழுந்துவின் னோர்செய்ால் லூரிற் பணியச்செந்தி
லடைவார் மயில்வெற்பி னோர் விலைச்சரக் கானதினுற்
கடையூழி போய்க்கப்ப லேறிப் பலர்கண் படச்சென்றுபொன் ()
கொடையாளர் வீட்டிற் புகுந்தே சரக்குப்பை கூடுவனே.

பாங்கி இறைவனைப் பழித்தல்.

விரும்பிமுன் காட்டின் மனமஞ்சி லீரென்று வேண்டியுங்கா
திரும்பிய போதுகல் லென்று ரதுநல்ல செப்பல்லவே
கரும்பு மொழிவள்ளி யார்மயில் வெற்பர் கருணையென்னே
குரும்பையி லேயென்றுங் கோவாத முத்தங் குவித்ததுவே. ()

பூங்கோடி, இறையோன்றன்னை நோந்தியற் படமோழிதல்.

வானுண்ட தேசிகன் சொற்படிக் கேவிறல் வாகுவைநீர்
மீனுண்ட வூர்க்குப் புகவிடுத் தோன்மயில் வெற்பனையாய்
நானுண்டு நீயுண்டென் றோர்பூத் தலைவைத்த நண்பர்விடார்
தேனுண்ட வண்டினந் தேடாத் தருவில்லைத் தேசத்திலே. ()

கனவுநலி புரைத்தல்.

மாகாயம் பாய்ந்திந்தத் தேவையிற் சொர்ன மலையொடுக்கி
மீகீ ழுயர்ந்தவன் போற்றிய வேண்மயில் வெற்பர் வந்தார்
தோகாயென் றார்முத்தந் தந்தார் படுத்தார் துயில்புரிந்தா
ராகாயப் பூவு முயற்கொம்பு மாயின ராரணங்கே. (உசுரு)

கவினழி புரைத்தல்.

அடியைப் படர விலங்கையி லூன்றி யதிர்கடற்குக்
குடியைப் படரவிட் டோன்பணி வேண்மயிற் கோத்திரத்தார்
படியைப் படரவிட் டார்பழி யாம்பயி ரைப்பசலைக்
கொடியைப் படரவிட் டார்மணம் பூசிய குன்றத்திலே. (உசுசு)

தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டல்.

மீறித் தனுவிட்டு நாண்போன வாறும் விழுந்திடுஞ்சிற்
றுறக் கரைப்பட்ட துஞ்சொல்லு வாருள ராயினன்றே
யேறுற்ற வானத் திலங்கேசன் பொன்முடி யாயிரமுஞ்
சூறைப் படுத்தான் செழுமுப்வேள் பைந்தோகைச்சுரும்பவர்க்கே.

துன்புறுபாங்கி சொல்லெனச்சொல்லல்.

மால்வைத் தசுரர் வெருண்டோட வீர மயேந்திரத்திற்
கால்வைத்த வன்பணி வேண்மயில் வெற்புறை காவலர்க்கே
சேல்வைத்த கண்ணிணை யாபென் னியம்புதி சேர்கிளிக்குப்
பால்வைத் தருத்தில ரோவளர்ப் போரிந்தப் பாரகத்தே. (௨௬௮)

அலர்பார்த்துற்ற வச்சக்கிளவி.

இழகு மணிக்குங் குமக்குரும் பைக்கொடி யேயுனது
விழிவடி வேனுங் குழைவாய்தல் பெற்றது விண்ணமெல்லாந்
தொழும்வடி வேலன் மயில்வெற்பி னுன்னை சொல்லிபவாய்
பழமென வாயு மலரைக் கொடுத்துப் பபப்பித்ததே. (௨௬௯)

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி.

ஓதும் வடக்கு மதில்காவ லாளியை யூறுசெய்த
சோதி பணியும் பரஞ்சோதி யார்பசுந் தோகைவெற்பார்
பாதி யிரவில் வருதனன் றேவரைப் பாந்தளுண்டே
தீது செலப்பணி யேவரி லூர்க்குச் செலப்பணியே. (௨௭௦)

காமமிக்க கழிபடர் கிளவி.

மங்காத கீர்த்தி பெறவீர வாகுக்கு வான்கதிர்பொற்
சிங்கா சனஞ்சபைக் கீந்தவன் றேகைச் சிலம்பண்ணலார்
தங்காதல் கண்டணி ரேகிளி காண்மலர்த் தண்டலைகாள்
பொங்கீர் புளினங்க ளேதுயர் கூறும் புளினங்களே. (௨௭௧)

தன்னுட்கையா றெய்திடு கிளவி.

திரிகரிப் போர்வையன் மைந்தன் மயூரச் சிலம்பண்ணலா
ரொருகரி தாயிருந் தோர்நாட் டியர வுரைத்தவெஞ்சொற்
பரிகரி யென்றதுங் கோட்டானை தாழக்கைப் பற்றியபோ
தரிகரி யென்றதும் வீணே மதியே யதுமதியே. (௨௭௨)

நெறிவிலக்குவித்தல்.

மைப்பார் புகழு மருது துரைவேண் மயில்வரைமேற்
றைப்பூசத் தேரில் வரச்செய் வதுமன்ன தானஞ்செய்யு
மப்பூ மியுங்கண் டிடவர லாமென் றறைவருமே
லெப்பூ சனுமுண்டு மைப்பூச னுண்டெனி லேதமின்றே. (௨௭௩)

குறி விலக்கு வித்தல்.

ஏவிய தாயர் குறிவிலக் காகியு மென்னுடம்பிற்
பாவி யொருவன் கணைபட்ட சூழ்ச்சி பகர்சகியே
காவடி கொண்டுமுப் பத்துமுக் கோடியர் கைதொழுத
சேவடி யான்செந்தி லான்பசுந் தோகைச்சிலம்பவர்க்கே. (௨௭௪)

வெறிவிலக் குவித்தல்.

முன்னிய சூரனைச் சொல்லாமை சொல்லி முனிந்தவர்கள்
பின்னிட வந்தோன் பணிகுகன் ஞேகைப் பிறங்கலன்னே
பொன்னிசை மேடத்தை முன்னிட்டுப் பூசை புரிந்திடினுங்
கன்னியுஞ் சிங்கமு நீங்காதென் றேது கனங்குழையே. (உஎரு)

பிறர்விலக்குவித்தல்.

அன்றைத் தினத்தி லசுரேசர் பல்லா யிரரையவன்
முன்றிற் படுத்தான் பணிவெண் மயில்வரை மொய்குழலே
யின்றைக் கிரப்பார்க் கிசைவதுண் டோபுக ழென்னையிவ்வூர்
குன்றக் குடியெனப் பேரிருந் தாலுங்குன் றாக்குடியே. (உஎசா)

குரவரை வரைவேதிர் கொள்ளுவித்தல்.

சொன்றிக் குழிசி யெனப்பதின் காவததூரந்தெவ்வூர்
வென்றிக் கனலிட் டவன்பணி வேண்மயில் வெற்பணங்கே
குன்றக் குடிக்கா வலர்மண மிக்கென்று கூறினையே
லன்றைக் கனநனி யாங்கார நீங்கும்பின் னுவதுண்டே. (உஎஎ)

வரைதல் வேட்கை முற்றிற்று.

பதினாறுவது—வரைவுகடாதல்.

வினவிய சேவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

எப்போ தருள்புரி வீரென்ற வார்த்தை யிரவிற்கொண்டு
துப்போ திதழ்மின்னை யென்னையென் றுளன்னை தூங்கமரர்க்
கப்போது தூது தெரித்தவன் றேகை யணிவெற்பரோ
செப்போதி னுண்மலர் கொய்மாதர் மேலிட்டுச் சீர்செ.'றவே. ()

அலரறிவுத்தல்.

சீரார் சயந்தனுந் தேவரும் போற்றுஞ் சிறையினிற்கண்
ணேரான வன்மயில் வெற்பிறை வாவிவ ணோர்பழிநீ
வாராத போதி லரும்பாகும் வந்தான் மலரலரா
மீரா றிடைப்பட் டிடில்வடு வாமென் றிரங்கினளே. (உஎஅ)

தாயறிவுணர்த்தல்.

குறியான் வனுவென்ற போதே கணங்கள் குரைகடலே
நெறியாக.வானெறி வந்தோன் மயில்வெற்பி னேரண்ணலே
பறிவாத வன்னமு முண்ணுத வன்னமும் பார்த்திலளென்
றறவே வெகுண்டு குறித்தாளெம் மன்னை யருங்களவே. (உஎகூ)

வெறியச்சுறுத்தல்.

வாட்டமில் வீர ருடனேம கூடத்தின் மாமுனிவர்
பாட்டுக் கருள்செய் திருந்தோன் மயில்வெற்பிற் பார்மன்னனே
கோட்டிற் செறிமுலை பாரா யெனிலிந்தக் கோயிலிற்பா
ராட்டுக்கு முன்மத் தளதாள வோசை யதிர்ந்திடுமே. (உ௮0)

பிறர்வரை வுணர்த்தல்.

ஆங்கார முற்றனன் வந்தா னிலனென் றடையலரூர்
தாங்காண நின்றவன் றோகைவெற் பாருந் தனித்துரையே
யேங்காத வுங்களி லூரு முலகமு மென்படுமோ
நீங்காத மானுக்குக் கொல்லாத வேங்கையை நேர்குவரே. (உ௮க)

வரைவெதிர் வுணர்த்தல்.

பூமலி சூரன் மகன்போரை வென்றவன் போற்றுஞ்செவ்வேள்
காமலி தோகைவெற் பாமணம் பேசக் கருதினையேற்
றூமறை யெம்மூ ரகவித மெம்மையர் தையலிவண்
மாமணச் செந்தேன் வருநீகொண் டேகுதி வண்டெனவே. ()

வரையுநா ளுணர்த்தல்.

தானைக்கு முன்வந் திடுஞ்சூர பன்மனைச் சாடிவந்த
சேனைக் கடலை யழித்தோன் மயில்வரைத் தேரண்ணலே
வானத்தி னூர்கொண்ட வம்புலி பார்த்தனர் மாதர்மலர்
கானத்தி னூர்கொண்ட வம்புலி பார்த்தனர் கானவரே. (உ௮௩)

அறிவறிவுறுத்தல்.

அழிக்கின்ற தானவன் மாயமஞ் சக்கை யயிலெறிந்தோன்
செழிக்கின்ற தோகைவெற் பான்றந்தை போலத் திருவண்ணலே
பழிக்கஞ்சி னோளோர் பதிவுசொன் னேனும் பகர்தல்விட்டுச்
சுழிக்கின்ற வாரி முழங்கா லளவென்று சொல்லினளே. ()

குறிபெயர்த்திடுதல்.

வேகித்த மானத் துடன்கோட்டை தூளிட்ட வீரன்பணி
மாகத் தவியன் முருகன் மயில்வரை மன்னவனே
சோகத்தி லேவர வேண்டா மினியின்று தொட்டுயர்ந்த
நாகத்தின் வாய்வருந் தேவா முதம்பெற நாடுவையே. (உ௮ரு)

பகல்வருவானை யிரவுவருகென்றல்.

மையாரு மேனி பெறுபானு கோபனை மாய்த்தல்செய்த
செய்யான் பணிகுகன் றோகைவெற் பாபகற் சேரவெண்ணிற்
கையாரு மாலையிற் சேரா ததுமணங் காண்கிலது
மெய்யார் மனித மரத்தினுண் டாமலர் மேவிடுமே. (உ௮சு)

இரவுவருவானைப் பகல்வருகென்றல்.

சொருபங்கொள் தெய்வப் படைசிங்க மாமுக சூரன்விட
வொருவுதல் செய்த குமரன் மயில்வெற்புக் கோர்பகலே
வருதனன் றமந்த வாணன் மகள்சகி வந்திடினு
மிரவினுக் கஞ்சாத் துரையே யிராவர லெண்ணலையே. (உஅஎ)

பகலினு மிரவினும் பயின்று வருகென்றல்.

செல்லியல் சிங்கமு காசுர னுட்கொண்ட சேனைவரக்
கல்லிய வாளியன் வேலன் மயில்வரைக் காவலவா
மல்லியல் கீர்த்தியும் புண்ணிய மும்பெற்ற மன்னவர்க
ளெல்லை யிகழார் கருநிற மாலை யிகழ்ந்திலரே. (உஅஅ)

பகலினு மிரவினு மகலிவ ணேன்றல்

தோல்வி படாத வரிமுகன் ஞானத்திற் றேத்திரஞ்செய்
வேலன் முருகன் குகன்சேந்தன் வேண்மயில் வெற்பிறைவா
மாலைவந் தால்விழி நீலத்துக் காரம் வருசதிராங்
காலைவந் தானு முகமதி யாமனைக் கஞ்சத்துக்கே. (உஅகூ)

உரவோ ருடு முருங் குலனு,மரபும் புகழும் வாய்மையுங் கூறல்.

ஊருட னுடுங் குலமு மரபு முயர்புகழுஞ்
சீரொடு வாய்மையு நின்போ லுயர்வு செறிநெறியா
ளோருறு வேலன் மயில்வெற்ப கூந்த லிவட்குரைத்தாற்
றார்மலர்க் காடல்ல வோமனைங் காணுந் தருணமிதே. (உகூ0)

ஆறுபார்த்துற்ற வச்சங் கூறல்.

வாரீச சந்திர ஞாயமிவ் வூர்க்குன் மலர்முகமே
போர்பானு பங்கய ஞாயமெம் மைபர்க் குறுமனமே
சேர்வான மாறின் முருகன் மயில்வெற்பிற் சீருறுமோ
தாரா தரசா தகஞாய மங்கை தரணியிலே. (உகூக)

ஆற்ருத் தன்மை யாற்றக் கூறல்.

வல்லி யெழுதிய தாமரை யேயென்னும் வாரிசஞ்சே
ரல்லியை நீத்த மறவியென் றேவென்னு மாடும்பச்சைச்
செல்வ மயில்வரை வேளை நினையார் திறமெனவே
யெல்லியு நீங்கு மிவளுக்கொன் றுற்ற விசைத்தருளே. (உகூஉ)

காவன் மிக வுரைத்தல்.

நில்லெனச் சிங்க முகன்றலை பற்பல நீக்கிநின்றோன்
கல்வித் தான முருகன் மயில்வரைக் காவலவா
பல்வித மான களவோ விளங்கப் படுத்தவனை
சொல்லிலங் கிட்டனள் கள்ளருக் குற்றார் துணையில்லையே. ()

காமமிக வுரைத்தல்.

வீட்டிற் குழந்தை யிதழ்கடிக் குங்கிளி மேற்புகலுங்
காட்டு மரம்பை யணைத்துமுத் தாடிக் கலிபருகு
நாட்டிற் சிறந்த முருகன் மயில்வெற்பி னரியிச்சை
கோட்டிற் குருவித் தலைப்பனங் காயென்னிற் கூறலென்னே. ()

கனவுநலி புரைத்தல்.

விழிமீ திருந்து தனமீதி லாவர் விழிக்கினெஞ்சின்
வழியோ டுவர்பிரி யேனென்பர் வேலன் மயில்வரையார்
பழிபாகு மென்னும் பறித்தேகு மென்னும் படுமிரவின்
மொழியா லிரந்தும் விழியாள் விடிந்துமுன்மோகினியே. (உகரு)

கவினழி புரைத்தல்.

உண்ணாத செங்கனி பூதி செறிமணி யோடடுத்த
கண்ணாடி போல்வஞ்சி யாகின ளேயிரு கால்பணிந்து
விண்ணாடர் போற்று முருகன் மயில்வரை மேவினர்போ
லெண்ணாத தெண்ணிவண் சாதியி லேமுத் திணையுகுத்தே. ()

வரைவு கடாதல் முற்றிற்று.

பதினேழாவது—ஒருவழித் தணத்தல்.

தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றல்.

பிஞ்சும்வன் காயுங் கனியும் விதையும் பெருத்தசொர்ன
வஞ்சிக் கொடிக்குத் துகிர்க்கொடி நீசொல் வரிக்கணையால்
விஞ்சு மரிமுகற் கொன்றோன் முருகன் விளங்குகின்ற
வஞ்செழுத் தாகிய வாறெழுத் தெய்திலுண் டாவதுவே. (உகஎ)

மென்சொற் பாங்கி விலக்கல்.

ஆளி யுருவொடு போர்செய் மகாசுர னானவனைக்
காளியிற் போக்கிய சேந்தன் மயில்வரைக் காவலவா
நாளுமவ் வுஞ்சி லிரண்டோ பழுதில்லை நாடிச்செல்வாய்
மீளுமுன் னஞ்சி லிரண்டு பழுதாய் விடுநிசமே. (உகஅ)

தலைவன், நீங்கல் வேண்டல்.

அகத்தினி லெண்ணி யசுரேசன றேரை யருகழைத்துச்
சுகச்சொரு பம்பெற நின்றோன் மயில்வெற்பிற் சொல்வதுகேள்
சகத்தின் மகத்திற் குறைபார்ப்ப துண்டெங்குஞ் சார்கிலனுன்
முகத்துக்குச் சென்று கனிவாய்க்கு மீள்குவன் மொய்குழலே. ()

பாங்கி விடுத்தல்.

பொருசூர ளூர்சர பப்பட்சி யாகப் பொன் மென்மயிலா
யொருமா மலையுகைத் தோன்மயில் வெற்பி லுறையண்ணலே
திருமானை நீத்தல்செய் மன்னருண் டோவிரைந் தேசென்றுநீ
குருவாரம் வந்து புகின்மந்த வாரங் குறிக்குவையே. (௯௦௦)

தலைவிக்கவன் சேலவுணர்த்தல்.

பல்லா யிரமுருக் கொண்டெழுஞ் சூரனைப் பார்த்துநகைத்
தெல்லா மொடுக்கிய சாமி மயில்வெற்பி லேந்திழையே
மல்லார் மலைமர நோய்பின் னிடப்போய் வருதுமென்றார்
கல்லார் சுரமென நீவாடச் செல்கின்ற காதலரே. (௯௦௧)

தலைவி, நெஞ்சோடு புலத்தல்.

மார்பினிற் றாமரை பூத்ததுங் கோங்குற்ற மாமரமும்
போருறு மாவி லசோக மலர்ந்ததும் பூகந்தென்னை
நேருறு சேந்தன் மயில்வெற்பர் கண்டிலர் நேர்ந்திலர்நம்
மூரு வகைமறந் தாரு ருவகைகொண் டோடினரே (௯௦௨)

சென்றோ னீடலிற், காமமிக்க கழிபடர்கிளவி.

ஞானசொ ரூபம்வெஞ் சூரற்குக் காட்டியங் நாண்மறைத்த
கோன்முரு கையன் மயில்வெற்பர் நீடினர் கூர்கடலே
கானன் மரக்கல மேவிழி நீருங் கலங்கலமே
தூநலச் சோலைக ளேபெழு நீர்வரிஞ் சோலைகளே. (௯௦௩)

கோற்றேடிப் பாங்கி யாற்றுவித்தல்.

தூண்டிய தேரே றினர்மயில் வெற்பர் துரைமருது
பாண்டிய னுந்தேர் வடந்தொட் டனன்விருப் பாருமுன்னை
வேண்டிய மன்னர் வருவார்வை யாபுரி மென்கரைமேற்
றீண்டு திருவர சேயிட மாவந் திருவரசே. (௯௦௪)

அவன், வந்தமை யுணர்த்தல்.

ஊர்காண் குரவையும் பேரியுங் கொம்பு மொலித்தவொலி
பார்மா வலவர்முன் றுறை படகுடி பார்கொடிபார்
கார்மா நிகரு முனைப்பார் மயில்வெற்பிற் கந்தன்வருந்
தேர்கானை வந்தனர் நீயலங் காரிபொற் சிந்துரமே. (௯௦௫)

வந்தோன்றன்னோடு, நோந்து வினுதல்.

சொன்னாளுத் தாரஞ்செய் நீரோ வெனவுரை தும்மல்செய்து
பின்னாள் வருமென் றதற்குங் கொடுமொழி பேசினள்பூம்
பொன்னாள் குகன்செய லாலிவன் வந்து புகுந்ததனை
லென்னாக்கு மூக்குங் கொடுத்தீர் மயில்வெற்பி றையவரே. (௯௦௬)

வேந்திறல்வேலோன், பாங்கியோடு நொந்து வினுதல்.

இருதலைத் தீக்கர் பெறும்போடு மத்தள மேய்ந்தவுன்னால்
வருத றவிர்தன் மறப்பதுண்டேபெ,ன் மயில்வரைமேற் [டோ
றருவிய சொற்கொண் டிறைவியை யென்னவுஞ் சொன்னதுண்
முருகனை யெண்ணித் துயர்போக வென்று முருகனையே. (௩௦௭)

பாங்கி, இறைவியை யாற்றுவித்திருந்த வருமை கூறல்.

பொன்வினை யாளர் மரவினை யாளர் புகலுமண்ணின்
றன்வினை யாளர்வெண் ணூல்வினை யாளரைத் தாக்கல்செய்தென்
றென்வினை யாடு முருகன் மயில்வரைத் தேரண்ணலே
யென்வினை கூறுவ துன்வினை மேன்மன மெய்திடினே. (௩௦௮)

ஒருவழித்தணத்தல் முற்றிற்று.

பதினெட்டாவது—வரைவிடை வைத்துப்பொருள் வயிற்பிரிதல்.

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக்கென்றல்.

அறநிலை யஃகின் மறநிலைச் செம்பொ னரசர்கொள்வார்
செறுநர் பொருடன மூன்று வகையினுஞ் சீரியதாங்
குறவர் மலைக்கொடி மேவிய வேண்மயிற் கோத்திரத்திற்
றிறமுற் றுரைத்தி மலையாள வீழுந் திறைகொள்வதே. (௩௦௯)

நின்பொருட் பிரிவுரை நீயவட்கென்றல்.

கண்டிக்குப் போம்ப வழக்காட்டுக் கேகுங் கலிங்கத்துக்குத்
தொண்டிக்குப் போந்திர வீழங்கை யாடுந் தொடுத்தடிமைக்
கொண்டசு வாமி மயில்வரை யாளுக்குக் கூறிடினீ
ருண்டவ ளுண்டு விடைகொண்டு போகுவ தோர்குவனே (௩௧௦)

நீடேனென்றவ னீங்கல்.

மாதரை மேவினர் மிக்கான வீகையை வர்ச்சிப்பரோ
காதலிப் பார்க்குக்கல் யாண முயற்சி கடனல்லவோ
நீதனி யாற்றுதி வேண்மயில் வெற்பினி னீடநில்லேன்
மீதெழு கண்ணுக்குங் காதுக்குந் தூர மிகவில்லையே. (௨௧௧

பாங்கி, ஓடரிக்கண்ணிக் கவன்செலவுணர்த்தல்.

அண்டமும் பாரு நிறைந்த வசுரர்க்குங் காரஞ்செய்தோன்
றண்டமிழ் வாழ்மயில் வெற்பாருஞ் சோலைத் தனிக்குயிலே
கொண்டிடு மாசைபற் றுதென்று மேலுங் கொளப்புகுந்தார்
திண்டிறன் மன்ன ருனையே யிருத்திய சிந்தைகொண்டே. ( )

பூங்குழையிரங்கல்.

பூங்குழை மாவென நின்றனை வேலிற் பொருதவன்பூந்
தேங்கமழ் சோலை மயூர கிரிக்குறை செல்வரவர்
தாங்கட மேவி யெனது பசுவைத் தனிபுரக்க
வேங்கையைத் தேடின ராமறிந் தார்க்கு வியப்பிதுவே (௯கங)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

மாவை யிரண்டிட்டுச் சேவலுந் தோகை மயிலுமெனப்
பூவி லமைத்த முருகன் மயூரப் பொருப்பணங்கே
பாவையர்க் கிப்படி யுண்டோ மயில்பழி பார்த்திலையே
யாவியுங் கூடுமொன் றாக்கில னேமுன் னயனுமக்கே. (௯கச)

தலைவி கொடுஞ் சொற் சொல்லல்.

பொன்வாசஞ் செய்யு முருகன் மயில்வரைப் பூங்கிளியின்
றன்வா சகமுஞ் சகிவா சகமுஞ் சரிசொல்லலா
மின்வாசஞ் செய்யு மயில்காட்டி யெம்மை விருதளித்த
மன்வா சகமு மரிச்சந்த்ரன் சொல்லு மதிக்கிலொன்றே. (௯கரு)

வருதுவர் மீண்டெனப் பாங்கிவலித்தல்.

கானே ரிருவர்தும் போற்கண் டனராங் கடிதுறுவார்
மீனே சுமந்த வரைமீட்ட வேண்மயில் வெற்பினில்வாழ்
மானேயுன் கண்வைத்த காலே நடந்தது வந்திடுநங்
கோனேது சென்றது நானே துரைத்தது கோபமென்னே. (௯கசு)

பருவங்கண்டு பெருமகள்புலம்பல்.

ஏறிய மேகஞ் சரிபவில் வீசமி னெற்றொடுங்க
வேறிய லானை பிடியோ டெதிரமென் காந்தண்மின்னத்
தூறலு மேவ விருமலர்க் கண்ணீர் சொரியச் செவ்வேள்
கூறு மயில்வரைக் கார்கால மியானென்னக் கூடியதே. (௯கஎ)

இகுளை வம்பென்றல்.

கூந்தலைக் கண்டு மயிலினட மாடின கொண்டல்குற்
பாந்தளைக் கண்டு செங் காந்தளிற் பாந்தள் படமெடுத்த
வேந்திய மின்னு மிடைச்சோதி வேண்மயி லேய்ந்தவெற்பிற்
சாந்த முலைபல்ல வோவிளை யாடுதந் தாவளமே. (௯கஅ)

இறைமகண்மறுத்தல்.

வானி லிடித்தொனி கூறினும் பேரிகை வாத்யமென்பாய்
ஞான முதற்பொரு ளாகிய வேண்மயி லகத்தின்வாய்க்
கான்வரு வார்செங்கைக் காந்தளின் மல்லிகைக் கண்ணியைப்பா
ராணையைக் குத்திச்சொல் லான்மறைத் தாணிக ரன்றுனக்கே. ()

அவர்தூ தாகிவந்தடைந்ததிப்பொழுதெனத், துணைவிசாற்றல்.

ஓது முருகன்கை வேலென மின்னி யுவன்மயில்போன்
மீது பசந்து கொடிச்சிறை போலிடி விட்டுமுகி
றாதொரு பத்திலொன் றுனதி னல்வந்து தோன்றியதா
னூத னருள்போற் குளிர்ந்துவின் னூர்மயி னுகத்திலே. (கூ௨0)

பிணைவிழியாற்றல்.

பாலெனத் தேனெனக் கண்டென்ன வார்த்தை பகரிருவர்
வேலன்ன கண்ணுக் கினியசெவ் வேண்மயில் வெற்பிடத்தே
கோலன்ன வேந்தர் வரல்சொல்லிக் காக்குங் குணத்தினன்றோ
மாலென்ன வுன்னை வகுத்தான் கொடிய மலரயனே. (கூ௨க)

அவனவட்புலம்பல்.

தேனூறு பாயுங்குன் றக்குடி மாதுக்குச் சேந்தன்செங்கை
வேனூடுங் கண்முத்த நீலமுத் தாகக்கொள் வெண்முத்தெல்லாங்
கானூர் வெடிமுத்த மாக நுதன்முத்தங் கன்னத்தின்வா
யானூத செம்முத்த மாகநன் றுப்பொரு ளாக்கினமே. (கூ௨௨)

அவன்வருகாலைப், பாகன்றன்னொடு சொல்லல்.

ஆடுங் கொடிநெடுந் தேர்வல வாவன்ப ரன்பரென்றே
தேடுங் கொடிகையிற் கற்சுமந் தேபழி செய்தனம்யாம்
வாடுங் கொடிக்குவெங் நீர்விடல் போல்வேண் மயில்வரைமேற்
கூடுங் கொடியவென் னெஞ்சுமுன் பாய்ச்சற்குதிரையுமே. (கூ௨௩)

மேகந் தன்னொடு சொல்லல்.

வாரா திருந்தவன் மேலன்பென் னேவென்று மாற்றுதற்கோ
பாரா திரார்வந் தனரென்ன வின்சொற் பகருதற்கோ
வேரா பொருவரை நீத்துச்செல் பாவி யெனைநிகராய்த்
தாரா தரமே முருகன் மயில்வரை சார்கின்றதே. (கூ௨௪)

பாங்கி, வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தல்.

கார்முடி யாய்வெளி யேபயி லாயிரு கண்விழியாய்
வார்புனை யாயணி தானணி யாயிவை மாற்றினதா
லூர்திகழ் வேண்மயில் வெற்பி லரகர வோசையென்ன
வீரியர் வந்தன ரென்றேமுழங்கிய வெண்சங்கமே. (கூ௨௫)

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.

வலையிட்டும் பின்னொரு வீட்டி லைடத்துங்கைவானுருவிக்[பால்
கொலையிட்டுங் கண்ட துண்டஞ்செய்தும்வேண்மயிற் குன்றத்தர்
விலையிட்டு மென்மையர் மென்மைய ரேசங்க மேயுங்கள்பேர்
தலையிட்டுங் காலிட்டுங் கல்யாணத் துஞ்சொல்லத் தக்கதுவே. ()

வந்துழி, நினைத்தமை வினவல்.

உங்களை விட்டுப் பிரியா திருந்திடு மொண்டொடிக்கு
மங்கலங் காட்டத் திருப்பூ வணம்வந்த மார்க்கநன்றுஞ்
செங்கைகொள் வேலன் மயில்வெற்பிற் சிந்தனை செய்ததுண்டோ
வெங்களை விட்டுப் பொருள் வேறு தேடு மிறையவரே. (கூஉஎ)

நினைத்தமை செப்பல்.

குளங்கண்ட போதும் வயல்கண்டபோதுமுன் கூட்டுண்வண்டின்
வளங்கண்ட போதுங் குயில்கூவும் போது மழைசெறிகார்த்
தளங்கண்ட போது மயில்வெற்பி னிட்கள சாமிமெய்ச்ச
களங்கண்ட போது நினைத்தமை பாகனுங் கண்டனனே.(கூஉஅ)

அனத்தகை யவளை யாற்றுவித் திருந்தமை, பாங்கிகூறல்.

தாக்கா நிதிசெய்பச் சென்றமன் றவுமை தன்புதல்வன்
மாக்கார் மயூர கிரிமான் வருத்தத்தை மாற்றியது
தீக்கான் முகிலும் படமுந்தன் காலுஞ்செஞ் சேல்விழியுங்
காக்காய் கறுவெறும் பொய்தானு நானுமுன் கைகளுமே. ()

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் முற்றிற்று.

பத்தோன்பதாவது—வரைவு மலிவு.

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி, காதலிக்குணர்த்தல்.

திரைக்கடலேயெண்ப தாயிரம் யோசனை சேர்ந்த வொன்னார்
புரத்திடை வாவென்ற சிங்கார வேலன் புரக்குமயில்
வரைக்குயி லேகிளி யேமன் னவருன் மணங்கருதி
யரைப்பணங் கொள்ளப்பொன் றயிரங் கோடி யனுப்பினரே. ()

காதலி நற்று, யுள்ள மகிழ்ச்சியுள்ளல்.

கண்டன்னை நெஞ்சங் களிகூருஞ் சிற்றன்னை கண்டனளேல்
விண்டிட நெஞ்சங் குறியா ளிதுநிசம் வீணல்லவே
திண்டிறல் வேலன் பசிய மயூரச் சிலம்பிடத்தே
வண்டென்ன வென்றன் மணந்தேடி மன்னவர் வந்திடினே. ()

பாங்கி, தமர்வரை வேதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல்.

காதலர் வந்தனர் நீயெதிர்ந் தாலென்னக் காருண்யராஞ்
சோதி முருகன் குகன்சேர்தன் றேகைச் சுரும்பிடத்தே
மாதங்கந் தேர்பொற் குடங்கயல் பூங்க வரிபொடுமுன்
றுதை யெதிர்ந்தனர் கேண்மேளத் தோடுகைத் தாளங்களே. ()

அவ,ளுவகையாற்று துளத்தோடு கிளத்தல்.

ஆட்டுக்கு வந்த விபத்தும் வராத தறிந்துமுஜேக்
கோட்டுக்கு வந்த விறுமாப்பு மாடவர் கூறுங்கல்விப்
பாட்டுக்கு ளான பயனுநெஞ் சேவிடப் பார்த்திபர்கைத்
தேட்டுக் களிற்றியம் வேண்மயில் வெற்பைத் திடுக்கிட்டதே. ()

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

தாமரை மேற்பனே காய்த்தது நின்மேற் றயையிலள்போற்
பூமின் முடித்தலை சாய்த்ததும் வேண்மயிற் பொன்வரைநீ
காமனு மாசி ரிதியும் போலக் கலந்ததுவு
நாமறிந் தோமண்ண லேயது வோவின்னு நண்ணுவதே. (ருருச)

தலைவி, மணம்பொருட் டாக வணங்கைப் பராநிலே; காட்டல்.

திருமான் மருகன் பரங்குன்றின் வாய்த்தெய்வ யானைதனக்
கோருமாலே யிட்டவன் றோகை மயில்வெற் புறையண்ணலே
வருமாலே யந்தொழு மங்கையைப் பார்மழை மண்டலத்தே
யிருபூ வெழும்பி யொருபூ வரும்பா யிருந்ததுவே. (ருரு௫)

கண்டோன் மகிழ்தல்.

மன்னன் முசுகுந்தன் சீர்கொண்டு போற்ற மனமகிழ்வோன்
பன்னுந் தமிழ்செறி தோகை மலையினிற் பார்மனமே
மின்னும் புயலு மதியமும் பூவில் விளக்கிமல
ரன்னங் கடவுளை நம்மால் வணங்கு மருமையையே. (ருருசா)

வரைவுமலிவு முற்றிற்று.

இருபதாவது—அறத்தொடு நிற்றல்.

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

இந்திர னூர்குடி யேற்றிக் கயிலைக் கெழுந்தருளி
வந்தவர் தோகை மலைச்சாரற் போந்த மயிலியலே
சந்திர காந்தக்கற் சாணையிற் றண்ணீர் தருதலென்னே
யந்தியில் லாத பகலை மதியெங் கமர்ந்ததுவே. (ருருஎ)

கலுழ்தற் காரணங்கூறல்.

வாளுக்கு வின்மையை வைத்தா ருறவை மனத்தெண்ணியோ
நீளத் துயில்புரி யாத வெறுப்பை நினைந்துகொண்டோ
வேளுக்குப் பேரழ கிந்தருள் வேண்மயில் வெற்பிடத்திந்
நாளிற்பற் றுள்ளவர் போலே கலுழு நயனங்களே. (ருருஅ)

தலைவன், றெய்வங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமை,யெய்தக்கூறல்.

கண்ணுன தாமரை வேலவன் மேற்செலக் காட்டியுயர்
விண்மீ திருதா மரைமலர் நீட்டி விரைந்தினிமேற்
பெண்ணை பிரியிற் பிரிந்தே னிசமென்று பேசினர்மற்
றெண்ணோர் தவறு மயில்வரை மீதி லிருந்தவரே. (௫௩௯)

இகந்தமை யியம்பல்.

அண்டர் பணிகும்ப மாமுனிக் கேதமி ழானவெல்லாம்
விண்ட குழகன் கடம்பன் மயில்வரை மேவுகொடைக்
கொண்டலன் னூர்கனி வாய்ப்பா லமுதங் குலாவிப்பன்னு
ளுண்டவர் வீட்டுக் கிரண்டகஞ் செய்தா லுரைப்பதென்னே. ()

(பாங்கிஇறைவனை) இயற்பழித் துரைத்தல்.

பார்மே லிறைவர்சொற் கன்மே லெழுத்தென்பர் பார்க்கிலது
நீர்மே லெழுத்தென வாயிற்றன் றேயிவர் நேர்நனவு
கார்மேல் விளங்கு முருகன் மயில்வெற்பிற் கந்தருவ
ரூர்மேன்மை யானது நீயன்ப ரென்பதென் னேவியமே. (௫௪௧)

(தலைவி) இயற்பட மொழிதல்.

முயக்கிடை யேவெளி காண வயர்ந்தது முன்னொருநாட்
கயத்திடைச் சொற்றதும் வேண்மயில் வெற்பர் கருதலர்மேல்
வயத்திடைச் செல்பவ ராரென்ற போது வருந்துயரு
மயர்த்திருப் பாரல்லர் தப்பாது மார்க்க மதிர்கடலே. (௫௪௨)

தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல்.

முருகா வுன்முன் சொன்னவார்த்தைவிண்டாரென் றுமுத்தவெற்பி
லிருகாந்த ளேற்றிய துண்டே பொறுத்தரு ளென்றுசொல்லக்
குருகார் சரவணைப் பொய்கையின் மூழ்கிக்குன் றக்குடிக்கே
திருகா மனச்சகி யேவிரை வாயின்று செல்குவமே. (௫௪௩)

இல்வயிற் செறித்தமை சொல்லல்.

காட்டின்மறித்துப்பொய்யாமொழிகூறுங்கவிதைகொண்டோன்
வீட்டினி லாறு படைவீட்டி னன்மயில் வெற்பனையாய்
சூட்டிய மாலையுந் தோண்மாலை யுஞ்சொல்லுஞ் சோலையுநின்
முட்டிய மாலையுங் கண்டன்னை யிற்செறிப் பாக்கினளே. (௫௪௪)

செவிலி, கனையிரு ளவன்வரக் கண்டமைகூறல்.

கத்தூரி மிஞ்சிய நீற்றிலை சேர்பழுக் காய்ச்சுருட்டு
வைத்தாய் மலர்மெத்தை மீதுகொண் டன்னை மனத்தயிர்த்தா
ளொத்தா மெனவெண்ணி வேண்மயில் வெற்பி லிரவினின்று
முத்தார மும்வெற் றிலைச்சிட்டுங் கண்டு முனிந்தனளே. (௫௪௫)

எறிவளை வேற்றுமைக் கேது வினுதல்.

செய்யவன் வேலன் மயில்வெற்பின் மன்னர் சிறுமிக்கின்றே
மெய்யுறு வேதனை நேரென்னி லன்னம் விருப்பமில்லைக்
கையில் வளையில்லை பாலென் றெவருங் கருதினரே
யையமுண் டாய தவள்பாங்கி யாமென் னருண்மகளே. (கூசசு)

வெறி விலக்கல்.

சோக முருத்தென் கிழக்குறு தேவின் றுயர்குறியாய்
வாகன மான கடாய்க் கின மென்ன மனத்தெண்ணிலாய்
கூகுமென் ரூர்த்தனை குன்றக் குடியிற் குமரவெங்கள்
நாகிள மானுன்னை நம்பின பாவநன் ருகியதே. (கூசஎ)

வெறி விலக்கியவழி வினுதல்.

தாருகன் பாச பதத்தைக்கை யேந்திய சாமியையம்
போருக ணைப் புகன்றனை நாணைப் புகல்வதென்னே
யோரு மயில்வரை மேலுள்ள வார்த்தை யுரைபெறுசூல்
வாரங்கொ ளன்னைக் குளையா தொளித்தன் மரபல்லவே. (கூசஅ)

பூ, ஏதுவாகத் தலைப்பாடியம்பல்.

பெரும்பூத மைந்த னுருவான சூரைப் பிளந்தடியார்
தரும்பூசை பெற்றவன் மாயூர வெற்பிற்றை யற்களியே
பொருந்தாரைப் பைங்குழல் பற்றி யிழுத்துப் புகமுடித்து
வருந்தா வுரைசொற் றிருந்தா ரொருவர் மனமகிழ்ந்தே. (கூசகூ)

புனல், ஏதுவாகத் தலைப்பாடியம்பல்.

முன்பகை யாக வரிபட்ட பூக்கண் முகிழ்நகையைத்
தன்பகை தீர்க்கவம் பிற்கொல்லு நாளித் தரணியிலோர்
மின்பதி வேலவர் கையிற் குழல்கொண்டு வேட்டெழுப்பி
யுன்புதல் விக்குயிர் தந்தார்செவ் வேண்மயிலோங்கலினே. (கூரு0)

களிறு, ஏதுவாகத் தலைப்பாடியம்பல்.

கண்ணுக் கமுதெனும் வேண்மயில் வெற்பிலோர் காவலர்நம்
பெண்ணிற் கரும்போர் மதயானை வாய்ப்படப் பின்னளித்தார்
விண்ணி லெழும்புங் கலைகள்பின் போயது வெய்யபணி
நண்ணுமவ் வேளை கரிமலை வச்சிர நாந்தகமே. (கூருக)

மின்னிடை வேற்றுமை கண்டுதோய் வினுதல்.

அரவிற்சங் காமுலை மேற்றேன் றியபிறை யாய்ந்திலைசெய்
கரவிற்சங் கோதையுங் காண்கிலை சோர்துகில் காண்கிலைகோன்
வரவிற்சங் கோதை மகிழ்வதுஞ் செவ்வேண் மயில்வரைமே
லிரவிற்சங் கோதை குறிப்பதும் பாரா திருந்தனையே. (கூருஉ)

சேவிலி, முன்னிலை மொழியால் மொழிதல்.

அண்ணாத பாங்கி மதியுடன் பாட்டிலொ ராண்சிங்கநம்
பெண்ணனை மத்தகஞ் செங்கை நகத்தாற் பிளந்ததுண்டாங்
கண்ணனை தெய்வ முருகன் மயில்வரைக் காரிகையே
யுண்ணா துறங்கா ததிர்சிங்க நோக்கநெஞ் சோர்கின்றதே. ()

அறத்தோடு நிற்றல் முற்றிற்று.

இருபத்தோன்றாவது--உடன் போக்கு.

பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தல்.

அஞ்சப் படையஞ் சனுப்பிவெஞ் சூர னணியைவென்றோன்
மஞ்சிற் பொலியு மயில்வரை காக்கின்ற மன்னவரே
செஞ்சொற் கிளியையுன் பூங்கா வனத்திற் செறித்தனன்றாங்
கொஞ்சத் தனத்துக்குக் கொஞ்சத் தனத்தைக் கொடாரெமரே.

ஆங்கவன் மறுத்தல்.

இரண்டு தனக்குட மீய மனுட ரிருக்கவுநீ
முரண்பட வார்த்தை மொழிந்தனை நிற்க முதியவிண்ணோர்
சரண்புகுஞ் சாமி மயில்வெற்பிற் றமனை பூத்திடுமோ
வரண்புரம் போகுமுன் மாந்தளிர் மேன்முத் தரும்பிடுமே. ()

அவளுடன் படுத்தல்.

இனத்திற் செறிந்த விவள்புத்தி சாலியென் றின்னுமெண்ணீர்
கனத்திற் பொலிந்த முருகன் மயில்வரைக் காவலரே
யனத்திற் செறிநடை யார்நல்ல கான மகல்வதுண்டோ
வனத்திற் படாததுண் டோதா மரைநும் மகிழ்ச்சியுண்டே. ()

தலைவன் போக்குடன் படுதல்.

கல்லுஞ் சரிமல ருஞ்சரி வேண்மயிற் கார்வரைமேற்
புல்லுமுள் ளுஞ்சரி சேர்ந்தேகி லென்று புகன்றதுண்டே
யொல்குங் கிளிக்குத் தினைசாமை காட்டியவ் வோர்புறத்தே
நெல்லுங் கனியுந் தெரித்தமு தூட்டிநின் றேகுவனே. (ருருஎ)

பாங்கி, தலைவிக்குடன்போக்குணர்த்தல்.

தனத்திற் சிறந்தவர் கைபாலை யாழிற் றடவந்ததா
லுனக்கவ ரென்றும் பிரியா திருப்ப துசிதமன்றோ
வனத்திற் குமரிக்கு வேண்டுதல் செய்ய மயில்வரைவேள்
புனத்திற் குமரி வரவேண்டு மென்றும் புகன்றனரே. (ருருஅ)

தலைவி, நாணழி விரங்கல்.

தென்னவெண் றின்னிசை வண்டினம் பாடுஞ்செழும்பொழில்சூழ்
பன்னடர் போற்று முருகேசன் றேகைப் பருப்பதத்தே
தன்னணை தேசமெய் குஞ்செலப் போக்கித் தயைபின்றியே
யென்னணை மாற்ற நினைத்தனன் றேநம் மிறையவரே. (௬௫௧)

கற்பு மேம்பாடு, பூண்முலைப்பாங்கி புகறல்.

இற்படு வாழ்க்கையர் போலிரு மாத ரிடத்தர்மயில்
வெற்பிற் சுனைக்க ணெடுத்தவ ரார்கரி வென்றவரார்
கற்பது வேதலைக் கொள்வார் மனைத்தைக் கருதியபேர்
பொற்பறு நாண்டலைக் கொண்டா லென் னுவது பூங்கொடியே. ()

தலைவி, யொருப்பட்டெழுதல்.

ஊரிருந் தாலென் னுறவிருந் தாலென் னுவந்தபெய
ராரிருந் தாலென் களிற்றைப் பிடிநீத் தமர்வதுண்டோ
பாரிருந் தாளுங் குமரன் மயில்வரைப் பாங்கிமின்னே
காரிருந் நாலல்ல வோமயி லாடல் கருதுவதே. (௬௬௧)

விருப்புடைப்பாங்கி, சுரத்தியல் புரைத்தல்.

மன்னர்பி னப்படிச் செய்வது வேகற்பின் மங்கையர்க்கு
நன்னய மாவது சேர்ந்தன் குகன்மயி னகமின்னே
யுன்னுசெம் பாப்பு கரும்பாம் பதாங்கரி யுங்கரியாம்
பன்னு தழலிற் குழையுங் குழையும்வெம்பாலையுண்டே. (௬௬௨)

(தலைவி) சொல்லல்.

ஆண்டவன் சோலை மலைதிரு வேரக மார்பழனி
வேண்டு பரங்கிரி செந்தூரன் வேண்மயில் வெற்பகத்தே
யீண்டிவர் வீட்டின் மனைமில்லைக் கோவில்லை யின்பமில்லை
நாண்டரு கில்லா வலரில்லைக் காட்டிலிந் நாலுமுண்டே. (௬௬௩)

பாங்கி, கையடை கொடுத்தல்.

பொருகும்ப ராசி யொருசிங்க ராசியிற் போயிடினுஞ்
சாநின்ற கூந்தல் விடைராசி யின்பெயர் சாரினும
கரமீனங் கொள்ள விடாமலிக் கன்னியைக் காத்துநன்கு
யிருகற் கடகக்கை யாம்வேண்மயில்வெற் பிறையவனே. (௬௬௪)

வைகிருள் விடுத்தல்.

காமத்தி லாடிய தேவர்மெய்ம் மாலை கலிக்கவட
லீமத்தி லாடி மகன்றேகை வெற்பி லிறையவரே
சேமத்தி லாக மனமிருந் தாலித் தெரிவைக்குநீர்
சாமத்தின் மாலையைச் சூட்டிப்பொன் வைகறை தான்செல்லுமே.

அவன்சுரத் துய்த்தல்.

மாலி லரவம் புரியார் விடையில் வருபவர்பொன்
மேலி லரவம் புரிவார் மகன்மயிலை வெற்பனேயாய்
பாலி லரவம் புலியுண்டு பாம்புண்டு பையநட
காலி லரவமிவ் வூரி லரவத்தைக் காட்டிடுமே. (௩சுசு)

அசைவறிந் திருத்தல்.

நேத்திர மூன்றுடை யான்மக னென்றனி னைவில்வந்து
பாத்திர மாக்கொண்ட வேண்மயில் வெற்புறை பைங்கொடியே
காத்திரந் தேற விளைந்துநன் னீரிற் கலந்துளைத்தோர்
மாத்திரை செல்லிற் சுரமாறும் பின்னை வழிநலமே. (௩சுஎ)

உவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தல்.

பணமுடி யாரன் பளைமுடி யார்வன் பனைமுடிப்பார்
குணமுடிப் பார்தருஞ் செவ்வேண்மயில்வெற்பிற் கொம்பரன்னீர்
கணமுடை யாரென நின்றேமிக் காட்டினிற் காரிகைநும்
மணமுடி யார்கத் திகைகொள்ள வந்த மகிழ்ச்சிநன்றே. (௩சுஅ)

கண்டோரயிர்த்தல்.

பண்ணு யிரங்கொண்டு தும்புரு நாரதர் பாடவிரு
பெண்ணுர் விரும்ப வெழுந்தருள் காட்சிப் பெருமையுள்ளான்
றண்ணுர் மயில்வெற்பி லிந்த்ராணி யென்னிற்கண் டானிமைக்குங்
கண்ணு யிரமில்லைத் தேவேந்த்ர னென்னக் கருதிவர்க்கே (௩சுகூ)

காதலின் விலக்கல்.

ஆறே பெரிதா றலைப்போர் கொடிய ரலைகடல்போ
லூறே வளவின் றனிச்சம்பொ ருதுள்ளங் காலுவட்கு
வீறேது மாயை மகனைவென் றோன்மயில் வெற்பண்ணலே
பேறேதெம் மூரலர் மாளிகை வைகுந்தம் பின்செல்கவே. (௩எ0)

தன்பதியணிமை சாற்றல்.

பகர்தேவி பட்டணம் விட்டுவந் தாற்றிருப் பாலைக்குடி [டோ
மிகுசேது மார்க்கமென் றெண்ணலல் லாலெண்ணம் வேறுமுண்
புகவே சிறுவயல் விட்டாற் பெருவயல் பூப்பொழில்கண்
மிகவே தெரியுங்குன் றக்குடிக் கோவிலும் வேலையுமே. (௩எக)

தலைவன், தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்.

அன்னை யெனும்பிணி யில்லாத காட்டி லருங்கிளியே
யுன்னிகர் கின்ற சரவணப் பொய்கை யுதுசுவர்க்கந்
தன்னிகர் கின்றசெவ் வேண்மயில் வெற்பிது தண்களப
மின்னிகர் பொன்னுலகைவெள்ளி யாக்கிய வீடிதுவே. (௩எ௨)

உடன்போக்கு முற்றிற்று.

—o—

இருபத்திரண்டாவது—கற்பொடுபுணர்ந்த கௌவை.

பாங்கியை வினவல்.

பந்தெடுத் தாய்பே ருயிர்ப்பெடுத் தாயொர் பயிலெடுத்தாய்
கொந்தெடுத் தாயங்கு மிங்குஞ்சென் றுய்பவங் கொள்கடலில்
வந்தெடுத் தாண்டவன் சேந்தன் மயில்வரைக் குன்கிளிதான்
சிந்தெடுத் தேசெல்லுங் கோவை யுறுமெனிற் செப்பினியே. ()

பாங்கி செவிலிக் குணர்த்தல்.

நன்றே தருமிந்த மாலையென் றூடதர நான்புகுந்தே
னன்றே பழைய வரைநினைந் தோவெனை யன்பிகந்தோ
சென்று டிரும்பினன் காணேன் முருகன் செயலிதென்றே
நின்றேன் மயில்வரைக் கூகை யிரட்டு நெடுஞ்சுரமே. (௬௭௪)

இணைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதல்.

சொல்விலங் கிட்டதல் லானுன் வளர்த்த துரைப்பிடிக்கு
வல்விலங் கொன்றுசம் பாதிக்கி லோம்விரை வாய்ப்புகுந்தாள்
புல்ல விளையும் பயிர்க்கிந்தப் போக்கு முளைத்ததென்றூற்
செல்வஞ் செறிகின்ற குன்றக் குடியான் செயலிதுவே. (௬௭௫)

தன்னறி வின்மை தன்னைநோந் துரைத்தல்.

இரவு தவிர்ப்பது நன்றேயென் றுளிந்த வேந்தலிற்போய்
வரவிளை யாட வருள்செயென் றுள்வேண் மயில்வரையார்
கரவி லொடுங்கவர் கள்ளரென் றுள்சொற் கருதிலன்யா
னுரமதிற் சாய்ந்தினிப் பாலை யுதவென்று மோதினளே. (௬௭௬)

தெய்வம் வாழ்த்தல்.

பகரத்தி லேவ லடியென்றல் பண்ணை பகரும்விதை
மகிழ்கின்ற தாய்போல் வருமாறு செய்வி மயூரகிரி
முகிழ்நகை வள்ளி கணவர் தலைவரை முன்னிமணந்
தொகுமலர் மாலை யிருகோங் கலர்த்திய தோகையையே. (௬௭௭)

செவிலியறத்தொடு நிற்றல்.

பிடியானைக் கொம்பொரு நான்குபின் பாகிடப் பின்றொடர்ந்த
துடியானைக் கொம்புமுந் நான்கினின் றூனைத் துறந்துநம்
படிமீது வேற்று மணநினைந் தானம்மிற் பற்றுமுண்டோ
வடியாரை வாழ்விக்கும் வேண்மயில் வெற்பினம் மாயிழைக்கே. ()

பாங்கி தன்னொடு புலம்பல்.

ஆரப் பொருந்திய துன்றுய்க் குறைத்தனை யன்றெனக்கே
சேரச்சொற் றுயில்லை வேலன் மயூரச் சிலம்பிலெம்மை
யூரிற் பகைத்துடி பார்க்கவைத் தாயுன் னுறவினளேப்
பாரிற் பகைத்துடி பார்க்கவிட் டாயென்ன பாவமிதே. (௬௭௯)

பாங்கியர் தம்மோடு புலம்பல்.

தேவையை மேற்கொண் டெழுந்தாலும் போம்பொருள் சேர்த
பாவைய ரேவேண் மயில்வெற்பி னென்ன பகர்வதியா[லுண்டோ
ணேவு நிகர்கண்ணி யைநோக்கி நீங்க ளிரங்கலென்னே
கோவை விரும்பிப்பின் பாலே யிகழ்தல் குணமல்லவே. (௩அ0)

அயலார் தம்மோடு புலம்பல்.

இரவே யிருபூ மலர மதியை யெமக்கொளித்து
வரவே புரியும்வெய் யோனை யழைத்து மதிகொடுத்து
விரைவாய் நடந்தனள் வேலன் மயில்வரை மெல்லியலீ
ரரவே யிழந்த மணிபோல வாடி யயர்ந்தனமே. (௩அக)

பயிலிடந் தம்மோடு புலம்பல்.

மாவே வடுக்கொள் பலாவே கனிகனி வண்டன்முல்லைக்
காவேகண் ணீர்சொரி யாறே யிரைசுனை கான்றமணப்
பூவே தலைகவிழ் மென்கொடி யேவனம் போய்நடுங்கு
தேவே யுறைமயில் வெற்பாளை யானெனத் தேடிக்கொண்டே. ()

நிமித்தம் போற்றல்.

ஒருங்கடி சிற்குவை தானஞ்செய் வாரொரு கோடிசுற்றப்
பெருங்கடி போலு முருகன் மயூரப் பிறங்கலிலே
யருங்கடி யாமென்றன் காவலை நீத்தா ளணையச்செய்தாற்
கருங்கொடியேவரும்பொன்கொடியாற்றினுங்காய்க்கொடியே.

சுரந்தணி வித்தல்.

நேசித்த பாதையி ராமீ சுரவழி நேரும்வல்லோர்
யோசித்த பாம்பனந் தங்காண லாம்வே யுகுத்தமுத்த
மாசித்த பூமகள் கொப்புள மாங்கதி ராந்தெய்வநீர்
பூசித்த வேண்மயில் வெற்பாரைக் காப்பது புண்ணியமே. (௩அச)

தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

பன்னீரில் லாச்சந் தனம்பார்க்கில் வெப்பாம் பதயுகள
மென்னுமெவ்வா நாளனத் தூவி யெனச்சிவப் பெய்தியவா
னன்னீர்கொள்வேண்மயில்வெற்பிற்சுனைமொண் டநல்லதண்ணீர்
வெந்நீரென் பாட்குக் குளிர்நீர்மை யானதென் வெஞ்சுரமே. ()

இளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கல்.

வேங்கைத் துறுகற் புலிப்பற மென்று வெருவியையர்
பாங்கர்வந் தீட்டி கொடுக்கு மிளமைப் பருவத்தினள்
நீங்கிருள் யாமத்து வேண்மயில் வெற்பைத் துருவினளாங்
கோங்கரும் பாதை தனவும்மிள் ளாது குறுமுகையே. (௩அசு)

அச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கல்.

பங்காளும் வள்ளியென் றுய்தேவ குஞ்சரி பால்விருப்பார்
மங்காத வாசக் கடம்பார் மயூர வரையினிலே
சங்கீத மேளந் தணுரென்ற போதுள்ளந் தானஞ்சுவாள்
வெங்கா ருடலத்த நாகங்க ளோசிக்கின் மெய்ந்நடுக்கே. (ரு.அஎ)

கண்டோ ரிரக்கம்.

தாகத்தி னூற்சென் றுபாங்கிய ராற்றிற் றலைப்படச்சூழ்
போகத்தி னூர்சொல் லிடியே முழங்கப் பொழுதநற்று
யாகத்தின் கண்மழை சோனைய தாக வகலுங்கொல்லோ
மேகத்தின்பான்மின் னுப்போலச்செவ்வேண்மயில்வெற்பிடத்தே.

ஆற்றாத் தாயைத் தேற்றல்.

வானத்திற் செல்வன் பரவையி னூடி வருவனிந்தக்
கானத்தை வெற்பைத் தருவில னேபண்டு காதிற்பட்டி
தான்வைத்த வேரை யிவர்மாறி வைக்கினுந் தான்கொணர்வன்
ஞானக் குமரன் மயில்வரை வேந்த னளனல்லவே. (ரு.அகூ)

ஆற்றிடை, முக்கோற் பகவரை வினுதல்.

படையவர் முன்செல்லப் பின்படைந் தாளொரு பாவைமயி
லுடையவர் வேண்மயில் வெற்பகல் வாரினுண் டோகண்டது
நடையவ ரேகையின் முக்கோல்கொண் டுய்வா னடையவரே
குடையவ ரேயறக் கூனி யமுது குடையவரே. (ரு.கூ0)

மிக்கோ, ரேதுக்காட்டல்.

பெண்ணுள் பிரிந்தாள் பிரிந்தா ளெனச்சொற் பிதற்றிவந்தார்
விண்ணுடு காட்டினில் வீணே யலைவதென் வேலெடுத்தோர்
மண்ணுடும் போற்றுங்குன் றக்குடி யாய்பரு வத்தொருவ
ருண்ணுத கேணி சுவைபெறு மோவிவ் வுலகத்திலே. (ரு.கூக)

எயிற்றியோடு புலம்பல்.

மேகம தேறிய வெண்பிறை போற்கொடு வேங்கைநக
மோகையிற் சூடு மெயினர்பெண் ணேமயி லோன்முருகன்
சோகமி லாத மயில்வரை மீதொரு தோகையுமோர்
நாகமுங் கூடி விளையாட லுண்டோ நவிலுவையே. (ரு.கூஉ)

குரவோடு புலம்பல்.

மருவார் குழையணிந் தாய்பூங் கொடியிடை வாய்ந்தனைபூந்
திருவா யினைமுரு கோன்மயில் வெற்பிற் செழுங்குரவே
யிருகா னடையும் வளைக்கையுஞ் சொல்லுமில் லாவியப்பா
பொருபாவை காட்டியொர் பாவையைக் காட்டா துணர்வல்லவே.

சுவடுகண்டிரங்கல்.

திரண்ட குமரியைக் கைப்பற்றி ஞர்சுரத் தீவலஞ்செய்
துரந்தரு சேந்தன் மயில்வெற்பை நீங்கின ருற்றவர்கா
லிரண்ட்டி நாலடி யாகிய தேபெண் ணிரண்டடிதா
னரண்புகு மெட்டடி யாகிய தேசெய்ய லாவதென்னே. (௩௯௪)

இதுவுமது.

எங்குஞ்செந் தாமரை மேற்று மரையுற் றெதிர்கடம்பு
குங்குமஞ் சந்தங் கொழுந்து மணத்தாற் குளிர்ந்தனவாற்
றங்கு புறவடி மீதுசெங் கைகொண்டு தாங்கியபோ
தங்க விணையடி மீதுசெவ் வேண்மயி லார்வெற்பிலே. (௩௯௫)

கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

உடம்புமுன் ஞக வுயிர்பின் னுருவெடுத் துற்றதுபோ
லிடம்பெறுகொங்கையொருவேந்தன்பின்னடந்தேகலுண்டோ
குடம்பைதன் வீடெனப் புட்போற் குகன்மயிற் குன்றிடத்தே
நடந்தவர் போல் வரு வீர்நும் வரத்து நலந்தந்ததே. (௩௯௬)

அவர், புலம்ப றேற்றல்.

சுவர்ப்படு பந்தென மீடிமின் னேயவர் சுந்தரனூர்
தவப்புதல் வன்முரு கேசன் மயில்வரை சார்ந்தவர்போ
லுவப்பின ராகி மருவ லரைமுடித் துற்றுதவிக்
கவற்சியில் பேரின்ப மேவ நகர்ப்புறங் கால்வைப்பரே. (௩௯௭)

புதல்வியைக் காணுது, கவலை கூர்தல்.

விண்ணுட்டு மங்கைய ரான் மாடி யாடியின் மெய்ம்மறைக்கு
மண்ணுட்டு மாதர் திகழ்வேண் மயில்வெற்பின் மற்றென்கண்
கண்ணேர் குராவு மராவு மராவுங் கராவுமென [டேன்
துண்ணே ரிராவுங் கலையுங் கலையுமென் னுள்ளமுமே. (௩௯௮)

கற்போடு புணர்ந்த கௌவை முற்றிற்று.

இருபத்துமூன்றுவது—மீட்சி.

தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தல்.

மாதெனச் சென்றோர் மயில்தொடர்ந் தேனது வான்பறந்த
போதொரு மானைத் தொடர்ந்துசென் றேனது போனதுகாண்
வீதி செறிமயில் வெற்பார் செயலென்று மீண்டனன்யான்
போதல்செய் யாதது வானே யவர்சேண் பொருந்தினரே. ()

தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றல்.

வையா புரியுஞ் சரவணப் பொய்கையும் வாயில்செறி
கையா திரண்டுடை யான்கோயிற் றேருகைக் கனங்கிரியு
முய்யா னமுநக ரும்வீர வாகு வுடனிடும்பன்
மெய்யான சன்னிதி யும்பா ரிதுநம் வியனகரே. (௪00)

தலைவிமுன் செல்வோர் தம்மோடு தன்வரல், பாங்கியர்க் குணர்த்தி விடுத்தல்.

பந்தடி போற்பா விடையா டியகுழற் பண்பிணைப்போ
லுந்து மிருவினை யாற்போகந் துய்ப்பா ருடம்பிணைப்போல்
வந்து திரும்பிய பாங்கியர்க் கேவேண் மயில்வரைமேற்
சந்தடி பார்த்து வரல்கூறும் வேதத் தலைவர்களே. (௪0௧)

ஆங்கவர், பாங்கியர்க் குணர்த்தல்.

நல்லதண் ணீரள்ளி யுண்ணு தவரில்லை நன்மலரை
யெல்ல வருமுடிப் பாரத ளைலென் னிரங்குதனீர்
கல்விகொள் வேண்மயில் வெற்பி லிருவருங் காடன்செட்டி
செல்வ மணிமண் டபப்படி பார்த்துத் திரும்பினரே. (௪0௨)

ஆங்கவர் கேட்டு, நற்றாய்க் குணர்த்தல்.

அன்னை யெமையிந் நகரார் துணையற் றவரெனவே
சொன்ன பழிமொழி போயின வாற்சூரம் போமிருவர்
மன்னுகுன் றக்குடி வேலை வணங்கி மருதுதுரை
தன்ன தரண்மனை யிற்புசித் தேவரல் சாற்றினரே. (௪0௩)

நற்றாய் கேட்டவ, ளுளங்கொள் வேலனை வினுதல்.

மயில்வரை வேலன் வருவரென் றோதி வருமுருகா
புயலு மொருமின்னுங் காட்டி னடந்த புதுமையுண்டே
யயலவர் காண வகமெய்து மோவயல் வீடெய்துமோ
செயல்பெற்ற மின்கைத் தருமோவின் றேவிது செப்புகவே. ()

மீட்சி முற்றிற்று.

இருபத்துநான்காவது—தன்மனைவரைதல்.

பிணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற், செவிலியை வினுதல்.

வராம லிருக்கினு மோர்வீட்டுள் ளார்பிறர் மாடத்திலே
யிராம லிருப்பர் குகன்மயில் வெற்பி லிதுவளமாந்
தராதுகொண் டார்பின் கொடாதுசென் றூர்வந்து சார்ந்திந்தவூர்
பராவ மணங்கொண் டிலர்கா வலரென்ற பான்மைநன்றே. ()

செவிலிக்கிகுளை, வரைந்தமை யுணர்த்தல்.

சொன்மாலை கொண்டபுலவர்க்குச்சேந்தன்பைந்தோகைவெற்பி
னன்மாலை பைம்பொ னறுந்தூசு தண்டிகை நல்லுணவா
நென்மாலை யீந்து தலைநா ணிகர்நா ணிலைசெய்துநம்
பொன்மாலைக் கேமணந் தந்தாரென் றேற்றார் புகன்றனரே. ()

வரைந்தமை செவிலி, நற்றாய்க் குணர்த்தல்.

அருணிதிப் பாலினு மேற்பா ரினுமறி யாமையினன்
மருது துரைபணி சேந்தன் மயூர வரைத்திருவே
யிருவரை யேந்தி யொருவரை யுட்கொண் டிருந்தவளோர்
வரைதலை மேற்கொண் டனளென்று வெஞ்சொல் வழங்கினளே.

உற்றாங்கிருவரும், தலைவியில் வந்துழி தலைவன் பாங்கிக், கியான்வரைந் தமைநுமர்க் கியம்புசேன் றென்றல்.

குன்றக் குடிக்கும ரேசன் பதத்தருள் கொண்டுநன்று
மன்ற னடந்தது சோலையில் லாமலென் மானையருண்
மின்றகு நுண்ணிடைக் கோது சனத்தை விளம்பவற்றூ
வொன்றியநீயெனுங் கொம்பில்லைத்தப்பென்பதொன்றில்லையே. ()

தானது முன்னே சாற்றிய துரைத்தல்.

வெப்புற்ற கார்வலம் பார்க்கின்ற நாடவிம் மெல்லியலைக்
கைப்பற்றி யேகல்கல் யாணமன் றேவின்று கைப்பற்றினு
ரொப்பற் றவரென்று சொல்வதென் வேண்மயி லோங்கலிவ்வூ
ரெப்பக் கமுமுரைத் தாரெங்கள் போனுன்கை யேற்றவரே. ()

இதுவுமது.

நானுரைத் தேன்முன்ன மன்றித் தமிழ்கொண்டு நல்குவெகு
மானமுந் தோகை மலைக்கும ரேசர்முன் வைத்தவன்ன
தானமு மஞ்சளும் வாசியும் யானையுந் தையனல்லார்
தேன்மொழி யுங்கண்ணுங் கைகாலு மூறெங்குஞ் செப்பினவே.

தன்மனை வரைதல் முற்றிற்று.

இருபத்தைந்தாவது—உடன்போக்கிடையீடு.

நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத், தன்செல வுணர்த்தி விடுத்தல்.

அன்பினிற் காத்தவர்க் கேகாணிக் காசை யளித்தனன்பின்
வன்சொற் செவிலிக்குக் காற்கா சளித்தேன் வருபவரே
தின்குர வற்கொரு காசளித் தேன்குகன் றேகைவெற்பி
லென்செல விப்படி யானதென் றேதிடு மேழையர்க்கே.

தலைமகள், தன்செல வின்றாட் குணர்த்தி விடுத்தல்.

மைக்குயில் கூவ மதன்வருஞ் சேந்தன் மயில்வரைமேற்
கைக்கிளிக் கன்னத்தை யூட்டச்சொல் வீர்கலைக் கேபிடிசேர்த்
திக்கணம்பச்சைப்புன்னீட்டச்சொல் வீரெங்களன்னையைப்பூங்
கொக்கைக் குயிலுக்குக் காட்டச்சொல் வீர்நடக் கும்பலரே. ()

ஈன்றாட் கந்தணர் மொழிதல்.

ஒட்டித் திருட்டைவி சாரித்தி டாம லொருத்தரிடங்
கட்டிக் கொடுக்க நினைத்தத னாலிவள் காட்டொளித்தாள்
செட்டிப்பெயர்கொண்ட வேண்மயில் வெற்பினுன்செங்கைக்கிளி
யெட்டிப் பழந்தின்னு மோகொள்ளுங் கோவை யிகழ்ந்தினியே.

ஈன்றாள், அறத்தோடு நிற்றலிற் றமர்பின் சேறலைத்,
தலைவி கண்டு தலைவற் குணர்த்தல்.

பந்தன கொங்கை யறத்தொடு நின்றிடும் பாவிசொல்லா
லெந்தை யிடத்தன்னை சொன்னாள்கொ லேந்த லகத்திருக்குஞ்
சந்தனஞ் சுற்றிய வத்தியு மாவுந் தழையரசுங்
கந்தசு வாமி மயூர வரைசூழ் கடம்படர்ந்தே. (௬௪௪)

தலைமக டன்னைத் தலைமகன் விடுத்தல்.

உருக்கு மணியைத்து வாரகை யான்கொண் டுடன்செல்லுநாட்
டிருக்கு மவளுக்கு முன்னேனைக் கட்டிய தேரிதன்றோ
நெருக்குமுன் றன்னைக்குந் தந்தைக்குஞ் சேனைக்கு நேசமுன்னா
லிருக்குமன் றோகந்தன் மாயூர வெற்பினி லேந்திழையே. (௬௪௫)

தமருடன் செல்பவ ளவன்புற நோக்கிக், கவன்றரற்றல்.

போர்புரிந் தாற்பழி யென்றார் குகன்மயிற் பொன்வரைமே
லார்பிரிந் தாரிப் படிச்சேலை சுற்ற வணிகொடிசேர்த்
தார்புரிந் தாரிணை வாழையுங் கட்டியுள் ளாமெனது
தேர்பிரிந் தாரினத் தேரே திரும்பு திரும்பினியே. (௬௪௬)

உடன் போக்கிடையீடு முற்றிற்று.

இருபத்தாறுவது—வரைவு.

சென்றோன் மீண்டுவந்து அந்தணரை (முன்னிடல்.)

கையிரண் டாறுடை யான்மயில் வெற்பிற் கவன்றதுகண்
டுய்தலை யெண்ணித் தமரொடும் பேசி யொருவர்தள்ளா
வையறை மேலிவந் தானுயிர் போல வமைந்தகுணா
மெய்யுறு நாளை மேவ லிவற்கு மிகவெளிதே. (௬௪௭)

சான்றோரை முன்னிடல்.

திக்கோ ருடன்புவி யோரு மமரருந் தேடத்தக்க
தக்கோருந் தேடும் விசாகன் மயில்வரைச் சாரலிலே
புக்கோ ருரைத்தசொற் றப்பா ருடனே புகுந்தனரான்
மிக்கோரை நோக்கியன் றேசெய்கு வார்மண மேலவரே. (சகஅ)

அருங்கலந் தருதல்.

சேலாகு மாயன் மருகன் மயூரச் சிலம்பிடத்தே
மேலாநம் மைய ரிறையோ னளித்த வியன்கனக
மாலார் சரப்பணி சொன்ன வளைமுத்து மாலைகொள்ளுங்
காலாழி கண்டன ரோராழி போலக் கலித்தனரே. (சகக)

வரைந்துழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

சங்கமுங் கைப்பற்றித் தீவலஞ் செய்த தகையுஞ்செங்கை
கங்கைப் புனல்வைத் ததுமாவுந் தேருமுன் கண்டனமே
மங்கல வேண்மயில் வெற்பின் மழுவில்லை மானுமில்லை
யிங்கிவ ரீசனன் றேமங்கை பாக மிசைந்தனரே. (சஉ0)

வரைவு முற்றிற்று.

இருபத்தேழாவது - இல்வாழ்க்கை.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

காவேந் தியகுழல் கண்ணுஞ்செங் கையுங் கதிர்நகையு
மாவேந்தர் பொன்னும் பெரியோரு மிவ்வண்ணம் வைத்ததின்றே
பாவேந்தர்க் கன்பன் குகன்றேகை வெற்புறை பாவையென்கைப்
பூவேந்து முன்கையன் றேவிந்த வண்ணம் புரிந்ததுவே. (சஉக)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

கதிர்மதி போலென் றுங் கன்னி தொடர்சிங்கங் காணுமென்றும்
விதியினிற் சொற்றனிர் வீண்வார்த்தை யின்றி விளைத்தல்செய்தீ
ரெதிருற்று வேண்மயில் வெற்பி லிராமனென் றேயிசைத்த
மதுர மொழிநிலைத் தீர்மன்ன ரென்சொல்வ ளர்த்தனிரே. (சஉஉ)

தலைவியை, வரையு நாளளவும் வருந்தா திருந்தமை, உரையா யென்றல்.

ஆர்வீட்டின் மன்றலென் றூர்மெலிந் தாய்பின் னறுபதுநா
ளோர்வீட் டிருந்தனை நீங்கா திருப்பதை யுன்னியநீ
கார்வீட் டிலாவுங் குகன்மயில் வெற்பர்பின் காட்டல்கண்டு
பார்வீட் டிறங்கினை யாவியெங் கேவைத்துப் பார்த்தனையே.

பெருமகளுரைத்தல்.

பொருந்திட முண்டண்மை யுண்டு துணையுண்டு பொய்களுண்டு
விருந்துண் டியமுண்டு சங்குண்டு தேருண்டு வேட்கையென்னு
மிருந்திடு நீயுண் டிவருண்டு நானுண் டெலாங்கொடுத்த
மருந்தெனுந் தோகை மலைமே லிருக்குஞ்சு வாமியுண்டே. ()

தலைவனைப் பாங்கி வரையுநா ளளவு,
நிலைபெற வாற்றிய நீர்மை வினுதல்.

கனவினு நீங்கில வெம்மா னுனையெந்தக் காலத்துமுன்
மனமிசை நீங்கிலம் யாமுமி தாக மயின்முருகன்
றனிமயில் வெற்பி லிவள்பாவை நோக்கிச் சலிப்பதுண்டே
யனநடை யைப்பிரிந் தெவ்வண்ண நீதுய ராற்றியதே. (சஉரு)

மன்றன் மனைவரு செவிலிக் கிகுளை, அன்புற வுணர்த்தல்.

காவும் விழைவும் வரவுங் கொடையுங் கதித்தமயிற்
றேவு மயில்வெற்பு மாயின ரேயன்று தேடியுங்கால்
வாவுங் கிரியுஞ் சுரமும் புறவும் வருந்தச்செய்தார்
பூவு மணமும் பிரிதலுண் டோபெற்ற பூங்கொடியே. (சஉசு)

வாழ்க்கைநன் றறைதல்.

விண்பார்த்த ஞெக்கி விசும்பு தொழுமயில் வெற்புடையான்
பண்பார்த் தொளிக்குஞ்சொன் மாணர்புணர்வேள்பதம்பணிவோ
னண்பார்த்த மங்கை யறிவையென் சொல்வது நன்குணவிற்
கண்பார்த்து மற்றவன் கைபார்த்து நிற்குஞ்சொற் கண்டிலனே.()

மணமனைச் சென்று வந்த செவிலி,
போற்றொடி கற்பியனற்றாய்க் குணர்த்தல்.

இசைந்திடுங் காலை முருகன் மயில்வரைக் கேகிவரும்
வசம்பெறு மானம் புரக்குஞ் சரவண வாவிகுடைந்
தசைந்த விருளூற் றறியாது சேருநண் பாதரிக்கும்
பசுங்கொடிக் காரோ கருங்கொடிச் செய்கை பயிற்றியதே. ()

நன்மனை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தல்.

நம்மனை வாழ்க்கை யினுமவர் வாழ்க்கை நலங்கனிவா
கும்மனை யன்பிற் படுத்துஞ் செயல்கொடுக் குஞ்செயற்கெ
மம்மனைக் கல்லும் பகலுந் துயிலில்லை யாறுபெற்ற
கம்மனைப் போலு நிலைபெற்ற தோகைக் கனங்கிரிக்கே. (சஉகூ)

அன்னவர் காத லறிவித்தல்

ஓதா திருந்திலர் வேந்தரக் காலு முறநினைப்பார்
தூதே துணையில்வந்தாலும் வருவர் துயர்தலின்றி
மாதேயித் தியாதி பிரிவினுஞ் சேர்தன் மயில்வரைமான்
வேதாந் தியர்மனம் போல்வே றொருதெய்வம் வேண்டிலளே. ()

இல்வாழ்க்கை முற்றிற்று.

இருபத்தெட்டாவது—பரத்தையிற்பிரிவு.

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்,
கேதுவி தாமிவ் விறைவிக் கென்றல்.

மணிமாட வீதி மயில்வரை வேளை வணங்கிலர்போற்
றணியா தனதுணிந் தேகினர் மாவென்று சொல்லவுற்று
ரணியார்நறுங்கொங்கையாற்றுங்கொல்லோவன்பில்லாயிழையார்
பணிமே லிருந்தங் கருடனை யேவிட்ட பாவத்தையே. (௪௱௧)

தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கல்.

காட்டைவி டாதுபின் னாட்டைவி டாது கலந்தவுயிர்
கூட்டைவிட் டோடிற்றை யோவெனைப் போல்பவர் கூறிலுண்டோ
சூட்டு மயில்வரை யாரரு ளீதெனிற் சொல்வதென்னே
வீட்டில் விருப்பறுத் தாரோ பரத்தை விரும்பினரே. (௪௱௨)

ஈங்கிது வென்னெனப் பாங்கி வினாதல்.

தேன்காணும்பூம்பொழிற்செவ்வேண்மயில்வெற்பிற்சேயிழையுன்
மான்காணு மைக்கண்ணுங் கொங்கையுங் காண மலரணைநீ
தான்காணு மந்தப் புரம்பலர் காணச் சரிக்கிலிது
நான்காணத் தக்கதுவோசொல்க சொல்க நறுநுதலே. (௪௱௩)

இறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தல்.

கொண்டு கழித்தன வர்மேனுங் குகன்மயிற் குன்றிடத்தே
வண்டு கழித்த மலர்களுண் டேயிந்த மானகரா
ருண்டு கழித்த கலமென்றெண் ணாரிறை யோர்பலருங்
கண்டு கழித்த குடங்தேடிச் சூளையைக் காத்தனரே. (௪௱௪)

தலைவியைப் பாங்கி கழறல்.

ஆனாலும் பட்சியை வாவிதள் ளாதடி யார்பதவி
மேனாலு மெய்த வருள்வோன் மயில்வெற்பர் வேண்டினர்பாற்
றேனாலுங் கன்னல்விட் டோலையுண் ணுங்கரித் தேசத்தினார்
போனாலும் போவதுண் டோமனத் தாசையும் போகருமே. ()

தலைவி, செவ்வணி யணிந்து சேடியை விடுத்தல்.

குருட்டின ரானைகண் டாலன்ன பன்மதக் கொள்கையுள்ளோர்
மருட்டினை நீக்கு முருகன் மயூர வரையையன்னா
டிருட்டினர் சென்றிடுஞ் சேரியிற் செல்கெனச் சேடிமின்னா
ரிருட்டினிற் செவ்வ லரிபலர் காண வெழுந்ததுவே. (௪௱௬)

அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறல்.

பாய்காய்க்குத் தோளுடை மாயன் மருகன் பணிந்தவர்க்குத்
தாய்காய்க்கு மன்பன் மயில்வரை மேவிய தையனல்லார்
நோய்காய்க்கு மாசையி னாலே விடுத்தனர் நொய்யபிள்ளைக்
காய்காய்க்கும் பூவைக் கனிகாய்க்கக் காட்டல் கருத்தல்லவே. ()

பரத்தையர் கண்டு பழித்தல்.

சேவேற் றிடுங்கொடி யார்பணி யார்க்குத் திருக்கொடியார்
கோவேற்ற பிள்ளை குமரன் மயில்வரைக் கொம்பனையார்
காவேற்ற பூங்குழன் மேனு ணைறிந்திக் கடைத்தெருவிற்
பூவேற்ற தன்பருள் வாளை மருவப் புரிந்ததுவே. (௪௩அ)

பரத்தைய, ருலகிய னோக்கி விடுத்தல்.

பரத்தையிச் சித்தவர் வீட்டையு றூரென்ற பான்மைதப்பி
வரத்தை யுதவினம் வேண்மயில் வெற்பர் மகிழ்நிறைவா
வுரத்த களிறு மலையூடு போய்த்தரு வுற்றொடித்துத்
திருத்தகு பூஞ்சுனை யாடியுந் தன்பிடி சேர்ந்திடுமே. (௪௩௯)

தலைவன், வரவுகண் டேந்து வாயில்கண் மொழிதல்.

காத்தெனைச்சிந்தையிலெண்ணியநான்கையுங்கைக்கொடுத்தோன்
தேத்தரு வாரு மயில்வரை யார்சிந்தை சீரிதன்றோ
தூர்த்தரை நீத்தனர் பன்னிரு நாள்வரை தூய்க்கவல்லி
பூத்தது பார்த்துவந் தார்வடு நீங்கிப் புறநகரே. (௪௪௦)

வரவுணர். பாங்கி யரிவைக் குணர்த்தல்.

வாய்க்காற் புனன்மறு வர்ப்படை பாய்ந்து வரினுந்தலை
சாய்க்காது செந்நெ லதனுல் வெருநலந் தான்பெற்றதாற்
சேய்க்காசை யுள்ள மயில்வெற்பர் வந்தனர் சென்றெதிர்வாய்
தாய்க்கா னதுபிள்ளைக் குண்டேமன் னர்க்குச் சகசமதே. (௪௪௧)

முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதல்.

கண்ணுக்குங் கைக்கும் பகைவருமோசெங்கைகண்ணிற்பட்டால்
விண்ணுக்குப்பாதையெனும்வேண்மயில்வெற்பர் வேற்றுமையோ
பெண்ணுக்குப் பேயு மிரங்குமென் பாரிவர் பேரறிவா [றே.
மெண்ணுக்கென் னேசொல்வதின்பமொன்றேயுயிரென்பதென்

புணர்ச்சியின் மகிழ்தல்.

நிரம்பப் பசித்தவர் சோறுண்டல் போல நிருபர்துய்த்தார்
குரும்பை முலையுந்தண் ணீர்த்தாக முற்றவர் கொள்கைபெற்றுள்
விரும்பிய சேந்தன் மயில்வரை யாளொரு மிக்குப்பெற்றுள்
கரும்புகட் டாக வெறும்பு வருமென் கதைப்படியே. (௪௪௩)

இதுவும் அடுத்தகவியும் தலைவிகூற்று.

காமக்கிழத்தி, நீத்தமை பொறுது நின்றுகிழ வோனைப் பழித்தல்.

அன்றிலன் னொரு முளர்பாரி னம்மன்ன ரட்டையன்னு
ரென்றுசொல் வாளு மொருத்தியன் றேவவ ளென்னின்மிக்காள்
குன்றக் குடிக்கும ரேசன் பதமலர் கூடிலர்போற்
கன்றி வெகுண்டுசொல் லாதது சொல்லுங் கருத்தெண்ணிலே. ()

அவனோடு, பாங்கோடு பரத்தையைப் பழித்தல்.

அருளை விரும்பி மறவாத வென்னை யகன்றுசென்றார்
பொருளை விரும்பி மறப்பார் விரும்பப் புகுதல்செய்தார்
முருகன் மயில்வரை யாரன் பவர்மிசை முற்றுங்கொல்லோ
விருவரும் பொய்யன் பினரன்றி யில்லை யியம்புதற்கே. (சசரு)

(காமக்கிழத்தி) மனைவியைப் பழித்தல்.

வந்தார் மறந்தனண் முன்செயல் யாவு மறித்துமங்கே
பிந்தா ரதற்கும் பெருமூச் செறிந்தனள் பேதையிவ
டந்தா வளத்தை விலங்கிடு வாரிற் றடைபுரியா
ளெந்தோ விவள்செய்கை வேண்மயில் வெற்பி லிருப்பவரே. ()

பரத்தையர் காதற் பரத்தையைப் புகழ்தல்.

வாராது வந்த மறிமானை நீக்கி மனையயலா
டாராத வானைக் கொருபிடி யாகுநஞ் சாதிமின்னாள்
பாரா ளவளொடும் வாழ்தனம் வாழ்க்கையின் பண்பையன்றே
சீராரும் வேலன் முருகன் மயூரச் சிலம்பிடத்தே. (சசஎ)

(பரத்தையர்) தம்மையிகழ்தல்.

தீராத நெஞ்சுக்கு தெய்வந் துணையென்று செப்புமொழி
தாராள மாயின தெங்களுக் கோவவர் தங்களுக்கோ
வாராரைச் சீறி வருவாரைத் தேடி மதர்த்தெழுந்தாய்
பாரா ருனைக்கொங்கை யேகுகன் றேகைப் பருப்பதத்தே. ()

(பரத்தையர்) கிழவோன் றன்னையும் பழித்தல்.

மின்றகு நுண்ணிடை யார்குண மாறிடை வேசைகுண
மென்ற தவர்க்கு வராதே நடந்துகொ ளின்பமென்னே
மன்றன் முருகன் மயில்வரை சென்று வருமிறைவா
வொன்று மறிவினர் மேலே நடந்தன வுன்புத்தியே. (சசகூ)

(பரத்தையர்) தம்மை (த்தாமே) புகழ்தல்.

மின்னென மாதர் பயிலுங் குகன்மயில் வெற்பவரே
பொன்னனை யாளுமப் பாவையு நங்குலப் பூவையராம்
பன்னுவ தென்னவர் கற்பிற்கு வெஞ்சொற் பகர்தற்கன்றே
மன்னு முலகொரு நாலைக் குறளென்று மாற்றியதே. (சருo)

வெள்ளணி யணிந்து விடுத்தல்.

மதுமலர்ச் சோலை யுதிர்மலர் சோதி மதியமுத்த
முதிர்வன போலு முருகன் மயில்வரை யொண்டொடியார்
கதுமென வெள்ளைத் துகிலுமுத் தாரமுங் காட்டிவெள்ளைப்
புதுமலர் சூடிப் பழமலர்ப் பேர்சொல்லிப் போந்தனரே. (சருக)

புள்ளணி, மாலைவே லண்ணல் வாயில் வேண்டடல்.

ஆயிர கோடி யுடுவுதிர்ந் தாலென்ன வார்த்தகவி
பாய மலருகும் பூஞ்சோலைத் தோகைப் பருப்பதத்தார்
தாயினு மன்ப ரருளுண்டு மானருள் சற்றுமுண்டு
சேயின னென்றனி ரண்மைய னையினன் செப்புகவே. (சருஉ)

தலைவிநேய் யாடிய திகுளை சாற்றல்.

தருவார்த்தை யின்றி மறுவார்த்தை பேசிற் றயையிலரைப்
பொருள்வார்த்தைக் காவி சுமவார் நிகரென்று பொய்மறந்தீர்
மருவாற் றிகழ்குகன் மாயூர வெற்பின் மடந்தைக்கென்சொற்
குரு வார்த்தை யோபெற்ற பாலானெய் யாடிக் குளித்ததுண்டே. ()

தலைவன் றன்மனத் துவகை கூர்தல்.

அனைக்குமுன் னேதந்தை யார்க்குமுன் னேபெற்ற வையனன்பர்
தனைக்குமுன் னேவருஞ் சேந்தன் மயில்வரைத் தையனல்லாண்
மனைக்குமுன் னேபெற்ற வான்கன்று தூக்கியென் றேமகிழு
மெனக்குமுன் னேயிரு பாற்குடந் தாங்கி யெதிர்கொள்வதே. ()

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல்.

தாசானு தாச ரெனத்தேவர் வந்தடி தாழ்ந்துசிவ
பூசா விதிசெயுஞ் சேந்தன் மயில்வெற்பர் பூங்கொடியுன்
பேசாத பிள்ளையைப் பேசுவிக் கும்பிள்ளை பேரிட்டவுன்
னாசார வாசனுற் றாறி யேனுன் னருளுள்ளமே. (சருரு)

தலைவி யுணர்ந்து தலைவனோடு புலத்தல்.

பூவென்ற சோலை புவிமே னுடுக்கணம் பூத்ததென
மீவென் றெழுகுகன் றோகைவெற் பீரன்பு வேண்டிவந்தீர்
மாவென்ற கண்ணார் முலைப்பான் மணப்பவ ரென்றிடினுங்
கோவென் றவரென்ன மோவிழி யாமை குறித்தனரே. (சருகூ)

பேரியோன், விடுத்துழிப் பாங்கி வாயில் மறுத்தல்.

விண்கா வுறைமந்தி மேனோக்கிப் பாய விரிந்தகனித்
தண்கா வளந்திகழ் வேலன் மயில்வரைத் தையனல்லாய்
மண்பா னடைகொண் டரையுடம் பாகி மதிமுடித்துப்
பெண்பா லிசைந்தவர் வந்தாரென் றோது தல்பேதைமையே. ()

பாணன் வாயில் மறுத்தல்.

இங்கே யிறைவர் வந்தார் புறத்தொழுக் கில்லையென்று
சிங்காரம் பேசினை வேலன் மயூரச் சிலம்பண்ணலா
ரங்கே யிருக்க வவளோ விவளென்னு மப்பதத்திற்
சங்கீதம் பாடினை யாமே பொய்ப் பாணர் நருமநன்றே. (சரு௮)

பாணன் கூற்று.

வல்லென்ற கொங்கைமின் னேகுகன் ஞேகை மயில்வெற்பிலே
கொல்லென் றயலவர் கூடின ரேயவர் கூடவப்பாற்
செல்லென்ற போதிடி யுற்றதொத் தேன்சினந் தேயெடுப்பேன்
கல்லென் றனைபடி யாதிருந் தேனருள் காண்பதென்றே. (சரு௯)

விறலி, வாயில் மறுத்தல்.

பண்ணுஞ் சுரமும் பயின்றிடுங் காலம் பயின்றனமு
னண்ணுஞ் சுரமு மொழியு மறந்தனர் நாளுக்குநாட்
கண்ணுமில் லோமிரு காதுமில் லோமிரு கையுமில்லோம்
பெண்ணுமில்லோம்விற லிகந்தன் ஞேகைப் பிறங்கலிலே. (சசு௦)

கூத்தர் வாயில் மறுத்தல்.

ஆடிய காலுஞ்சொற் பாடு மிடறுமுள் ளார்கண்மிக்கா
மூட றவிர்த்தவர்க் காவன தேட லுறுதியென்றே
தேடு முருகன் மயில்வெற்பர்க் கோதுமின் செப்புமென்போற்
கூடு நகைகொண்டு மேலா டியகழைக் கூத்தர்களே. (சசுக)

விருந்தோடு வந்துழிப் பொறுத்ததுகண், டிறையோன் மகிழ்தல்.

செருந்தொன்று கூந்த லினியென்செய் வாளன்பு சேரினமாம்
விருந்தொன்று வந்தது நெஞ்சே குகன்மயில் வெற்பிலது
பொருந்தென்று சொல்லு மினமே துனியெனும் புன்கணுக்கோர்
மருந்தென்று தேறினிச் செவ்வா யமுத மருந்தல்லவே. (சசுஉ)

இறைமகள் விருந்துகண், டொளித்த வூடல்வெளிப்பட நோக்கிச், சீறே லென்றவள் சீறடி தொழல்.

பஞ்சணை மேலஞ்சிச் செல்கின்ற காலைப் பருத்தடக்கை
வெஞ்சின வேழத்தின் மேற்சிலம் பார்த்தன வேர்த்துவிம்மித்
துஞ்சினர் போலு மிளம்பிடி பஞ்சடி தொட்டவன்றே
கஞ்சமுத் தீன்றன செவ்வேண் மயூரக் கனங்கிரிக்கே. (சசுங)

இஃ, தெங்கையர் காணி னன்றன் றென்றல்.

வேலை விரும்பினர் புன்றெழிற் செய்தல் விகிதமன்றே
மாலுடை யாரென வந்தனை தோகை மயிற்குமரன்
சோலை மயில்வெற்பின் மன்னவ னேசிறுத் தொண்டனென்னக்
காலை முடித்தனை யெங்கையர் காணிற் கலங்குவரே. (சசுச)

அங்கவர் யாரையு மறியே னென்றல்.

மிஞ்சுமென் குரல்வினைக் காரர் பதம்விழில் வெஞ்சினம்போய்
நெஞ்சு குழைவரென் பார்கண்டி லேன்பர னோர்குவரோ
பஞ்சணை மேற்படுப் பார்குகன் றேகைப் பருப்பதத்தே
கஞ்சத்துத் தண்ணீர் கலிங்கத்துப் பாய்ச்சல் கருணையன்றே. ()

காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

வளளல்ச மாலி யுடையண பாண்டியன் வாழச்செய்த
வெள்ளி மயிலி லெழுந்தருள் வோன்மயில் வெற்பினிலோர்
கள்ளியுன் றய்தலை மேற்கையு நின்மிசைக் கண்களுமாய்
மெள்ள நகைத்தது கண்டேனுன் வீட்டிலென் மேல்வைப்பிலே.

தாமக் குழலியைப் பாங்கி தணித்தல்.

தேறாத செல்வ முருகன் மயில்வரைச் செல்வனுன்பாற்
கூறா தனசொல்லிச் செய்யா தனசெய்துங் கோபமென்னே
மாறான் மகிழுந் திருமகிழ்ந் தாளின்பம் வாய்த்தபதி
ஞூறு யிரரன்றி யோர்மானெஞ் சேறி யமர்ந்ததுவே. (சசுஎ)

தணியா ளாகத் தலைமக னூடல்.

சிற்றுளி கற்பிளந் தாலன்ன பின்சொற் சிறந்தனவென்
பற்றுரை சேற்றிடைக் கம்பத்தைத் நேர்ந்ததென் பாவமிதே
கற்றை யழற்சடை யான்மகன் றேகைக் கனங்கிரிமே
லற்றைப் புனச்சுக மன்றேநம் விடுற்ற வஞ்சுகமே. (சசுஅ)

அணிவளைப் பாங்கி யன்பிலை கொடியையென்,
றிணர்த்தார் மார்பனை யிகழ்தல்.

தலைநா ளிடைச்சின மெங்குவைத் தீரயிற் சாமிமயின்
மலைமாதர் முந்தி வரிக்கிலன் பேது மலிந்துதின்றாற்
பலநாட் கரும்புங் கசக்கு முமையன்றிப் பற்றையில்லா
விலைமாத ரேவிலை யில்லாத மாதர் விரும்புகவே. (சசுகூ)

மகப்போறை கூர்ந்த வண்ண முனைத்தல்.

ஆகம வேத மடிதொழு தேத்துமை யாறுமுகன்
றேகை மலையில் விளையாடும் பொன்மயில் சூற்கொண்டநாண்
மேகங் கறுத்தது மின்னுந் துடித்தது வேய்பசந்த
பூக மலர்ந்தது தென்னையுங் காய்த்தது போர்மன்னனே. (சஎ0)

புரவலன் போந்து புதல்வனைக் காண்டல்.

சேனு பதிக்கம் விறல்வாகுக் கீந்துதன் செய்கையெல்லா
மானுத சங்கர லிங்கத் தபோநிதிக் காக்கியவே
டேனார் மயில்வெற்ப ரஞ்சனம் போட்டிலர் செங்கையிலே
பானுறு முன்சொற் பொருளெடுத் தார்பொன் பலகொடுத்தே. ()

புறங்காட்டல்.

ஆன்க ணெழுந்தடி யார்க்கு விடைதந் தருளுமெங்கள்
கோன்கண் மணியெனும் வேளுறை குன்றக் குடிமலைமேன்
மான்கண்ணி யேயின்பப் பாலு மமுதமும் வைத்துக்கொண்டு
தேன்குழ லீந்தனை காமப் பசியதிற் றீர்வதின்றே. (சஎஉ)

காமக்கிழத்தி வாயில்வேண்டல்.

வாக்குங் கிருதாக் கினிஞாய நீங்கு மதிச்சிலைபோ
லாக்கு மனத்தைக் கதிர்ச்சிலை ஞாய மழகதன்றும்
பாக்கு மிளகு மலிகுகன் றோகைப் பருப்பதத்தாய்
தேக்கிலை நீரொனச் செய்வதென் போல்பவர் செய்வதுவே. (சஎங)

பாங்கி வாயில் நேர்வித்தல்.

நீத்தட்டு கல்லென்பர் மன்னனை மேல்வரு தென்றல்கண்ட
பூத்தவஞ் சிக்கொடி யாமென்பர் மாதனைப் போர்வயவர்
நீத்திடி லென்கண் டகபல ஞாயத்தை நேர்தனன்றுங்
காத்திகழ் தோகை மலைவேலன் வேலன்ன கட்குயிலே. (சஎச)

ஆயிழை மைந்தனு மாற்று மையுமே,
வாயி லாக வரவெதிர் கோடல்.

தேங்கமழ் சோலை மதுரையி லேபண்டு சென்றுசங்கந்
தாங்கிய சங்கை தவிர்த்தோன் மயில்வரைத் தாரண்ணலே
யீங்குனக் கென்றடை யாற்றுமை யும்பெற்ற வென்பிள்ளையு
மோங்கி லணைதழற் போலென் வெறுப்பை முடித்தனவே. (சஎரு)

மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ,
டிணங்கிய மைந்தனை யினிதிற் புகழ்தல்

மறுமார்க்கஞ் செய்தவெஞ் சூரா தியர்க்கு மயிற்குமுத்தி
யுறுசாபஞ் செய்த முருகன் மயில்வரை யொண்டொடியே
தறுகாப் புலிக்குட்டி வீரநன் றேபரி தானுமின்றிச்
சிறுதே ருருட்டிப் பெருந்தே ரைப்பெண்மை சேர்த்தியதே. ()

தலைவனைப் புகழ்தல்.

பூவிற் கொடுக்குந் தொழில்கொடுப் போர்மெய்ப் புரவலர்க்குங்
காவற் செயலருள் வோர்மயில் வெற்புறை காரிகையே
பாவத்தை வாங்கித்தன் புண்ணியம் பாதி பகிர்ந்தளிக்குந்
தேவர்க்குக் கண்ணிமை யாதுகை நீங்கில சேக்கையினே. (சஎஎ)

சிலைநுதற்பாங்கி, மனைவியைப் புகழ்தல்.

பொருந்தின ரென்றபொழுதேமுன்கொண்டபொறுமையெல்லா
மருந்து கலந்த விடம்போ லொழிந்தன மாதவர்க
டிருந்தியவேலன் மயூர வரையினிற் சேயிழையே
யருந்துதி யென்னி னிகரோ வதுவு மருந்துதியே. (சஎஅ)

பாலனைப் பழித்தல்.

ஆதியி லாக்கிப் புசிப்பன யாவு மளித்தவன்பன்
பேத நினைத்திலன் சேந்தன் மயூரப் பிறங்கலிலே
தாதைகை யாடுந் தனக்குட நீபெறத் தக்கதன்றோ
வோதிய பாற்குடம் பிள்ளாய் விதியின் றுதவியதே. (௪௭௯)

பரத்தையிற் பிரிவு முற்றிற்று.

இருபத்தோன்பதாவது—ஓதற்பிரிவு.

தலைவன்பிரிவறிவுறுத்தல்.

கைம்மலர் வாய்மலர் கண்மலர் கான்மலர் மெய்ம்மலர்த்து
மெய்ம்மலி நூலும் பிறவுங் குகன்மயில் வெற்பிடத்தே
மைம்மலி வேற்கண்ணி சந்தேக மாற்ற மனநினைத்தோ
ரெய்ம்மலி கூந்த லிளம்பிடிக் கேசென்று நீசொல்கவே. (௪௮௦)

பாங்கி தலைவிக்கதனையறிவுறுத்தல்.

உதவி புரியுந் தலையாய நட்ப ருடல்சிதைத்தார்
பதயுக ளத்திற் கெதிரான தொன்றைப் படுத்தல்செய்தா
ரிதமகி தஞ்செயு நண்பர் மனமறி யேன்முருகன்
மதிதவழ் தோகை மலைநா வலர்பலர் வந்தனரே. (௪௮௧)

பிரிவுடன் படாமை.

தலையாய நட்ப ருடல்சிதைத் தாரென்ற சாடைநன்று
நிலையா கியநம் முடைநட்பி லாவதென் னேரிழையே
பலதேவர் போற்று முருகன் மயில்வெற்பிற் பண்ணறியுஞ்
சிலையா ருளைபண் ணிருதெய்வ மாகிச் செறிந்ததுவே. (௪௮௨)

பிரிவுடன் படுத்தல்.

மனத்தின் படிவிடு வீலா சுகர்கதை மற்றறிவாய்
வினிக்கை யிசைபசுப் பேய்பாம்பு பாலன் வெறுப்பதுண்டோ
வினத்த விசைத்தெய்வ மேழி லிரண்டை யெழுநெறியார்
கனைத்துவண் டார்சுனை வேண்மயில் வெற்பிற்பண் கற்பவரே. ()

பிரிவுடன் படுதல்.

தாரமு நல்ல கிளையும் புகுவார் தடையி னில்லார்
தீர ரகப்பொருள் வாசிப்ப தேநன்று சேந்தன்மயி
லேர்கொண் மலையி லலங்காரம் பாரா திருவருநம்
மூரிற் புறப்பொருண் மேற்கற் பியனெறி யுன்னுவமே. (௪௮௪)

பிரிவுழிக் கலங்கல், (கார்ப்பருவம்.)

பிள்ளையுந் தந்தையும் வந்தா ரெமது பெருங்கவினைக்
கொள்ளைகொண் டாரிருந் தார்நடந் தாரினிக் கூறியென்னும்
புள்ளி மயிற்குகன் றேகை மலையின்முன் பொற்பழிந்த
வெள்ளை முகிலுங் கறுத்தே யுறுமி வெளிவந்ததே. (சஅரு)

பாங்கி வன்புறை.

வீறிற் பிரிந்தனர் போகிலர் மாதம் விளங்குமுப்பத்
தாறிற் கழிந்தன கண்டுங் கலங்க லறிவின்மையாந்
தேறற் சிகிவரை வேலனை யுள்ளார் திறமெனவே
தூறித் திரியுமிக் காருக்கென் னேவுண்மை சொல்லுவதே. ()

தலைவி வன்பொறை.

ஓதற் ககன்றா னொழிந்திடை மீண்டன் புடன்கலந்து
போதற் கியையப் புலம்பப் பெறுனம் புலம்ப லென்னுஞ்
சோதிக் குகன்மயில் வெற்பானை நொந்து சொலிற்றிரும்பி
வேதத்தினந்தத்தைப்பார்க்கினும்பார்க்குவன்வீண்பெண்மையே.

தலைவன் வருவழிக் கலங்கல்.

வருடமொன் றாகி யொருவரு டத்தை மகிழ்ந்தளியே
னொருவ ருடச்செய லாலோர் வருடத்தை யோட்டுகின்றேன்
முருகன் மயில்வெற்பி லோர்வரு டத்தின் முயற்சிதருங்
கருமுகி லாண்டொன்றை யோராண்ட தாகக் கருதிலவே.(சஅஅ)

வந்துழி மகிழ்ச்சி.

நான்சே ரெழுத்தொடு சொற்பொருள் யாப்பு நயக்குமணி
மீன்சேர்கண் ணணல்குஞ் சேந்தன் குகன்மயில் வெற்பகத்தே
வான்சேர் நெறியென்ப போய்மீ ளளவுமென் மானங்கொண்ட
கான்சேர் குழற்கு நிகரோ வுலகுள்ள கற்பவரே. (சஅகூ)

ஓதற்பிரிவு முற்றிற்று.

முப்பதாவது—காவற்பிரிவு.

தலைவன் பிரிவறிவுறுத்தல்.

ஒன்றாகி முப்பத் திரண்டா மறத்திற் குறுகுறையு
நன்றாய தேசத்து நீதியு நாட்டிடை நாடமைதி
யென்றாய் செல்வ முதலா னவுமவற் றெய்துகுற்ற
மன்றாக் கலுங்குகன் றேனை வெற் பாள்பவர்க் காய்தலுண்டே.()

பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

வேத முனிவரர் யாகக் குறைகளும் வேண்டிநின்றோர்க்
கோதிய தேயந் தியாகக் குறைக்குறு மூர்பலவின்
றீது பலவுந் தவிரக் குகன்மயிற் றிண்சிலம்பார்
காதன் மடக்கொடி யேநடந் தாரென்பர் கண்டவரே. (௪௯௧)

தலைவி பிரிவுடன் படாமை.

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற் றலைமையருக்
கென்குற்ற மென்ற குறளறி வார்குற்ற மிங்ககற்றார்
நன்குற்ற சேந்தன் மயில்வரை வேலவர் நாடுகொண்டாற்
பின்குற்ற முள்ளவர் காடுகொள் வாரினிப் பேசலென்னே. (௪௯௨)

பாங்கி தலைவியைப் பிரிவுடன் படுத்தல்.

சீவகன் றந்தை முயற்சியை நீத்த செயலிலன்றோ
பூவல யத்தைப் புரப்பது விண்டனன் பொற்கொடியே
தேவன் மயில்வெற்பிற் றன்வீடு காக்குந் திறமிலனார்
காவல ரென்பதெ னென்றோத லல்ல கருத்தல்லவே. (௪௯௩)

தலைவி பிரிவுடன் படுதல்.

பல்லார் பயன்றுய்ப்பத் தானே வருந்திப் பகிர்ந்தளித்த
னல்லாண் மகற்குக் கடனென்று நாலடி யார்நவின்றா
ரெல்லாரும் வாழும் பிரிவிற் கிரங்கலுண் டோதமிழின்
சொல்லார் பிரிவல்ல வேகந்தன் றோகைச் சுரும்பிடத்தே. (௪௯௪)

தலைவனைப் பிரிவுழிக் கலங்கல் (கூதிர்.)

கூடு பதமுந் தலையு முடலுங் குவித்ததிர்ந்து
மேடைக டாவி விழிசாய்த் திறகு விரிக்குமயி
னாடர் குகன்மயில் வெற்பேறி யாங்க ணடுங்கவந்த
வாடை யெனும்புலி யாவிகொள் ளாமுனம் வந்திலரே. (௪௯௫)

பாங்கி வன்புறை.

கார்வாடை நோக்கி மயிலாடுஞ் சோலைக்கன் னாடர்மன்னன்
றேர்வாடை வந்ததுன் பாவாடைச் சோர்வினைத் தீர்க்கவின்றே
யார்வாடை யாலொழிந் தார்குகன் றோகை யணிவரைமுந்
நீர்வாடி வற்றுங்கொல் லோசிகி மைக்க னெருப்பினுக்கே. (௪௯௬)

தலைவி வன்பொறை.

குறுந்துளி வாடையும் பல்லறை யோசைக் குளிருமயி
னறுங்கிரி வேளைப் பணியா தவரி னடுநடுக்கும்
வறும்புனம்போலுமுடலுங்கொண்டென் பொறைவைப்பினன்றோ
தெறும்படை வேல ரறப்புறங் காவல் செலுத்துவதே. (௪௯௭)

தலைவன் வருவழிக் கலங்கல்.

வஞ்சிக் கொடிதலை சாய்ப்பதுண் டேவரும் வாடைகளே
யஞ்சினு மாடை பறிப்பீர்க ளோகள்ள ரானவர்போன்
மஞ்சு தணிமயில் வெற்புறை வேளை வணங்கினர்போற்
கொஞ்சி வணங்கி யொதுங்கித் துவண்டென்று கூடுவந்தே. (சகூஅ)

வந்துழி மகிழ்ச்சி.

உரைப்பிர் தழற்படு பூம்பாவை போல்பவ ருக்கின்றுநா
மரப்பாவை போல வருதலை யென்றனம் வந்துசொல்லார்
கருப்பாண்மை தீர்த்த முருகன் மயில்வெற்பிற் கண்ணெனவே
யிருப்பாரைக் காணப் படாரே மகிழ்ச்சி யிராதவரே. (சகூகூ)

காவற் பிரிவு முற்றிற்று.

முப்பத்தொன்றாவது—தூதிற்பிரிவு.

இறைவன் பாங்கிக்குப் பிரிவறிவுறுத்தல்.

இருவ ரெதிர்ந்தனர் யாதினு மொப்புமை யேற்றவர்நந்
திருவ ரதுநிற்க நம்மினத் தாரெனுந் தேற்றத்தினு
லொருவரிற் சேரப் படாது குகன்மயி லோங்கலன்னீர்
பொருதக ரத்துணை யீரெழுத் தாகப் புரிந்தனமே. (ரு00)

பாங்கி தலைவிக் கஃதறி வுறுத்தல்.

உய்த்த கயங்களொன் றோடொன் று தாக்கி யுலைதல்கண்டு
கத்தி யுருவி நடந்தார்பல் வேந்தர் கடம்பணிவோன்
முத்தி தருமயில் வெற்பினி னம்மிறை முன்னடந்தார்
மத்தகஞ் சாய்க்க விலக்கின ரென்றனர் வந்தவரே. (ரு0க)

தலைவி பிரிவுடன்படாமை.

பன்னாளும் விட்டுப் பிரியா திருந்தமை பார்த்துமையோ
முன்னே பிரிந்தனர் பின்னே பிரிந்தார் முருகனன்ப
ரென்னாளுந் தோகை மலையிற் பிரிவே யிசைத்தலையேற்
சொன்னாலுஞ் சொல்லா விடினுநன் றேயிந்தச் சொல்லெனக்கே.

தலைவியைப் பாங்கி பிரிவுடன்படுத்தல்.

தூதா னவர்நல்ல பாக்கினைச் சோற்றினைத் துய்க்கவுநா
மாதே வருந்த விதியோ முருகன் மயூரவெற்பின்
மீதே நடைக்கொரு தூதில்லை யோசெயல் வேறிலையோ
பேதாய்செங் கையொடு காலில்லை யோவிப் பெருநிலத்தே. ()

தலைவி பிரிவுடன் படுதல்.

ஆண்டிருந் தான்மண மின்னுஞ்செய் வார்திங்க ளாறிருந்தான்
மூண்டமு தங்கொணர்ந் தேயளிப் பார்மதி மூன்றிருந்தால்
வேண்டு வனகையி னூட்ட வேண்டுஞ்செவ் வேண்முருக
னீண்ட மயில்வெற்பிற் றிங்களொன் றேனுண்டு நேர்குவனே. ()

தலைவனைத்தலைவி பிரிவழிக்கலங்கல் (முன்பனி.)

அன்ப னிவனென் றனையக லான்பிரி யானென்றனை
யின்ப னிதயமெட் டேநாளென் றேதினை யெங்கள்குகன்
பொன்பனிக் கின்ற மயில்வரை மீதிற் புகன்மறையோர்
முன்பனிக் கால மகலுமென் றூரம் மொழிநிசமே. (௫0௫)

பாங்கி வன்புறை.

கைச்சமு தாடு கொடுத்த திரண்டிற்குங் காணென்றது
மிச்சமர் நீக்கப் படாதோ வெனவுனக் கெய்தியதும்
பச்சை மயில்வரைச் சேர்தன்றைப் பூசப் பயிற்சியினு
லிச்சை பெறுமுன் பனிக்கால மென்பது மெண்ணுவரே. (௫0௬)

தலைவி வன்போறை

வீடுக டோறும் விருந்துண் டிருவரை வேண்டியுற்றார்
காடுக டோறுஞ் சிவரூப மாவதுங் காணுகிலா
ராடல் புரிகுகன் மாயூர வெற்பி னவர்மெத்தவோ
நீடு மொருத்தி யுயிர்மெத்த வோபுகழ் நேர்தனன்றே. (௫0௭)

தூதுஎதுவாகச் சென்றோ னவ்வினை நின்றுநீட் டித்துழிப்,
புலந்து புலம்பல்.

ஒழிந்தார் சமர்விருந் துண்டா ரிலைமுன் னுரைத்தவெல்லாங்
கழிந்தா ரவரென்னுங் கத்தியை நோக்குங் கடம்பணிவோன்
வழிந்தோடுதேறன்மயில்வெற்பையெண்ணுங்கண்மாரிபென்னுஞ்
சுழிந்தோடு வாரியிற் றோணியை நேருஞ் சுகக்கிளியே. (௫0௮)

இறைவன் வருவழிக் கலங்கல்.

போதந் தனங்கல்வி போமாதர் மேன்மனம் பூணிலிந்தத்
தூது புகாவிடிற் சுற்ற மிறைத்தன்மை சோருமன்னே
நாதன் முருகன் மயில்வரை வாவி நளினங்களே
யோகி னளினங்க ளேயல்ல வேகரிந் துற்றதென்னே. (௫0௯)

வந்துழி மகிழ்ச்சி (கண்டோர்கூற்று.)

வாட்பது மங்கணை மானென்னுங் கண்ணி வரல்குறித்துக்
கேட்பது சின்னமென் றூலு மகிழ்ந்தனள் கிட்டுகின்றோன்
மீட்ப துயிரையென் றூலு மகிழ்ந்தனன் மெய்தழுவிச்
சேட்படர் சோலை முருகன் மயூரச் சிலம்பிடத்தே. (௫௧0)

தூதிற் பிரிவு முற்றிற்று.

முப்பத்திரண்டாவது—துணைவயிற்பிரிவு.

தலைவன் பாங்கிக்குப் பிரிவறிவுறுத்தல்.

வீரகண் டாமணிக் குப்புலித் தோலணை வேண்டுமென்னக்
காரக லாதமின் வேலன் மயில்வரைக் காரிகையாட்
கீர நறும்புன லிட்டோர் குருத்திற் கிடந்தவிழித்
தாரென்ன மன்னெள்ளனப் போற்றி யிறந்தவ ராரென்னுமே. ()

பாங்கி தலைவிக்குப் பிரிவறி வுறுத்தல்.

நேற்றுப் பிழைத்தமை கண்டாருன் போலு நெடியவெள்ளைக்
கீற்றுப் பிறைமருப் பானை யலங்கரிக் கின்றனர்போ
மாற்றுக் குதிரை பலவாறு சேனை மலிந்தவொற்றர்
கூற்றுக் கொருவரு மானார் குகன்மயிற் குன்றிடத்தே. (௫௧௨)

தலைவி பிரிவுடன் படாமை.

நாடு நமதன்று நஞ்செல வன்னவர் நல்கலின்று
பாடு படுதன்மன் னுக்கும்பெண் ணுக்குமென் பாருலகோர்
தேடு குகன்மயில் வெற்பர் துணைமேற் செலவையெண்ணு
ரூடலை நீக்கிலன் றேபக லோரை யுறுவதுவே. (௫௧௩)

பாங்கி தலைவியைப் பிரிவுடன் படுத்தல்.

நட்டவர்க் கும்மடுத் தோர்க்குஞ் சகாய நடத்தினர்க்கும்
விட்டவர்க் குங்குறை யுண்டாகிற் செல்வது வேந்தர்செய்கை
யட்ட வயிற்குகன் றோகைவெற் பாய்கிளை யார்சிலையிற்
பட்டனர் பின்மறுப் பாரா ரனுப்புவர் பாவையரே. (௫௧௪)

பிரிவுடன் படுதல்.

தொடைகொடு வாள்கைக் கொடுநீ றுதவுநற் சொற்கொடுகட்
கடைகொடு வாசச் சுருக்கொடென் றுணின்ற காரிகைநீ
விடைகொடு போதி மயில்வரை வேலவர் மீட்பரிவள்
கொடுகொடு வென்ன வெடுவெடு வென்றனை கொண்டனையே. ()

தலைவன் பிரிவுழித் தலைவி கலங்கல் (பின்பனி.)

ஐந்து வகைச்சுற்ற மைங்குழு வோரெட் டடைபதியுள்ளோர்
முந்தினர் கந்தன் மயில்வெற்ப ராலரண் முற்றினரா
மந்த நகருஞ் சிவக்குமுன் னேவெளுப் பானபுகை
யிந்த நகரும் வளைத்தலிற் பின்பனி யெய்தியதே. (௫௧௬)

பாங்கி வன்புறை.

அரண்முற் றினரென் பதனால் விடிய லமர்பனியால்
வெருவுற் றனைகுகன் மாயூர வெற்பர் விறலறியாய்
வருதற் குரிமையி லேணியுஞ் சீப்புங்கை மாற்றினராம்
பருதியிற் றோன்றுவ ரேற்செய்யு மோபின் பனிதுயரே. (௫௧௭)

தலைவி வன்பொறை.

உலகிய னோக்கி யிறைவர்க் கிரண்டிடை யூறுறுமென்
றலர்முலை மாதரு மெம்மனை மேவ வனுப்பினரே
யிலகயில் வேலன் மயில்வெற்பிற் றேவ ரிருவருக்கு
நிலவு விமானங் கொணர்வார் பொறுத்தற்கெ னேரிழையே. ()

துணை ஏதுவாகச், சென்றே னவ்வினை நின்றுநீட் டித்துழிப்,

புலந்து பாசறைப் புலம்பல்.

குலமட மாதரிப் பாசறை மேல்வரல் கொள்கையன்றே
நிலைமை பலபட நேர்வர் பலர்சிலர் நேர்ந்திலரே
யலர்மலி சோலை மயில்வெற்பில் வேலனன் பாலளித்த
தலைமைத் தனித்துரை யேவரல் சென்று தனித்துரையே. (௫௧௯)

தலைவன் வருவழிக் கலங்கல்.

புகைகண் டுடனே யதிர்தர யார்க்கும் புறங்கொடுத்த
மிகைகண்டு வாழ்த்துங்கொல் லோமங்கையூடி வெகுளுங்கொலோ
பகைதணித் தற்குச்சென் றேனக லாத பகைமிகுந்தே
னகல்வதென் னஞ்சுக மேயிர வொன்றெனக் கஞ்சுகமே. ()

வந்துழி மகிழ்ச்சி.

எண்ணுன் கிலக்கண முள்ளவ ரேயெரி யூட்டுமெவ்வூர்ப்
பெண்ணுரென் போல்பவர்க்கவ்வாறுநன் றென்ற பேதைநெஞ்சந்
தண்ணுகச் சேந்தன் மயில்வெற்பி லேவந்து சார்தனன்றும்
விண்ணுர் பனிப்பகை காமாக் கினிபற்றி வெந்ததுவே. (௫௨௧)

துணைவயிற் பிரிவு முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது—பொருள்வயிற்பிரிவு.

தலைவன் பாங்கிக்குப் பிரிவறிவுறுத்தல்.

அக்கினிட் டோம மிறைசூயஞ் சொல்லய மேதமுதற்
றொக்கபல் வேள்வியு நந்தம் புகழுந் துலங்குதற்கே
தக்கதுன் றக்குடி வேளருட் கொண்டு தருமமில்லா
மக்கள் பலர்கொள் பொருள்கூட்டல் வேதம் வகுத்ததுவே. ()

பாங்கி தலைவிக் கதனைப் பகர்தல்.

தருவேங்கை யாகிக் குறப்பிடி மேவும்வி சாகன்மிக்க
மருவோங்கு சோலை மயில்வரை நாடர் மகிழ்மயினீ
திருவோங்கப் பெற்ற சிறுவேங்கைக்கேமணஞ்செய்யவெண்ணிப்
பெருவேங்கை தேடி வருவேங்கை போமென்று பேசினரே. ()

தலைவி பிரிவுடன் படாமை.

வேண்டும் விருந்திட் டுறுதிகள் கூறிய வேண்மருது
பாண்டியன் பக்க மிருக்கக் குறைகள் பணத்திலுண்டோ
தாண்டு மயிற்பரி யான்றேகை வெற்புந் தமிழ்மதுரை
யாண்டவன் றேசமன் றேவட மேரு வகன்றிலதே. (௬௨௪)

பாங்கி தலைவியைப் பிரிவுடன் படுத்தல்.

கொடுக்குந் தொழிலைக் கொடாதோன் கொடுக்கப் புகின்மதுரை
யடுக்க லொருவனம் வீரம பேந்திர மாகியநா
லிடத்திற் பொழிந்த மழையேனு நேர்கில விம்மனத்திற்
றடைப்படு மோகொடை வேலன் மயூரப்பைஞ் சாரலிலே. ()

தலைவி பிரிவுடன்படுதல்.

மேல்வாரப் பொன்னையென் மேல்வாரம் வைத்தில்லின் மேவச்
பாலார் பிறர்பொன்னைக் கோயிலுந் தானமும் பற்றநல்கி [செய்து
வேலார் மயின்மனைப் பாங்கற்குந் தம்பிக்கு மிக்கமணங்
கோலா கலத்திற்செய் வேண்டு நிதியங் கொணர்ந்தினியே. (௬௨௬)

தலைவன் இல்லத் தழுங்கல்.

சோற்று முகத்தி னடையினு மார்பினுஞ் சோர்வுகண்டே
னீற்றுமுத் திற்கு நிகராது நல்கு நிதியமென்றாள்
போற்றிய சண்முக வாவி மருதா புரியெனவே
சாற்று குகன்மயில் வெற்பை விடிலின்பந் தானில்லையே (௬௨௭)

இடைச்சுரத் தழுங்கல்.

வேதிய னீசுர வையன் ப்ரதிட்டை விசுவலிங்க
நாத னமரு முருகன் குகன்மயி லகத்தினர்
நீதியி தன்றுநெஞ் சேநடுக் காட்டி னெறிதப்பல்போன்
மாதை நினைந்தும் பொருளை நினைந்து மயங்கினையே. (௬௨௮)

தலைவன் பிரிவுழித் தலைவி கலங்கல் (இளவேனில்)

ஆவுங் கலையு மதயானை யுங்கொள்ளை யாடுமெங்குந்
தாவும் பரியு மணிக்குப் பலும்பல சாளிகையு
மேவும் படிவந்த வால்வேண் மயில்வெற் பிறையிருந்தார்
கூவுங் குயிலைக் குதனெரித் தாரன்று கொன்றிலரே. (௬௨௯)

பாங்கி வன்புறை.

கஞ்சம் புகுந்துமுன் வல்லத்தி லேகையைக் காட்டுகின்றார்
வஞ்சிக் கொடிமயி லேகலிங் கங்கொள்ளை வாய்த்தனராங்
கௌஞ்சுகல் யாண மிகத்தேடிக் கைவசங் கொண்டுசென்று
மிஞ்சும் பணமயில் வெற்பாருக் கென்றுமுன் விண்டனரே. ()

தலைவி வன்பொறை.

புகவந்த பொன்னிற் பொறைசிறி தென்பள் புகழுமுன்ற
னகம்வந்து சேர்குவ தாருறென் றோதுவ ளாறுமுகன்
குகன்வடி வேலன் மயில்வெற்பர் கொம்பு குறித்தனர்நீ
சகிசகி யென்பள் சகியே யிவளவஞ் சகியல்லவே. (௫௩க)

தலைவன் வருவழிப், பாகன் றன்னொடு கூறல்.

கன்றிய காமத்தி னால்வரு மன்னற்குக் காதனள
னன்று கொடிஞ்சியந் தேர்விடக் கற்ற தறிந்தனையோ
வென்றி முருகன் மயில்வெற்பிற் றெவ்வரை வீட்டினன்கூட்
டொன்றில் பாதி யுடைவாள் செலுத்திச்செல் லுன்மனைக்கே.
(௫௩உ)

வருவழிக் கலங்கல்.

தேடச்சென் றோம்பொருள் சென்றன மோசென்ற சென்றவெல்
கூடச்சென் றுளன்றி நின்று ளிலையெதிர் கூக்குயிலே [லாங்
பாடச்சென் றோர்துயர் தீர்போர் மயில்வெற்பிற் பாவைவிளை
யாடச்சென் றுள்கொல் வனமோ கொல் கண்ணெதி ராயினதே.
(௫௩௩)

வந்துழி மகிழ்ச்சி.

பொன்மயி லுற்றது பஞ்ச வனக்கிளி புக்கதுவெள்
ளன்ன நடந்தது பூவை யெதிர்ந்த தருள்விரும்புஞ்
சின்னஞ் சிறுகுயி லுண்கொண் டதுபெற்ற சிங்கஞ்செவ்வேண்
மன்னு மயில்வெற்பிற் கல்யாண மாக மகிழ்ந்தனரே (௫௩௪)

(கிளவியில்லாத்துறை.)

தலைவிமுன் தலைவன் கார்ப்பருவங் கண்டு மகிழ்தல்.

வருமுனெனன் கைமந்த்ர வாளாய் வரல்கண்டு மற்றவன்கைத்
தருகின்ற வாளென வாகுநின் கண்ணெனச் சாற்றுகின்ற
பரவையுண் மேக முருகன் மயில்வெற்பிற் பாவலர்க்குத்
துரைமரு தேந்தரன் றரல்போற்பொன் மாரி சொரிகின்றதே.
(௫௩௫)

நாவலர்வாழ்த்து.

வாழி மயில்வரை வள்ளிதெய்வானை மயில்கண்மயில்
வாழி பொருமயில் வாழிகை மேற்கொடி வாழிபதம்
வாழி யருள்சண் முகம்பன் னிருசெங்கை வாழிசெவ்வேள்
வாழி தலத்தொடு தானிகர் வாழிய வாழியவே. (௫௩௬)

மயூரகிரிக்கோவை முற்றிற்று.

வேலு மயிலுந் துணை.

உ

கணபதி துணை.

மயூரகிரிக்கோவை யரும்பதவுரை.

காப்பு.

அன்பிலார்க்குப் பிந்தாவளம் உகச்செய்யும் ஒரு தந்தாவளமுக வன்ருள்தாம் கோவை சொல்லவுதவும் எனக்கொண்டு கூட்டுக.

பிந்தாவளம் - குறையாதசெல்வம். உக - கெட. தந்தாவளம் - யானை. விக்கினேசுரர் என்ற பெயருக்குத் தன்னைச்சிந்தியாதவர்க்கு விக்கினத்தைச் செய்பவர் என்பதே முற்பட்டபொருளாகலான் நிக்கிரகத்தை முற்படக் கூறினுரென்க.

(க) பிடி - நடையாற் பெண்யானை, இடையாற் சிங்கம், நுதலாலம் புலி, முலையாற் களிறு, கண்களான் மான், சாயலாற்ருேகை என்க. ஒரு மயில் பிடி முதலாகிய மிருகங்களைப் பகை கடிந்து தாங்கி நிற்கின்றதென்பது மற்ருெருபொருள்.

(உ) தகர் - ஆட்டுக்கடா. தாய் தந்தை - தாய்க்குப்பிதாவாகிய விமயமலை. சந்திரோதயப்பகை என்றது செந்தாமரை, வெண்டாமரைகளை. மயிற்பகை என்றது நாகருலகத்தை. ஊர் - மயேந்திரபுரி. கொண்டது - கடனீர். ஊராகக்கொண்ட தேவருலகெனினு மமையும்.

(ங) திரை - திருப்பாற்கடல். செம்மலை என்றது மேருமலையை. நாண்தரை - வாசுகியினுலகமாகிய பாதலம். வெண்பிறை என்றது நெற்றியை. முத்து என்றது வெயர்வையை.

(ச) சுரர் - தேவர். மறையவர் - எதிர்மறுப்புள்ள வசுரர். நஞ்சந்தரர் - நாகர். சுரும்பு - மந்தரமலை, உரர் - ஞானிகள். அல்லார் - அஞ்ஞானிகள். பேறும்பேறு - புண்ணிய பாவங்கள். இவை முறையே வெண்மை, கருமைக்குவமை. இருநோக்கிவளுண்கணுள்ள தொருநோக்கு நோய் நோக்கொன் றன்னேய் மருந்து. என்னுந் திருக்குறள் இங்கு நோக்கத்தக்கது.

(ரு) பொன் தங்கத்தாலும், இரும்பு சம்மட்டி முதலிய கருவிகளாலும், நவமணிகள் வயிரவூசிகளாலும் செம்மையாமாறுபோல இம்மின் போல் வாளுந்தானே செம்மைப்படவேண்டுமல்லாமல் மணிமருந்தாதிகளால் ஆவதில்லை என்றவாறு. மருந்திற்றீராது மணியினுகா, தருந்தவமுயற்சியினகறலுமரிதே என்ருர் பிறரும். வயிரவூசியு மயன்வினையிரும்பும், செயிரறு பொன்னைச் செம்மைசெய்யாணியும், தமக்கமை கரு

வியுந்தாமாமவை போலுரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே. என்னுமகத்தியச் சூத்திரமிங்கு ஒப்புநோக்கத்தக்கது. கரும்பொன் - இரும்பு. கல் - நவமணிகள். பிறங்கல் - மலை. துவிதம் - இரண்டு.

(சு) பூவடுகொன் வெட்டிவேருறச்சாய்த்து - மலர்களடுக்கப்பெற்ற சோலைபோலுங் கூந்தலை வெட்டிவேருடன் சேரச்சரியவிட்டு, பூவும் வடுவும் உள்ள காட்டைவெட்டிவேரோடே சாய்த்து என்பது மற்றொரு பொருள். புத்தேள் அயில் - முருகன் வேல். இது வினையுவமை. மலைத் தேனுக்கு - மலைப்புற்றவெனக்கு, மலையிலுள்ள தேனுக்குவென் பது மற்றொருபொருள். வடுகர் பிடிவாதகுணமுடையராகலான், காயோ? பழமோ? என்பதுபோற் குறிப்பால் வினவினன் என்க. வன் மனவடுகர் தங்களைப்படைத்துவானர மென் செயப்படைத்தா என்ப துங்காண்க. அன்றியும் வடுகர் சார்தற்குரியராகாதவர் ஆகலான் இவ் வாறு வினவினன் என்னலுமாம்; வடுகரரிவாளர் வான்கருநாடர் - சுடுகாடு பேயெருமை யென்றிவையாறுங்குறுகாமறிவுடையார் என்னுஞ் செய்யுளிற்காண்க.

(எ) கையன்றிமெய்யறியான் - யாசகர் கைகளையல்லாமல் அவர் தேகத்தைக்காணாதவன். கொடைப்பால் - கொடைப்பகுதி. சங்கர லிங்கத்தபோநிதி - இவர் திருவண்ணாமலையாதீனத்தைச் சார்ந்தவர்; குன்றக்குடி முதலாகிய தேவஸ்தான விசாரணையை மருதுபாண்டியரா லளிக்கப்பெற்றவர்.

(அ) குவளையின் மீது சங்கொண்டபிரான் - சங்குவளைகளை கை யிற்கொண்ட திருமால்: (சங்) என்பதைப்பிரித்து முன்கூட்டுக, கோடு - சங்கு. மின் என்றது வள்ளிநாயகியை. பங்கம் - தடாகம். தாங்கு வளையும் நீத்து - தன்னைத் தாங்கியுபசரிக்கும் உயிர்ப்பாங்கியையும் பிரித்துவிட்டு. கோகிலம் - குயில்.

(கூ) கான் - பூஞ்சோலை. குழற்கான் - கூந்தற்காடு. கரும்பி னம் - வண்டுக்கூட்டம். நூல் - இடை; சாஸ்திரங்கள். ஐம்பால் - கூந்தல், பஞ்ச லக்ஷணம். ஏடு - மலரிதழ்; சுவடி. கடம்பா நல்வின ஞ்சேர்ந்துங் கரும்பென்றுந்தேனென்று நாமம் பெற்றும் எனத்திருச் செந்தூர்க் கோவையிற் சர்க்கரைப்புலவர் கூறியவாற்றானுங் கரும்பு - வண்டென்றுணர்க.

(௧0) சாரிக்குத்தாவடியிட்டது - 'சா' என்பதைச்சார்ந்த 'ரி' என் பதற்கு முதலில் 'தா' என்பதை இட்டதை (சாதாரியை) என்க. சாதாரி - ஒரு பண். வேரி - தேன். வான்பரி - சூரியன் குதிரை. பாரிக்கு டம் - பருத்த குடம்போலு முலை. களபம் - கலவைச்சாந்து. பங்கயம் - தாமரைபோலு முகம். வாரி - கடல்போலுங்கண். மை - அஞ்சனம். குடத்தில் யானையை யடைப்பதூஉம்; பாதித்தடாகத்திற் கடலின் கரு மையைக்காட்டுவதும் என்மலர்க்கரமே என்பது மற்றொருபொருள். பங்கு - பாதி. அயம் - தடாகம்.

(௧௧) நின்னயம் - நிச்சயம். ஒன்பது - நவவடிவங்கள். எட்டு - அட்டமூர்த்தி வடிவம். படாம் - வஸ்திரம். வர்ணவிகாசம் - வர்ணத்

தின் விளக்கம். கன்னம் - காது. சொன்ன கடம் - பொன் மயமாகிய கும்பராசி. நல்லோரை - சிறந்த விராசிகளை; பெரியோர்களை. கடவுள் வடிவத்திற் சீவன், ஈசுரன், உலகம், எனப்பட்ட இச்சித்திரங்கள் தீட்டியிருத்தலை ஞானிகளுக்குக் கற்பிதமென்று காட்டுங் கந்தனென்றவாறு.

(கஉ) வாசி - குதிரை. பதம் - வாழுமிடம். தகரார் - ஆட்டுக்கடாவையுடையவர்; தகரவித்தையுபாசனைக்குரியவர். அதாவது சிதாகாசவுபாசனை. தகரம் - பிரணவாக்ஷரம்.

(கங) வருவார்- புதிதாய் வந்தவர். யானும் என்னும் உம்மையால் நீயுமிவ்வூரிலுள்ளா யென்னைப்பாதுகாக்குங் கடமையுமுடையாயென்பது பெறப்பட்டது. பூங்கருவார் புனக்கொடியார் இடஞ்செல்வது மறுத்திடற்குக் கருத்தென்பர். எனக்கொண்டு கூட்டுக. கொடியார் என்றது குருக்கத்திக்கொடியை. என்பர் என்றது உலகத்தவரை. நான்காமடியிற்கொடி என்றது அண்மைவிளி. ஆர் இடம் - யான்றங்குமிடம். இது வினைத்தொகை.

(கச) கரியகொடி - கருமையாகிய குருக்கத்திக்கொடி; கருங்காக்கை. இடம்போதல் - இடத்திற்செல்லுவது; வலது பாகத்திலிருந்து இடது பாகத்திற்போவது. அமுதப்பெருங்குடம் - முலைகள். நஞ்சம்- விழிகள்.

(கரு) சூடு அல்மதனன்-சிவபிரானுதல்விழித்தழலாற் சுடுதலல்லாத மன்மதன். கரும்பு - தலைவி, கரும்புவில். நாண் - நாணமாகியகுணம், நாணி. தோம் - குற்றம். ஆடல் - வெற்றி. கயல் - தலைவிகண், மீனக்கொடி. மதியார்மரபு - அறிவுடையார் வழித்தோன்றிய தலைவன் மரபு பாண்டியர் மரபு. கூடல் - மதுரை, சேர்க்கை. குமரி - கன்னிகை, கன்னியாகுமரி, சேர்ப்பன் - கடற்றுறையையுடையவன், அணைதற்றன்மையுடையவன். நீடல் - கால நீடித்தல். விதி - ஊழ்.

(கசு) பொன் நாண் திருக்கும் இறைவர் - இலக்குமியினுடைய நாணையுமாறுபடச் செய்யுந்தலைவர் என்பது மற்றொருபொருள். முறுக்கு - பிணக்கு. கல் - அகலிகையாகியகல். சிகண்டிமலை - மயில்மலை. மேருவில்லிற் பூட்டிய வாசுகியாகிய நாண்பயனில்லாதவாறுபோல முன்னுயிரினுஞ் சிறந்த எனது நாணுமிப்பொழுது பயனின்றாயிற்று என்றாள் என்க. அம் - சாரியை.

(கஎ) சிகண்டியும்-வேலும், என்றது தலைவிசாயலையும், கண்களையும் எண்க. வறிது - சிறிது. குமாரக்கடவுளுடைய மயிலையும், வேலாயுதத்தையு நினைக்கச் செய்தீரென்பது கருத்து.

(கஅ) சேவல், இடையில்லது - சேல்; முதன் மாத்திரை சென்றது - செல்; எனவே, சேவல், சேல், செல், என்னுமிம்மூன்றனுள். செல்லைக்காவல்புரிந்து, சேலையும், சேவலையுங் கொடிகளிற் சேர்த்துக் கொண்ட கந்தன் என எதிர் நிரனிரைப் பொருளாகக் கொள்க. குமாரக்கடவுளே யுக்கிரப் பெருவழுதியாகலானிங்ஙனங் கூறினர். செல் -

மேகம். சேல் - ஒரு மீன். பொற் கொடிபவளத்தையு முத்தையுமீன்ற தென்பது மற்றொரு பொருள்.

(கக) பூட்டிய நாண்தார் - சூட்டிய வடத்தோடு கூடிய சதங்கை; அது வீரக்கழல். கழல் என்பதற்கிப்பொருள்படக் காலணியணி வட மென்றார் சிவஞான போதச் சிற்றுரையிலும். தாரு - பஞ்சதருக்கள். பொற்பங்கயம் - பதுமநிதி. கார் என்றது இங்குப் பொன்னைச்சொரியும் புட்கலாவர்த்த மென்னுமேகத்தை.

(உ0) குக்குடத்துசன் - கோழிக்கொடியையுடையவன். நாலாம் நிலை என்றது அதரத்தை - உச்சி முதலாக உள்ளங்கால் வரையுள்ள சில இடங்களை அமிர்தநிற்குமிடமாகக் கூறலால் நாலாநிலையென்றார், உச்சி-முதனிலை. நெற்றி - இரண்டாநிலை. கண் - மூன்றாநிலை. அதரம் - நாலாநிலை. ஏனைய இடங்களைகொக்கோகத்திற்காண்க.

ஓதம் - அலை. பவம் - பிறப்பு. அமுதுண்டவர் நரர்பவத்தினனு மாத்திரமேயாவர் எனக்கொண்டுகூட்டுக.

(உக) தோகைதனில், வடமேற்கில், தேரினில், கால் வைத்தவர் என்பது மயிலிலுந்தேரிலும் பாதங்களை வைத்தவர் என்றும் வடமேற்கில் வாயுவைத்திக்குப்பாலகராக வைத்தவரென்றுங்கொள்க. மூவர் - திரிமூர்த்திகள். பகிருடல் - பாதிமெய்.

(உஉ) மற்றோர் என்றது ஏனையகிரகங்களை. மானத்திரவியங்கொண்டார் என்றது தலைவரை. நெறி - கந்தருவமணம். கானம் - காடு. பகல் - சமம். மால் - இன்பமயக்கம். கானத்தில் ஒத்த காமவின்பத்தையித்தலை வரளித்ததுபோலவுலகத்திற் பிறவாடவர்கள் என்னை யொழிந்த மற்றப்பெண்களுக்கிவ்வாறு அளித்திலர் என்றபடி.

(உ௩) வாகுவில்காலிட்டபானுவும் - தோளில் விலகிய ஒளியையும், ஒளிகுன்றிய தோள் என்பது கருத்து. விண் என்றது மேகம்போலுங் கூந்தலை. சரோருகம் என்றது தாமரைபோலும் பாதங்களை. அன்னம் என்றது அம்சதொனியையுடைய சிலம்புகளை. ஒதுங்கல் - விலகுதல். பாலிட்ட சொல்லியர் - பாங்கியர். மயூரப்பருப்பதத்தார் வேலிட்டமா என்றது சூரனுகியமாமரத்தை. மாம்பிஞ்சு - கண். தோள் ஒளிகுன்றியதையும், கூந்தல் கொலைந்திருப்பதையும், சிலம்பு விலகிக்கிடப்பதையும், சமீபத்திற் பாங்கியர் செய்யுமாரவாரத்தையும், மையழிந்து சிவந்த கண்களையும், நழுவிய ஆபரணங்களையும் வெற்பவர் கண்டாரில்லை என்று நாணினள் என்க.

(உச) காலிற்பணியுஞ் சிலம்பு - பாதங்களிற்படிய வணிந்துள்ள நூபுரம், நெளிந்து இறல் - வளைந்தொடிதல். பால் - இடையின் பக்கம். உருக்குமணி - ஒருஆபரணம். இதில் முதலடியில், வாயுதேவனால் ஆதிசேடனுடல் நெளிய மேருமலைச் சிகரம் வளைந் தொடிதலைக் கண்டதுண்டோ எனவும், 2-ல் பான்மேற் பொருந்திய வாடையொதுங்காததைப்பார்த்தீர் எனவும், 4-ல் கிருஷ்ணனுன் மகிழு முருக்குமணிக்கு மாசில்லை எனவும்; தோன்றுமாறுணர்க. மாசுஎன்பதை மாசெனக்கே

எனப்பின்னும் கூட்டி, புனக்கணிந்தவணிகளான் மாசுவரின் அம்மாசு எனக்கே என்றான் என்பது கருத்தாகக்கொள்க.

(உரு) மயிலீர், குயிலீர் என்பன விளிகள், அயில் ஈர் எனப்பிரிக்க. இராவும் என்னும் உம்மையாற் பகலும் என்பதுபோதரும்.

(உசு) சுனை - மலைமடு. தினை - சிறுமை. சரவணச்சோதி-சரவணப் பொய்கையையுடைய குமாரக்கடவுள். சரவணப்பொய்கையிலவதாரமா கிய கடவுளெனினுமமையும்.

(உஎ) கொண்கன் - நாயகன். நதிபதி-கடல். முருகன்தாதை அம் மான் என்பது தக்கனை, மகம் - யாகம்.

(உஅ) மட்டு - வாசனை. திட்டாந்தம்-உதாரணம், சந்திராங்கச்சிலம் பவரில் - மயூரகிரியிலமர்ந்திருக்குங் குமாரக்கடவுளைப்போல, கள்தாங்கு பூங்குழலார் மணங்காண்அக்கருத்திற்கு அன்று எனப்பிரிக்க. இராமனைப் போல வேறே கலியாணஞ்செய்வதில்லை என்றபடி. உள்தாங்கல் - மன வுளைவு. பிறப்பொன்றினும் - ஒருபிறப்பினுமென்க. காணுதல் - ஈண்டுச் செய்தல்.

(உகூ) கலை ஓர் மயில் ஐ எருத்தினில் - கலைகளையுணர்ந்த இந்திர னாகிய மயிலினுடைய வழகிய பிடரியில். கொண்டு - ஏறிக்கொண்டு. கடையிலும் - யுகாந்தத்திலும். வாழ்நிலை - வாழுநிலைமையை. ஓதும் செட்டி - உபதேசிக்குஞ்செட்டி நாமங்கொண்டவர். வஸ்திரப்பொதியை யொரு மயிலைக் காளைமாட்டிலேற்றிக்கொண்டு விற்றலன்றிக் கடையிலு மிருந்து வியாபாரம் பண்ணுஞ்செட்டி என்பது மற்றொருபொருள். முன் வளையலெடுத்து விற்றதெனினுமமையும்.

(௩0) மதியோன் கதிரென - நியமித்தகாலந் தவறாமலுதயமாகுஞ் சந்திர சூரியர்போல. தோன்றலராமெனின் - தலைவர் வாராராயின்; விதியோ - ஊழ்வினையோ? பிறப்பினை ஆதி ஓப்போ - நன்கு புலப்பட வில்லை. விரகநதிபதியோ - ஆசைக்கடலோ? கொடுவரியோ - கொடிய வண்டோ? அன்னமோ - அன்னப்பறவையோ? பாவையரோ - பாங்கி யர்களோ? துதியோ - புலம்பலாகிய தோத்திரங்களோ? பழிகொள்வது யாதோ? என்க. தலைவர்வருவதற்குக் காலதாமதமாதலாற்றலைவியிறந்து படின் விதி, ஆசை; தூதுசெல்லுதற்குரிய வண்டு, அன்னம், பாங்கியர், புலம்பல், இவைகளைக்காரணமாகக் கூறுவரூரார் என்றவாறு. மதிகதிர் நியமித்த காலந்தவறாது திக்குமென்பதைத்திங்களொடு ஞாயிறன்னவாய் மையும் என நன்னூற் ப்ாயிரவுரையிற் கூறுமாறுகாண்க.

(௩க) பணித்தாம்பு அசைக்குமலை - வாசுகியாகிய நாண்பூட்டிய மேருமலை. பாண்டியன் என்றது உக்கிரப்பெருவழுதியை. கணித்தார் - வேங்கைமலர்மாலை. மணித்தார் - முத்துமாலை. வயிரம் - வச்சிரமணி. அணித்து - சமீபம்.

(௩உ) ஆறறியந்தணர்என்றது ஆறங்கங்களையுமுணர்ந்த முனிவரா கிய பார்ப்பார். மாறவுரைத்து - மாறுபாடாகச்சொல்லி. ஆறங்கமாவன - கலித்தொகைக் கடவுள் வாழ்த்துரையிற்காண்க. ஆறு-ஆகுபெயர். அந்த

ணர் - வேதாந்தத்தை யணவுவார், அழகிய தண்ணளியையுடையாரென்றுங்கூறுவர். மறைப்பொருளுரைத்தகதை திருவிளையாடற்புராணம் வேதத்திற்குப் பொருளருளிச்செய்த படலத்திற் காண்க.

(௩௩) சிசு-தம்பிள்ளைகளுக்கு நேர்ந்த. ரவசாகரரோகப்பெரும்பவம் தீர - ஆரவாரத்தையுடைய கடல்போன்ற வியாதியோடு நீசப்பிறப்பும் போக. அர்ச்சித்த சுப்பியோன் - அர்ச்சனைபுரிந்த வதிஷ்டமுனிவர். இவ்வரலாறுதலபுராணத்துட்காண்க. அரன் அரிநம்புசுரர் - அரனையும் அரியையும் கதியாகக்கொண்டதேவர்கள் அசுரரையும், சேடனையும், நஞ்சையும், விரும்பி இப்பூமியிலுள்ள வித்தலைவியாகிய வமுதத்தை விரும்பினரில்லை என்றபடி. சுரபி - காமதேனு.

(௩௪) மேலார் - மேன்மக்கள், கண்கள். கீழார்-கீழ்மக்கள், கால்கள். வெள்வளையான் பாலாருமென்பதற்கு வெண்மையாகியசங்கத்தைக் கையிற்கொண்ட கிருஷ்ணன் பக்கத்தேதங்கிய என்க. துவாபரயுகத்திற் சாம்பவதிக்குப் புத்திரப்பேறு கருதித் தலவாசம் பண்ணியிருந்தமையாற் கொள்க. வரலாறு தலபுராணத்தாலறிக. வலவன் - தேர்ப்பாகன். மால் - கருமை. கமம் - நிறைவு. வேல் என்றது கண்களை. தளிர் என்றது பாதங்களை. கலவிக்காலத்தின்மையழிதல் சிவப்புறுதல் முதலானதுன் புறுத்தப்பட்ட கண்கள், திரும்பிப்பார்த்தலாற்றனக்குண்டாகும் வருத்தத்தை நீக்கலும், வருடுதன் முதலான வுபசாரங்கள் செய்யப்பெற்ற பாதங்கள் பிரிந்து நடத்தலாற்றனக்குத் துன்புறுத்தலுங் கருதிக் கீழாருறவிற்கு மேலார் பகைநன்று என்றான் என்க.

(௩௫) வையம் - தேர். மையம் - நடு. ஆயம்-மாதர்கூட்டம். கதிருதயம் - பாலசூரியோதயம். மான் என்பது தலைவியை.

(௩௬) எந்திழைவேல் என்றது தலைவி கண்களை. ஒருத்தி - உயிர்ப்பாங்கி. சீர்விண்ணூர்மதி - குறைவுநீங்கிய பூரணசந்திரன். தாமரை மெய்த்துயர்வேண்டின என்பது மாலைப்பொழுது வந்ததென்றபடி. மெய்த்துயர் - மெய்வாட்டமாகிய துயரென்க.

(௩௭) கால் அம்கை - காலாலும், அழகிய கையாலும்; கல்சாபம் வாங்கும் கடவுளர்க்கு - அகலிகை சாபத்தை வாங்கிய விஷ்ணுவுக்கும், மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானுக்கும். மாலன், மருகன் என்பதை எதிர்நிரனிரையாகக்கொள்க. சாமளம் - பச்சை. மன்னவர் வேற்படை கண்ணாகிய வேலினிடத்தும் அம்பினிடத்துமிருந்து கூர்மையைக்கொண்டது என்க. வாங்கலே வளைத்தல் கொள்ளல் என்பது நிகண்டு.

(௩௮) பேதையரென்றது - தலைவியை. கண்கூற்றின் - கண்ணாகிய யமனோடு. பெற்றவர்பேறு - பெற்றோர் பயன். ஆணின்மேவுக - ஆணைப் பெற்றோர் பெறும்பயன்போலப்பெறுக. கஞ்சன் - பிரமன். சிண் - கையாள். சிலம்பவர்க்கு - சிலம்பில் வாழ்வார்க்கு. விண்கூற்று - மேலுலகத்திலுள்ள தேவவாக்கு. அவர்கள் என்றது பெற்றோரை.

(௩௯) பைத்தாமரை-சர்ப்பாபரணத்தை யணிந்த சிவபிரானை. பணி சேய் - பணியச்செய்தசேய். பருமம் - மேகலைவகையிலொன்று. பரும வல்குல் என்றது பருத்தவல்குலையுடைய தலைவியை, மைத்தாமரை என்றது தலைவிகண்களை. மாதவி - குருக்கத்தி. வைத்தாமரைக்கணை - கூர்மையாகிய தாமரைமலரம்பு. பின்கூடும் என்றது எய்யுங்காலத்திற் பின்புறந்தம்மிடத்தியைவதை. மாற்றலர் என்றது - மன்மதனை. தாமம்-மாலை.

(௪0) மனத்தார் இருளில் விழியாரிமைக்கிலுருமாறுமென்று நனைவையழியார் எனக்கொண்டு கூட்டுக.

(௪௧) புலியை - தலைவியிடையை. அனத்தை - நடையை. எனை - அவை யொழிந்த. மானை - கண்களை. கலி - சிறுமை. புலி - சிங்கம். அது இடைக்குவமை. புலி சிங்கமுழுவை சாந்தே என்பது பதினோராவது நிகண்டு.

(௪௨) விரை - மணம். சுரும்பு - மலை. பொன்வரை - மேருமலை.

(௪௩) கானைக்காளை என்றது திருக்கானப்பேரூரிலமர்ந்திருக்குங் காளையப்பராகிய சிவபெருமானை. ஒரு கொம்புதந்தோன் என்றது திருமாலாகிய வராகக்கோட்டைக் கவர்ந்து கொடுத்ததை. எழ்கானம் - எழு சுரங்களோடு கூடிய விசை. கொம்பு கொடுத்த வரலாற்றைப் பின் எஎ. ஈஎ ம் பாட்டுக்களானு மறிக.

(௪௪) கள்ளம் - வஞ்சம். புள் என்றது கலவிசெய்யுங்காலத்திற் கண்டத்திலிருந்தெழுப்பும் அரி குயில் மஞ்ஞை செம்போத்தனம் புறாக்காடை கோழிக்குரல்களை. ஊர்ப்பள்ளம் - ஊராகிய பள்ளம். ஊர் - மயேந்திரபுரி. வாரி - கடல்.

(௪௫) வன்புறைப் பேச்சு - வற்புறுத்திச் சொல்லிய சொல். கனி - மாங்கனி. இறப்பு ஒன்றினும் - இறப்பெய்தினுலும்.

(௪௬) தக்கு - தாழ்ந்த சுதி. எச்சு - உயர்ந்த சுதி. மன்று - சபை ஆறு எனும் வாயில் என்றது பாணன் முதலிய வாயில்களில் ஆறுவது வாயிலாகிய பாங்கனை. இ. வி. அகத்திணை சூ. 64. காண்க.

(௪௭) மாலிகை மூன்று ஆவன கடம்பு, வெட்சி, வேங்கை. மிசை- மேல். தாபதர் - விஸ்வாமித்திரர் முதலியோர். அயனுர் மகன் - வதிஷ்டன். அவன் என்றது குமாரக்கடவுளை. பதம் - பாதம். துடி - துடிப்பு. அது விரைவுக்குறிப்பு. தாபதர்க்கருள் செய்ததையோ? அயனுர் மகர்க்கு அவன் சொல்லியதையோ? அவன் பதத்தைச் சாரப்பெற்றதுடிப்போ எண்ணி வந்தது என்னை? என்றவாறு. இவ்வரலாறுகள் தலபுராணத்திற்காண்க. எண்ணிய - எண்ணி.

(௪௮) வேட்டம் - வேட்டை, குகன் மாமி - இலக்குமி. எய்த்தது - எய்த்ததாகிய மான். இது வினையாலணையும்பெயர். போன்ம் - போலும் என்பது போன்ம். என நின்றது. மான் - மான்போல் வாளாகிய தலைவி. இது உவமையாகுபெயர்.

(௪௯) நூல்மலையைத்தாங்கும், அரவினந்தம்பகைதம்பகையை மாற்றும், சிலை நேமியைத்தாங்கும், கலை வெம்புலிப் போரைத்தாங்கும், என்க. சிலை - வில், கல். நேமி - சக்கராயுதம். சீயம் - சிங்கம். கனம் - மேகம். விடர் - காமுகர்.

(௫௦) வளை கூறச்செய்தது வள்ளிநாயகி. கூறு கொண்டது - பார்வதி. உரத்திலுதித்தது - இலக்குமி. நாச்சென்றது - சரஸ்வதி. கூறு - பாதி. உரம் - மார்பு. பெண்மை - பெண்டன்மை.

(௫௧) வாண்மை - வாள்வலி. வின்மை - வில்வலி. மூரல் - சிரிப்பு. சேண்மை - தூரம். பிறர் என்றது அடுத்தவரை. அண்மை - சமீபம். சிந்தை நடு காண்மை - மனத்தினடுவிற் காணுந்தன்மை.

(௫௨) வம்பு - இரவுக்கை. நம்பிடு அத்தேவரை என்று பிரிக்க.

(௫௩) விண்ட - விரிந்த. பூங்குழல்மான் - வள்ளிநாயகி. வேங்கை - வேங்கை மரம். மானைக்கவர வேங்கை வடிவெடுத்தோன் என்பது மற்றொரு பொருள்.

(௫௪) அல்லவை - பாவங்கள். முத்தானம் என்றது வாக்குத்தத்தம், மனோதத்தம், தாராதத்தம் என்பவைகளை, அறப்புறம் - அறச்சாலை. நல்லவர் - பெரியோர், வேட்டைவீரர். சிங்கம் - சிங்காதனம், சிம்மம். நண்ணிலை - அடையப்பெற்றிலை. மான் - தலைவி, மான்.

(௫௫) காகங்கவிழ்த்தநீர் - காவேரி ; சோணடு. தின்றகைக்குழந்தையாகம் கரையிற் கராத்தந்தது என்றது அவிநாசித்தடாகக்கரையிற் சுந்தரமூர்த்தி நாயனர் வரவழைத்ததை. சேரநாடு. விண்டுமீனுனது - வையை நதியிற் பாண்டியன் சந்தியாவந்தனம் பண்ணுமர்க்கிய நீரில் திருமால் மச்சாவதாரமாக வந்த வரலாறு பாகவதத்தாலறிக.

(௫௬) மாமன் - திருமால். மஞ்சு எறுமயில் வாகனம் என்றது மேகவாகனத்தி லேறுமிந்திரனுகிய மயிலை. முருகநாமன் - உக்கிரகுமார பாண்டியன். அயில் - வேல். செயம்பெற்றநாடு - பாண்டிவளநாடு.

(௫௭) எந்தை என்றது - குமாரக்கடவுளை. கையாயுதம் - வேல். பரி - மயில். வீடு - மலை. வற்றுச்சிந்தை - அறிவிற்குறையாத மனம்.

(௫௮) நாலெனுஞ் சாதியில் - பதுமினிமுதலிய நால்வகைச்சாதிப் பெண்களில். சண்பகமேனி - சண்பகமலர்போலும் வடிவுடையவள். முதற்சாதிப்பெண் என்றபடி. சக்கரம் - மோதிரம், சக்கராயுதம். சங்கு - வளையல், பாஞ்சசன்னியம், கோல் - அம்பு. கொப்பு - ஒரு ஆபரணம். குழைமேற்கொப்பு ஒன்றியிருக்கும் என்பது மற்றொரு பொருள். குழை - தழை. கொப்பு - கிளை.

(௫௯) தானவருக்குச் சங்காரகாலனை யெனக்கூட்டுக. உங்காரம் - அதட்டல். சொற்கம் - முலை, தேவருலகு. சேண்நெறி - தூரவழி, ஆகாய மார்க்கம். ஆரம் - சந்தனம், சிலம்பு - மலை. இங்குக்காணற்கு என் என்க. என் என்றது யாதுதடை என்றபடி.

(௬௦) எல்-சூரியன். மதியை விரும்பாத குமுதமும், மலரைவிரும்பாத வண்டும் உண்டோஎன நிரனிரையாகக்கொள்க. ஓங்கல் - மலை. மல் - வளம்.

(௬௧) இந்திரஞாலவையம் போனசேனை என்றது சூரனுடையவிந்திர ஞாலத்தேர் கவர்ந்து செல்லப்பட்ட சேனைகளை. எஃகு - வேல். திருக்குளம் - மருதாபுரிஎன்னுந்தடாகம்.

(௬௨) தாருகவெற்பும், அலையும். எனப்பிரிக்க. அலை - கடல். சூர் - சூரன். இதழம்போருகம் - அதரதாமரை. எம் இறைக்கு ஓர்கணம் ஒருகமாக்கி எனக்கூட்டுக. இதழ்களையுடைய கமலாசனத்தில் விளங்கும் பிரமானந்தத்தைத் தரவந்தவர் என்பது மற்றொரு பொருள். பிரமனுக்கு ஓர்யுகம் கணமாதலறிக.

(௬௩) கண்நஞ்சினுற் செலக்காலஞ்சும் எனக்கூட்டுக. கால்-பாதம், யமன். காத்தல் முதல் பால் அஞ்சு என்றது பஞ்ச கிருத்தியங்களை. முத்தம் நாலஞ்சும் ஒன்றும் நகை என்றுபார்ப்பர் என்றது. இருபதுவகை முத்தங்களையும் பொருந்திய பல்வரிசை யென்று வெற்பர் பார்ப்பர் என்றபடி.

(௬௪) கருவேலை-பிறவிக்கடல். கரையேற்றி - கரையிலேற்றினவன் ஊழ் - முடிவு. காலன் - யமன். வருவேலை - வருஞ்சமயம். வயம் - வெற்றி. ஒருவேலை - ஒருவேலுக்கு. வடு - ஊறுபாடு, மான் - தலைவி. இருவேலைஎன்றது - இரண்டுகண்களாகியவேலை. குழைதந்தது - குழைந்தது. ஒருவேலுக்குச்சூரனுரு வடுவுற்றது இரண்டு வேலுற்று நம்மிறையுருக்குழைதந்தது. என்பது மற்றொரு பொருள். வடு - பிஞ்சு. குழை - இலை.

(௬௫) கோடணை-ஆரவாரம். குஞ்சரி - தெய்வயானை. மின்னூர் என்றது தலைவியை. கூடல் - சேர்க்கை. ஆனைக்கொம்பு - முலைகள். வாள் - கண்கள். வாய்மருந்து - தலைவிவாயமுது. யானைக்கொம்பால் வந்தகாயமும், வாள்தந்தகாயமும். வாயிலிடுமருந்தன்றியாறுது என்பதுமற்றொரு பொருள்.

(௬௬) தொட்டிற் சிறையுற்று என்றது தொட்டிலிடத்திற் கிடக்குமிளமைப்பருவமென்றபடி. குரவர்சொல் - குருமொழி. சிட்டு - ஒரு குருவி. அது அழிக்கடி கலவி செய்வது. மெய்வாழையின் குளிர்விக்கும் - தேகத்தை வாழைமரத்தைப்போலக் குளிரச்செய்வாள். கொங்கைவட்டில் - கொங்கையாகிய சொக்கட்டான் காயில். கொங்கையாகியகிண்ணமெனினுமமையும். குறி - நகக்குறி. வட்டிற்குறி பார்த்து மகிழ்வாளென்பாருமுளர்.

(௬௭) கலைமான்-கலைகளைக்கற்ற தலைவன், கலையாகியமான். மறத்தியெனும் உருவி - குறத்தியாகிய வழகிய வள்ளிநாயகி. அருவித்தினை - தினைத்தாளையுடைய புனம். பொன்மறிமான் - தலைவி, பெண்மான். துருவி - தேடி. கலைமானையுன்னிவிளையாடல் துருவிக்கண்டேன் எனமுடிக்க.

(கூஅ) பால் - வாலெயிறூறிய நீர். பழம் - வாயாகிய கோவைப் பழம். கமலம் - முகம். பாக்கிலை - கமுகின்றேகைபோலுங்கூந்தல், ஏலம் - மயிர்ச்சாந்து. இளநீர் - முலைகள். இரண்டகலும்நாலு - இரண்டு. பாலையும் பழத்தையும் தட்டிலே வைத்துத்தாங்கிக்கொண்டு பாக்கு, வெற்றிலை, ஏலம் இவைகளையுங்கொண்டு இளநீரிரண்டுடன் தோன்றுங் கொல் என்பது மற்றொருபொருள். இளநீர் இரண்டு என்றதை மேல் கூ-எ-ம் செய்யுளானுமறிக. அகல் என்பதற்கு அகலுதல் என்றும், தட்ட மாகிய பாத்திரமென்றும் பொருள்கொள்க.

(கூகூ) குவளைத்தரளம் என்றது கண்ணீர். முகிழ்நகை - புன் னகை. கொலை - தினைப்புனம். கொல்லை - கொலையென இடை குறைந்து நின்றது. மனநிலைமேலருவி - மனத்திலருபியாய்க்காணப் படுந்தலைவி. மாதவி - குருக்கத்தி.

(எo) முயல்கள் கனித்தேனையுடைய வயல்களிலும்; கலவியில் முயலும்பிணைமான் குளங்களிலும் நிறையும் எனநிரனிரையாகக்கொ ள்க. பிணைமானென்றது மகளிரை.

(எக) ஆயம் உள்ளார்க்கு என்பதற்கு சூதாடலுடையவர்க்கு என் றும், சூதாடலை நினையாதவர்க்கு என்றும் பொருள்கொண்டு, சூதாடலு டையவர்க்கு மாயக்கட்டையும், சூதாடலைநினையாதவர்க்கு அருண்முடிப் பையும்! அருள்வது ஞாயமென்றே கொண்டவர் என்க. மாயக்கட்டு - மாயாபந்தம். அருள்முடிப்பு - அருளாகிய பொருள்முடிப்பு. நேயம் - அன்பு. பயம் - நீர். உதரம் - வயிறு. ஏய - இணையாக. எழிலி - மேகம். மேகம் அன்பு பெருமலச்சங்கொண்டு ஆகாயத்திற்புக்கதென் பது மற்றொரு பொருள்.

(எஉ) ஒருமையில் - தனித்து. நீகான் மாலுமி. புணை - தெப்பம்.

(எஙு) விழிக்கு ஆவிபோலும் முருகன். கொடிக்கால் - துவசத்தம் பம். சாரி - உலாப்போதல். மாண்கூடும்பேடு - மாட்சிமையாகக்கந்த னைக்கலந்த வள்ளிநாயகி. துறை - நீர்த்துறை. கால்நடையில் - பாத சாரியாய். இதுதிணை மயக்கம். கொடிக்கால் என்றும், ஆண்கூடும் பேடை என்றுங்கொள்வது மற்றொருபொருள்.

(எச) கனம் - மேகம். ஓதி - கூந்தல். கடி - வாசனை. பெரிய தனத்தார் என்றது முலைகளை. வம்பு - வாசனை. எவ்வனம் - யௌவ னம். மயல் - காமமயக்கம். மன்அத்தார் வெறி - முன் சூட்டிவிட்ட மாலையாலுண்டான மணம், என் இனம் என்றது எனது பாங்கியர்கூட் டமென்றபடி. கிளி - தலைவி. பாரமுள்ள (பெரிய) பூனைக்குக்கடித்தற் றொழில் உண்டாகும்; பெரும்பணக்காரர்களுக்கு வழக்குகளுண்டு. எந் தக்காட்டிலும் பசாசுகள் சேர்ந்திருக்கும், கிளிக்குப்பெரிய இறகுகள் பொருந்திய. என்னை என்பன வேறு பொருள். ஓதி - பூனை. கடி - கடித்தற்றொழில். மயல் - பசாசு. வாசம் - இறகு.

(எரு) விழல் - பயனற்றவார்புல், பிறஅன்பு - அன்னியதெய்வ பக்தி. நேரலர் - பகைவர். குழல் - கூந்தல், வேய்ங்குழல். குறிஞ்சி

குறிஞ்சிமலர், ஒருபண். சேந்து - சிவந்து. அழல் உக்கனையதளிர் - தழலிலிட்டதளிர். நேரலர்போல் விழிசேந்து வாடியதென் என முடிக்க. விழலுக்கு முத்தொலையிட்டிறைத்தே னென்விதிவசமே என்றார் பிறரும்.

(எசு) அகம்வேண்டினர் - வீட்டில் விரும்பியிருக்கும் பெண்கள்; பனைக்குறைகொள்கை - பனந்துண்டத்தையுவமானமாகக் கொண்டகை யிலணிந்த; வளைவிள்வரோ - வளையல்களை நீக்குவாரோ. வீடுகட்டவிரும்பினவர் பனந்துண்டத்தாற் கொள்ளத்தக்க கைகளையும், வளைகளையும் விரும்புவதன்றி நீக்கமாட்டா ரென்பது மற்றொருபொருள். தேம்பொழி பூமனைக்குறைமான் என்றது இலக்குமிபோல் வாளென்றபடி. விழி நன்மை கொள்ளாத மயக்கம் என்னோ என்றது கண்கள் நல்ல அஞ்சனந்தீட்டப்பெறாத மையல்யாது என்றபடி.

(எஎ) அம்பு - அர்த்தசந்திரபாணம். மயில்வரைநாதன்றொடர்ந்து பன்றி என்றது திருமாலாகியவராகத்தை. மருப்பு - கொம்பு. சரீரம் - அகத்திப்பூ. பொற்றநகை - பொலிவுடையபுன்னகை.

(எஅ) இறைமகன் மாதுலன்என்றது பிரமகுமாரனுந்தனக்கு மாமனுமாகிய தக்கன் என்றபடி. உபதேசி-பிரகஸ்பதி. கொடுமொழி - சாபமொழி. அரன் திட்டி என்றது சிவபெருமான்கண்ணாகிய சூரியனை. ஒருநாள் என்றது அமாவாசைதினத்தை. குடிலம் - சடை. நாணமில்லாத வஞ்சனைபையுடையமதி என்பது மற்றொருபொருள். குடிலம் - வஞ்சகம்.

(எகூ) கழங்கு - கழற்சிக்காய். மூரல்-சோறு. புன்கண் - துன்பம். சேதனம்செய்த - வெட்டியழித்த. அனம் - அன்னப்பறவை. பூவை - நாகணவாய்ப்புள்.

(அ0) மடமாதுசெய்கைதன்செயல் அல்ல. இளநீர் - முலைகள். இளநீர். கச்சுறுவது என்றது தனங்களிலுள்ள தலைவன் கைந்நகக்குறியைரவிக்கையான் மறைப்பதை. இளநீர்கசக்குமோ வென்பது மற்றொரு பொருள். இதழ்கொண்ட பங்கயம் ஆம்பல் இளங்காவியலராது என்றது இதழ்களையுடைய தாமரைமலரிலே ஆம்பன்மலரும், காவிமலரும் மலரமாட்டாதே என்றையுற்றாள் என்றவாறு. எனவே இவள்முகதாமரையிலுள்ள வாயாம்பலிற் றும்பூலந்தரித்தலாற்பற்காவியலர்ந்திருக்கிறதென் றறிந்தபடி. மேல் கக0, ககசு-ம் துறைகளானுமிக்கருத்துக்களையறிக.

(அக) வேட்டம் - வேட்டை. ஓதிமம் - அன்னம். தத்தை - கிளி. மயில் என்றது தலைவியை. செல்லும் - செல்லுகிறாள். மருவார்புரம் காடாயிருத்தலாலதனையுவமை கூறினார். மருவார் - பகைவர். புரம் - நகரம்.

(அஉ) எழுவகையாவன; நாற்றம். தோற்றம், ஒழுக்கம். உண்டி சுருக்கம். செய்வினைமறைப்பு, ஆயநீங்கியருநெறிப்போதல். ஒருழைப்பயிற்சி என்பனவாம். பொன்மான்மகள் - வள்ளிநாயகி. கூந்தல்வளர்வில்லை, முலைகள் பெருத்துத்தோன்றவில்லை பேரறிவுற்றது என்க. முதுக்குறைந்தனளே, முதுக்குறைந்தனளே மலையகனெள் வேற்கண்ணி, முலையும் வாராமுதுக்குறைந்தனளே. என்றார் பிறரும்.

(அ௩) கோடி - வஸ்திரம். தனத்தார் என்றது முலைகளை. பல்வடு - பலதழும்பு. கைவேல்புரி - கைவேலும்விரும்பும். கோக்கள் - கண்கள். வில்மை - ஒளியுள்ள வஞ்சனம். எடிக்கு - எடியெனப்படுவொளாகிய வெணக்கு. கோடியளவுள்ள பணக்காரர்களும் பலகுற்றங்களைக்கொண்டிருக்கிறார்கள் கைவேலை விரும்புமரசர்களும் வில்வலிமை யழிந்ததுண்டு என்பது மற்றொருபொருள்.

(அச) மலர்த்தடம் - சரவணப்பொய்கை. தடத்தெய்தும் வேள் எனக. கத்தி - வாள், எழுத்தாணிக்கத்தி. ஓர் மன்னர்தலைகொய்து - ஒரு அரசர் தலையைவெட்டி, ஒரு அரசரானவர் ஓலைத்தலையை நறுக்கி, இசைந்த திருமுகம் - பொருந்தியவழகுடையமுகம், எழுதிய வோலைச்சுருள். நென்னல் - நேற்று. மணம் - புணர்ச்சி, கல்யாணம்.

(அ௫) கொம்பு ஆரும் தும்பி - தந்தங்களையுடைய யானை, மரக்கிளையிலுள்ளவண்டு. ஒருவன்றனுளைக்குழைத்தது - ஒருவனுடலை மிகுத்துக் குழப்பியது, ஒருவலியவில்லை வளைத்தது. அம்பு - பஞ்சபாணம், ஐம் பொறியாகியவாளி. உருவின்மதன் - அழகில்மன்மதன். வடிவமில்லாத மன்மதன்.

(அ௬) குறிஞ்சி - குறிஞ்சிப்பூ, குறிஞ்சி நிலத்தார். வேய்தந்து - சூடி, சூழ்ந்துமூடி. கங்கு - கருந்தினைப்புனம். பருந்து. ஆம்பல் - அகரம், யானை. வேல் - கண், வேலாயுதம். சிவப்பு - செந்நிறம், இரத்தக்கறை. அனீகம் - சேனை. சூர் - சூரன். ஆடு - வெற்றி. தாகளாக்கிவேள் - தாகளாக்கின வருகிய வேள்.

(அ௭) வேள் - மன்மதன். இடைக்குவமானம். மருங்கு - இடை தாறு - செடி.

(அ௮) உடை - உடுக்கை. ஒப்பனை - அலங்காரம். உடைமுதற்குணமிறுதியாகியயாவுமொன்றுபோலவே யிருக்கின்றன. இருவருக்கு முயிரு மொன்றென்பதைத் தலைவி விழிகாட்டாநின்றதுமனமே நீ போவாயாக. நயந்து கொள்ளாதவருக்கு என்ன காரியம் நடக்கும். என்றவாறு.

(௯0) மால் - காமமயக்கம். திருமால்.

(௯௧) கார் - மேகம். இது கூந்தல். இருமதி - இரண்டு சந்திரன். இவை முகமும், நுதலும். கயல் - மீன். இதுகண். குமிழ்ப்பட்டி - குமிழப் பூச்சுருள், இது மூக்கு. முத்தூர் - முத்துக்கள் தங்குமிடம். இது வாய். பார் - காண்பாய். ஊருக்கு - ஊர்க்கு, துடைக்கு. பச்சைமயிலார் - குமாரக்கடவுள். தலைவி. குன்றக்குடி என்றது ஊரையும், தலைவிமுலைகளையுமென்க. இதில் - காரைக்குடி, இருமதி, எரூர், குமிழ்ப்பட்டி. முத்தூர், பாரூர், ஆரூர். குன்றக்குடி. என்னுமூர்ப்பேர்கள் வந்தமை காண்க.

(௯௨) அயன் - பிரமன். ஐந்தில் ஒன்று - காது. அலம் வந்திடாமல் - சுழற்சியடையாமல். குழை - குண்டலம். கொப்பு - சல்லடைக் கொப்பு; அது காதையடைக்குந் தகையது. தன் வினைவிற்கு விடைபகராமையால் பிரமன் செவிப்புலன் வைத்திலனேயென்றும். குழையுங் கொப்பும் காதையடைத்திருப்பதாற் கம்மாளன் கொண்ட பலனென்

னவோ வென்றுங் கூறினனென்க. பூங்கொடி யென்று சுழலாமல் இலைகளையும் கிளைகளையுமியையவைத்த பிரமன் என்பது மற்றொருபொருள். கம்மாளன் - கம்மியன், பிரமன். என்னவோ என மூலத்தைத்திருத்துக.

(கூரு) சுனை - அல்குல். கமலம் - முகம். கொடி - இடை. தாமரைத்தண்டு. பேதைமை - அறியாமை தெரிக்கேம் - தெரிந்திலேம். தன்வினை பிறவினையாக நின்றது.

(கூச) முத்தம் - பல். ஆம்பல் - வாய். சுமுகமதி என்றது விளி. அழகிய முகத்தையுடையவளே என்பது பொருள். தாவித்தத்தை - சிறைகளையுடைய கிளிகள். வாய் பகல் - வாய் நடுவில் வாய் அத்தம் - வாய்ந்தவழி, வாக்காகிய பொருள். இத்தத்தை - இந்த வாபத்தை.

(கூரு) வேற்படைக்கு ஒடியீர் - வேல்வலியிற் சிறந்தவரே. குறிஞ்சிச்சடைக்கொடி - வள்ளி நாயகி. இடைக்கொடி - இடையாகியகொடி, இடைப்பெண்.

(கூசு) தோகை - மயில்போலுந்தலைவி. மயில். கண்ணி - மாலை. பறவைபிடிக்குங்கண்ணி. அயில் - வேல்.

(கூஎ) தாவில் மயில் - தங்குமிடத்திலுள்ள மயில், குற்றமில்லாத தலைவி. கண்ணி - மாலை, மயிர்முடிக்கண்ணி. கொடிக்காலிடம் - குருக்கத்திப்பந்தரடியிடம். நீர்கொண்டகண்ணி - நீர் உட்கொண்டவழகுடைய கண்களையுடையாள். வெற்றிலைத்தோட்டத்தில் நீர் சூழ்ந்த பாத்தியைக் கண்டேன். என்றும் முன் மயிலுக்குக் கண்ணியைத் தலையிற்கண்டேனென்பதற்கியைய நீர் வைத்த கண்ணியைக் காக்கைக்காலிற் கண்டேன் என்றும் பொருள்கள் தோன்றுமாறுணர்க. இங்குக்கொடிக் கால் - வெற்றிலைத்தோட்டம், காக்கைக்கால்.

(கூஅ) தையர்படாதகலை - கலைஞானங்கள். பயிர் - பைங்கூழ். செல் ஒளிகுழை - மேகம்போலும்பசியதழை. ஒளிக்கு உழை எனப்பிரித்தால் ஒளியிருத்தற்குப் பார்வை மிருகமாகிய மான் என மற்றொரு பொருள் தோன்றுமாறுணர்க.

(கூகூ) பரந்தவொளியையுடைய குண்டலத்தைக் கரத்திலணிந்து கொண்டவரசர் எவர் என்பது மற்றொரு பொருள். கைக்சொள்ளல் என்பதற்குக் கையிற்கொண்ட என்றுரைக்க, அங்கீகரித்தல் என்றது மற்றொரு பொருட் குரைக்க, அது சுண்டுக்காதிலணிதலென்க.

(க00) பங்கம் - பழுது. அங்கம் - மேனி.

(க0க) வன்னிதொடரும் வனமாய் உலகம் மடுத்த - தீப்பற்றிய காடு போலூழி காலத்திலுலகத்தைத் தன்னுட் பெய்த. பிறைச்சென்னி - பிறையணிந்த முடியையுடைய சிவபெருமான். சோதிடர்சொற்றதுசிங்கவிராசி, கன்னி - தலைவி. கன்னிராசி. சிங்கம் - தலைவன். சிங்கராசி. குடிலம் - வஞ்சகம்; ஆகாயம்.

(க0உ) சூலம் - சூலாயுதம். கடிப்பு - குறுந்தடி. இட்டு - குத்தி. மோதினென நிரனிறையாக இரண்டு பொருள்கொள்க. கார்க்கோலம் - கருநிறக்கோலம். பூமலரா வேங்கை - புலி. பரியாசம் - விநோத வார்த்தை.

(க0௩) உழுவை - ஒரு மீன், புலி. புல் - புல், புலி. வரைத்த - அளவு படுத்திய; மலையின்கணுள்ள. கொடுவரி - கொடுமைசெய்து வாங்குமிறைப்பொருள். புலி. கைவல்லியம் - புலி; முத்தி

(க0௪) தும்பி - வண்டு, யானை. மாதங்கம் - பெருமையுடைய பொன். யானை. பட்சி - கருடன். நாகம் பாம்பு. யானை. கரி - இருந்தை யானை. விலங்கு - நிகளம், மிருகப்பொது இங்கு யானை. மா - மாமரம். யானை. கொம்பு - மரக்கிளை, தந்தம். காயம் - புண். ஆகாயத்தில்யானை வரவில்லை என்பது மற்றொரு பொருள்.

(க0௫) மருகி - சரஸ்வதி. மனையாள் - பூமிதேவி. மருப்பு எடுத்து என்றது இரணியாக்கன் பாயாகச்சுருட்டிப் பாதலஞ்சென்றபோதுஎன்க ஒரேன மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகிறாள். என்னும் பாரதச்செய்யுளிங்கு நோக்கத் தக்கது. கோலம் - அழகு, பன்றி.

(க0௬) இவ்வனத்தில் ஆங்கவரைக்காப்பார்கள் எனக்கூட்டுக. ஆங்கவர் என்றது அடிப்பாரை. காத்தல் - தடுத்தல். மயில் வரைநாதனை நோக்கி நொடிப்பாய் வினவும்! என்றது குமாரக்கடவுள் திருமாலாகிய பன்றியைத் தொடர்ந்து கொம்பைக்கவர்ந்து வந்தவராகலான் அவரையே கேளும் என்றாள் என்றவாறு. முரசங்கறங்கியபோது எனப்பின்னுங் கூட்டி யிடைநிலைத்தீவகமாகக்கொள்க. இப்பொருட்கு நோக்கி என்றது கருதி என்றபடி. அந்தமாக்கோலம் என்றது தினைமாவாலிட்ட கோலங்களை. வேல்பட்டிருப்பது - வேல்வடிவுற்றிருப்பது. முரசங்கறங்குதல் விழாச்செய்தற்கென்க. கடிப்பு - குறுந்தடி.

(க0௭) பணித்தச்சனுக்குப் பகை என்றது பாம்புக்குப் புற்றாகிய வீடு கட்டுங்கரையானாகிய தச்சனுக்குப் பகையாகிய கரடி என்க. குதிரைத்தடம் பார்த்தவன் - கிருஷ்ணன். மணி - சமந்தகமணி. மாது - சாம்பவதி. அளித்தது - சாம்பவான் என்னுங் கரடி. வானரத்தின் அணி என்றது மூலபலங்களை. தலைமைக்குள் ஒன்றானது - சாம்பவான். கணித்த - மதித்த. பல்லுகம்;-கரடி. குதிரைத்தடம்பார்த்தவர்க்கு மணித்தொட்டின் மாதை யளித்த வரலாற்றைப் பாகவதத்தானறிக.

(க0௯) அறுகு - அறுகம்புல், சிங்கம். புல் - புல்லு, புலி. தூங்கல் - வலியிழந்தவன், யானை. பல்லுகம் - கரடி, பலயுகம். காங்கேயன் - குமாரக்கடவுள்.

(கக0) பைத்தாரணியவர் - ஆதிசேடன் படத்தாற்றாங்கு முலகத்தவர். தாமரையென்று சொல் பட்டம் என்றது தாவுகின்றமரையென்று சொல்லுக்கவரிமான் என்றபடி. பட்டம் - கவரிமான். தாமரைவடிவமாயிருந்ததினாலே தாமரையென்று சொல்லத்தக்க பறக்கும் பட்டம் என்பது மற்றொரு பொருள். வடம் - கயிறு. அணியாகும் - அலங்காரப் பொருளாகும். சாற்றில் - சொன்னால்.

(௧௧௧) சாமரை - சாதலையுடைய மரை; கவரிமான். தாமரை - தாமரைப்பூ; தாவுகின்றமரை. காமர் என்றது மன்மதனை. கார்மயி லாம் மாமர்என்றது கரியமயிலுருவங் கொண்டுதாங்கிய விந்திரனை. அரு ள்வைத்திடின் அரைநாழிகையிற் பட்டங்கட்டுவது யாருக்குமாம் என்க. ஆம் - ஆகும்.

(௧௧௨) மான் - இயற்சொல். மறி, பிணை, என்பன மானின் பெயர்களாகிய திரிசொற்கள். திரிசொல் - இயற்சொல்லின் வேறுபட்ட சொல். இருமன்னர் என்றது இராமலக்குமணர்களை. வருத்தியது என்றது மாரீசனாகிய பொன் மானை. எஃகு - வேற்படை. ஏந்திழை - வள்ளிநாயகி.

(௧௧௩) ஏதம் - குற்றம். மறி - தடைசெய். பிணையென்றவரை - அடைக்கல மென்றவர்களை. அமர் - யுத்தம். கைப்பட்டது - கையில கப்பட்டுள்ளது. முனிவர் - தாருகாவனத்து முனிவர்கள். மான் - மான் மஹான்.

(௧௧௪) சஞ்சீவகன் - ஒருஎருது. கேசரி - சிங்கம். வஞ்சிஎன்பது விளி. சரித்தது - சஞ்சரித்தது. சோமன் - சந்திரன். சசம் - முயல். அதையுடையது சசியாகலான் சோமற்குநா மம்வழங்கியது என்க. பஞ் சீகரித்தபுவி - பஞ்சபூதங்களாலமையப் பெற்றவுலகம்.

(௧௧௫) உவாமதி - பூரணசந்திரன். சிவன் கால்முய லென்பது முயலகனை. முயல் - போர். முசல். எமக்குமுயலேது என்றது யான் குறிஞ்சி நிலத்திலுள்ளாளாகலான் நீர் கேட்குமுயல் பாலை நிலத்தாரிடத் தும்; முல்லை நிலத்தாரிடத்துமேயுண்டு என்றாள் என்றபடி.

(௧௧௬) பொன்மான் வினுதல். கேளாதன என்பது விநோதவார் த்தைகளை. திண்ணன் - கண்ணப்பநாயனார்.

(௧௧௭) கர்கடகமதி - (மழைமிகுதியாகப் பெய்வித்தற்குரிய) கடக சந்திரன். மர்கடகம் - குரங்கு. பொன்மானிற்கு அடகாம் எந்தும் குழைஎன்க. அடகு - இலையுணவு.

(௧௧௮) சுரம், சரி, வாரி, பட்டம், அத்தம், நெறி, என்பன பாதை யென்னு மொருபொருள்குறித்த பலபெயர்த்திரி சொற்கள். அரசவனம் என்பது அத்தலத்துக்கு ஒருபெயர். சரவணம், வையாபுரி; என்பன தீர்த்தங்கள். மருதுதுரை செய்தடாகம் - மருதாபுரி.

(௧௧௯) நெறி - நீதி. உத்திரம், அத்தம், என்பன நட்சத்திரங்கள். பட்டம் என்றது பறக்கவிடும் பட்டத்தை. வாரி - கடல். சரி - கைவளை. சுரம் - சுரநோய். ஊருக்குப்பாதைபதம் அலர் என்பது பக்குவமில்லாத வர்களாலூருக்குத்துன்ப முண்டு என்றவாறு. பதம் - பக்குவம். பாதை - வாதை.

(௧௨௦) கண்ணி - மாலை; பறவை பிடிக்குங்கண்ணி. தோகை - தலைவி, மயில்.

(கஉக) நச்சம் - பொய், கவர்பொருள் - சிலேடைப்பொருள். கைவில்லானுமின்று - கையில் வில்லாயினு மிலது. ஆயினும் என்பது ஆனும் எனவிடைகுறைந்து நின்றது. ஒன்றானுந் தீச்செல் எனத்திருக்குறளிலும் வந்தமைகாண்க.

(கஉஉ) இவட்கு ஐயம் அவ்வகையால் முன்னீர்ந்தனம் மன்னர்க்கு ஆளிமுதல் இவ்வகையான் ஐயம் மாறினம் எனக்கொண்டு கூட்டுக. அவ்வகை யான் என்றது நாற்றமுதலிய வெழுவகையானு மையமுற்றோர்ந் தனை. இவ்வகையான் என்றது சிங்கமுதலியன வினவியவற்றை என்றபடி. கைவகைசெய்தவர் - ஒப்பனை செய்தவர். மாறினம் - நீங்கினம் இவட்கு, மன்னர்க்கு என்பன உருபுமயக்கம்.

(கஉங) மயில் பூதரத்தார் என்றது மயூரகிரியிலுள்ள தலைவியை. வாரணம் - யானை. கனம் - மேகம். கா - சோலை. குழல்-கூந்தல். அலம்புதல் - ஒலித்தல். முலையையும், சாயலையும், கண்டு தன்னின மெனக் கருதியும் மிடம் வருமென்றான் என்க.

(கஉச) பரதர் குலம்புரிகாதை - பாரதம். விரதம் பிறவினன்றேயென்றது சத்தியமல்லாத பிறவிரதங்களானில்லை என்றபடி. உற்றது சொன்னாலற்றது பொருந்து மென்பது பழமொழி. மிருகம் என்பது சிங்கமுதலாயின வினவியதை. சரதம் - சத்தியம். தருந்தரும் என்னும் அடுக்கு எதிர் மறைப்பொருள்தந்து நின்றதுணர்க.

(கஉரு) மேலாந்திருக்குவிவேகத்தின் அத்துவிதம் தெரித்தார் என்றது கண்ணறிவாராய்ச்சியாலிருவரும் ஒருவரென் றறிவித்தார் என்றபடி. (வேதாந்தியர்) ஞானசாத்தி ரவுணர்ச்சியாற் சீவாத்மா, பரமாத்மா வென்னுமிரண்டு மொன்றென் றறிவித்தார் என்பது மற்றொருபொருள். திருக்கு - கண், ஞான சாத்திரம். பால் - பக்கம். மால் - ஆசை. வெண்பிறை புன்னகை. திருக்கு என்பது ஞான சாத்திரத்துக்கு ஆகுபெயர். ஏனல் காவலிவளுமல்லள். மான்வழிவருகு வனிவனுமல்லன். நரந்தங்கண்ணியிவனொ டிவளிடைக்கரந்த வுள்ளமொடுகருதியது பிறிதே. நம்முணுணர் போலத்தம்முண் மதுமறைந்துண்டார் மகிழ்ச்சிபோலவுள் ளத்துள்ளே மகிழ்வு சொல்லுமாடுவகண்ணினனே. என்பது இங்குநோக்கத்தது.

(கஉசா) தேன் - வண்டு. சாதி - சிறுசண்பகம். சூனு என்றது உபமன்னிய முனியாகிய குழந்தையை.

(கஉஎ) கூர்விழிமான் என்றது தலைவியை. கலைமான் - கலையாகியமான். கலைஞானங்களைக் கற்றதலைவன். அரைவாசி - அரையாகிய பாகம்; அரைவட்டி.

தர - நான்தர. கொள்ள - நான்கொள்ள. இசையில் - நீரிசைந்தால். பகர்பணிசெய்வது - நீர்சொலலும் பணிவிடையையான் செய்யத்தக்கது. விற்கத்தக்க ஆபரணத்தையான் செய்யத்தக்கதா மென்பது மற்றொருபொருள்.

(கஉஅ) பங்கம் - குற்றம். தரளம் - முத்து. துங்கம் - உயர்வு. வங்கம் - ஈயம். சங்கம்பழந்தரளத்தை யொவ்வாது என வொருபைப் பிரித்துக்கூட்டுக. உமக்கும் நம்தோகைக்கும் குலம்பார்க்கினும், சேர்க்கையைப் பண்ணினும், பங்கந்தரும் என்க.

(கஉக) எனையவர்போலென்றலானும் என்றது மேற்பாட்டில் வே ள்போலுமக்கும் என்றமையாலென்க. மன்னர்க்கு நாற்குலமாசிலை என் றது யான் க்ஷத்திரியனாகலான் எனக்குக் கீழ்பட்ட வருணங்களில் விவா கஞ்செய்துகொள்ளுதல் சாத்திரமுறைமையாம். ஆகவே யுன்றலைவியை யான் மணப்பதால் நால்வகை வருணாச்சிரம தருமத்துக்கு இழுக்கில்லை என்றவாறு. தவப்பொன் - பெரும்பொருள்.

(கஙo) ஊறு - இடையூறு. மீன் - தாரகை. அறல் - கருமணல். இவ்வூர் மடவாரளவுக்குத் தாரகையும் கருமணலும் நிகரன்று என்க.

(கஙக) எந்திழையாளுருக்காணின், வலைப்பட்டமான், மழைகண்ட மயில், பசுங்கிளி, நின்னுயிர்ச்சேக்கை, பிடி, பவளக்கொடி, துடியிடை. ஆம் என்க. சன்னம் - சிறிது. துடி - உடுக்கு. சேக்கை - தங்குமிடம்.

(கஙஉ) தேனுந் தினையுந்திரட்டி வேட்குதவ ஒருநாள் வருமென்க. கான் - கற்பகச்சோலை. நிதி - சங்கநிதி, பதுமநிதிகள். நன்மனை - தலைவி வீடு.

(கஙங) சஞ்சாளிகம் - வண்டு. போகில் - பறவை. கோ - அர சன். வேலனுமம் - வேள். இது மன்மதனுக்கும் பெயர். ஏ - பாணம்.

(கஙச) மற்றுருரைக்கினும் என்றது கல்லார்பாற் கற்றாருங்கற்றார் பாற்கல்லாரும் என்க. வாரி - கடல். பற்றார் - சூரன் முதலியோர். விற் றார் - தலைவி. கொண்டார் - தலைவன். மிறை - குற்றம்.

(கஙரு) வட்டில் மதி - வட்டினீரிற்றோன்றுஞ் சந்திரன். ஓவியம் - சித்திரம். முகமன் - உபசாரவார்த்தை. ஆவலங்கொட்டல் - வாயா லாரவாரஞ்செய்தாடல் பெண்குறை - தலைவியாலுண்டாகிய குறை. கெட்டி என்றது தகுதியென்னு மிகழ்ச்சிக் குறிப்பு. முன் மூன்றடியினு ங்கூறியவைகட்குப் பேதமையுடையார் என்பது கருத்தாகக்கொள்க.

(கஙசு) திராமிளம் - தமிழ். பூவை - நாகணவாய்ப்புள். கொன் - அச்சம். குழை - தழை. அடுஞ்சிந்தை - கொல்லுமெண்ணம். வன் கண்மாதர் என்றது கொலைத்தொழில் புரியுங் குறவர் மாதராகலான் என் றபடி. உன் உழை - உன்னிடம். உன் - நினைப்பாய்.

(கஙஎ) பரவை - கடல். வந்தவன் - சூரன். தேர் - இந்திரஞால த்தேர். நிட்களம் - அவயவமில்லாத ரூபம். சகளம் - அவயவத்தோடு கூடிய வுருவம். இளநீர் - தலைவி முலைகள், தெங்கிளநீர். ஓர்நாள் துயர் ந்தது என்றது ஒருநாளிற் றுன்புற்றதை.

(கஙஅ) மரியாதம் - சம்மானம். பிசகா - பிழைபடா. ஆங்கு - அவைபோல. சிலையாமெழுத்துஞ் சகாயமுங் கீர்த்தியுஞ் செந்தமிழு, நிலையாகு மன்னர்சொல் வார்த்தையு மென்றைக்கு நிற்குங் கண்டாய். என்னுந்தனி சிங்கமாலையின் கொப்பு நோக்கத்தக்கது.

(கஙகூ) அஞ்சுகமே - அழகியகிளியாகியவளே. பீறிய - பிளந்த, கிழிந்த. மெய் - சரீரம். தையலை - தலைமகளை, தைத்தலை. ஊறு - துன் பம், பீற்றல். பெரும்பாசம் - பேரன்பு, பெரிய நூலிழை.

(கசO) வல்லிக்கொடி - வல்லியாகிய கொடி. மணம் - சேர்க்கை. தாரு - மரம். புல்லி - தழுவி. செல் இக்கொடி - செல்லுகின்ற விந்தக் கொடிகள். கமுகிற்றிகழ் சேந்தன்மயில்வரை என்க. ஆல்லிக்கொடி என்றது ஆம்பல் மலர்ந்தகொடிபோன்ற தலைவியை. ஆம்பல் என்பது வாயை.

(கசக) மங்காய் - மங்கையே. எனக்காய் காடும்புக்கு ஆடும் - கானகமும் என்னிரக்கங்கொள்ளப்பெற்றுத் தலைநடுங்கும். கனியுங்கனியும் - பழங்களுங் கனியாநிற்கும். தேடுங்குகன் - (அன்பர்கள் வேண்டுவதை யளிக்க அவர்பாற்) றேடிச்செல்லுங் குகன். என்கைசூடுமலர்தனை என்றது கையுறையாகிய மலர்மாலையை. மணம் - கல்யாணம், வாசனை. வாடும் அலர்தனை - வாடியபூவை, வாட்டத்தைத்தரும் பழிச்சொற்களை. செப்பில்-மேற்கொண்டு சொல்லின், மணமென்பதுண்டாம். வாடும் அலர்தனைத் தந்தால், மணமுண்டோ என்க.

(கசஉ) ஐயானனம் - சிங்கம். கைமாத்திரள் - யானைக்கூட்டம். ஆறலைப்பார் - வழிப்பறிக்காரராகிய வேடுவர். உரு - அழகு. மாலையணிய மயில்வரைஎன்றது துவாபர யுகத்திற்சாம்பவதிக்குப் புத்திரப்பேற்றைக் கருதிக் கிருஷ்ணன் ஸ்தலவாசம்பண்ணியதால் என்க. இதைத் தலபுராணத்தானறிக. உன்னலர் என்-உன்மலர்மாலை யெங்களுக்கேன். திருவன்றி - இலக்குமியை யல்லாமல், திருமாலைமேற்கொண்ட மின்னார்களில்லை என்க. திருமால் - விஷ்ணு எனவே எங்கள் தலைவியாகிய திருவுக்குன்மாலைவேண்டியதில்லை என்பது கருத்து. ஐயானனமுதற்சொலை யிறுதியாயினவருமென முடிக்க.

(கசந) கதிரோன்கதிர் - சூரியகிரணம். விகாசிக்கும் - மலரும், சுருக்கை, கத்திகை, கண்ணி, ஆரம், இவைமாலைக்குப்பேர். ஆசைப்புள் - ஆசையாகியபுள், கண்ணி என்பது பறவைபிடிக்குங் கண்ணிக்குங் கொள்க. ஈசன் என்றது சிவபிரானை. அரிவையர்க்குரிய மாலை - சுருக்கை, கத்திகை, கண்ணி, ஆரம். எனமுடிக்க. இராவரு மதிக்குமீசன் என்றது இரவில் வருஞ்சந்திரனுபாதியடக்குதற்கு இம்மாலை சிவபிரானுகுமென்பது கருத்து. சிவபிரான் சந்திரனை முடியிலடக்கி வைத்தலாலிவ்வாறு கூறினனென்க.

(கசச) ஆரக்கழுத்தியர், மாலையையணிந்த கழுத்தையுடையவர். முத்துப்பிறக்குங் கண்டத்தையுடையவர் என்பது மற்றொருபொருள். உயர்குடிக்கற் புடைய மடவார்கண்டத்தில் முத்துப் பிறக்குமென்பது மரபு. சுவாமி மயில்வரைவேங்கை யெண்ணி. என்றது மயில்வரையிலுள்ள சாமியாகிய வேங்கைமலருங் காலத்தைக்கருதி என்றபடி. பறையறை போது - உற்சவகாலமென்றபடி. பரிப்பது - தரித்துக்கொள்வது குமாரக்கடவுள் வேங்கையானது வள்ளி நாயகிதினைப்புனங்காத்த போதுஎன்க.

(கசரு) என்மாலை - என்னாசையை. மின் - மின்னுகின்ற. கையணிமீதல்விரும்பின் - யான் மோதிரத்தைக்கொடுக்க விரும்பின். பொன்மாலை வேண்டிலர் - பொன்னாலாகிய மாலையை விரும்பியணியாதவர். முத்திகாயாழி பொறுப்பதின்றே - (எவருமறிந்து கொள்ளத்தக்க) முத்திரை மோதிரத்தையணிந்து கொள்வதில்லையே என்றவாறு. திருமாலை வழி

படாதவர் சக்கரமுத்தி ராதானத்தைத்தாங்கு வதில்லை என்பது மற்றொருபொருள்.

(கசசு) மாலையில் - மாலைக்காலத்தில். மாலைவிண்டு - ஆசைமிகுதியைச்சொல்லி. மலர்க்காலை - மலர்போலும் பாதங்களை. கொடி என்றது சேவலை. வேலை - கடல். சூரனை - சூரியனை.

(கசஎ) பொறுக்கிலர் - தாங்கிலர். கருக்கேறுஞ்சிந்தை பனங்கருக்கு மட்டை யாலாகிய குதிரைமேலேறுமனம். பெண்களைவிரும்பினுற் கபடமுள்ளமனமும் வேண்டும். என்பது மற்றொருபொருள்.

(கசஅ) தகர் ஆட்டுக்கடா. எருக்கு - எருக்கம்பூமாலை. இது சிவபெருமானுக்கும், மடலேறுவார்க்கு முரியது.

(கசகூ) கடம் பெற்றதாருகன் - மதம்பொருந்தியயானை முகத்தையுடையதாருகாசுரன். வெற்பு - கிரவுஞ்சகிரி. படம் - தலைவியுருவந்தீட்டியபடம்; பாம்பு. திருமாலெனப்பாவிப்பார் - இலக்குமியையனையதலைவிபால்வைத்தவாசையாலென்று வழங்குவர். அழகிய சேஷசயனத்தில் வீற்றிருந்தால். திருமகளுந்திருமாலு மெனப்பாவனை செய்வார் என்பது மற்றொரு பொருள்.

(கரு0) மயல் - காமமயக்கம். குழற் சொருக்கைப்போலவும், முலை நெருக்கைப் போலவும் முலைக்குழைவைசசிறிது மெழுதுவ தரிதாமென்க.

(கருக) விருப்புக் காப்பதற்கும், வெறுப்புச்சத்துரு நாசத்திற்குமென்க. குன்றம் - மேருமலை, முலை. குழைய - வளைய; குழைவாக எழுதல் - எழும்புதல், எழுதுதல்.

(கருஉ) பழயசெயல் - சஞ்சிதவினை. புதியசெயல் - ஆகாமியவினை. பயில்செயல் - பிராரத்துவவினை. வெற்பணங்கே, தழைவல்லி, என்பன விளிகள். சாதகத்தில் - பயிற்சியால். தீட்டும் - எழுதும். கொம்புஎன்றதுதலைவியை. சார்பு - உதவி.

(கருங) ஓகை - மகிழ்ச்சி. குரும்பை முலைப்பெண் - இரதி தேவி. கரும்பனை - கரும்புவில்லையுடைய மன்மதனை. கருமையாகிய பனையை. கூடு - சரீரம், அன்றில் முதலான பறவைக்கூடு.

(கருச) கடுபூனைக் கைமுகன் - விநாயகக்கடவுள். பின்னோன் - குமாரக்கடவுள். விரும்பு இடும்பனை என்றும் விரும்பிடும் பனையென்றும் பிரித்துரைக்க. பல் பெண்ணையணை தலை - பலபனைமடல் களாலாகிய பனைமடற் குதிரையைச் சார்தலை, பலபெண்களைப் புணர்தலை என்பது மற்றொரு பொருள். தடும் - தடுத்துவிடும். நிலைகோடல் - நிச்சயப்படுதல்.

(கருரு) வார் - கச்சு. மதக்கூத்து - மதனநாடகம். மல்லவிளநீர் - வளப்பத்தை யுடைய விளநீர்.

(கருசு) சித்திரம் - ஆச்சரியம். மங்கைக்கு உள்நாண் உற்றது உண்டு என்க. துங்கம் - பெருமை. சங்கு - சங்கமுள்.

(கருஎ) ஒருமலர் என்றது கையை. பலகாய் - விளையாடற்குரிய பலகழற்சிக்காய். பாண்டி - பத்துக்காயுள்ளவை. பசு - நான்குகாயுள்ளவை. பதினுன்கு என்றது பன்னுன் குழியென்றபடி. இச்சை - ஆசை. இக்கவியிற் பன்னுன்குழியாடுகிறது என்னுமொரு விளையாட்டைக்கூறியதறிக. பன்னுன்கு குழிவிளையாடுகிறது என்பது பன்னுன் குழிவிளையாடுகிறது என மரூஉ வாகவழங்கப்படும்.

(கருஅ) பகுதி. விகுதி. பகுதிவிகுதியென்னு மிருமொழிகளின். இடைநிலை-நடுவிலுள்ளனவாகிய எழுத்து (இரண்டுகு) அது துவக்கு. துவக்கு - சரீரத்தில். சார் இயையும் - பொருந்தி யியைந்திருக்கும். துக்கம்-துன்பம். இல்லாதுறும் - இல்லாதிருப்பாள். சந்திவிகாரமுந்தோன்றும்-சந்திக்கின்ற காமவிகாரமுந்தோன்றும். கொக்கு - சூரனுகிய மாமரம். குருகு - கோழி. குன்றுறைவோன் - தலைவன். பதம் - சொல். வந்தனன் என்னும் பகுபதத்திற் பகுதி முதலான பகுபதவுறுப்பு ஆறுந்தோன்று மென்பது மற்றொருபொருள்.

(கருகூ) பாவை - தலைவி, பதுமை. கோவை செயுந்துணை - கோக்கப்படுங் கயிறு, பாங்கி. ஆட்ல் - ஆடுதல், கூடுதல். குன்றையுள்ளார் என்றது முருகக்கடவுளை. சேவை - வழிபாடு. வையம் - உலகம்.

(கசூ0) நாலின் முதல் நகை என்றது எள்ளல், இளமை, பேதமை, மடம், ஆகிய நான்கனுள் முதலாவதாகிய எள்ளல் நகையை. பாங்கிநகை அமுது போலிருப்பினுந் தன்னைவருத்தலினுல் ஆலமதா கினுமென்றும், அப்பாங்கி கட்பார் வையிதஞ்செய்தலான் அமுதென வாக்கியதென்றுங் கூறினுன் என்க. அமுதாக்கியது விதியென்க. நகை நான்காவன - எள்ளலிளமைபேதைமை மடனென். றுள்ளப்பட நகை நான்கென்ப என்னுஞ் சூத்திரத்தாலறிக.

(கசூக) சண்பகவல்லி - மரணபரியந்தம் புருஷரைப்பார்ப் பதில்லை என்று சபதஞ்செய்து கொண்ட விசயமாநகரத்து விஜயரங்கராசன்மகள் இவ்வரலாற்றை விக்கிரமாதித்தன் நான்காவதுபதுமைக் கதையானறிக. தமிழ்சொரி சிந்தாமணி - தன்பரிவாரங்களுந்தானுங் கேட்குங் கேள்விகளுக்குக் கவியால் விடைபகர்ந்து வென்றவருக்கு மாலையிடுவதாக வாக்களித்தவள். இவள்வரலாறு வீரகுமார நாடகத்தானறிக.

(கசூஉ) வெப்பும், குளிரும்என்றது கூன் பாண்டியனுக் குண்டாகிய சுரத்தையுங் குளிரையும். சமமாக்கி என்றது திருஞான சம்பந்தரவதாரமாகி விபூதி தடவிச் சமன்செய்ததை. கொப்பு - கிளை, ஒருகாதணி. குழை - தழை, காதிலணியுந்தோடு. சுப்பிரமணியர் திருஞான சம்பந்த நாயனாராக வந்தாரென்பது பசாரக்கூற்றென்க.

(கசூங) முறி - தளிர், முறிச்சீட்டு. எழுத்து - தலையெழுத்து, கையெழுத்து: விலைப்பொருள் - கிரயத்துக்கு வாங்கிய பொருள், நடுவணை, நடுவெழுத்தெழுதுஞ்சாட்சி. விலைப்பொருள் என்பதற்கு வில் லைப்பொருள் என்பது மற்றொரு பொருள். வில் - தனுசு.

(கசூச) பூ - பூமி. இருதாமரை என்றது தலைவி பாதச்சுவடுகளை. மயில்மா - மயிலாகிய குதிரை. இரண்டுதாவுநின்றமரையென்பது மற்றொரு பொருள்.

(கசுரு) குயில் - மேகம், குயிற்பறவை. பல்நாகம் - பலபுன்னை மரம், பல்லையுடையபாம்பு. பூவை - நாகணவாய்ப்புள், காயாஞ்செடி. மயங்குதல் - சேர்தல், கலத்தல். சுகம் - கிளி, இன்பம். ஆவி - தடாகம். மஞ்சு - மேகம்.

(கசுசு) அனகன் - குற்றமில்லாதவன். உன்மேனி என்றது மாந் தளிரை. அது ஆகுபெயர். பொய்யிற் சேர்ந்தபொன்மான் - பொய்ம் மான். வனமயில் - அழகுடைய மயில். புனமயில் என்றது தலைவியை. ஒருவன்வந்தது கண்டேன் எனக்கூட்டுக.

(கசுஎ) சின்னம் - குற்றம். வரையவர் - தலைவர். இனம் - குலம். இனத்தோடினஞ் சேருமென்குதலெண்ணிலை என்றது அவர் குலத் திற்கும் என்குலத்திற்கும் இயைபில்லையே என்றபடி.

(கசுஅ) கால் - காற்று. ஆலும் - அசையும். கதிர் - சூரியன். ஒரு வர் என்றது தலைவரை. மால் - காமமயக்கம். பால் - பக்கம். குறிப் பறிவுறுத்தலாற் கண்வேலைக்கூறினார்.

(கசுகூ) பொன்னை மறைப்பது என்றது பொருளுடையராயிருப் பதை மறைப்பது.

(கஎ0) ஆரக்குழை என்பதில் முன்சொல் ஆர். அதுஆத்தி. நடு முற்றிய சொல் அக்கு. அது சங்குமணி. பின்சொல் உழை. அதுமான். நகையாம் என்றது ஆரக்குழை- அதுமுத்துக்குழை. நகை - ஆபரணம்.

(கஎக) அல் - இரவு. இல் - மோக்ஷவீடு, வீடு. நாலெழுத்தின்குணம் என்றது பித்தன். என்றபடி. விரகம். எனினுமமையும்.

(கஎஉ) வாவி - மருதாபுரி. அனம் - பெண்ணன்னமும், ஆணன் னமும். பிரிந்தால் மாரன்கைக்காவிகொல்லும், உன்கட்காவிகாக்கும் ஆக லான் மறுப்பது தகுதியன்றென்பது கருத்து.

(கஎஙு) அடவி - காடு. கொடிப்போது என்றது தலைவன் சமயம் வாய்க்கப்பெறாமையால், மரங்களிலும், செடிகளிலும், போகட்டு வைத்த கொடிப்பூக்களாலாகிய மாலைகளை. புடவி - பூமி. புனற்போது என்றது காடெல்லாந் தேடியலைந்த தலைவனுடைய தாமரைமலர்போன்ற பாதச் சுவடுகளை. பனை - மடன்மா, பனைமரம். படர் - துன்பம். புன்றொழில் பாவிப்பதுண்டோ வெனக்கூட்டுக.

(கஎச) கலைமான் - ஆண்மான், கலைஞானங்களையுடையதலைவன். கண்ணுனவலை - கண்களையுடையவலை; கண்ணுகியவலை. புனம் - காடு. தரம் - தகுதி. தனம் - முலை. மூன்றட்சரவாசம் - புழுகு. அது புனுகு, பொய். தனத்திலணிந்துகொள்ளும் வாசனையை நாவிற் பூசிக்கொள்ளு வது தகுதியற்றதென்பது கருத்து.

(கஎரு) கவர்பொருள் - இரண்டுபொருள். மலைமான் என்றது வள்ளிநாயகியை. சிலைமான் என்றது தலைவனை. இரண்டுதொழில் என் றது படமெழுதல், மடலேறுதற்றொழில்களை. ஆண்யானை பெண்யானை யைப் பிரியாதகாவென்றதனுற்றானுந் தலைவனைப் பிரியாதிருக்கவேண்டு மென்பதுள்ளுறை.

(கஎசு) காமன் - இந்திரன். இன்பப்புள் என்றது இன்பத்தைத் தருந்தலைவனை. மதப்பூசை - மன்மதன்பூசை. நீகண்ணிகொள்ளநான் புள்ளைக்கொண்டேனென்பது மற்றொரு பொருள், பத்திரம் - தழை.

(கஎஎ) தூவி - இறகு. மஞ்சரி-மாலை.அல்லது தளிர். கோவைவிண்டாள் - மகளிர் சேர்க்கையினின்று நீங்கினள். வாய்திறந்தாள் என்பதுமாம். உலாவும் - உலாத்தலும். எவ்வண்ணமும் - எவ்வகையான அழகும். எவ்விதமும். கூட - சேர. பிள்ளைப்பாவை விண்டாள் - பிள்ளைவடிவாகிய மரப்பாவையை யெறிந்துவிட்டாள். சகிவிடுதூதும்பசர்ந்தனள் - உன்னைவருமாறுஞ்சொன்னாள் என்றவாறு. இதில் காவியம், கண்ணி, மஞ்சரி, கோவை, பிள்ளைப்பா, தூது, என்னும் பிரபந்தப்பெயர்கள் வருமாறுணர்க.

(கஎஅ) காலாயுதம் - கோழி. உய்யாமையிலான் - நித்தியமாயுள்ளவன். சாயலானது மயிலாகிச், சொல்லானது கிளியாகி, யிடையானது கொடியாகிச், குழலானது காவாகும் புனமென்க.

(கஎகூ) ஆடியசுனை என்றது இறைவனை. மதமாவிளம்பிடி என்றது முன்றலைவிகூறிய குறிப்புரை. கஎடு-ம் பாடலானறிக. ஆறுதாமரை என்பது ஆறுமுகங்களையுடைய குமாரக்கடவுளையும், ஆறுவகையாகிய தாமரைகளையும் என்க. அறுவகையான கண்ணிரண்டு, முகமொன்று, கையிரண்டு, வாயொன்று என்க. பாரவர் - தலைவர், பாரிலுள்ளவர். அர்ச்சித்தலாவது கடவுள் பாதங்களை யர்ச்சித்தலும், தலைவியாதங்களை நடந்து வந்ததால் நோவுற்றதென்று கண்முதலிய வற்றி லொற்றிப்பாராட்டுதலுமாம்.

(கஅ0) அலை - கடல். ஆறறல்கொள்வோன் - மன்மதன். சிலை - கரும்பு. அஞ்சம்பு - புட்பவகை.

(கஅக) அரைமனை - அல்குல். வேலைவிடோ - வேலைவிடவோ? மதியாலம்புயம் - தலைவிமுகத்தாற்றலைவன்முகம். மலர்த்தோ - மலரச்செய்யவோ. மின்னிருள் என்றது பூவுள்ள கூந்தல்.

(கஅஉ) அகம்பிர்ம்மமேயென்று-நான்பிரமமேயென்று. அதுவாதல் போல - அப்பிரமத்தோடபேதமாயப் பிரமமேயாதல் போல. நானவளெனலால் அவள் தன்னுருத்தோற்றினன் என்க. உருத்தோற்றினன் என்றது மஞ்சள், மை, பாக்குச்சிவப்பு, வளைச்சுவடு, தாடனக்குறி, செம்பஞ்சுச்சுவடு, பற்குறி, பூசுவன, இன்பம், தொய்யில், பவளம், முத்துமாலை, பதக்கம், முதலியவவயவச்சுவடுகளையென்க.

(கஅங) கையாற் சிலம்பு வளைத்தல் என்றது மேருவை வில்லாக வளைத்ததை. காலாற் சிலம்பு வளைத்தல் என்றது நூபுரங்களணிந்திருத்தலை. தெறித்தல் - பாணமெய்தல், கூடலாலுடம்புபூரித்துச் சிலம்பு ஒடிதல். முப்புரம் - திரிபுரம், மூன்றுடம்பு. மூவர் - சுதன்மன், சுசீலன், சுபுத்தி. விசுவன், நைசதன், பிராஞன் என்பாருமுளர்.

(கஅச) பழுதுகொண்ட ஆயம் - சொற்கேட்டாணகிய சூது. ஆயம் - பாங்கியர் கூட்டம். பழுது - குற்றம். எழுதிய சித்திரமென்றது மடலூர்தற்கெழுதியதலைவி படத்தை. இது மடலூருங் குறிப்பு. உருஎன்றது அவயவச்சுவடுகளை.

(௧அ௫) வெளிப்படை.

(௧அ௬) ஆறுகால் கொண்டயானை என்றது யானை வண்டாகிய கூந்தலை. வேங்கை என்றது வேங்கைப் புட்பங்களை. நாலாறு - தத்துவமிருபத்து நான்கு. காலாறு மூன்றுபங்கு என்றது மூன்று இருகால் என்றபடி அவை : இருகால் - அரை. அது இடை. துவண்டது. இருகால் - இரண்டுபாதம். அவை கன்றியன. ஒருபங்கு வீச என்றமையான். இருகால்- பெருங்காற்று. இருங்கால் - இருகால் என நின்றது. மால்ஆறு - மயக்கம் நீங்கு. மால் ஆறு என்றமையான் இருகால் என்பதில் இருந்து மயக்க நீங்குவாய், காற்று வீசவருவாயாக. எனினுமாம்.

(௧அ௭) அன்றில் பேடையை நீங்காத்துறைவா என்பதுள்ளுறை. மாதை - மாதர்களை. முத்தேவர் - திரிமூர்த்திகள். அடையலன் - சூரன். வடு - மாங்காய், குற்றம். நடுத்துணிதல் - நடுத்துண்டுபடுதல். ஞாயம் வேறுபடல். குருகு - சேவல், வளை. பிணிமுகம் - மயில், நோயுற்றமுகம்.

(௧அ௮) புயமுமுத்தாரமுமென்றது எதிர் நிரனிரை. முரையுரைத்தல் - நாள்வரையறைகூறல்.

(௧அ௯) மூன்று - தினைமா. இரண்டு - தேன். எழுத்து ஒரு நான்கு - மான்றசை. இரண்டு - நெய். அஞ்செழுத்து - தினைச்சோறு. தேன்றசை - தேனிற்சமைத்த கறி.

(௧௯0) அஞ்செழுத்து - நகக்குறி. முத்தழுத்து பவளத்தை முத்துக்குள்வைப்பது உதட்டிலுள்ள பற்குறியைப்பல்லான் மறைப்பது. சிவந்து லையுமெய் - கலவியாற்று வண்டு சிவந்தவுடம்பு. சாந்தம் - சந்தனக்குழம்பு. மாலை - மாலைக்காலம்.

(௧௯௧) குறிஞ்சிமலர்மாலையேனும் - குறிஞ்சி நிலத்தில் விரிந்த மாலைக்காலமானாலும். நீ முல்லை மாலை யென்றோதுவன் - நீ முல்லை நிலத்துக்குரிய மாலைக்கால மென்று சொல்வேன். என்றவாறு. நீ குறிஞ்சி மாலையானாலும் முல்லை மாலையென்பேன் என்பது மற்றொரு பொருள்.

(௧௯௨) மதிபானு வென்றோதியது என்றது முன்றலைவன் பிரிந்து வருவேனென்றபோது தலைவி பிரிவிலும் பகலிலுஞ் சந்திர சூரியர் போலத்தவறாமல் வரச்சொன்னதை என்க. இவை 29, 30. ஆம் பாடல்களானறிக.

(௧௯௩) புள்நீரையும், வண்டு தேனையும் கண்டவிடத்திற்றங்கிவிடும். சகோரமென்றது சகோரப்புள் நிலாவ முதையன்றி வேறொன்றை யுண்ணுதவாறு போலுன்னையன்றிப்பிறிதின்பத்தைத் தலைவன் கருதான் என்றபடி. அன்றிற்பெடை நிகர்வாயென்றது அது பிரிந்தால் வேறொன்றைச் சேராதவாறு போனீயுந்தலைவியை மணந்துறைவாயென்பது துள்ளுறையுவமம்

(௧௯௪) உழையிருந்தோர் என்றது பாங்கிமாரை. விண்டிருந்தாலும் - மனம் வேறுபட்டிருந்தாலும். வண்டல் - மகளிர் விளையாட்டு. நாலில் ஒன்று - அந்தக்கரணம் நான்கனுள் ஒன்றாகிய பாங்கியர் மனம். செப்பற்ற முற்றவர்போலுரைப்பார் மனந்தேர்கிலமே. என்பது இங்கே நோக்கத்தக்கது துறைசைக்கோவை. 165.

(கசுரு) சேரிற்குவிதல் - இறைவணக்கும்பிடுதல். சேராவிடிற்குவிதல் - தெய்வந்தொழுதல்.

(கசுசு) பெருமான் - பெரியமான், தலைவன். சாரி - கிளி, உலா. பிள்ளையாக்கி என்றது பாங்கிமாரைவிட்டு நீங்காதிருக்கச்செய்தலை. கள்ளனுக்குதல் - தண்டனைசெய்தல்.

(கசுஎ) தாமரைமேல் விழும் வண்டு என்றது தலைவி முகத்தாமரையிற்றலைவன்கண் வண்டு விழுதலை - செவ்வல்லியிற்றாமரை - தலைவியதரத்திற்றலைவன்வாய்சார்தல். மாமலை - பெரிய முலை. பைந்தாருவை நீங்கில பூங்கொடியே என்றது நாமப்படியில்லையே என்னுங்குறிப்பு.

(கசுஅ) பூவேந்தன் - பிரமன். பவனி - உலாப்போதல். செழுமாப்பலஆர் - அழகிய குதிரைகள் பலவாகப்பூட்டிய சந்தனம் - தேர், மா, பலா, ஆர், சந்தனம், புன்னை, என்பனமற்றொரு பொருள். ஆர் - ஆத்தி.

(கசுகூ) மானும், கலையும், கிளியும், கடிவாரின்மையால் முயன்று வருமென்க. குன்றக்குடியான் என்றது முருகக்கடவுளை. முன் என்றது வள்ளி நாயகி தினைப்புனங்காத்தகாலத்தை. மறவர் - வள்ளி நாயகி தமையன்மார். புலிநாமம் - வேங்கைமரம். இது பூத்தாற்றினைக்கதிர் கொய்வார். வழிகூடல் போலுங் குன்றக்குடி என்றது இரண்டாவது மதுரை போலுங் குன்றக்குடி என்றபடி. இங்ஙனங்கூறியது உக்கிரப்பெருவழுதியாகியகுமாரக்கடவுள்வீற்றிருத்தலாலென்க. வழி-இரண்டாவதுஎன்பது.

(உ00) எள்ளி - இகழ்ந்து. மறந்து எகினும் எனக்கூட்டுக.

(உ0க) தைவரல் - தடவுதல். மவ்வரிஆதி - ம. மெல்லினத்து ஆறு - ன். (மன்) மன் - தலைவன். சவ்வரி கவ்வரி மூன்று - சிகி. சிகி-மயில்.

(உ0உ) மாரன் பரிப்பேர் - கிளி. மணப்பேர் - கடி. கணைப்பேர் - கோல்- (கிளிகடிகோல்) ஒருபுல் -தினை. ஒளி - கடி. மால்எதி - பெரிய வரிவாள். (தினைகடியரிவாள்) ஐயர் - தமையன்மார். வீரப்புயன் - வீரவாகுதேவர். பங்கயம் என்றது தலை விபாதங்களை. கிரியில் நடப்பதில்லையினிமேலென்பது குறிப்பு.

(உ0ஙு) துவளும் - சூழ்ந்துதிரியும். தண்டலை - சோலை. இருகோங்குமுத்தம் - முலைகளினிடத்துக் கண்ணீர் விழுவது. கண்டகண் பேராதது வேட்கைக்குறிப்பு.

(உ0ச) இல்வரையிகந்தது என்னுஞ் சொற்கள் செய்யுளிற் கரந்து நிற்கின்றன. இல்வரையிகந்த குறி என்பது பகற்குறியை. வீடு - இல். மலை - வரை. இம்பர் - இகம். மெய்ப்பதத்து ஒன்றில் என்றது இல்வரையிகத்தலில் என்றபடி. இகத்தல் - கடந்துபோதல். விட்சேபம் - கலக்கம். இல்வரையிகவாதகுறி என்றது இரவுக்குறியை. அரிப்புனம் - தினைப்புனம். தலைவன்றேடலிறைவியை. பறவை தேடல் தினைக்கதிரை. பன்னிருகையன் போர்றேடினம் என்க. பன்னிருகையன் றேடியது வள்ளிநாயகியை என்றபடி.

உ0ரு. கேகயம் - மயில். பாரா - காவல். வேதன் - பிரமன். மந்தி - வண்டு. வேங்கை - வேங்கைமரம். வண்டு சரிக்கிர வேங்கை

யிற் புட்பமிராது. சரியா வேங்கை எனவே வேங்கை மலர்ந்தமை யாற்றிலைக் கதிரையறுத்துவிட்டார்கள், யாங்காவனீங்கினோம் நீவாரற்க என்பதாயிற்று. ஆவயின் - அவ்விடம்.

(உ0சு) அண்ணு வருகவென்றது விநாயகரை யானை வடிவாக வரக் கூவியதை. கடத்தினை - தினைப்புனத்தை. கடத்தினை - நீக்கினை.

(உ0எ) பட்சி - கிளி. இன நீரதனல் - குலத்திற்பிறந்த குணமுடையதனுல். நிலைத்தாள் - நிலைபெற்றதினைத்தாள். வீரநவர் - நவவீரர். கிள்ளையே - கிளியே. பொன் தனக்கிள்ளைமறந்தார் என்க. தருப்பட்டுங்கிளி காத்திருந்துயிர் வரப்பண்ணிற்று. இது பாரதம் அநுசாசநீசபருவம் 87-ம் பக்கத்திலுள்ள கிளிக்கதை யானறிக.

(உ0அ) குருகுஇனம் - பறவைக்கூட்டம். வரின் - இறைவர் வந்தால். துவண்டு - சூழ்ந்து, வாடி. இனமே - மிகுதியாக. சொல்லு - சொல்லுக. ஒருமைபன்மைமயக்கம். அரும்பு ஒருவு ஆர் அலரே - அரும்பின்றன்மை நீங்கிய மலர்ந்த பூவே. பழியலர் - பழியாகியவலர் மொழி. ஊர் ஆகுபெயர். வந்து - யாங்கள் வந்து. பொருமல்-துன்பமுற்றழுங்கல்.

(உ0கூ) ஆடல் - கூடுதல், ஆடுதல். ஆடல் கொண்ட மயில் என்றது தலைவியை. சந்திராங்கம் என்றது தலைவி முகம், கண்ணுடிபோலுள்ள கலாபத்தின் கண்களை. வாசம் - வாசனை, சிறகு. அரவம் - அல்குல்; அந்த மயில் கௌவிய பாம்பு. குயில் - மேகம், பாங்கி.

(உக0) எண்ணியகாரியம் - பிரியாமை. இரண் - பரண். தலைவியைக் காணுமையாற்கண்ணெளி மழுங்கினமையாற் கண்ணிருந்தாற்கல்லவோ சகளச்சத்தியைக் காணலாமென்றான் என்க சகளச்சத்தி என்றது கூடியிருந்த தலைவியை. சகளரூபங்கொண்ட வருட்சத்திஎன்பது மற்றொருபொருள். சகளம் - அவயவத்தோடு கூடியது.

(உகக) ஆரு - நதியாக. அன்பு இல்லவருக்கு அடிப்பேறு ஊருது. ஊருது - கிட்டாது. ஆறு - வழியெனினுமாம்.

(உகஉ) மாமான் - இலக்குமிபோலுந்தலைவி. மலர்மனை - தாமரை மலரனையவீடு. பூ - பூமி.

(உகங) நம்விரும்பார் என்றது நற்றாய் முதலியோரை. சாந்தம் - சந்தனமரம். போதல் - வருதல்.

(உகச) அடையக்குறிக்கின் - விடாமலொருங்கே யெழுதினுல். கொலைச்செந்து - முதலை. இடை - நடு. தலை - முதல். அடிக்கு ஒன்று - அடிவைப்பு ஒன்றுக்கு ஒன்று. பணி - ஆபரணம். அது பாம்பு.

(உகரு) ஆறு - வழி. வன்மீன் - முதலை. திருமால் ஆழி - தலைவியாற் கொண்ட வாசைக்கடல்; திருமால் சக்கரம். பெண் என்றது தலைவியை.

(உகசு) மாயப்புரிந்தவன் - வீரவாகுதேவர். அசி-வாள். மருவலர் - வாசனையுள்ள புட்பம், பகைவர். குழையார் - தரு, மகளிர். நம்பினவரை விரும்பியமலையை, நம்பப்பட்டவரை.

(உகஎ) அறியாளரைப்போன்று குறியாதுரைக்கின்றவத்துறை என்பதுமேல் 165-ம் பாடலே. குறியாதுரைத்தல் - ஒன்றை விட்டொன்று கூறுதல். பூஞ்செறிவு - சோலை. உங்கள்போன்று என்பது புட்பங்கட்கிடமாதலால் என்க. உம்மைத்தந்த செழுஞ்சுனை என்றது நீரிற்கை கொடுத்தெடுத்ததனற்கற்புடைத்தாய்ச் சேர்ந்த குறிப்பு.

(உகஅ) ஆயாதவர் - மெய்ந் நூலுணர்ச்சியில்லாதவர். காயாதமா - யானை. பூவாதமா- அத்தி. பாயாதவேங்கை - வேங்கை மரம். அழித்து - அழித்தலால் எனவெச்சத்திரிபாகக்கொள்க.

(உகக) சங்கை - ஐயம். புகழ்ந்தாரைப்புங்கவரில் வைப்பன் என்க புங்கவர் - தேவர். விரைவு - வேகம். கொங்கை என்றது முலைபோலும் யானையை. நாடி - விரும்பி. இடை என்றது இடைபோலுஞ் சிங்கத்தை. மலர் சூடுங்கூந்தல் என்றது தாரகாகணங்களையுடைய இருளில் என்றபடி.

(உஉ0) கானவர் - வேடர். படைச்செல்வர் - ஆயுதச்செல்வமுடையவர். மயில்வரைமேற் கந்தனையே தொழவானவர்மங்கையர் செல்வர்களே எனக்கொண்டு கூட்டுக. செல்வர்கள் - வருவார்கள். எங்கும் சரம் - எவ்விடங்களிலுமிருகங்களை யெய்யும் அம்பு. குஞ்சரம் - யானை ஆனில் வரும் அம்புலி - இடபத்தைப்பாயும் அழகிய புலி. இனி எழும் அம்புலி யென்றதனுன் முன்னிருட்டுள்ள தென்பது கருத்து.

(உஉக) உரவினைச்செய்பவர் - வலிய தொழிலைப்புரியுஞ்சூரன் முதலானவர். அறிவு - ஞானம். திருமுகங்கூடப்பெறுஞ் சிவன் என்றது ஐந்துமுகத்தோடு அதோமுகமுங்கூடிய சிவனுகியவாறுமுகக்கடவுள் என்றவாறு. இரவினுக்கு - இராத்திரிக்கு, யாசகர்க்குக் கொடுத்தற்கு. ஏழை - தலைவி, எளியவர், ஏழையாகிய வெனக்கிரங்கினவர் என்றதனுல் வரச்சொன்னதாயிற்று. ஆறுமுகம் என்றது ஐந்துமுகத்தோடதோமுகமும் எனக் கந்தர்கலி வெண்பாவிற் கூறுதல் காண்க.

(உஉஉ) ஒருவிரல் காட்டி என்பது ஒற்றையாய் என்னுங்குறிப்பு. குழல் காட்டி என்பது சோலையிடத்தில் என்றவாறு. கைகுவித்தோங்கி என்பது வேலாயுதத்தையும் வைத்துக்கொண்டு என்றபடி. கைநெறி வைத்தது படுத்திருக்கச்சொல்லுக என்னுங்குறிப்பு. அன்னங்காட்டியது சோறுகொண்டுபோய்ப்போடு என்றபடி. மூக்கில் ஒருவிரல் வைத்தது ஒருவருமறியாமற் சண்பகமரத்தடியிற் கூட்டிவந்து வைஎன்றபடி. இருவிரல் காட்டியது இரண்டுநாழிகை யிருக்கட்டும் என்னுங்குறிப்பு. ஒருவிழிமூடல் என்றது தாய் தூங்கட்டும் என்றவாறு. ஒருவிழிமூடாததனற்றுன் விழித்திருப்பதாயிற்று. நெறி - கன்னத்தின் மேற்பக்கம்.

(உஉங) தும்பி - வண்டு, யானைபோலுந்தலைவன். உளரமிகவென்பார்கள் எனக்கூட்டுக. அமுதமது - அமுதம்போலுந்தேன், அமுதமாகிய வச்சோறு. பூமெத்தை - பூவாகிய மெத்தை, பூமியாகியமெத்தை.

(உஉச) நற்றாய் - பெற்றதாய். துஞ்சினள் - தூங்கினள். மேழியர். வேளாளர். மாலை - கருங்குவளை.

(உஉரு) சிலம்பை மடியிற்றூங்குதல் ஒலியாமலிருக்கும் பொருட்டு என்க. கோலைப்பெண்ணுக்குதல் படுத்திருக்கிற பாவனை செய்தற்கு என்க. சூலி - சிவபெருமான்.

(உஉரு) கற்பூர மோர்பங்கு வைத்தளித்தார் என்னவே ஆண்பிள்ளைக்குக் கற்பூரமிரண்டு பங்கு என்பதாயிற்று. நம் சாதி - நமது சண்பகமரம், நமது சுற்றத்தார். மிறைசொல்வதார் என்றது (அச்சாதியைச் சார்ந்தாற்) குற்றஞ் சொல்பவர் யாவர் என்றபடி. போனாற்றலைவிருப்பார் என்பது குறிப்பு. மருவலரைத்தலைச்சாய்ப்பன் என்றது வாசனையுள்ள மலர்களைக் கொய்து வருவேன் என்றவாறு. பகைவரைத்தலை கவிழச்செய்வேனென்பது மற்றொருபொருள். பழுக்காயிலையிது என்றது நாற் சண்பக மரத்தடியிலிருக்குந்தலைவர் கொடுத்ததென்று சுட்டிக்காட்டியதாயிற்று. பழுக்காயிலை - பாக்கு வெற்றிலை.

(உஉஎ) விடியா விடின் அல்லவோ முசமாமதிமேன்கள் என்றது பகற்குறியில்லையென்று முகம் வாடும் மென்பது குறித்தென்க.

(உஉஅ) சாதி சஞ்சாளிகஞாயம் என்றது சண்பகமலரிற்றேனுணச்செல்லும் வண்டுகளிறந்து படுமுறைபோல எம்மூருக்கு வந்தால் யானை, கரடி, புலி, சிங்கம், பாம்பு, முதலை, முதலியவற்றாலுங் கானவராலும் பிழைப்பதில்லை என்றவாறு. சஞ்சாளிகபுட்பஞாயத்தின் மேவினிர் என்பது காத்திருந்த தவளையுண்ணுமற் றூரத்துவண்டுவந்து தாமரை மலர்த்தேனையுண்பதுபோலச் சுற்றத்துத்தலைவிருக்க நீவந்து மேவினீர் என்றபடி. உற்றவர் - அடையப்பெற்றவர்.

(உஉகூ) கன்னி - துர்க்கை. வாகனம் - இடை. அரிபாயல் - பாம்பு. பாற்கடல் சேர்விடை என்றது திருமாலாகிய காளையை. செற்றம் - கோபம்.

(உஙo) மறையாதமின், வாடாக்கொடி, ஐவகையுணவிற்குறையா வமுதம் எனும் நீ என்க. ஐவகை - கடித்தல், நக்கல், பருகல், விழுங்கல், மெல்லல். நான் நளனே. ஆனாலும் உன்னுடன் பகற்காலத்திலும் பிரியாதிருக்கும்படி அந்நளனைப்போலுருத்தெரியாத மந்திரத்தைக் கற்றதில்லை என்றபடி. கொல், ஓ. அசைநிலை பகலும் பிரியாமலிங்கெவர்க்குந் தெரியாவிஞ்சை பெற்றிலமே. என்றார் பிறரும்.

(உஙக) மேலையடையலர் முன் என்றது மேன்மையையடைந்த அலர்போலும் பாதங்களினிடமாகி என்றவாறு. முற்காலத்துத்திரிபுரத்திலுள்ள சத்துருக்கள் முன் என்பது மற்றொரு பொருள். கலகலவென்பதனால் - கார்சிலம்புகலந்துகொள் கலந்துகொள்என்று கூறுவதனால். சிவன் கைச்சிலம்பு நேரல்ல வென்றது அங்ஙனங்கலகலகவென்னாமையால் என்க.

(உஙஉ) இன்னாமை - துன்பம். இரவு - இராத்திரி, யாசித்தல். சிவந்தகை, கால்கள், என்பங்கயக்கண் தன்னாற் கறுத்தன என்றது வருந்தியதென்று கைகளையும், கால்களையும், தலைவி கண்ணில் வைத்துக் கொண்டமையால் அஞ்சனம் பட்டுக்கறுத்தமையென்க. இன்னாமை வேண்டினிர வெழுக என்பது நான் மணிக்கடிகையிற்காண்க. இதனைத் தன் கருத்திற்கியையப் பொருள்கொண்டு கூறினானென்க.

(உஙங) முத்தாயர் என்பது செவிலித்தாய், ஊட்டுந்தாய், பெற்ற தாய்மார்களை என்க. பருவமிகலாற் கைத்தாயையும், மூலத்தாயையும், நீக்கினர். வைத்தீர் கொல், இட்டீர் கொல், இட்டனிர்கொல். என்பன

பாங்கியையுமுளப்படுத்தியவினு. செல் என்றது தலைவியை மாத்திர நோக்கி என்க.

(உ௩௪) நளினம் - தாமரை. நீலம் - குவளை.

(உ௩௫) பாலி - பாலூட்டுந்தாய். வேல் சிவப்பு என்றது கலவியாற் சிவந்த கண்களை. பாளிதங்கொள்நீலி - சோறூட்டுந் தாயாகிய தொடியவள். பொல்லாப்பு - தீங்கு. முன் - முன்னுளில். நிகழ்த்தல் செய்வாய் - நடப்பாயாக. காலி - ஒருஊர். கமகமப்பு - வாசனை. பாளிதம் - சோறு. ஏகாலிக்குஞ் சொற்றிடுமே என்பது மற்றொரு பொருள்.

(உ௩௬) நீ சொன்னபடி மறைத்தாள் என்றது கன்னவடுவை மஞ்சணெய்ச்சிவப்பாலும், அதரவடுவைப் பற்களாலும், முலைவடுவைச் சந்தனச்சேற்றாலும், மறைக்கச்சொன்னதை என்க. பல்லக்கேற்றவென்றது கால்சிவத்தலாற் சகியாமற்றன்னை மறந்துரைத்தது என்க.

(உ௩௭) குற்றமுரைத்தனளே என்றது கொங்கையை வடுப்படுத்தலானும், மார்பில் நகைகளைச் செவ்வனே யணியாமையானும், ஆடையைநிலைகுலைத்து விடுவதானும், தோழிகுற்றங் கூறினளென்க. வங்கம் - தோணி. ஒதை - ஓசை. மயல் - ஆசை.

(உ௩௮) மலரை முடியும் என்றது பூக்கட்டிவைத்துப் பார்த்தலை. அயலவர்சொல் - விரிச்சி. அதாவது நற்சொற் கேட்பது. கொடியோதை குறித்தலாவது காக்கை கூப்பிடுவதை நோக்குதல். முறம் விழல்பார்க்கு மென்றது முறக்குறி பார்த்தலை. தப்பு - சோர்வாகிய தவறு. உன்னூர்க்கனகதப்பு என்றது ஊர்க்குப்போனவுடன் முரசறையச்சொன்னகுறிப்பு. கனகதப்பு - பொன்னாற் செய்தபறை.

(உ௩௯) இருட்காகுறுகும் - இருண்டசோலையிருக்கும். மாகுறுகும் - மிருகங்களிருக்கும். காமம் - விருப்பம், ஐ, ஓ, என்பன ஒலிக்குறிப்பு.

(உ௪0) விபுதர் - தேவர். காலும், சிலம்பும், இருகையும், போல் பட்சிசாலம் மலர்வனத்தே மண்ணிலுதித்தன என்பது கால்கள் போக்குவரத்தாயிரவுமுழுதுஞ் சஞ்சரிப்பது, சிலம்புபைய நடக்கினும் ஒலிப்பது அன்றி அடைந்தாரைக் காட்டிக்கொடுப்பது, கைபாங்கியைத் தட்டியெழுப்புவது ஆகிய வின்மூன்று செயலும் பட்சிக்குமுளவாதலறிக.

(உ௪௧) இடையூறு - துன்பம். சூறை - சுழற்காற்று, படுத்த - சாய்க்க. ஆறுபொறிக்கொண்ட சாற்று என்றது சூட்சுமாவதாரவக்கினிப் பொறியாகிய வாறையுஞ் சரவணப்பொய்கையில்விட்டவாயுதேவனைஎன்க. ஐம்பொறி என்றது சுரோத்திராதியொற்றுமைபற்றிய மனமருட்சியை. காற்றாற் புள்ளெழும்பிய தைத்தலைவனுனிகழ்ந்ததென்று மருண்டேனென்பது கருத்து.

(உ௪௨) கல்லைக்காட்டல் - அவரென்றிருளிற் காட்டல். கால்வயிறு என்றது உண்ணவருத்தம் என்க. ஈன்றி என் அன்றியும் எனப்பிரிக்க. புன்னைமேற்பாம்பு என்றது தூங்கிய பாம்பைத்தலைவன்வைத்த மாலையென்றெடுத்ததை, என்க. தன்மெய் என்றது குமாரக்கடவுள் குழந்தை வடிவத்தை.

(உசங) சரம்போல் நிலையர் என்றது நினைத்த குறியிற்றைக்கும் பாணம் போலுமனநிலையுடைய பெரியோரை என்க. குரங்காமெனச் சொன்னதைக் கைவல்லியத்திற்காண்க. தலைவியவயவங்களைவன முதலிய விவைகளிற் குறித்திருந்துங் காணவில்லை என்பது கருத்து. அன்றிவன மெல்லாமோடிப்பார்த்துங் கண்டிலேனென்றுனெனினுமமையும். பரந்து - பரவி. நிரந்து - கலந்து. கூந்தல் - கூந்தற்பனை. அதன்சரங்கூந்தற்குவமானம். தென்னை - தனம். வாழை - துடை. மா - மேனியும், கண்ணும். கமுகு - கழுத்து.

(உசச) புன்னையிற்றலைவன் வந்து வைத்திருக்கின்றபந்தையிலக்கணையாற் காய்த்ததென்றார். ஏனையவுமன்ன. பேசாக்கிளி - ஒப்பனைக் கிளிகாட்சிப்படுத்தாததாற் கண்ணையிகழ்ந்தாள் என்க.

(உசரு) உன்னைத்துணைபிரிந்தவன்றிலென்பார்கள், தாய்விஷபானம் பண்ணுவாள்; எனவே யெல்லைதப்புவேன் வந்தது வாட்டும் என்பது கருத்தாயிற்று. தனிமெய்ப்பொருள் அமுதுஎன்பது சிவபெருமானுண்டவிடம் என்க.

(உசசு) கண்டேன் பலமின் என்றது இரவில் மேல்வீட்டிலிருந்த பாங்கி புன்னையங்கானத்திற் றலைவனிடசாரி வலசாரியாகச் சுற்றும் போதுண்டாகிய கத்தியினொளிகளை என்க. குறிவிடிந்து தேறுவை என்றது தலைவனடிச்சுவடுகளைக் கண்டு தெளிவாய் என்றவாறு. ஓ இரக்கக் குறிப்பு.

(உசஎ) தென்னைமடல் கமுகங்காய் தருமோவெனவே வெற்றிலை பாக்குத்தலைவி வைத்ததாயிற்று. ஆய்ந்த தென்னை என்றது தலைவன் முன்னாராய்ந்து பார்த்ததென்னை என்றபடி. வந்ததறிந்தும் வராதது போற் கூறுவது மடந்தையர்க்குச் சுபாவம். நண்ணிலையேல் யானுகிலுந் துணையாய்வருவேன் என்பது பரியாசம்.

(உசஅ) பொருளின்மட்டு - பொருளினளவை. பட்டினியில்லை என்றது பாங்கி தலைவன் நீங்கெடுத் தியம்பற் றுறையில் உசஉ-வது கால் வயிற்றுக்கூட்ட வைத்தார் என்றமையால் எளியேன் கருதுமிடத்திற் பசித்திருந்தலில்லை என்றவாறு. பகலெண்ணம் என்றது விடிந்தபின் பார்க்கவருதலை. கட்டிலும் மெத்தையுமில்லை என்றது கட்டிலிற் பஞ்சணையிற் படுத்திருக்கிறபேர் வரக்கூடுமோ என்றவாறு. எளியேன் என்பது பெருமித ரசம்.

(உசகூ) கேணியோசை தலைவன் பழமுதிர்த்தல்; விண்ணென்றது கம்பு வீச்சு. கூபவோசை என்றது கிணற்றில் கல்லெறிதலை. இவற்றிற்குமறுதலை கேணியில் மீன் அடித்தது, ஆகாயத்திற் பக்ஷி வேகமாய்ப் பறந்தது, கேணியிற் றென்னைநெற்று விழுந்தது; என்க. அல் - இரவு குமுக்கு - தொமுக்கு, என்பன ஒலிக்குறிப்பு.

(உரு0) கின்னரிவீணையின் ஆவதின்றே சிங்கம் கொர்ச்சிக்கின் என்றது யான்செய்த சிங்கநாதம் கின்னரி வீணையி னிசையைப்போற் கேளாதுபோலும் என்றபடி. புன்னை அரும்புமுற்றத்து அசைத்தேனென்றது வந்ததற்கடையாளங் கூறியவாறு. அன்னம் - அன்னப் பறவை, தலைவி. இனிப்புகன்று என்.

(உருக) மிடார் - ஆளைப்போலுயர்ந்த வொருசெடி. மயில் ஓங்கலர் என்றது தேர்கைமலையிலுள்ளவராகிய தலைவரை.

(உருஉ) பாபத்து - பாய். ஆபத்து - ஆய். பத்தாவது எண்யகரம் மாதல்காண்க. பாய் - பாயல். ஆய் - தாய். ஆபத்தைநோக்கிப் பயந் தனன் என்பது மற்றொரு பொருள்.

(உருங) பாசி - நாய். நீர் - காமவின்பம். நீர்ப்பாசியை விலக்கி யிந்த நீரைக்குடிக்கவல்லார் யாவர்? என்பது மற்றொரு பொருள்.

(உருச) உயிர்வரிச்சட்டத்திலாறு என்றது ஊ. இடையில் இரண்டு என்றது ர். (ஊர்) என்றபடி தவிப்பு - உறங்காதிருத்தல்.

(உருரு) தனியான சோலைப்பேர் - கா. பூப்பெயர் - அலர். இர ண்டுங்கூடிற் (காவலர்) என்றபடி.

(உருசா) பஞ்சு - பஞ்சு. குபேரன் - சந்திரன், தனதன். தூங் குவர் - நித்திரைசெய்வார் மற்றொரு பொருள் தாழ்ந்திருப்பார், சோம் பியிருப்பார் என்றுமாம்.

(உருஎ) ககரத்திரண்டினில் - காவில். ஆறு - கூ. ஒன்பது - கை (கூகை) பதினொன்று கோ. கோ - அரசன்.

(உருஅ) ஒருசாதி - கோழி. அஞ்சு சாதியுடன் கலந்து - வல்லூறு, ஆந்தை, காக்கை, மயில் என்னு மிவைகளோடு அஞ்சு சாதியென்னும்படி கலந்து. ஊண் முதன்மாறுதலாவது ஊண், நடை, அரசு, நித்திரை, மர ணம் ஆகியவிவ்வைந்து தொழிலு மொருநாளிற் பத்துச் சாமத்தில் மாறி வருவது. மூடமனமாவது முறைதப்பிய சேர்க்கையும், காரணமில்லாத யுத்தமும். பறையடித்தல்-சிறகடித்துக் கூவுதல், அருகிலுள்ள மனையிலே பறையாகிய வாத்தியத்தைக் கொட்டினால் யாவர் வருவார் என்பது மற் றொரு பொருள்.

(உருகூ) மதி - முகம். பிறைமேற் பிறை என்றது நெற்றியிற் பூசுந் திருநீற்றை என்க. கொவ்வைக்கனி - வாய். இலை - வெற்றிலை.

(உசா0) கோவைப்பழம் - இதழ். காய் - பாக்கு. வடு - தழும்பு. உன்னைக்கிளியைப்பகர்ந்து ஒளித்தேன் என்றது பாக்குக்கொடுத்தது பா க்கியென்றும், ஊறுபடுத்தியது கிளியென்றும் மறைத்துச்சொன்னேன் என்றவாறு. அம்கைத்தேவி என்றது சத்திவடிவாகிய வேலாயுதத்தை என்க. கணம் - கூட்டம்.

(உசாக) ஒருநாளும் பாதி என்றது இராத்திரியை. நாலுகூறு - நான்கு சாமம். ஒருசாமம் உண்டொழிவு. மூன்று சாமத்திலே மிடை யூறுவனதாய் முதற் கோழியிறுதியாகிய ஏழுமாம்.

(உசாஉ) கடை - வாயில், ஆவணம். கப்பலேற்றல் - ஆறுகடத்தல், தோணியேறுதல். சரக்குப்பை - மலர்மாலையாலாகிய மெத்தை, சரக் கையுடையபை. பொன்கொடையாளர்-தலைவர், பொன்னைக்கொடுத்து வாங்குபவர். சரம் - மாலை.

(உசாங) கால் திரும்புகிறபோது காலிலழுந்துங் கல்லென்றார். அது மனமஞ்சலீரென்று சொன்ன சமயத்திற் சொன்னதால் மனத்தி

க்கு வமையாக்கி யெடுத்துரைப்பதாயிற்று. குரும்பை - முலை. கோவாத முத்து - கண்ணீர்.

(உ௬௪) தேசிகன் - பிரகஸ்பதி. நீர் மீனுண்டவூர் - மயேந்திரபுரி ஓர் பூத்தலைவைத்தல்-கையாகிய மலரைத் தலையிலே வைத்துறுதிகூறுதல்.

(உ௬௫) மாகாயம் - பெரியவாகாயம். சேதை - இராமேச்சுரம். சொர்னமலை - கந்தமாதனம். ஒடுங்கி என்றது அழுத்தித் தாழ்த்தி யென்றபடி. மீகீழுயர்ந்தவன் - வீரவாகு.

(உ௬௬) குடி என்றது இராவணாதி யிராக்கதர்களை. படரவிட்டோன் என்றது இராமனை. படி - பூமி. பசலைக்கொடி - முலைமேற் பசலை. மணம்பூசியகுன்றம் - களபமணிந்த முலை.

(உ௬௭) தனு - உடம்பு, வில். நாண் - வெட்கம், நாணி. சிற்றாறு-சிறுமார்க்கம், சிறுநதி. அக்கரை - காமவெழுச்சி, அந்தக்கரை. சிற்றாறக்கரைப்பட்டதென்றது தலைமகனார்க்குச் செலவொருப்பட்டதெனினுமமையும்.

(உ௬௮) கிளி என்பது தலைவியை. வளர்ப்போர் - தலைவர். பால்-காமவின்பமாகிய பால். தலைவர் ஒன்றுயரமெலா மறிந்தவராகலான் யான் சொல்லவேண்டுவதில்லை யென்பது குறிப்பு.

(உ௬௯) வடு - மாவடு. குழைவாய்தல்-குழையையாராய்தல். பழம்-கோவைப்பழம். அலர் - அலராகிய பழமொழி. வடுக்குழையானது, பழயலரானது என்பது மற்றொரு பொருள்.

(உ௭0) வரைப்பாந்தள் - மலைப்பாம்பு. செலப்பணியே - நீர்ப்பாம்பே. வரில் தீது - றலைவர் வரிற்றீங்குண்டாகும். செலப்பணி - செல்லப்பணிப்பாயாக.

(உ௭௧) சபை - சூரபன்மன்சபை. புளினம் - மணற்குன்று. புள் இனம் - பறவைக்கூட்டம்.

(உ௭௨) மயூரச்சிலம்பண்ணலார் என்றது குமாரக்கடவுளை. ஒரு கரி - ஒருசாக்ஷி. தாய் - தாயானவள். இருந்து ஒருநாள் துயர - யானிருந்து ஒருநாள் துயரப்பட. உரைத்த வெஞ்சொல் - சொல்லிய கொடுஞ்சொல். பரிகரி என்றதும் - பொறுத்துக்கொள்ளென்று தலைவர்சொன்னதும். அரிகரி என்றதும் சோலை, மூங்கில், கிளி, சிங்கம் முதலாயின சாக்ஷி என்றதும். மதியே - சந்திரனே. அதுமதியே - அதனைக்கருதுவாயாக. அரிகரியென்று பிரார்த்தனைசெய்தது மென்பது மற்றொரு பொருள்.

(உ௭௩) தைப்பூசத் தேரையும், அன்னதானஞ்செய்யு மடத்தையும் பார்க்கவரலாம். வருமேல் - மற்றைப்போதில் வந்தால். எப்பூசலுமுண்டு - ஆறலைக்கும் பூசல், இனப்பூசல், புலி முதலியவற்றின் பூசல், காவலர் முதலியபூசல், தாய்பூசல், ஆகிய எல்லாப்பூசலு முண்டாகும், மைப்பூசல் என்றது தன்னைப் பிறரறியாமற் செய்யும் அஞ்சனம் பூசுதலை.

(உ௭௪) ஏவியதாயர் - இல்லிலிருக்கும்படி கட்டளையிட்ட தாய்மார்கள். குறி - எண்ணம். விலக்காகியும் என்றது தினைப்புனங்காவலுக்

குப்போகலா மென்றுரைத்தது. பாவியொருவன் - மன்மதன். குறிவி லக்காகிபு மம்புதைத்த தென்பது மற்றொருபொருள்.

(உஎசு) பொன்னிசை மேடம் - அழகுடைய ஆட்டுக்கடா, பிரகஸ் பதிபிருக்கு மேடராசி பூசை - பலியிடுதல், பூசித்தல். கன்னி - தலைவி, கன்னிராசி. சிங்கம் - தலைவன், சிங்கராசி.

(உஎசு) என்னையின்றைக் கிரப்பார்க்குப் புகழிசைவதுண்டோ வெனக்கொண்டு கூட்டுக. யாசிப்பவருக்குப் புகழுண்டாகாது என்பது மற்றொருபொருள். குன்று அக்குடி - குன்றிய அந்தக்குடி. குன்றாக்குடி- உயர்குடி, எனவே யுயர்குலத்துக் கற்புடையோளு கலாற்பிறர் வரைவிற் கிசையே னவர்வரைவை விலக்கு என்பது கருத்து.

(உஎஎ) சொன்றிக்குழிசி- சோற்றுப்பானை. தெவ்வூர் என்றது இலங்காபுரியை. காவலர் மணம் - அரசர்கலியாணம். சோலையிலுள்ள மலர் வாசனை யென்பது மற்றொருபொருள். பின் ஆவதுண்டே என் பது நீகூறினுற் கொடுக்கலாமென்று மனங்கொள்வாள் பின்றகப்பனூர் முதலானோரையுஞ் சம்மதிக்கச் செய்வாள் என்றபடி.

(உஎஅ) இரவில் எப்போதருள்புரிவீர் என்றது நனவிற்சேர்க்கையி லாவது, கனவிற் புணர்ப்பிலாவதாகுக. இறைவனையெப்போதுஅருள்புரி வீர் என்ற வந்தச் சொல்லைச் செவிலியிரவிலேனும், பகலிலேனும் வின வத்தலை வியானவள் கனவிற் பூப்பறிக்கின்ற மகளிரோடு கூறியதாக்கி எப்போது என்பதை எந்தப்பூவைப்பறித்து வந்து எனக்குக்கொடுப்பீர் என்று கூறினதாய் மறைத்தாளென்க. (அரும்பு - சிறுசொல். மலர் - பெருவார்த்தை; வடு - குற்றம். அரும்பு, மலர், வடு, என்பது மற்றொரு பொருள்.

(உஎகூ) வலுகணங்கள் குறியான் என்றபோதே - தமதுவலிமை யையும் தங்கூட்டமான சேனவீரர்களையும் சூரன்றெரிந்து கீழ்ப்படிய மாட்டானென்ற வுடனே. பறவாதவன்னம் - சோறு. உண்ணுறவன்னம்- அன்னப்பறவை.

(உஅ0) கோடு -மலைச்சிகரம். தலைவிதுயர் நீக்கும் பொருட்டு அன் னையர் மத்தளதாள முழங்கப்பலியிடுவார் என்பது கருத்து- ஆடலுக்கு முன் மத்தளதாளமதிரு மென்பது மற்றொருபொருள்.

(உஅக) நீங்காத மான் - தலைவி. கொல்லாவேங்கை - பொன். உங்களில் ஊரும் உலகமும் என்படுமோவென்பது பொன்னேர்ந்தால் அந்த விறைவர்க்கும், தலைவற்கும் யுத்தம் வருமென்றும், இவ்வூரிற் பாங் கியர்முதலிய விறைவனைச்சேர்ந்தவர்கட்கும், சேராதவர்கட்கும், துக்கம் வருமென்றும், இவ்வூர் அழியினும் அழியும் என்றும், இறைவியுயிர்க்கிறு வருமென்றும், இன்னும் பலவாகவுங் கூறியவாறு. எங்காதவுங்கள் என் றது திடசிந்தை நீங்காத தலைவன்றலைவியரை என்க.

(உஅஉ) மாமணச் செந்தேன் என்றது கலியாணத்துக் குரித்தான தலைவியை.

(உஅங) ஊர்கொண்டவம்புலி - பரிவேடங்கொண்ட சந்திரன். கானத்தின் மலர் ஊர்கொண்டவம்புலி - வேங்கைமரம். எனவேயிவ்

விரண்டு மாயின்ற்குறிஞ்சி நிலத்திற் கலியாண நாளாம் என்றபடி. புலி - வேங்கை. மலர் ஊர்கொண்ட - மலர்களோடு பொருந்திய.

(உஅச) தோகை வெற்பான்றந்தை பழிக்கஞ்சியது திருவிளையாடற் புராணத்தானறிக. பாங்கியானவள் பிறரறியாமற் பதிவானவார்த்தை சொல்லப் புகினும் அதைவிட்டுச் சுழிக்கின்ற சமுத்திரமுழங்காலள வென்று குறியாள் கூறலாய்ச்சொற்றதனுல் இறைவன் மேலிட்டுச் சொல்லும் பழிக்கு அஞ்சியதாயிற்று. அன்றியும் காவலெவ்வளவு காரியம் யாவர் மணஞ்செய்யவல்லார் என்னுங்கருத்துமாயிற்று.

(உஅரு) சோகம் - அசோகமரம். அசோகம் சோகமானது தலைக்குறை. நாகத்தின் வாய்வருந்தேவாமுதம் என்றது புன்னைமரத்திடத்தில் வருந்தலைவியை. நாகம் - தேவருலகு.

(உஅசு) அலரென்றுபெயரே யன்றிமலரன்ருகலானிங்ஙனங் கூறினர். அலர் - பழிமொழி. மாலையிற் சேராதெனவே மாலைக்காலம் வரலாமென்றுமாம். மணங்காண்கிலது எனவேபழி மிகுந்தாற் கலியாணத்துக்கு யோக்கிய மல்லவென்பது மாயிற்று.

(உஅஎ) வாணன்மகள் சகிவந்திடினும் என்றது உஷைமோகித்த வநிருத்தனை யிருட்டிலே கட்டிலுடனே கொண்டு வந்த சித்திரலேகை வந்தாலும் என்றபடி. இரவினுக்கஞ்சாதுமை-இருட்டுக்குப் பயப்படாத விறைவன். கொடுக்கிறது செலவென்று நினையாதவன் என்பதுமற்ருெரு பொருள்.

(உஅஅ) எல் - பகல். கருநிறமாலை - இருட்டு. எனவேபக லினுமிரவினும் நீவருக என்றவாறு. அரசர்கள் திருமாலையும், சூரியனையு மகலாது பூசிப்பர் என்பது மற்ருெருபொருள்.

(உஅகூ) அரிமுகன் - குதிரைமுகத்தையுடைய சூரபன்மன். ஆரம் - தலைவன் மார்பிலணிந்த பதக்கம். மதி - தலைவன்முகம். பதக்கத்துமணி சூரியப்பிரகாசமாகின்ற தாலெவருங்காண்பார்களென்றெண்ணி வீட்டைவிட்டு வராமனித்திரைபண்ணு வராதலாற் சூரியனைக்கண்ட குவளை மலராதது போலப்பதக்கத்தைக் கதிராக்கிக்கண்ணை நீலமாக்கிக் கூறினளாயிற்று. முகமதியென்றது எல்லாருஞ்சந்திரனை யறிவதுபோலிவனை யறிவாராகையாற் சனத்திரளாம். வரிற்காரிய மில்லையென்று வீட்டிலிருப்பாராகையால் மதிதாமரையைக்குவிப்பது போலிவன்முகமதி கண்டு வரக்கூடாத வதனுல் வீடுதாமரையாயிற்று.

(உகூ0) மணம் - கலியாணம், வாசனை.

(உகூக) வாரீச சந்திரஞாயம் - குவிதல். பானுபங்கயஞாயம் - விகசிதம். இறைவன் - சூரியன். தலைவிதந்தைதமை யன்மார் மணம் தாரார். எனவே ஊர்தூங்கும் போதும் விழித்திருப்பாரெம்மையன் மார் என்பதாயிற்று. தாராதரசாதகஞாயம் என்றது மேகத்தையே கெதியாக வெண்ணி யிருக்குஞ் சாதகப்பட்சிபோலத் தலைவியுன்னையேகதியாக நினைத்துளாள் என்றவாறு.

(உகூஉ) வல்லியெழுதியதாமரை என்றது முலைகளிற் கொடிவடிவாய்ச் சந்தனக்கோல மெழுதிய கைகளை. வாரிசஞ்சேர் அல்லி - முகதாமரையிலுள்ள செல்வம் பலாகிய தலைவியதாம்.

(உ௯௩) சொல்விலங்கு என்றது வீட்டைவிட்டு வெளியே செல்லற்க. என்றபடி.

(உ௯௪) குழந்தையிதழ் கடிப்பதும் வந்தானென்னுஞ் சொல்லைக் கிளியிடங் கேட்டு அதனை விரும்புவதும், வாழையையணைப்பதும், காம மிக்ககுறிப்பு. குருவித்தலையிற் பனங்காய்கட்டினாற்போலென்பது பழமொழி. சிறுகோட்டுப் பெரும்பழந்தூங்கியாங்கிவள் உயிர்தவச்சிறிது காமமோ பெரிதே எனக்காம மிகுதியைப் பிறருங்கூறினர். முத்தாடி - முத்தமிட்டு - கோட்டிற் பனங்காயெனக்கூட்டுக.

(உ௯௫) விழியாதிருந்தால் நீங்காதிருப்பார் என்பது கருத்து. மோகினி - திருமால்கொண்ட பெண்ணுருப்போலுந் தலைவி.

(உ௯௬) உண்ணாத செங்கனி என்றது அழுகும் என்றபடி. பூதி - புழுதி. சாதி - சண்பகப்பூப் போலுமூக்கு. மேனியுமாம். முத்து - கண்ணீர்.

(உ௯௭) பிஞ்சு - மாவடு. காய்-சொற்கேட்டான்காய். கனி-கோவைக்கனி. விதை - மாதளைவிதை. இவைமுறையே கண், முலை, அதரம், பல். என்பனவாம். வஞ்சிக்கொடி என்றது தலைவியை, துகிர்க்கொடி - பவளக்கொடி அது பாங்கி அஞ்செழுத்தாகிய வாறெழுத்து - மயூரகிரியாகிய குன்றக்குடி, மயூரகிரி குன்றக்குடியாதல் போலப்பஞ்சாக்கரமே சடாக்கரமென்றபடி.

(உ௯௮) அவ்வஞ்சு என்றது மயூரகிரியை. இரண்டு பழுதில்லை என்றது எங்களைப்போற் குடித்தனமும், மானமும், போகின்ற பழுதுவருவதில்லை என்றபடி இரண்டு பழுதாய்விடும் என்றது தலைவி (ஆவி) யை.

(உ௯௯) மகத்திற்குறை - யாக முதலிய வறப்புறங்காவற்குறை. முகம் - திங்கள். கனிவாய் - கொவ்வைக்கனிபோன்றவாய். இங்கு வார்த்தைக் குறித்துநின்றன. உன்முகத்துக்காகப் போய் வாய்க்குப் பயந்துவருகிறேனென்பது மற்றொரு பொருள்.

(௩00) திருமான்- இலக்குமி, தலைவி. குருவாரம் - வியாழக்கிழமை. மந்தவாரம் - புன்னகை.

(௩0௧) மலை - கல். மரம் - ஆர். நோய் - சுரம். பின்னிடவெனவே கல்லார் சுரம் என்பதாயிற்று. வருதும் எனவே காட்டுக்கயலே யூராயிற்று. கல்லார் சுரமெனவாடல் - படியாதவர் பாடல்போல வாட்டப்படுதல்.

(௩0௨) மார்பினிற்றாமரை - மதன்கணைத்தாமரை. கோங்கினில் மாமரம் - தனத்தில் மாம்பூச்சரம். மாவில் அசோகம் - கண்ணில சோகக்கணை. ஏனையவிரண்டும் கொடிய பாணமாகையாற் கூறினரில்லை. ஊருவகை - துடைவகை. ஊர் உவகை - ஊரினிடத்துச் சந்தோஷம். ஆரூர் - தங்குகின்றதம் மூரென்றுந் திருவாரூரென்றும் பொருளாம்.

(௩0௩) கலங்கலமென்றது எண்ணுப்பொருள். வரிந்து - வரிஞ்சுபோலி.

(௩0௪) திருவாசு - அழகியவரசமரம், பெண்ணரசி. வையாபுரி - ஒருதடாகம்.

(௩0௫) மாவலவர் - குதிரைக்காரர். படகுடி - கூடாரம். கார்மா நிகர் உனையென்றது பார்க்குந்தோறுங் களிப்பேறலாமெனக. சிந்தூரம்- முலையாகிய யானை.

(௩0௬) என்னுக்கு மூக்குங் கொடுத்தீர் என்றது இறையவர்க்குச் செலவுரை சொற்றதனாலும், பொய்த்தும் மற்செய்ததனாலும், தலைவர்க் குத்தரவுகொடுத்தீரன்றோ வென்றும், நும்மற்படி வாராதிருந்தால் நாங் கையு மூக்கையுமறுப்பேனென்றுந் தலைவி சொல்லிய சொல்லைத்தவிர்த்து இறைவன் புகுந்ததனாலென்க. பூம்பொன்னாள் - தலைவி.

(௩0௭) பாங்கிக்கும் இறைவன், இறைவியர் மனம்போல நடப்பது துன்பமாதலா லிருதலைக்கொள்ளியையும், மத்தளத்தையு முவமித்தார். வருதல் - இறைவியின்பம். தவிர்தல் - இடையூறுதவிர்தல். துருவிய சொல் - ஊரவர் விசாரிக்கின்ற பழிச்சொல். என்றும் உருகு அனையே. எனப்பிரித்துரைக்க.

(௩0௮) பொன்வினையாளர் - தட்டார். மரவினையாளர் - தச்சர். மண்வினையாளர் - குயவர். நூல்வினையாளர் - நெய்வார். இவர்களாற் கல்யாணச் சோடினைமுயர்சியைத் தாக்கல்செய்து ஆற்றினேனென்றாள் என்க.

(௩0௯) அறநிலையமங்கின் - தருமநெறிப்பொருள் குறைந்தால். மற நிலைச் செம்பொன் என்றது பகைவர்பொருள்; குற்றத்தண்டனையால் வரும்பொருள், சூதில் வெல் பொருள்களை என்க. செறுநர் - பகைவர். திரமுற்றுரைத்தல் - வரலாறுதப்பாமற் சொல்லுதல். மலையாள - முலை யாகிய மலையையாள. ஈழம் - பொன். மலையாளம், ஈழம் என்னுந் தேயத் திற்றிறைக்கொள்வது என்பது மற்றொரு பொருள்.

(௩௧0) கண்டி - ஆபரணம், ஒரூர்; பவளக்காடு - பவளக்குப்பை, ஒருஊர். கலிங்கம் - சேலை, ஒரு தேசம். ஈழம் - பொன், ஒரு தேசம்.

(௩௧௧) மாதரைமேவினர் - பெண்களை விரும்பியவர், பெரியபூமி யிற்றங்கியவர். ஈகை - பொன், கொடை. வர்சித்தல் - விலக்குதல், தள் ளுதல். கல்யாணம் - விவாகம், பொன். கண்ணுக்குங் காதுக்குந் தூர மில்லை என்றது அவைக்கிடமுகமானாற்போல விவர்க்கிடமோ ரூரானதா லாற்றுவாரென்பதாம். அன்றிக்கண்ணுமேல கோபித்தாற் காதிலேயுள்ள தைச் சொல்லென்பது மொருகருத்து.

(௩௧௨) ஆசை - பொன், அன்பு.

(௩௧௩) கடம் - நீதி, காடு. பசு - உயிர், பசுமாடு. வேங்கை - பொன், புலி.

(௩௧௪) மயல் - காமமயக்கம்.

(௩௧௫) வளர்த்த கிளியும் வந்தான் வந்தான் என்னும் பாங்கியுந் தலைவியுள்ள மெலியும் வேளையில் வந்தான் வந்தான் என்பாளதலாற் சரியாயிற்று. மன்வாசகத்தை அரிச்சந்திரன் சொல்லென்றது துணி நிந்தை.

(௱௧௬) கானேரிருவர் என்றது சுரநெறியிற் செல்லுமுடன் போக்குக்குரியவரை. மீனே சுமந்தவர் - தேவர்கள். கண்வைத்தகால் - வந்ததற்கு நொந்ததென்று கண்ணில் வைத்த கால். கண்ணுகிய பூவாலர்ச்சனைபண்ணியகாலெனினுமமையும். மீட்ட - சிறைமீட்ட.

(௱௧௭) கார் காலம்யானெக்கூடியதே என்றது கார் காலத்தில் மேகமும், வில்லும், மின்னும், யானையும் பிடியும் விளையாடலும், காந்தளும், தூற்றலும், மலர்களிற் கள்ளாகிய நீரு முண்டாயின. தலைவியிடத்தில் குழல் சரிந்த மயக்கமும்; புருவநெரித்த பார்வையும், துவண்டவிடையும், யானையாகிய முலைவிம்மிப்பிடியாகிய விடையோடிகலுதலும், குவிந்தகையும், பிறர்பழியுரையும், இருகண்களிலுநீர்வருதலும், உண்டாயின. காந்தளரும் புதல்பற்றிக்குவிந்தகையென்றுவமித்தார். வேறியலானை - பிடியைப்பிரிந்து வேருகவிருந்த யானை. வில் - இந்திரதனுசு.

(௱௧௮) கூந்தலை மேகமென்று மயில் களாடின. அல்குலைக்கண்ட பாம்பு இனமென்று படமெடுத்தது செங்காந்தண்மலரல்ல. இடைமிழலை மின்னல் என்ருதே. விளையாடும் யானை முலையின்சாயை இதுகார் காலயன்று நின்னுலுண்டாகிய புதுமை என்க. காந்தளில் - காந்தள் போல.

(௱௧௯) காட்டிலிருந்து வருவார் மல்லிகைமாலை கொண்டு வருவதாற் கார்காலமேயென மறுத்துரைத்தாள் என்க. ஆனையைக்குத்திச் சொல்லால் மறைத்தாள் என்பது ஒரு அரசன் மனேவி சோர நாயகனிடஞ்செல்ல மதிலேறிக் குதித்தபோது பட்டத்துயானை யெதிரில் வழிமறித்து நிற்க அதைக் கைவேலாற் குத்திக்கொன்று சென்று அவனைக் கலந்து திரும்பிவந்து தன்னுயிர்ப் பாங்கியிடத்திற் ருன்போய் வந்த வரலாற்றைச்சொல்லி வருங்கால் யானையைக்குத்தினே னென்ற சொல்லைக் கேட்டுக்கொண்ட ரசனந்தப் புரத்துக்கு வரவுடனே மிக்கனவால் யாது நிகழுமோ வென்றிறைவி சொல்லத் தோழி இப்படிப்பட்ட கனவு கண்டாயே யென்னுகுமோ வென்றும், உன் கனவு பழுதாகாமற் பலிக்குமே யென்றும் அரசனுக்குத் தோன்ருமன் மறைத்தாளென்க. இஃதோர்கதை யுலகில் வழங்குகின்றது.

(௱௨௰) கொடிச்சிறை போலிடிவிட்டு என்றது சேவல் சிறைபுடைத்தலை. பத்துத்தூதிலொன்று என்பது மேகவிடுதூது.

(௱௨௧) மால் என்பவர் கைம்மாறு கருதாமற் காத்தலையுடையவர், கருநிறம் வாய்ந்தவர், இலக்குமியாகிய மின்னைத் தன்னிடத்துடையவர், வில்லையுடையவர், கங்கை நீரைப்பாதத்திலுடையவர் ; நீயுமிவை யாவையுமுடையை ஆகலாற் கொடியையுடைய தாமரை மலரிலிருக்கும் பிரமனின்னையுமா லென்ருன் என்க. கோல் - ஊன்றுகோல். அது இடையூறு வந்தவேளையிற் காப்பது.

(௱௨௨) நீல முத்தம் - மையோடு கூடிய கண்ணீர்த்துளி. கொள் வெண்முத்தம் - அணிந்திருக்குமுத்துமாலை. கான் வெடிமுத்தம் - காட்டில் வெடிக்குங் கொட்டைமுத்து. நுதல் முத்தம் - வெயர்வை. செம்முத்தம் என்பது அவ்வெயர்வை மஞ்சளோடும் மஞ்சணெய்யொடுங்கூடியதனுலென்க.

(௩௨௩) கையிற்சற் சுமத்தல் - சாணைக்கல்லாகிய கன்னத்திற் கையைவைத்தல். சுமந்து என்பது சுமக்க வென்னு மெச்சத்திரிபு. விரைந்து வரலை நோக்கிய தலைவிக்கு விரைந்து செல்லவேண்டும் அவ் விரைவின்மையால் விரைந்து செல்லுங் கருத்தாய்ப்பாகன் குதிரைமே விட்டுரைத்தான். வெந்நீர் விடல் போர்கூடும் என்பது மெள்ளச்செல்லு மென்றபடி.

(௩௨௪) ஏர் - அழகு. ஒருவரை நீக்தல் என்றது இறைவன்றலை வியை நீக்தலையும், மேகமலையை நீக்தலையும். என்க. தாரதரம் - மேகம்.

(௩௨௫) கார்முடியாயென்பது கூந்தல் இறையவர்கையொப்பனை யைவேண்டலின் முடியாதிருத்தலாமென்க. வெளியே பயிலாதது பிறர் பயிர்ச்சி பாராத குறிப்பு. இருகண் விழியாமை இறையவர் நீங்காதிருப் பதற்கு. வார் புனையாமை கச்சுச்சிறுமை பற்றி யென்க. அணிதானணியாமை இறை வரைப்பிரிய விட்டு விட்டவென்று அவயவங்கள்மேல் வெறுப்பு. அவ்வாறன்றி வெறுப்பென்றே பொருள் கோடல் சிறப்பன் றென்க. எவ்வண்ணமுங் கூடப்பிள்ளைப்பாவை விண்டாள் என ௬௭௭-ம் பாடலிற் கூறியதானுமறிக.

(௩௨௬) கொலையிடுதல் - சதையகழ்தல். தலையிட்டும் என்றது வலம்புரி வடிவாகச் செய்ததலைக் கோலமணிதலை. வலம்புரி வயின்வைத் துத்து வாமுடித்த துகளறு முச்சியென்பது திருமுருகாற்றுப்படை. காலிட்டும் என்றது கணைக்காலுக்குச்சங்கமென்று பேரிட்டதை. கல்யாணத்திற் சொல்வது தீயை வலம்புரியென்பதும், சங்கநாதம் பண்ணச் சொல்வதும், தாழிநீரிற்சங்குடன்மோதிரம் போடச்சொல்வதும், வாரண மலங்கரிக்கச்சொல்வதும், வீட்டுக்கு வெள்ளையடியென்பதும், கைக் குவளையிடுமென்பது முதலியனவாம்.

(௩௨௭) மங்கலம் - கல்யாணசுபம். திருப்பூவணம் - இலக்குமி பொலிவாகும் வண்ணம், அன்றித்தாமரைவண்ணம் போன்ற அவயவத் தோடு கூடிவந்தவெனினுமாம் அது இருவிழிமலர்ந்துவருவது. மார்க் கம் - சமயம், வழி. மங்கலமென்னு மூரைக்காட்டித்திருப்பூவணமென்னு மூருக்கு வந்தவழி நல்லதாம் என்பது மற்றொருபொருள்.

(௩௨௮) நினைத்தமையாவது. குளங்கண்டபோது பூ முதலியவற்றைக் கண்டும், வயல்கண்டபோது சோலைபுட்கள் முதலியவற்றை நோக்கியும். கூட்டுண் வண்டின் வளங்கண்டபோது பேட்டோடு சேர்க்கை கருதியும். குயில் கூவும்போது கார்காலம் பார்த்ததும், கார்காலங்கண்டபோது தூதாகச்செல்லென்றதும். காளையைக் கண்டபோது நெடுகிலுஞ் சேர்க் கைசெய்யவேண்டியதுமாம். பாகனுக்குந் தெரியுமெனவே கூடவந்தவர் களுக்கும் வழியில் வந்தவர்களுக்குந் தெரியுமெனலாயிற்று.

(௩௨௯) மேகந்தூதாய் வந்தும், இருவரையு மெழுதிய படம் பார்த் துக் களிக்குங் காட்சிப்பொருளாயிருந்தும், கால் குறியிடங்கண்டுதிரும்பி யுதவியும், விழியிடந்துடித்தும், காக்கை காலை தனிலெழுதல், காளை மின்புறுதல், மாலைமுழுகிமனையடைதல், உற்றாரோடுண்டல், உலகோம் பல், என்னுமைந்து குணங்களையுங்காட்டியுதவியும், களு சேர்க்கை செய் தும், வெறும்பொய்-ஆதரவார்த்தைகளும், தானே தேறியும், நான் என்ப தாசகிவினவியதானும் உன்கையென்பது சத்தியஞ்செய்தலை நினைத்து

வானும் என்க. உன்கை என்பதற்குக் கொடைகொண்டோர் வந்துரைத்தலைக்கேட்டு மெனினுமாம்.

(௲௰) அரைப்பணம் - அல்குல். அரை - இடை. பணம் - பாம்புப்படம். அரைப்பணத்தை வாங்க வாயிரங்கோடிபணமனுப்பினானென்பது மற்றொரு பொருள்.

(௲௰௧) சிற்றன்னை - செவிலித்தாய். விண்டிடக் குறியாள்-விலக்க நினையாள். மணம் - விவாகம்.

(௲௰௨) சுரும்பு - மலை. மாதங்கம் - யானை. பொற்குடம் - பூரணகும்பம். கயல் - இணைக்கயல். கவரி - சாமரை. இவைமங்கலப்பொருள்கள். தலைவியெதிர்தலுக்கு முறையே, தேகம், முலை, கண், கூந்தலென்க.

(௲௰௩) ஆட்டுக்கு வந்தவிபத்து - வெறியாட்டம். கோட்டிறுமாப்பு - முலைவிம்மல். பாட்டுப்பயன் - கேலிச்சாடை. தேட்டு - சம்பாத்தியப்பொருள். களிற்று இயம் - யானைமேலிட்டமுரசு.

(௲௰௪) தாமரை மேற்பனை காய்த்தது என்றது கையிற் பனைமடற்குதிரை செய்தது. பூமின்-தலைவி. முடித்தலை சாய்த்தது என்றது பாங்கிக்குத் தலைவிமறைத்தலை. அதுவோ வின்னுநண்ணுவதே என்றது அப்படிப்பட்ட களவுப்புணர்ச்சிக்காலமினிவரவாபோகிறது வரமாட்டாது என்றபடி. ஓ - எதிர்மறை.

(௲௰௫) மழைமண்டலம் - கூந்தல். இருபூ - இரண்டுகை. ஒருபூவரும்பு - தாமரையரும்புபோற் குவிந்தகை. ஆகாயத்திலிரண்டு பூக்தோன்றி யொருபூவாயரும்பி யுளதென்பது மற்றொரு பொருள்.

(௲௰௬) முசுகுந்தனிந்திரனுக்கு சட்பாளருகலாவிந்திரன் மகளுக்குச் சீர்கொடுத்தான் என்க. மின் என்பது இடையை. புயல் என்றது கூந்தலை. மதியம் என்பது முகத்தை. பூ - பூமி. மலரன்னம் என்றது தலைவியை.

(௲௰௭) சந்திரகாந்தக் கற்சாலை என்றது கபோலத்தை. தண்ணீர் - கண்ணீர். மதி - புத்தி, சந்திரன்.

(௲௰௮) வாள் - கண். வில்மை - கண்ணிவிடும் பிரகாசமாகிய மை. வாள்வித்தையில் வில்வித்தையை வைத்தவரென்பது மற்றொரு பொருள். பற்றுள்ளவர்போலே கலுழுமென்றது வாடியமுகம், வளைசோருங்கை, அயர்ந்தகால், பூரித்தமுலை, ஆகியவவயவங்களைக்குறித்து அவையினமாகையா லன்புவைத்துக் கண்ணாகிய வவயவங்க ளழுகின்றதென்றாள் என்க. கண்வாளுக்கு மையிட்டவர் இறைவர். அது. மெய்தொட்டுப்பயிறல். அணிந்துழ்நாணியதுணர்ந்து தெளிவித்தல், பாங்கிசுவர் பொருட் சொல்லி நாடன் முதலியதுறைகளானதிக.

(௲௰௯) கண்ணன தாமரை வேலவன் மேற்செலக்காட்டி என்றது சுவாமியைப்பார்த்துக் கொண்டு என்றபடி.
இருதாமரை மலர் விண்மீது நீட்டி என்றது கைத்தாமரைகளை மேலே குவித்துத் தூக்கி என்றபடி. பிரியிற்பிரிக்தேன் என்பது உன்னையான்

பிரிவே ஞானுயிர்பிறிந்தவனே என்றபடி. என்னேர்தவறு - மனமறிந்தகுற்றம். பொய்ச்சத்தியஞ் செய்தாரென்றவாறு.

(௱௪௦) குழகன் - பேரழகுடையவன். வாய்ப்பாலமுதம் - அதரத்தினமிர்தம். வீடு - மனைவி. இரண்டகம் - ஒருவழிப்படாத நினைப்பு. கனியுடனே பாலுஞ் சோறுஞ்சாப்பிட்ட வீட்டுக்கிரண்டகஞ் செய்தாற் சொல்லுவதென்னை? என்பதுமற்றொருபொருள்.

(௱௪௧) கந்தருவநகர் தோன்றிமறைதலாலு வமையாயிற்று. இவர் நேர் நனவு என்றது தலைவர்செய்த பொய்ச் சத்தியம். என்றபடி. ஓவியம் - சித்திரப்பாவை.

(௱௪௨) முயக்கிடையே வெளிகாணவயர்ந்தது என்றது ஆலிங்கனமிறுகவில்லை மிருது வென்று துக்கப்பட்டதை என்க. களத்திடைச் சொற்றது என்றது தலைவிநீரில மிழ்ந்திய ஞான்று வீழ்ந்தெடுத்துயிரளித்ததலைவனைநீயே உயிர்காவலனென்றதை என்க. வயத்திடைச் செல்பவரானென்ற போது வருந்துயரும் என்பது கருதலர் மேற் செல்பவர்யாரென்று தலைவன் வினவியபோ துடனே யிறைவன் செலவுகுறித்த வினு வென்றுதலை விமயங்கிய குறிப்பு. கடல் நெறிதப்பிக்கரையைப் படாதெனவே வராமலிரார் என்பதாயிற்று.

(௱௪௩) விண்டாரென்று - நீக்கினரென்று. மூத்தவெற்பு - முலை. இருகாந்தள் - இரண்டுகை. எற்றியது - அடித்துக்கொண்டது.

(௱௪௪) சூட்டியமாலை - இறைவன்கையணி. தோண்மாலை - அதிகரித்த சேலையுடை. செல்லுஞ்சோலை - ஓரிடப்பயிர்ச்சி. ஆட்டியமாலை என்றது நாண்வரையிறத்தல் முதலாகியவ வத்தையைத் தருமெய்ப்பாட்டினுசை மிகுதியை என்க. மால் - ஆசை.

(௱௪௫) கத்தூரி மிஞ்சிய நீற்றிலையென்பது. கஸ்தூரியிருபங்கும், கற்பூரம் ஒருபங்கு மிட்டவெற்றிலைச் சுருட்டுக் களைத்தலைவிபடுக்குமலர் மெத்தையிற் பாங்கிவைத்திருந்ததைச் செவிலிகண்டு ஆண்மகனுக்குவைத்ததென்று சந்தேகித்தாள், என்றும், தலைவன் வந்து போனதற் கடையாளமாகவைத்த முத்துமாலையையும், நகத்தால் வரைந்த வெழுத்துள்ள வெற்றிலைச்சீட்டையுங்கண்டு கோபித்தாள் என்றுங்கூறினள் என்றவாறு.

(௱௪௬) வேதனை என்றது பிரமனுக்கும், துன்பத்துக்கும். அன்னம் என்பது சோற்றுக்கும், பட்சிக்கும். கையில் வளை என்பது சக்கரத்துக்கும், கைவளைக்கும். மாலென்பது மாயவனுக்கும், மயக்கத்துக்கும் என்றவாறு.

(௱௪௭) தென்கிழக்குறுதேவன் - அக்கினிபகவான். துயர் என்பது வாகனமாதலாலென்க. குமரவென்றது வெறியாட்டாளனை. பாவம் - அபிப்பிராயம்.

(௱௪௮) வாரம் - அன்பு. மரபு முறைமை. தாய்க்கொளித்த சூலுண்டாவென்பது பழமொழி.

(௱௪௯) அளியே பொருந்தாரை - வண்டுகள் மோதப்பெறுமாலையை. கருணையில்லாதவரை. முடித்து - சூட்டி, அழித்து. வருந்தா - வருந்தாமல். வருந்தி.

(௩௫0) வரிபட்ட பூக்கள் முன்பகையாக முகிழ் நகையைத்தன் பகைதீர்க்க அம்பிற் கொல்லுநாள் எனக்கூட்டுக. வரி - வண்டு, இரேகை. அம்பு - நீர், பாணம். பூக்கள் என்பது நீலோற்பலம், செவ்வாம்பல், தாமரைமலர்களை என்க. வேட்டு - விரும்பி துப்பாக்கிகொண்டு வெடியெழுப்பியென்பது மற்றொருபொருள்.

(௩௫௧) பெண்ணிற்கரும்பு - தலைவி. விண்ணிலெழும்புங்கலைகள் என்றது தறிபட்டுமேலெழும்பிய கொம்புகளை. அதன்பின் போயது வெய்யபணி என்பது அறுபட்டெழும்பிய துதிக்கையை. கரிமலை என்றது தலைவன்வாளால் நாலு காலையும் வெட்டி விட்டமையால் யானை மலைபோலிருந்தமையாலென்க. நாந்தகம் வச்சிரமே என்றது மலைகளைச் சிறகரிந்து நிலைபெறச் செய்ததுபோற் செய்தமையாலென்க. யானைவாயிற்பட்ட கரும்பைத் திருப்பினனென்பது மற்றொருபொருள். வச்சிரம் - வச்சிராயுதம்.

(௩௫௨) முலைமேற்றோன்றிய அரவிற் சங்காம்பிறை என்றது பார்ப்பாரப்பாம்பின்படச் சங்கரேகைபோலு நகக்குறியை. கரவிற்சங்கு என்றது. தோழிதலை மகள்துயர் கிளந்து விடுதற்குச் குறிக்குஞ் சங்கு, கொம்பு முதலியனவாம். இறைவனோடு கூடுமிடத்துக் கைவளையொலிப்பதெனினுமாம். வரவிற் சங்கோதை மகிழ்வது என்றது வலம்புரி கேட்டவன் வரவறிந்து மகிழ்தலை. இரவிற் சங்கேதை என்றது அர்த்த சாமத்திற்குறித்த சங்கோகையை. 'அது இருவர்க்கு நினைப்புக்கூறிவைத்துப் பாதிச்சாமந்தெரிவித்த தென்க. சோர்துகில் - ஆயாசவுடை முதலியன.

(௩௫௩) ஆண்சிங்கம் என்பது தலைவனை. பெண்ணனை - தலைவி. மத்தகம் - முலை. எதிர் சிங்கநோக்க நெஞ்சோர்கின்றது என்றது எதிர்ந்த சிங்கப்பார்வையை மனதினினைத்துப்பயந்து எனவும் தலைவன் பார்வையை நெஞ்சினினைத்து விகாரப்பட்டென்றுங்கொள்க. சிங்கநோக்கென்றது முன்பின் பார்த்ததுக்குமாம். முன்பார்த்தல் - முன்னடந்த செயலை. பின்பார்த்தல் - பின்னடக்குஞ் செயலை. மத்தகம்பிளந்துண்டாமெனவேபாங்கியறத்தொடு நின்றொன்று செவிலி நற்றாய்க்குக் கூறியதாயிற்று.

(௩௫௪) கிளி - தலைவி. பூங்காவனம் என்பது தலைவனரண்மனையை. கொஞ்சத்தனம் - அற்பமாகிய பொருள், கொஞ்சுதற்குயோக்கியமான முலை. கொஞ்சலாவது வாயால் நிகழ்குறி.

(௩௫௫) இரண்டுதனக்குடம் என்றது தலைவிமுலைகளாகிய குடங்களை. வெற்பிற்றாமரை பூவாதென்றது கல்லிலே கால்வைக்கமாட்டாள் என்றபடி. மாந்தளிர் மேன்முத்து என்றது காலிற்கொப்புளம் என்க. தேகத்தில் வெயர்வை யெனினுமமையும்.

(௩௫௬) புத்திசாலி - புத்திமிக்கவள், புத்தியையுடைய வருந்ததி. கானம் - இசை, காடு. வனம் - நீர், காடு. தாமரை - தாமரை, தாவுகின்ற மரைமான். தாமரை என்றது தலைவிபாதங்களை, உன்மகிழ்ச்சியினாற் காலாகியதாமரை வனத்திற் செல்லுமென வேயுடன் படுத்தியதாயிற்று.

(௩௫௭) தலைவியைக் கிளியென்றதற்கேற்பத் தினை சாமைகளைக் காட்டி நெல், கனி, அமுது, ஊட்டி எகுவேனென்றான் என்க. தலைவிக்குத்தினை, சாமை, விளைந்த அவள்குறிச்சியைக் காட்டி நெல்லுஞ் சோலையுமுடைய தனது மருதநிலத்தைக் காட்டுவேன் என்றான் என்றபடி: ஓர் புறத்தேயென்றதனாற்றலைவனூர் சமீபமாக விருக்கிறதென்றாயிற்று. அது இடமணித்தென்றலானுமறிக. தெரித்த முதுாட்டி என்றதனாற்றலைவன் பதிக்குப்புற நகரிலிளைப்பாறிப் போவார் என்க.

(௩௫௮) பாலையாழ் தடவியது பாலை நிலத்துப் பாதையிற் பிரிவுக் குறிப்பு. வனத்திற்குமரி - பாலை நிலத்திலுள்ள பத்திரகாளி. புனத்திற் குமரி என்பது தலைவியை. பாலையாழென்றதனால் வனத்திற்குமரி என்றது பாலைவனத்துக்குமரியை என்க.

(௩௫௯) என்னாணை என்பதற்கு என் நாணை என்றும், என் ஆணை யென்றும் பிரித்துப்பொருள் கொள்க. ஆணை - ஆக்ஞை.

(௩௬0) தலைக்கொள்ளல் - உயர்வாகக் கொள்ளுதல், தலைமேற் சூடிக் கொள்ளுதல். கற்பு - பதிவிரதாதருமம், முல்லைமலர். நாண் - நாணம், (மலர்தொடுக்கும்) நார்.

(௩௬௧) களிற்றைப்பிடி நீத்தமர்வதுண்டோஎனவும், காரிருந்தாலல்லவோ மயிலாடல் கருதுவதே யெனவுங் கூறினமையாற்றலைவியுந் தலைவனைத் தொடர்ந்தேக வொருப்பட்டாளாயிற்று.

(௩௬௨) செம்பாம்பு - கேதுவென்னும் பாம்பு. கரும்பாம்பதாமென்றது பாலையின் வெப்பத்தாலென்க. தழலிற்கு உழையும் குழையும் எனப்பிரிக்க. குழைதல் - வருந்தல். கரி என்பது வெள்ளை யானையெனினுமமையும்.

(௩௬௩) மணம் - கலியாணம். கோ - இறைவன். இன்பம் - புணர்ச்சியின்பம். நாண்தருகில்லா அலர் - சந்தோஷத்தையுண்டாக்கும் புட்பம். நாண்தருகில்லாவலரெனவே நாணைத்தரும் அலராகிய பழிச்சொல் வீட்டிலுண்டாமென்பதாயிற்று.

(௩௬௪) கும்பராசி - தனம். சிங்கராசி - இடை. விடை ராசிப்பேர் - நரை. மகரமீன் - கண். அம் - கண்ணீர். கன்னி - தலைவி. கற்கடகம் - இரத்தினங்களழுத்திய காப்பு.

(௩௬௫) காமத்திலாடிய தேவர் என்றது பிர்மவிஷ்ணுக்களை. மெய்ம்மாலை - எலும்புமாலை. கலிக்க - ஒலிக்க. ஈமம் - சுடுகாடு. சாமம் - இருட்டு. மாலை - பூமாலை, மாலைக்காலம். வைகறை - விடியற்காலம், வைகுகின்ற வறைவீடு.

(௩௬௬) மால் இலர் அவம்புரியார். மேலில் அரவம் புரிவார். பாலில் அர அம்புலியுண்டு. எனப்பிரித்துரைக்க. அரவென்பது சிவசிவ யாவரேயோ என்பதுபோலும் அச்சக்குறிப்பு. காலிலரவம் - சிலம்பு. ஊரரவம் - ஊராரொலித்தல்.

(௩௬௭) நன்னீர் - நல்லநீர்மை, நல்லதண்ணீர். கலந்துரைத்தல் - சேர்ந்து பேசுதல், கூட்டித்தேய்த்தல். மாத்திரை - நொடிப்போது,

பிணிமருந்து. சுரம் - வியாதி; அருநெறி. மாறும் - கழிந்துவிடும்; ஆறிவிடும். பாத்திரமாக்கொண்ட வென்பதற்குப்பாக்களைத்திரமாகக் கொண்ட வெனினுமமையும்.

(௩௬௮) பணம் - பாம்பு. குணமுடிப்பு - குணநிறைவு. மணமுடியார் - கலியாணஞ்செய்யாதவர்; வாசக்கூந்தலார். கந்திகை - வாமோந்தியகை; மாலை. கணம் - சிறுமை.

(௩௬௯) வெளிப்படை.

(௩௭0) எம்மூர் அலர்மாளிகை வைகுந்தம் பின் செல்கவே என்றமையாற்றலை வியையுந்தலைவனையு மிலக்குமியாகவுந் திருமாலாகவு மயிர்த்தார் என்க. மாயைமகன் - சூரபன்மன்.

(௩௭௧) பகர்தேவி - புகழ்ந்துபேசப்படும் பெண்ணே, பட்டணம் என்பது தலைவிநகரத்தை. திருப்பாலைக்குடி - பத்திரகாளி குடியிருக்கும் பாலைநிலத்தூர். சேதுமார்க்கம் - கரைவழி; இராமேச்சுரம்போகும்வழி. சிறுவயல் - சிறிய வயல்கள், ஒருஊர். பெருவயல் - பெரியவயல்; ஒரு ஊர். வேலை - வேலாயுதக்கடவுள். தேவிபட்டணம் விட்டுவந்தாற்றிருப்பாலைக்குடியென்னு மூருமிராச்சுரவழியுமன்றி வேறொன்றுமிடையிலில்லை என்பது மற்றொருபொருள். சிறுவயல் குன்றக்குடிக்கருகிலுள்ளவோரூர்.

(௩௭௨) உன்னிகர்கின்ற சரவணப்பொய்கை என்றது பூவால் விளங்குதல், அடைந்தோர் பாவந்தீர்த்தல், சரவணமுடைத்தாதல், நன்னீருடைமை, கண்டோர் மனவியப்பு, தொட்டார்க்குளிருடைமை, உண்டார்ப்பேரின்பமுடைமை, முதலானவையாலென்க. அன்னையெனும்பிணி - அன்னையிடுக்கம். களபம் - சுண்ணச்சாந்து.

(௩௭௩) பயில் - பாசாங்கு. கொந்து - பூங்கொத்து. உன்கிளி என்பது தலைவியை. சிந்து - சந்தப்பாட்டு. கோவை - இராசாவை. கிளிகோவைப்பழந்தின்னப் போமென்பதுமற்றொரு பொருள்.

(௩௭௪) மாலை - இருட்டு, மலர்மாலை. பழயவரை - பழமையாகிய, மலையை, இறையவனை. கூகையிரட்டுஞ்சுரமென்றதனாற் பாதிச்சாமமென்க. இரட்டல் - ஒலித்தல்.

(௩௭௫) சொல்விலங்கு - சொற்றடை- துவைப்பிடி - துவைப்பெண். வல்விலங்கு - நாயகன். விலங்கு. விளையும்பயிர் - பக்குவகாலம். விளைதற்குரிய பயிர். போக்கு - சுரம்போக்கு, கனை.

(௩௭௬) இரவு - இராப்பொழுது, யாசித்தல். ஏந்தல் - சிற்றூர், அரசன். கரவில்லொடுங்கவர் கள்ளர், கரவில் ஒடுங்குமவர் கள்ளர். எனப்பிரித்துரைக்க. பாலையுதவு - பாலைவனத்தையுதவு, பாலைத் தருவாயாக. உரத்திற்சாய்ந்தென்பது பிரிவால்வருந்துக்கத்தாலென்க.

(௩௭௭) பகரத்தில் —வல் - போ. அடியென்றல் - மாறு. பண்ணை - செய். விதை - வித்து. தாய்ப்பேர் - ஆய். எனவே; போமாறுசெய்வித்தாய் என்றபடி. மணந்தொடுமலர்மாலை - கலியாணமாலை. இருகோங்கு என்பது முலைகளை. போமாறு செய்வித்த நீ வருமாறும் புரிந்தருளே யென்பதிங்கு நோக்கத்தக்கது.

(௩௭௮) பிடியானைக்கொம்பொரு நான்கு என்பது தலைவிமுலைக ளும்; யானைக்கொம்புஞ்சேர்ந்து என்க. பின்பாகிட - அவைகளெதிரா மற் பின்காட்ட. துடி - உக்கிரம்; வலி. கொம்புமுன் - தலைவிக்கு முன்பு. நான்கின் - சாதுரங்கத்தினுன் கவதாகிய காலாள்போல.

(௩௭௯) உன்தாய் ஏன்பது செவிலியை. ஊரிற்பகைத்துடி - பகை வர் செருக்கு. பாரிற்பகைத்துடி - பாலைநிலத்திலுள்ள வுடுக்கென்னும் வாத்தியம்.

(௩௮௦) தேவை - விருப்பம். போம்பொருள் - ஊழாற்போகத் தக்க பொருள். எவு - அம்பு. கோ - பசு, அரசன். பாலை - பாலினை, பாலைநிலத்தை.

(௩௮௧) இருபூ - கண்ணும், காலும். மதி - புத்தி. சந்திரன். வெய் யோன் - இறைவன், சூரியன். மதிகொடுத்து - புத்தியைக்கொடுத்து. மனையேயிழந்த அரவென்று கொண்டுகூட்டுக.

(௩௮௨) வடு - பிஞ்சு, குற்றம். கனிகனி - பழம்பழு, உருகுருகு. கண்ணீர் - கள்நீர், கண்ணீர். இரை - ஒலி, அலறு. தலைகவிழ் - தலை சாய், நாணுற்றலைகுனி. நடுங்கு - ஆடு, நடுக்கங்கொள்ளு.

(௩௮௩) அடிசில் - சோறு. பெருங்கடி - இராசகல்யாணம். அருங் கடி - கடுங்காவல். கருங்கொடி - கரியகாக்கை. பொன்கொடி-தலைவி. காய்க்கொடி - சீனிக்கோவைக்கொடி. கருங்கொடியே யனையச்செய் தாற்றின் னுங்காய்க்கொடிவரும் என்க.

(௩௮௪) இராமீசுரவழி - வேறிடத்திலில்லாத மேலான சுரப்பாதை, இராமேச்சுரஞ்செல்லும் பாதை. பாம்பு அனந்தம், பாம்பன் அந்தம் எனப்பிரித்துரைக்க. பாம்பன் அந்தம் - பாம்பனூற்றின்முடிவு. அழ கெனினுமமையும்.

(௩௮௫) வெந்நீர் குளிர் நீர் என்பது முரண்.

(௩௮௬) வேங்கைத்துறுகல் என்றது வேங்கைமலர்களுதிர்ந்து கிட க்குங்குண்டு கற்களை என்க. புலிப்பறழ் - புலிக்குட்டி. கோங்கு என்பது முலைகளை. தளவு - முல்லையரும்பனையபல். முகை - அரும்பு. கருங் கால் வேங்கை வீயுறு துருகலிரும்புலிக்குருளையிற்றோன்றுங்காட்டிடை எனவும், கருங்காலினவேங்கை கான்றபூக்கன்மே லிருங்கால் வயவேங் கையேய்க்கு மெனவுங், கூறியமையிங்கொப்பு நோக்கத்தக்கது. ஈட்டி- ஓராயுதம்.

(௩௮௭) தணர் என்பது ஒலிக்குறிப்பு. மெய்ந்நடுக்கே என்பது அல்லாது வேறில்லையென்றபடி. எகாரம் பிரிநிலைக்கண்வந்தது. வெங் காருடலத்த நாகங்கள் என்பது யானையும், பாம்பும் என்க.

(௩௮௮) ஆற்றுவரத்தும், இடியும், மழையும், மேகமும், மின்னும், கற்பித்தவாறு காண்க. ஆறு - பாதை. போகத்தினர் சொல்லிடி என் பது பரியாசக்காரர் வார்த்தை மிகுதலை. கண்மழை - கண்ணீர். மே கம் - இறைவன். மின் - இறைவி.

(௩௮௯) பட்டிவைத்தவோர் என்பது ஆணைப்பெண்ணாகவும், பெண் ணையாணாகவும், செய்யவல்லது இவ்வாலாறு விக்கிரமாதித்தனன்காவது

பதுமைக்கதையானறிக. நளனல்லவே என்பது உருத்தெரியாதமந்தி ரோபதேசமிவனுக்கில்லையென்றபடி. பட்டி - விக்கிரமாதித்தன்மந்திரி.

(ருகூ0) முக்கோல் - திரிதண்டம். அறக்கூனிய முதுகு உடைய வரே எனப்பிரிக்க. அற - மிக. நடை - ஒழுக்கம், நடத்தல்.

(ருகூக) பருவத்திலூறிய நீரையுண்ணுரெனிற் பின்னுண்பாரின்றாகத் துர்வாசமா மாறுபோலப் பருவத்தில் விவாகஞ்செய்யாவிடிற் பிறர் கொள்ளாவண்ண மித்தகைய வலருண்டாமென்பது கருத்து.

(ருகூஉ) மேகம் என்பது தேகம். வேங்கைநகம் - புலிப்பற்றாலி. தோகை - தலைவி. நாகம் - யானைபோலுந்தலைவன். மயிலும், பாம்பும் விளையாடுவதென்பது மற்றொருபொருள்.

(ருகூரு) குழை - இலை, தோடு என்னுங்காதணி. பூங்கொடியிடை வாய்ந்தனை என்பது புட்பக்கொடி படரப்பெற்றுளாய், பூங்கொடியைப் போலுமிடையைப்பெற்றுளாய் என்றபடி. ஒருபாவை காட்டி என்றது பாவைபோலிருக்குங்குரவங்காயை.

(ருகூச) உரம் - ஞானம். உற்றவர் - இறைவர். இரண்டடி - நாலடியாகியதே என்றது இறைவன் குதிரைமேற்கொண்டதாலென்க. எட்டடியாகியது என்றது இறைவி பல்லக்கிலேறியதாலென்க.

(ருகூரு) தாமரைமேற்றாமரை யுற்றது என்பது இறைவன் காலடிச்சுவட்டிலிறைவிகாலடி பட்டதை. கடப்பமரத்தருகிற்படுத்திருந்தமையான் மணத்தாற்குளிர்ந்ததென்க. புறவடி - சுகாசனத்திருந்த தலைவனடி. இணையடி - தலைவன் மடியிலிருந்த தலைவியடி.

(ருகூசு) உடம்பு - இறைவன். உயிர் - இறைவி- வருவீர் என்பது சுரம்போய்த் திரும்பிக்கலந்துடன் வருவோரை. நலந்தந்ததே என்பது இத்தன்மையோரும் எப்போது முண்டென்னு முறுதிவந்தமையாலென்க. வருவோர்க்குப்புள்ளையும், அவர்வீட்டுக்குக்கூட்டையு முவமானமாகக்கொள்க. நடந்தவர்போல - சுரத்திலே சென்றவராகிய எங்களுடையதலைவி தலைவர்போல என்க.

(ருகூஎ) உவப்பு - மகிழ்ச்சி. மருவலரைமுடித்து - வாசனையுடைய மலர்களைச்சூடி, பகைவர்களையழித்து. உற்றுதவி - துன்பமுற்றவிடத்து த்வபுரிந்து.

(ருகூஅ) மாடி - வீட்டுமேன்மாடியில். கண்ணேர்குராவும், அராவும், மராவும், கராவும்; இராவும், கலையும், கலையும்உள்ளமும். கண்டேன் மற்றென்கண்டேன் எனக்கூட்டுக.

(ருகூகூ) மயிலும், மானும், தலைவியைப்போன்றமையாலிங்ஙனங் கூறினள். வான் - தேவருலகு. சேண் - தூரம். தேவருலகு.

(ச00) உய்யானம் - பூஞ்சோலை.

(ச0க) பந்து, குழல், உடம்பு; இம்மூன்றும் போக்குவரத்துண்மையாதுவமையாயின. குழல் - நெய்வார் கருவி. சந்தடி - சனக்கூட்டத்தாலாகுந்தொந்தரவு.

(சO௨) காடன் செட்டி என்பார் மருதுபூபதிக்குயிர் நண்பர். இவர் மாபிலுதித்தவர்களிப்பொழுதும் ஆத்தன்குடி என்னுமரண்மனைப் பட்டியிற் பெருமித முடையவர்களாயிருக்கிறார்கள். இவர் மண்டபப் படி சந்நிதிக்குச்செல்லு மலையடிவாரத்திலுள்ளது. இப்பொழுதுஞ் செல்வமணி மண்டபப்படியாகவே சிறந்து விளங்குகிறது. இச்செட்டி யாருடைய அன்னசத்திரம் மருதுபாண்டியனால் ஐந்து கிராமங்கள் முற் றூட்டாக விடப்பெற்றுள்ளது.

(சO௩) துணை என்பது தலைவியை. மருது துரையரண்மனையாவது மலைக்குத் தென்கீழ்த் திசையிலிருந்து சிதைவுற்றதாகத் தெரிகிறது.

(சO௪) முருகா வென்றது வெறியாட்டாளனை. புயல் - இறைவன். மின் - இறைவி. அகம் - தலைவிவீடு. அயல்வீடு - உறவினர் வீடு. இன்றோ என்றது வரைந்து கொண்டிருந்து வீடுவாரோவென்ற படி.

(சO௫) பிறர் மாடத்திலே பிராமவிருப்பர் என்பது ஒரு வீட்டுக் கண்ணாடி மாடத்திலுள்ளவர் அயல் வீட்டுக்கண்ணாடி மாடத்திற்றோன்று தலாமென்க. தராதுகொண்டார் என்பது தாய்தந்தையர் கொடுக்காமற் கொண்டார் என்றபடி. பராவ - புகழ்ந்து துதிக்க. மணம் - கலியாணம், வாசனை. காவலர் - காக்குந்தொழிலில் வல்லவர், காவின்கணுள்ளமலர்.

(சO௬) தலைநாணிகர் நாணிலைசெய்து என்பது உயிரினுஞ் சீரிது நாண், அந்நாணுயிருள்ள வரையிலும் போவதில்லையாகலாணிகர் நாணென்று மங்கலநாணுக்கு வமையாக்கினர். தலைநாள்நிகர்நாள் நிலைசெய்து எனப்பிரித்து இயற்கைப்புணர்ச்சி மகிழ்ச்சியை நிகராக வெனினுமமையும். பொன்மாலை என்பது தலைவியை. மணம் - கலியாணம். பொன்னாலாகிய மாலைக்கு வாசனையைத் தந்தார் என்பது மற்றொரு பொருள்.

(சOஎ) அருள்நிதி - கொடுக்கும்பொருள். பால் - பகுப்பு. ஏற்பார் - யாசகர். அறியாமை - கொடைமடம். இருவரை - இரண்டுமலை. ஒரு வரை என்பது இறைவனை. ஓர்வரைதலை - ஒப்பில்லாத கலியாணத்தை. இரண்டு மலையைத்தாங்கி யொருமலையையுங்கொண்டிருந்தவள் மற்றொரு மலையையுந் தலைமேற் கொண்டாள் என்பது மற்றொருபொருள்.

(சO௮) மன்றல் - கலியாணம், வாசனை. நீயெனுங்கொம்பு என்பது பாங்கியை. தப்பு - குற்றம். மற்றக்கொம்பு, தப்பு முதலானவாத்தியங்களுண்டு என்றபடி.

(சO௯) கைப்பற்றியேகல் என்பது சுரம் போக்கை என்க. ஏற்றவர் - பரிசு பெற்றவர்.

(சகO) தமிழ்கொண்டு - தமிழ்ப்பாமாலையேற்று. மஞ்சள் - சுமங்கலிகட்குக் கொடுக்கு மஞ்சட்கொடை. மொழி - சோபனவாழ்த்து, கலியாணப் பொருமையைப்புகழும் பேச்சுக்கள். கண் - அஞ்சனந்தீட்டப் பெற்றமை. கையும், காலு. மென்பது வீச்சாலு நடையாலுமென்க. ஆபரணங்களானெனினு மமையும்.

(சகக) அன்பினிற் காத்தவர் என்பது பாங்கியை. காணிக்காசை - காணியாட்சி விருப்பம். கார்கு ஆசு - காலுக்குக்குற்றம். கூ'வர் - பெ

ற்றோர். ஒருகாசு - ஒருகுற்றம். செலவு - செல்லுகை. காணிக்காசு, காற்காசு, ஒருகாசு. இவை கொடுத்தேனென் செலவில்லை யென்று சொல்லுமென்பது மற்றொருபொருள்.

(சகஉ) அன்னம் - சோறு, அன்னப்பட்சி. பிடி - கைப்பிடி, பெண் யானை, புல் - புல்லு, புலி. கொக்கு - மாமரம், ஒருபட்சி.

(சகங) ஒருத்தர் - வேற்றரசர். கட்டிக்கொடுத்தல் - பிடித்துக் கொடுத்தல், கலியாணஞ் செய்தல். திருட்டு என்றது களவுப்புணர்ச்சியை. கிளியென்பது தலைவியை. எட்டிப்பழம் - பிறர்வரைவு. கோ - தலைவன். கோவைப்பழந்தின்ற கிளி யெட்டிப்பழந் தின்றதென்பது மற்றொருபொருள்.

(சகச) பந்தன கொங்கை என்பது அன்னையென்க. எந்தலகத்திருக்கும் சந்தனம் என்பது தலைவனிருக்குந் தேரை என்க. அத்தி-யானை. மா - குதிரை. அரசு என்றது தலைவிதமையன். கடம் படர்ந்து - காட்டில் நடந்து. எந்தலிலிருக்குஞ் சந்தன மரத்தை அத்திமரமும், மாமரமும், அரசமரமும், கடப்பமரங்களோடடர்ந்து சுற்றிய வென்பது மற்றொருபொருள். எந்தல் - சிறிய ஊர். அரசன். கடம் - காடு. படர்ந்து - நடந்து.

(சகரு) திருக்கு முன்னோன் என்க. திருகல் - மாறுபடல். முன்னோன் - ருக்குமி. தன்னை - தாய்.

(சகசு) சேலை - புடவை, தேர்ச்சேலை. கொடி - இடை. துவசம். வாழை - தொடை, வாழைமரம். தேர் - அல்குல், தேர்.

(சகஎ) ஐயனை என்பது வேதியனை. நாலவை என்பது நாணமுதலிய நான்கு குணத்தினையுடைய தலைவியை. ஐயனை மேவினாலவைமேவலெளி தென்பது மற்றொரு பொருள்.

(சகஅ) தக்கோர் என்பது சிவபெருமானை. மிக்கோனை - சிறந்த லக்கினத்தை, பெரியோனை.

(சகக) காலாழி யென்பதைக் காற்சமுத்திர மாக்கி யோராழி யென்று கற்பனை செய்தார். காலாழியைச்சமுத்திரமாக்கினதற்குரிய வளமாக வணிகளைக் கொள்க. சரப்பணி - செல்லுகின்றபாம்பு. வளை - சங்கு. முத்துமாலை - முத்துக் கூட்டம்.

(சஉ0) முன்கண்டனமே என்பது, சங்கம் - வலம்புரி கேட்டவன் வரவறிவுறுத்தலும், கைப்பற்றித் தீவலஞ் செய்தல் - உடன் போக்கிற் சுவடுகண்டிரங்கலும். செங்கைப்புனல் - புனல் எதுவாகத் தலைப்பாடியம்பலுமாம் - கெடுதியுள வேழமுதலாயின வினாவலும், தேர் - இறைவிக்கிறைவன் வரவறிவுறுத்தலும் ஆகியதுறைகளாணறிக. சங்கைப்புனல் வைத்தது - நெறியின தெளிமை கூறற்றுறையெனினுமமையும். இவ்வளவுங் கலியாண வணிகளாதலுங் காண்க. ஈசனுக்குக் கொள்ளுங்கால் வலது கையிலக்கினி, இடதுகையில் வளையல், கங்காநதிப்புனல். வேதக்குதிரை. பூமியாகிய தேர் என்க.

(சஉக) காவேந்திய குழல் என்பது தலைவியை. கண் - குறிப்புணர்த்தல், கை - நாணிக்கண்புதைத்தல்; நகை - முறுவற்குறிப்புணர்த்தல்; மாவேந்தர்பொன் - பிறர்வரைவுணர்த்தல்; பெரியோர் - சான்

ரேரை முன்னிடல் ; பாவை என்பது பாங்கியை. பூவேந்தியகை - கை யுறையேற்றல். இவைகளையவ்வத்துறை களானறிக. கடையடிக்கு நிகை ரசிக்காரி என்பதுகருத்து.

(சஉஉ) கதிர்மதி போல் என்பது பிரிந்துழிக் கூறும் பிரிவச்சத்தி லும், கன்னிதொடர் சிங்கமென்பது சிங்கம் விளைவிற்கெதிர் மொழிகொ டுத்தலிலும் இராமன் என்பது பிரியேன் என்பதிலுமாம். அதுவேறேகவி யாணஞ் செய்வதில்லை என்றபடி. மன்னர் என்சொல்-நிலைசெய்கின்றவர் என்னும் சொல்லை. வளர்த்தனிர் - நிலைபெறவளரச்செய்தீர் என்றவாறு. கதிர்மதிபோலென்று தலைவி சொன்னதையும். கன்னிதொடர்சிங்கமெ ன்று யான் சொன்னதையும். இராமனென்று நீர்சொன்னதையும் நிலை பெறச்செய்து மன்னரென்றிசைத்த சொல்லை வளர்த்தீர் என்றபடி. மன் நிலைபேறு.

(சஉ௩) ஆர்வீட்டில் மன்றல் என்றூர் என்பது இறைவர் கூற்று. அதுவரை விடைவைத்துப் பொருள் வயிற்பிரியுங் குறிப்பு. அறுபது நாளென்பது அப்பிரிவிற் செல்லலையை என்க. நீங்காதிருக்கவுன்னுதல் - பிரிவெண்ணியழுங்கல், நெஞ்சொடுபுலத்தல் முதலியவற்றை என்க. பின் காட்டல் என்பது அவன் விடுத்தகறலை. பார்வீட்டுறங்கல்-தறையிற்படுத் தல். அஃதுடன் போக்கிடை யீட்டிற்கடுங்காவலுங்கொடு மொழியுங்கை யிகந்த காதலு முண்டாயபோது என்க. எனவே மன்றலென்று கேட்ட குறிப்பறிந்து பிரிவிற்கு மெலிந்ததையும், இப்பிரிவிரண்டினுங் காலநீடவ ருந்தியதையுமிறைவர்க்குப் பாங்கிதெரிப்பது மொருகொள்கை என்க.

(சஉச) பொருந்திடம் இடம் பெற்றுத்தழால், அண்மை - இடம ணித்தென்றல். துணை-பாங்கன். பொய்கள் - வேழமுதலியன வினவல். விருந்து - விருந்திறைவிரும்பல். இயம் - கொம்பு, தப்பு அவை தோழி தலை மகடுயர் கிளந்து விடுத்தல். சங்கு - வலம்புரிகேட்டவன் வரவறிவுறு த்தல். தேர் அவன்புறநோக்கிக் கவன்றாற்றல். நீஎன்பது பாங்கியை. இவர் என்பது தலைவரை. நான் என்பது தலைவியை. இவ்வளவையுங் கூட்டி வித்தமருந்துசுவாமி என்றுளென்க. இயற்கைப் புணர்ச்சியாதியாகவரை விறுதிக்குச் சகாயமான பொருள் களிவை. எனவே இயற்கைப்புணர்ச் சிக்கிடம் பெற்றுத்தழுவு தலான் மகிழ்வு, பாங்கற்கூட்டத்துக்குப் பாங்க ருன் மகிழ்வு, பாங்கிமதியுடன் பாட்டிற்கு இறைவன் வார்த்தையான் மகிழ்வு; பாங்கியிற் கூட்டமுதலான வற்றிற்கு விருந்திறை விரும்பலான் மகிழ்வு, இரவுக்குறிமுதலான வற்றிற்குக்கொம்பு, தப்புக்குறிக்குந்தோழி தலை மகள் துயர்கிளந்து விடுத்தலான் மகிழ்வு; வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதன் முதலானவற்றிற்கு வலம்புரிகேட்ட வன்வரவ றிவுறுத்தலான் மகிழ்வு, உடன்போக்கு முதலானவற்றிற்கு அவன் புற நோக்கிக் கவன்றாற்றலான் மகிழ்வு, அஃதினி மேலந்தணர் சான்றோ ரை முன்னிடுவானென்ற மகிழ்வு;மற்றைய வெளிப்படையானதாலறிக.

(சஉ௫) இவள் பாவையென்பது கண்ணாடிமண்டபத்தில் மறைந்து நின்ற தலைவிநிழற் பாவையை. கனவினு நீங்கிலள் என்பது கனவு நலிபுரைத்தலை.

(சஉசா) கா - காட்டுவொத்து. விளைவு - நாட்டுவொத்து. வரவு - பிற தேயம், கடல் வியாபாரமுதலியவற்றின் பொருள் வரவு. கொடை - இரு பசாதகக்கொடை, கதித்த - மிகுந்தன, தேவும் மயில் வெற்புமாயினமே

என்பது இருவரும் விட்டு நீங்காததற்கும், அருளுக்கும், பெருமைக்கும் குறித்துரைத்ததென்க.

(சஉஎ) விண்பார்த்தல் - வான்வீறடக்கவெழுதல், பண்பார்த்து ஒளிக்குஞ்சொல் என்பது இசை நிகராவோமாவென்று பார்த்து யாழ் முதலியவற்றிலொளித்தலை.

கண்பார்த்தல் - விருந்துக்குறிப்பு. கைபார்த்தல் - கறியுண் குறிப்பு. சொற்காணுமை - சேளாது படைத்தல்.

(சஉஅ) காலை தனிலெழுதல் காணுமலின் புறுதல் மாலை முழுகி மனையடைதல் - சாலவேயுற்றுேடுண்டலுல கோம்பலிவ்வைந்துங் கற்ருயோ காக்கைக்குணம். என்னுமிக்குணங்களைத் தலைவிக்கு யாவர் பயிற்றினுரென்பது கருத்து. உலகோம்பல் சகுனங்காட்டலாலென்க.

(சஉகூ) நம்மனை வாழ்க்கையினுமென்பது நம்முடைய குரவர், நற்ருய், செவிலி, வீடு, செல்வம், இவ்வைந்தினு மிறைவ, னிறைவி, பாங்கி, வீடு, செல்வமதிகமென்றபடி. அல்லும் பகலுந் துயிலில்லை என்பது பகற் காலம்இல்வாழ்க்கை மிகுதியாற்றலைவன் பூசைக்காவன செய்தலும். கோ விற் சிறப்பு விசாரணையும் கொடுப்பதும், அனுப்புவதும், விருந்திடுவதும், பாக்கிலையளிப்பதும், சந்தனம்பூசுவதும், காவியபுராணங் கேட்பதும், இராக்காலம் மஞ்சச்சிறப்பு, பாக்கிலையமைத்தல், களபச்சேர்வை, அறு சுவையுண்டி, ஆடல்பார்த்தல், வீணுகானம் பண்ணல், மாலையார்த்தல், மணியணி யொப்பனை, கூந்தல் முடித்தல், ஆடையுடுத்தல், பனிநீர் தோ ய்தல், புணர்தல், முதலியவற்ருனுமென்க. கம் - தலை. அம்மனை - தாய் போலுந்தலைவி.

